இ-ள். வேண்டுங்கால் வேண்டும்பிறவாமை யென்றமையால் வேண்டினஃதொன்றுமே வேண்டுவது = தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் "வேண்டுங்கால்வேண்டும் பிறவாமை" என்றருளிச்செய்கையாலே தேகமுள்ளளவு மிவன் விரும்பாதொழினும் பிராரத்தத்தாலேயுள்ளது கூடுமாகையால் ஒன்றைவிரும்பவேண்டுமிடத்துப் பிறவாமை யொன்றுமே விரும்பவேண்டுவது,— வேண்டினது வேண்டாமை வேண்ட வருமென்றமையால் வேண்டிடுகவேண்டாமை வேண்டுமவன் பால் = அந்தப் பிறவாமையானது தான்வேண்டாமை வேண்ட வருமென்று பிரமாணமுண்டாகையாலே நாம் விரும்பத்தக்க கர்த்தாவின் பக்கலிலே பிறவாமைக்குற்பத்தியான அவாவறுத்தலொன்றுமே வேண்டிக்கொள்ளவேண்டுவது. இந்த வவாவறுத்த லுண்டாகவே யந்தப் பிறவாமைதானேயுண்டாம்.

இப்படி யுயிர்ச்சார்பு பொருட்சார்பிற் பற்றற்றதே சமாதி பரனாகவும் நிற்கச்செய்தே சமாதியிலேகூட விசாரித்தவர்களுக்குச் சமாதிகூடாமல் நினைவுகூடி யிதனாலே சநநங்கள் கூடுமுறைமையை யருளிச்செய்கிறார்.

அரண வுணர்வுதனி லவ்வுணர்வை மாற்றிற்
கரணமுங் காலுங் கைகூடும் - புரணமது
கூடாமை யுங்கூடுங் கூடுதலுங் கூட்டினுக்கு
வாடாமை யுங்கூடும் வந்து.

இ-ள். அரணவுணர்வுதனி லவ்வுணர்வைமாற்றிற் கரண மூங்காலுங்கைகூடும் = இந்திரியவேடர்சென் றீடுகொள்ளப் படாத புகலிடமான திருவடிஞானத்திலே தன்னுடையபோத த்தையொழிக்க விசாரிப்பானாகில் அந்தவவதரத்திலே முன்புதா ன்பற்றிப் போந்த வுயிர்ச்சார்பு பொருட்சார்பின்வாதனையாலே சொரூபமானதுகைகூடாமல் மனாதிகளும் பிராணவாயுவுங்கூடி மீண்டு விடயாதிகளிலே சலிப்பினுஞ் சலிக்கும்.—புரணமது கூடாமையுங்கூடும் = இதுகூடாமற் புரிந்து மயக்கம்வந்து கூடினும்கூடும்,—கூடுதலுங் கூட்டினுக்கு வாடாமையுங்கூடும் வந்து = இப்படிமயக்க விகற்பங்கூடிப்போதவே யெடுத்த தேகம்போனாலு மிந்தப்பற்றுக்களாலே மீண்டுமொருதேகம் வந்துகூடாநிற்குமாதலா லிதுகூடாதபடி வுயிர்ச்சார்புபொருட் சார்புகளில் பற்றுக்களையற்றே சுகரூபத்திலே பொருந்திநிற் பாயாக. (௬௧)

சமாதிபரனானவனுக்கும் பற்றுக்களாலே சமாதிகூடாமல் சநநங்கள்கூடுமாகில் சிவதீக்ஷையும் தரிசனமில்லாத வான்மாக் கள் மரியாதையோ விவனுக்குப் பெற்றுள்ளதென்று கேட்ட மாணாக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

இன்றிங் கசேதனமா மிவ்வினைக ளோரிரண்டுஞ்
சென்று தொடருமவன் சென்றிடத்தே-யென்றுந்தான்
றீதுறுவ னாற் சிவபதிதான் கைவிடுமோ
மாதொருகூ றல்லனோ மற்று.

இ-ள். இன்றிங் கசேதனமாமிவ்வினைக ளோரிரண்டுஞ் சென்றுதொடரு மவன்சென்றிடத்தே = இப்பொழு திந்தத் தேகத்திலே நிற்கச்செய்தே கூடின வசேதனமான புண்ணிய பாவங்களிரண்டு மிவன் பின்னொருதேகத்தை யெடுத்த பொழுதேயொக்கச்சென்று கூடாநிற்கும்,—என்றுந்தான் றீது

றுவனுஞற் சிவபதிதான் கைவிடுமோ மாதொருகூறல்லனே மற்று = ஒருவன் சிவதீக்ஷையும் சிவஞானமும்பெற்றுத் தெளிந்திருக்கச்செய்தேயும் முன்புபோலவுயிர்ச்சார்புபொருட் சார்பிற் பற்றுவிடாமற் சகநங்கூடிற்ருயினுங் கர்த்தாவாகிய சிவனு மிவனைக்கைவிடாமல் முன்புண்டானமனம் பற்றுகைக் குத்தக்கவற்றைக் கூட்டித் தொலைப்பித்து மூற்சகநத்திலே சாதித்தகுறையிலே வந்தெடுத்துக்கொண்டு நிட்டையிலேகூட்டிச் சாயுச்சியத்தைக் கொடாநிற்பன். இவன் காருண்ணிய சத்தியினை யெப்பொழுதுந் தன்னிடத்திலே யுடையனுதலால்.

இன்னமு மான்மாக்களுடைய பெத்தமுத்தி யிரண்டினு மிவர்களைப் பாதுகாத்து ஈடேற்றுகை யநாதியே கர்த்தாவுக்குக் காரணமான முறைமைதோன்ற வருளிச்செய்கிருர்.

அநாதி சிவனுடைமை யாலெவையு மாங்கே
யநாதியெனப் பெற்ற வனுவை - யநாதியே
யார்த்த துயரகல வம்பிகையோ டெவ்விடத்துங்
காத்த லவன்கடனே காண்.

இ-ள். அநாதி சிவனுடைமையா லெவையுமாங்கே = அநாதியானசிவனுக்கு எண்ணிறந்தவான்மாக்களு மடிமை யாகையாலே யித்தவான்மாக்களுமிப்படியே,—அநாதியெனப் பெற்றனுவை யநாதியே யார்த்ததுயரகல = இப்படி யநாதி யான வான்மாக்களை யநாதியே பேதித்துக்கொண்டுநிற்கிற பாசமானது விட்டுநீங்கும்படி,—அம்பிகையோ டெவ்விடத் துங்காத்த லவன் கடனேகாண் = விட்டுநீங்காத சத்தியுடனே பெத்தத்திலுங் கூடிநின்று தொலைப்பித்து முத்தியிலுமீண்டு மோருடம்புகூடாதபடி திருவடியிலே கூட்டிக்கொள்ளுகிற விது மாணவகனே ? யவனுக்கு மநாதியே முறைமைகாண்.

தேகாதிபாசமனாதியாகில் முத்தியிலும்போகாதேயென்று சந்தேகித்த மாணாக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பான் மஞ்சனநீர் தாமாட்டித் - தம்மையொரு
பூவாகப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தா
லோவாமை யன்றே யுடல்.

இ-ள். தம்மிற் சிவலிங்கங்கண்டு = ஆசாரியனாலே தனு கரண புவனபோகங்களை விட்டுநீங்கித் தன்னைத்தரிசித்துத் தன்னிடத்திலே தனக்குபிராணனுமாய்ச் சிவனுக்கடையாளமுமாய்நிற்கிற ஞானமாகிய சிவலிங்கத்தைத்தரிசித்து,—அதனைத் தாம்வணங்கி = அந்தச் சிவலிங்கத்தைத் தம்முடைய போதம் விட்டுப்போம்படிச் சாந்தமாகிய வணக்கஞ்செய்து,—தம்மன் பான் மஞ்சனநீர்தாமாட்டி = இப்படிப் பெறுதற்கரிய பேற்றைப் பெற்றோமென்கிற சிரத்தையாகிய சலத்தாலே திருமஞ்சனம் பண்ணி,—தம்மை யொருபூவாகப் பூவழியாமற்கொடுத்து = இப்படிச்செய்கிற வான்மசொரூபத்தை யொப்பில்லாத் திருப் பள்ளித்தாமமாக மயங்காமற்சாத்தி,—பூசித்தால் = இப்படி ஞானத்திற் சரியைகிரியா யோகங்களினாலே உள்ளே சிவனைக் கண்டைக்கியஞ்செய்கிறவிது,—ஓவாமையன்றேயுடல் = செம் புருகின பதத்திலேகூடின குளிகையினது ஐக்கியத்தாலே யநாதியான காளிதமும் செம்பொன்னு முருவமுநீங்க மாற்றுப் பிரகாசித்துப் பின்பிவையென்றுங் கூடாதவாறுபோல வொரு வன் தன்னுடைய சத்திநிபாதத்திலுண்டான வன்பின்மிகுதி யாலே தேகேந்திரியாதிகளை நீங்கின தன்னுடைய வுண்மை யானசொரூபத்தைத் தனக்கேற்பப்பெற்றுத் தன்னிடத்திலே சிவனைக் கண்டைக்கியஞ்செய்து வாதனைவிட்டால் பிராரத்த நாசம்பிறந்து தேகம்விட்டபொழுதே திருவடியிலே யிரண் டற்றுவிடுமெதொழிந்து மீண்டுந் தேகமெடுக்க வல்லவே. (௪௪)

அநாதியானபாசம்விட்டு நீங்குமாகி லநாதியென்று ஆன்மாவுக்கு வழியுண்டாமோவென்ற மாணுக்கனைநோக்கிப் பாசத்திலேவிரிந்த போதத்தைவிட்டுத் தன்னைத் தனக்கறுதியாகப் பெறுகிறதொழிந்து இவனுக்கழிவில்லையென்றும் பாசத்தை நீங்கினபொழுதே யிவனும் வியாத்தனென்னு முறைமையுமருளிச்செய்கிறார்.

தன்னைப் பெறுவதின்மேற் பேறில்லைத் தானென்றுந்
தன்னைத்தான் பெற்றவன்ருனொன்னிற் - றன்னாலே
யெல்லாந்தனுட்கொண்டு கொண்டதனைக்கொள்ளாதே
யெல்லாமாய் நிற்கு மிவன்.

இ - ள். தன்னைப் பெறுவதின்மேற் பேறில்லை = ஒருவன் பெறத்தக்கபேறுகளி ற்றுனழிந்துபோகாம லருளாலே தன்னையுறுதியாகப்பெறுகிற பேற்றின்மேல் வேறுபேறில்லை,— தானென்றுந் தன்னைத்தான்பெற்ற வன்ருனொன்னில்= தானென்றுந் தன்னைத்தான் பெற்றவனென்று மிரண்டாக விவ்விடத்திற்சொன்ன தாரையென்னில்?—தன்னாலேயெல்லாந் தனுட்கொண்டு கொண்டதனைக்கொள்ளாதே யெல்லாமாய்நிற்கு மிவன் = ஆன்மா தன்னையறியாமல் முன்பு பாசமேயாய்நின்ற முறைமையொழிய வருளாலே பரத்தையுமறிந்து பாசத்தையுமறிந்து இந்தப்பாசத்தைநீங்கின தன்னையுங்கண்டே அண்டாண்டபகிரண்டங்களையு முணர்ந்து தானறியாமற்கொண்டுநின்ற பாசத்தையொழித்ததுபோல இதையு மொழியவிட்டுத் தன்னுடையபோதஞ்சலியாமற் பூரணனாய்நிற்கவே யெல்லாவடிவுகளும் தன்னுடையவடிவாய்த் தானே யிந்தவண்டாண்ட பகிரண்டத்துக்கெல்லாங் கத்தாவாய்நிற்ப னிவன்ருன். (சரு)

இந்தவான்மபோதந்தானே பொருளாயில் ஞானயோகஞ் சிவயோகமென்று சொல்லவேண்டுமோவென்ற மாணுக்கனை

யிந்தவான்மயோகந்தானே ஞானயோகமாம்படி யருளிச்செய்து இந்தஞானயோகந்தானேசிவயோகமாம்படி யருளிச்செய்கிறார்.

துன்பமா மெல்லாம் பரவசனாய்த் தான்றுவளி
லின்பமாந் தன்வசனாய்த் தானிருக்கி - லென்பதனா
னின்வசனா யேயிருக்கி னின்னுடனா நேரிழையா
டன்வசனா யேயிருப்பன் றான்.

இ - ள். துன்பமாமெல்லாம் பரவசனாய்த் தான்றுவளில் = ஆன்மாதானே கர்த்தனா யெல்லாவற்றையு மறிகிறானாக நின்று விகற்பிக்கி லிம்மை மறுமை யிரண்டுக்கும் பிரயோசனமாக வுள்ளது கிலேசமொழிய வேறில்லை,—இன்பமாந் தன்வசனாய்த்தானிருக்கில் = ஆன்மா திரிவுகாரூபியான பிரபஞ்சசீதியை விட்டுநீங்கித் தனக்கு உண்மையான சைதன்னிய சொரூபமாயிதிலே நிருவிகாரமாயிருக்கி லிந்தவான்மயோகந்தானே ஞானயோகமுமா யிந்தவழியிலே சுகரூபம் வந்து பிரகாசியா நிற்கும்,—என்பதனால் = என்று வேதாகமங்களுக்குங் கருத்தாகையால்,—நின்வசனாயேயிருக்க நின்னுடனாநேரிழையா டன்வசனாயேயிருப்பன்றான். = மாணவகனே? இந்திரிய வசனாகாமல் நீயு முன்னையொழிந்த பொருள்க ளெல்லாவற்றையு முனக்கு வேறென்றறிந்துவிட்டு நீங்கி நிருவிகாரமான ஞானமே சுகரூபமாயிருக்கி லப்பொழுதே யந்தஞானசத்தியின் வசமாயிருக்கிற ஞேயசொரூபனான சிவ னுன்னைக்கூடி வேறற நிற்பன்.

இந்தச் சிவயோகத்திலேயிடைவிடாம லநுபவித்தலாவது இந்தக் கருவிகரணங்க ளொருகாலமுங் கூடாதபடி யருளிலே நிற்க வல்லவர்களுக்கேயென்றுந் தோன்ற வருளிச்செய்கிறார்.

செத்தாரே கெட்டார் கரணங்கள் சேர்ந்ததனோ
டொத்தாரே யோகபர ரானவர்க - ளெத்தாலு
மாராத வக்கரணத் தார்ப்புண்டிங் கல்லாதார்
பேராமற் செல்வரதன் பின்.

இ-ள். செத்தாரே கெட்டார் கரணங்கள்=அந்தக் கரணங்கள் நேராக வங்குரியாதபடி ஞானத்திலேகூடி மறித்த வான்மாக்களே சநநமரணங் கெட்டவர்கள்,—சேர்ந்ததனோ டொத்தாரே யோகபர ரானவர்கள்=இந்த ஞானத்தி னழுத்தத்தினாலே பிரகாசித்த சிவரூபத்திலே பொருந்தி யதுவாய் நின்றவர்களே சிவயோகத்தில் தர்ப்பரமானவர்கள்,—எத்தாலு மாராத வக்கரணத் தார்ப்புண்டிங் கல்லாதார் பேராமற் செல்வரதன் பின்=இப்படிச் சிவயோகத்தில் பொருந்தப்பெறாத பாக்கியவீன ரெத்தாலுந் திருத்தியடையப்பெறாத கருவி கரணங்களாலே கட்டுண்டு இவற்றின்பின்னே தப்பாமலே வரச்செய்து சநந மரணங்களிலே சென் றுழலா நிற்பர். (௬எ)

இந்தக் கருவிகரணங்க ளொருகாலமும் பொருந்தாதபடி நிற்கிற சிவயோகிகள் பெருமை யிருக்கும்படி யருளிச்செய்கிறார்.

கண்ணுங் கருத்துங் கடந்ததொரு பேறேயுங்
கண்ணுங் கருத்துங் களிகூர - நண்ணி
வடமடக்கி நிற்கும் வடவித்தே போல
வுடனடக்கி நிற்பர்கள்கா ணுற்று.

இ-ள். கண்ணுங் கருத்துங் கடந்ததொரு பேறேயுங் கண்ணுங் கருத்துங் களிகூர நண்ணி=யாவர்க்குங் கண்ணுக்குங் கருத்துக்கு மளவுபடாத தொருபேறுயினுஞ் சிவஞானிகள் சிவனுடனே யிரண்டறக்கூடிப் பரமானந்தமே சொரூபமாயிருக்கையாலு மவர்கள் கண்ணில் விசுவமில்லை யாகையாலுமொடுங்கினும் விழிப்பினும் பொருளேயா யவர்கள் கண்ணுக்குங் கருத்துக்குங் களிகூரப் பொருந்தி,—வடமடக்கி நிற்கும் வடவித்தே போல வுடனடக்கி நிற்பர்கள்கா ணுற்று=அநேக தூரம் படர்ந்ததோ ராலின் பரிணாமமெல்லா மொருகடுகையொத்த வித்திலே யடங்கின தன்மைபோல அளவிடப்படாத வத்

துவாயினுந் தங்களுள்ளே யடக்கித் தங்களான்ம சுபாவத்தை விட்டு இந்தச் சிவமாகியே நில்லாநிற்பர்கள். (௪௮)

அளவிடப்படாத பொருளை யோருடம்பிலே நிற்பானொருவ னடக்கிக்கொண் டிருந்தபடி யெப்படியென்ற மாணாக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

வானகமு மண்ணகமு மாய்நிறைந்த வான்பொருளை
யூனகத்தே யுன்னுமதங் கென்றனையே - லேனகத்து
வாதனையை மாற்றும் வகையதுவே மண்முதலா
மாதனமே யன்றோவ தற்கு.

இ - ள். வானகமு மண்ணகமு மாய்நிறைந்த வான்பொருளை யூனகத்தே யுன்னுமதெங் கென்றனையேல் = ஆகாசமுதல் பிருதிவி யீறாகவுள்ள பஞ்சபூத பரிணாமமான பிண்டப்பிரமாண்டங்களு மிவற்றிற்குக் காரணமான தத்துவங்களு மிதற்குட்பட்ட வான்மகோடிகளுந் தானேயாய்ப் பூரணமாய் நிற்கிற சொரூபத்தை யொருசரீரியானவன் தனக்குள்ளே யடக்க நினைத்தபடி யெப்படி யென்னில்,—ஏனகத்து வாதனையை மாற்றும் வகையதுவே மண்முதலா மாதனமே யன்றோ வதற்கு= மாணவகனே? பிருதிவி முதலாக முன் சொல்லப்பட்டவை யெல்லா மந்தப் பொருளுக் காதனமாத்திர மல்லவோ வாகையாலு மப்பொருளை யாசாரியனாலே கூடப்பெற்றவர்களிடத்தி லந்தப் பொருளின் வியாத்தமெல்லா நின்று பிரகாசிக்கையாலும் ஞானதிருஷ்டி யில்லாதவர்களுக்குச் சரீரிகள் போலத் தோற்றினு மவனந்த வண்மையேயாய் நிற்பதனைக்கையாலு மென்போல்வா ரிடத்து மதாகியே கூடிப் போந்தவாதனையைப் போக்குகைக்கு இந்த நிலையேகாண் முறைமையாகவுள்ளது.

இந்தப்பொருளை யுள்ளே கண்டு வாதனை தீர்ந்திருப்பார் போல் புறம்புங்கண்டு வாதனை போக்கலாமோவென்ற மாணாக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

கல்லிற் கமரிற் கதிர்வாளிற் சாணையினில்
வல்லுப் பலகையினில் வாதனையைச் - சொல்லு
மகமார்க்கத் தாலவர்கள் மாற்றினர்கா ணையா
சகமார்க்கத் தாலன்றே தான்.

இ - ள். கல்லில் - தான் = கல்லினுங் கமரினுமொளியை யுடைய வாளினுஞ் சாணைக் கல்லினு மெத்தப்பலகையினுந் திருக்குறிப்புத் தொண்டர் முதலாகவுள்ள நாயன்மா ரொவ்வொருதொழில்களைச் செய்யச் செய்தேயு மவற்றைச் சொல்லப்பார்க்கி லவர்களுஞ் சிவனளவி லொருவழிப்பட்ட கருத்தினாலே யல்லோ வவர்களுக்குப் புறம்பேயும் பிரகாசித்துப் பிறப்புக்கு வித்தான வாதனையைப் போக்கினார்கள், ஐயனே? இந்த முறைமை பொய்யான வுலகநெறி யல்லவெ. (௩௦)

இந்த விரண்டு வகையாலு மெதிலேநின்று வாதனை போக்கலாமென்ற மாணாக்கனை நோக்கி இதனை யிரண்டுவகையாக நீ கருதவேண்டாமென்று மொருபடித்தாகக் காணவேணுமென்று மருளிச்செய்கிறார்.

உள்ளும் புறம்பு நினைப்பொழியி லுன்னிடையே
வள்ள லெழுந்தருளு மாதினாலே - தெள்ளி
யறிந்தொழிவா யன்றியே யன்புடையை யாயிற்
செறிந்தொழிவா யேதேனுஞ் செய்.

இ - ள். உள்ளும் புறம்பு நினைப்பொழியி லுன்னிடையே வள்ள லெழுந்தருளு மாதினாலும் = உள்ளே காணவென்றும் புறம்பே காணவென்று நீ விசாரித்த விடத்து உன்னுடைய போதத்தையுஞ் சரீரத்தையு முன்புபோலே கைவிடாதுகொண்டு இரண்டுபட்டுத் தோன்றினதொழிந்து அந்தப் பொருளுக்குத் தனித்தனி ஓரிடமா யிராதாகையால் பிண்டப் பிரமாண்டங்களையுந் தத்துவங்களையு மான்மபோதத்தையும் ரூபதரிசன

சத்தியாலே யருளாக்கி யொருநீர்மையான ஞானமேயா யுன்னினைவொழியுமிடத்தி லப்பொழுதே யுன்னிடத்திலே பரமசிவனானவர் தன்னுடைய காருண்ணிய சத்தி யுடனே கைம்மாறு கருதாமல்வந்து தோன்றி யுன்னை ஒருதன்மையாக்கிக்கொண்டு தானேபிரகாசியாநிற்பன்—தெள்ளியறிந் தொழிவாய்=இதனைச் சிவயோகத்தின் கண்ணே நின்றாய்ந் தநுபவிக்கிறோ மென்கிற தன்மையுங் கைவிட்டு நின்றாயாதல்,—அன்றியே யன்புடைமையாயிற் செறிந்தொழிவாய் = இந்த முறைமையல்லவாகிற சிவனுடைய வுண்மையைக் கேட்குதல் நினைக்குதல் காணுதல் செய்தபொழுதே யுன்னுடைய கருத்தை யுருக்குவதானதொரு பேரன்பு கூடுமாயி னதனாலே யுன்னுடைய கருத்தானது நேராக வழிந்து சிவனுடனேயொரு நீர்மையாய் விட்டாயாதலால்,—ஏதேனுஞ்செய் = இந்த ஞானயோகத்திலும் பத்தியோகத்திலு மிவையிரண்டினுங் கூடின தொன்றைச் செய்வாயாக. (௫௧)

இனியிந்தப் பத்தியோகந்தா னெப்படியென்ற மாணாக்கனை நோக்கிப் பத்தியிலேநின்று பெற்றவர்கள் பெருமை இப்படியென் றருளிச்செய்கிறார்.

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக் - கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்
றாரறியு மன்பன் றது.

அவிழ்ந்த துணியி லவிழ்ந்த வவிழை
யவிழ்ந்த மனத்தா லவிழ்க்க - வவிழ்ந்தசடை
வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற்
சேர்ந்தனார் செய்த செயல்.

சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த
தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு.

அன்பேயென் னன்பேயென் றன்பா லழுதரற்றி
யன்பேயன் பாக வறிவழிய - வன்பன்றித்
தீர்த்தந்தி யானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்.

இ-ள். இப்படிப்பட்ட பத்தியோகத்திலே விட்டகுறைகளாலே சிவனுடைய வுண்மையை நினைத்தல் கேட்டல் காண்குதல் செய்தபொழுதே கரையழிந்த வன்பினாலே யொருபலத்தையுங் கருதாம லந்த வன்புதானே தங்களுக்குச் சுகரூபமாக நின்று தங்களை மறந்து பேறுபெற்ற கண்ணப்பநாயனார் முதலாயுள்ள நாயன்மா ரன்பையொழிந்து தீர்த்தங்களுந் தியானங்களு மர்ச்சனைகளு மிப்படி யவதிகொடாமல் பேறுகூட்டமாட்டா தாகையா லவையுமிந்த வுத்தமமானபத்தி கூட்டுதற்கு வித்தாம் இதனைச்செய். (௫௨)

இனியாவர்க்கும் பத்திகூடுதற் கரிதென்று முறைமையிலே கூடத்தக்க ஞானயோகமே வாதனையைத் தீர்த்து முத்தியைத் தருவதென்று முன்னே பலபிரகாரங்களாகச் சொல்லப்பட்ட வுபாயங்களுந் தாற்பரிய மிதுவேயென்று மற்றுள்ள சமயிகள் தாற்பரியங்க ளிந்த வுண்மையைக் கூடமாட்டாதென்று மெல்லாவற்றையுந் தொகுத்து வாதனை தீர்க்கைக்கு ஞானயோகமே பொருளென்று அதனிய வருளிச்செய்கிறார்.

எல்லா ரறிவுகளின் றும்பரிய மென்னறிவு
செல்லு மிடங்களவுஞ் சென்றறிந்தேன் - வல்லபடி
வாதனையை மாற்றும் வகையிதுவே மற்றவற்று
ளேதமறக் கண்ட விதம்.

இ-ள். எல்லார் - விதம் = மாணவகனே? இந்த நூலிற் சொல்லப்பட்ட வுபாயமொழிந்து வேறு மறியவேண்டுவ துண்டோவென்று நீ சந்தேகிக்க வேண்டுவதில்லை, எல்லாச்சமயங்களினு மெல்லாச் சாத்திரங்களினு முண்டான தாற்பரியார்த்தங்க ளொன்றை வாராயத்தக்கவளவு மாராய்ந்தறிந்தேன், அவையெல்லாவற்றினும் வாதனையைப் போக்கி முத்தியைக் கூட்டுகைக்கு முறைமையாகக் கண்டது சைவசித்தாந்தத்திற் சொல்லப்பட்ட வித்துஞானமேயாக மொன்றுமேயாதலா லிந்தவநுபூதியெல்லாக் குற்றங்களுந் தீருகைக்குங் கண்ட வர்த்தமாதலின் நீயுமிந்த முறைமையிலே சாதிப்பாயாக. (௫௰)

இனியிந்த வத்துவைப் பெறுதற்குரிய முறைமையும் பெற்றால் நிற்கவரிதான முறைமையு மருளிச்செய்கிறார்.

வித்தமுத னங்குரமும் போன்றிருக்கு மெய்ஞ்ஞானம்
வித்தமுத னங்குரமு மெய்யுணரில் - வித்ததனிற்
றாணுமை யாலதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணுமை யாலற்றார் பேறு.

இ-ள். வித்தமுத லங்குரமும் போன்றிருக்கு மெய்ஞ்ஞானம் = நெல்லுமுதலான பலவித்துக்களு மங்குரிக்கும்பொழுது அங்குரத்துட னிரண்டுபட வில்லாமலந்த வங்குரமுள்ள ளவும் வியாத்தமாய் நின்று பரிணமித்து இந்தப் பரிணாமத்தைப் பிரயோசனங் காரணமாக வங்குரித்த காலமுத லாசரித்துக்கொண்டிருக்க ஆன்மாக்களுக்குப் பரிணாம மிருந்த அந்தக் காலங்களிலே வித்தானது வெகுவிதமாகப் பலித்தவர்கள் தாங்களே யைவிப்பித்துச் சத்துவத்தைப் பிறப்பிக்க வின்பத்தையே கொடாநிற்கும் அதுபோல வித்தான சிவமும் ஆன்மாக்களுக்குக் கன்மவொப்பு மலபாகமு முண்டான வவதாரத்திலே காருண்ணியமே திருமேனியாக வெழுந்தருளிவந்து பக்குவப்பட்ட

வான்மாக்களைத் தம்முடைய வளவிலே சேர்க்கும்படியுந் தி
ருவுள்ளத் தடைத்து இவர்களிடத்திலே யநாதியே யெழுந்தரு
ளிநின்ற வுண்மையையும் பிரகாசிப்பித்து இந்த வுண்மையான
ஞான சுகரூபத்திலே யான்மாக்களையுங் கூட்டிநிறுத்தி யிந்த
நிலையின் முதிர்ச்சியாலே தன்னுடைய சுகரூபமான பேரின்ப
த்திலே யிவர்களநுபவித்துச் சம்பூரணத்தை யடையும்படி. வெ
குபலமாகக் கொடாநிற்கும்,—வித்தமத னங்குரமு மெய்யுணர்
ரில்=இந்த வித்தாகிய சிவனுண்மையு மங்குரமாகிய ஞானத்தி
னுண்மையு முணர்வா ருணருமிடத்து,—வித்ததற் கானமை
யாலதனைக் கைவிடுவர்=நெல்லு முதலான வங்குரங்களை யிந்
தவித்தின் பரிணாமமென்று மிந்தப் பரிணாமங்களிலே யந்தவித்
துங் கலந்துநிற்குமென்று மங்குரத்தின் பரிணாம முதிர்ந்தபோ
தே யந்தவித்தே வெகுபலமாகப் பலிக்குமென்று மிதனை யா
சரித்துக்கொண்டிருந்து பலிப்பிக்குங் காலங்களிலே பலங்கொ
ள்ளவறியாம லங்குரம் பரிணமிக்கிற காலத்திலே வித்தே தா
ன்ருகதுகொண்டு இந்தப் பரிணாமத்தி லோர்வித்துங் கண்டி
லோமென் றந்தப் பரிணாமத்தையுங் கைவிட்டு அதினுடைய
பிரயோசனமு மிழந்துபோகிற புத்தரைப்போலத் தரிசித்து
ஞானத்திலேநின்று சாதித்து இந்த ஞானமேயாய் இந்த ஞான
த்துக்கு முதலாகிய சிவனைக்கூடிப் பேரின்பத்தையே பெற
மாட்டாம லந்தஞானத்தைத் தரிசித்தவளவிலே யிவ்வளவே
பிரயோசனமென்று சிவரூபத்தி னுண்மையை யறியாம லந்த
ஞானத்தையுங் கைவிட்டுப்போன பாக்கியவீனர் சிவபோகத்
தை யிழந்துபோகாநிற்பார்கள்,—கண்டவர்கள் பேறுமையாலுற்
றூர்பேறு=அந்த நெல்லுமுதலான வங்குரங்களிலே வித்துகல
ந்து நிற்குமென் றறிந்தவர்களும் பயன்படுமளவு மந்தப் பரிணா
மத்தை யாசரித்துக்கொண்டிருந்து பிரயோசனப்படுங் காலங்
களிலே பிரயோசனங் கொள்ளமாட்டாமல் பராமுகத்தாலே
யதின் பிரயோசனத்தைப் பிறர்கொள்ள தாமிழந்துபோகிற பா

க்கிய வினையைப்போலச் சிவனைத் தாரகமாகவொழிந்து ஞானம் பிரகாசியாதென் றறிந்தவர்களு மந்தஞானத்தைக் கைவிடாம னின்று விசுவத்தைக் கைவிட்டு மந்தஞானமாகவே சாதித்து இந்த ஞானத்தி னைக்கியத்தாலே சிவனைப்பெற்றுப் பேரின்ப மே யநுபவித்துத் திருப்தியடையமாட்டாமல் வாதனையின் மிகுதியாலே பராமுகராய்த் தாம்பெற்ற ஞானத்தினைப் பின்ப நுபவிக்கலாமே யென்றும் சித்தத்துவம்பெற்று மிருப்பாரைப் போல நெகிழ்ந்திருந்தவர்கள் தமக்குப்பேறான சிவயோகத்தை யிழந்துபோகாநிற்பார்கள் ஆதலால்நீயுமிந்தத்தவத்தைப்பெற்றோ மென்று கர்வியாய்ப்போகாதே யிடைவிடாமல் ஞானமாய்நின் றே சாதித்துப் பின்பிந்த ஞானத்தி லுறுதலாலே ஞானமான துந் தலைமறையப் பவிக்கத்தக்க சிவயோகத்திலே யழுந்தி யநு பவிப்பாயாக. இதற்குப்பிரமாணம் திருமந்திரம்—"வித்தினில ன்றி முளையில்லையம்முளை, வித்தினிலன்றி வெளிப்படுமாறில் லை, வித்துமுளையு முடனல்லவேறல்ல, வத்தன்மைத்தாகு மற நெறிதானே". (௧௭)

இந்தச் சிவரூபந்தன்னை யெப்படி யறிவேனென்ற மா ணாக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று நானன்று - நின்ற
நிலையன்று மேயன்று நின்னறிவு மன்று
தலையன் றடியன்று தான்.

இ-ள். ஒன்றன்று = எல்லாப் பொருள்களுங் கரைந்து விட்டதிலே யுதிப்பதொன்றாகையாலே யெல்லாப்பொருளுந் தானே யொன்றாயிருப்பதுமன்று,—இரண்டன்று = தன்னிடத் திலே கூட்டறவிரோதிற வத்துமாகையினாலே யிரண்டாயிருப்ப துமன்று,—உளதன்று = வாக்குமனாதீதமா யிருப்பதொன்றாகை

யாலே பிரத்தியக்ஷமா யிருப்பதுமன்று,—இலதன்று = ஞானவான்களுக்கு ஞானயோகத்தின் முதிர்ச்சியிலே பரமானந்தத்தையளித்து நிற்கையாலே யில்லாத பொருளுமன்று,—நன்றன்றுதீதன்று = ஆன்மபோத மிறந்தால் கூடும்பொருளாகையாலே ஆன்மாக்களால் நன்று தீதென்று சுட்டப்படுவதுமன்று,—நானென்று = நானே பிரமமென்றநுசந்திக்கிற பசுஞானமன்று,—நின்றநிலையன்று = அநாதியே தொடக்கியின்றனவும் கேவலமான பாசஞானமன்று,—நீயன்று = பசுஞானத்தையும் பாசஞானத்தையுமுடைய ஆன்மாவுமன்று,—நின்னறிவுமன்று = அவனைக் குறிவாய்நிற்கிற ஞானமுமன்று,—தலையன்றடியன்றுதான் = ஆதியந்தமில்லையந்தச் சிவசொரூபத்துக்கு. (௨௯)

இப்படி நிச்சயார்த்தமா யிருப்பதொன்று கூடும்படி யெப்படியென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

செய்யாச் செயலையவன் செய்யாமை கண்டதனைச்
செய்யாச் செயலிற் செலுத்திடுநீ - யெய்யாதே
மாணவக வப்பொழுதே வாஞ்ஞைக் கொடியார்க்கு
மாணவமு மித்தா லறி.

இ-ள். செய்யாச்செயலையவன் செய்யாமைகண்டதனைச் செய்யாச்செயலிற் செலுத்திடுநீ = ஆன்மாவினிடத்தில் பக்குவத்திலே விளைந்த பரமானந்தத்தை யான்மாவறிந் துண்டாக்கிக் கொண்டதுமல்ல சிவன் விகாரியாய்நின்று கொடுத்ததுமல்ல ஞானமானது கனிந்தவிடத்திலே பிரகாசிக்கிற படியை யறிந்து இந்தப் பரமானந்தம் பிரகாசிக்கிறபொழுது விகற்பத் தோன்றாம லதுவே சுகரூபமாய் நிற்கும்படியந்த நிலைமை தவிழத் தானுமந்த நிராலம்பமேயாகுநீ,—எய்யாதே மாணவக வப்பொழுதே வாஞ்ஞைக் கொடியார்க்கு மாணவமு மித்தா லறி = மாணவகனே? சநநத்துக்குக் காரணமாகவுங் குறிக்கப்ப

டாநின்ற வாசையாகிற கொடிகளை வளர்க்கப்படாநின்ற மூல மலமாகிய ஆணவமல மப்பொழுதே வேறற்று விடாநிற்கும் நீ யொன்றுக்கு மஞ்சாதே இப்படி யறிவாயாக. (௫௧)

இந்தப்பொருளை சாதிப்பா னொருவனுக்கொரு செயலுங் கூடவொண்ணாதபடியாலே யவனுக்கொரு நியமம் வேண்டா மென் றருளிச்செய்கிறார்.

ஏதேனுங் காலமுமா மேதேனுந் தேசமுமா
மேதேனு மிக்கா சனமுமா - மேதேனுஞ்
செய்வா னொருவனுமாஞ் செய்யாச் செயலதனைச்
செய்யாமை செய்யும் பொழுது.

இ - ள். ஏதேனு - பொழுது = ஆன்மபோதமுள்ளளவு மித ற்கரிதாகிய வந்தநிராலம்பமான வுண்மை ஒருவன் தன்செய லன்றியே கூடுமிடத்து பின்னைகாலமென்றுமெ லெல்லாக்கால முமா மெல்லாத் தேசமுமா மெல்லாத் திக்குகளுமா மெல்லா வாதனங்களுமா மெல்லாத் தொழில்களினு நிற்பா னொருவனு மாம். (௫௨)

இனியிந்தச் சிவயோகத்தை யெளிதாகச் செய்வதாயிருக் கச்செய்தே செய்யாதிருக்கிறபடியு மிந்தச் சிவயோகத்தின் பெருமையு மருளிச்செய்கிறார்,

செய்தற் கரிய செயல்பலவுஞ் செய்துசில
செய்தற் கரியதனை யெய்தினார்க - ளையோநாஞ்
செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு.

இ - ள். செய்தற்கரிய செயல்பலவுஞ் செய்துசில செய்த ற்கரியதனை யெய்தினார்கள் = சிலர் கர்த்தாவைநோக்கித் தங்கள் சரீரத்தையு மனத்தையும் வருத்தி யாவராலுஞ் செய்தற்கரிய

செயல்கள் பலவற்றையுஞ்செய்து பெறுதற்கரிய பேற்றினைப் பெற்றார்களை,—ஐயோ நானுஞ் செய்யாமைசெய்து செயலறுக்க லாயிருக்கச் செய்யாமைசெய்யாதொழுகின்றேன் யானென்ன னே? எல்லாவிதப்பாசங்களு மொழிந்த நிர்விகாரமான சுபா வத்தைப்பொருந்திச் சகலசங்கற்பமில்லா தொத்துள்ளதான ஏக நமானவர்களே வொருத்தவிடமாயிருக்க விக்க நிர்விகாரமான வுண்மையை நான் செய்யாதிருப்பேனாகில், இப்படிப் பொது ப்படச் சொன்ன இந்த வுண்மையை யிவன் செய்யுமவரை த்துகூடுதைப் பொருட்டாக வுபாயமாகவே யருளிச்செய்தனெ னக்கொள்க.

(௧௧)

இந்த வுண்மை தொன்றுமறியாத விசுவத்தார் படுகிற கிலேசத்தைக் கண்டு மேல்லெனக் அருளிச்செய்கிறார்.

இப்பொருள்க ளியாதேது மெங்களிலு மொன்று
செய்து, மெய்ப்பொருளுஞ் செய்யா தொழிந்துழுதுக்கள்
மெய்ப்பொருளைக், கண்டிருத்தல் செய்யாதே கண்ட
மனிதரொலா, முன்றிருப்ப தென்னே யுரை.

இ - ள். இப்பொருள்—உண்மையானவைகளே? அன்னதிற ந்த வான்மாக்களிற் பெருதற்கரிய மக்கள்யாக்கையைப் பெற்ற வான்மாக்கள் சிவனோக்கி மெய்யிலேயொன்று சொல்லப்ப ட்ட சரியையாதல் கிரியையாதல் யோகமாதல் ஞானயோக ங்களாதல் இவற்றிலே யாதொன்றைச் செய்து விளைவிக்கின்ற யுஞ் செய்யாத நிராதாரயோகத்தைச் செய்திருத்தல் இத்தவுண் மையான பொருள் நிற்கிறமுறைமையை யறிந்து அதனுடைய வுண் மையிலே முறைமையாகப் பார்த்துக் கடைப்பிடித்து விக்ஞமுறை மைகளிலே யொன்றைச்செய்து பெறுதற்கரிய பேற்றினைப் பெறாதே தாந்தாம் விரும்பப்பட்ட தேகங்களு மத்தங்களும் நிலையில்லாதபடி கண்டுபோதுகிற வான்மாக்க ளெல்லாருக்

தேகங்களைப் போற்றிநின்று இதாவிதங்களைப் புசித்து அந்
ஞான மெய்ந்ஞானமாய்ப் போதுகிறவிது என்னகாரணத்தால்
இதனை நீ சொல்வாயாக. ஞானத்துக்குப் பக்குவமில்லாத வா
ன்மாக்களை நோக்கி சொல்லுதலினால் செய்தாராக வருளிச்செய்து
விதமும் சர்வான்மாக்களுக்குள் விட்டாதபொரு ளுன்னுடைய
பாக்கியத்திலே வீட்டிலே விதிகளைக் கைவிட்டு வாதனையைக்
கைவிடாமல் நின்று இந்திரிய சேட்டைக் கமலையாய்ப் பெறிழ
ந்து போகாமே இக்குணமாயிலே பிளைடவிடாமல் நின்று சா
திக்கப்பெறுட்டாக வசிய வுபதேசமாக வருளிச்செய்து
தெளக்கொள்க. (கஅ)

இனிச் சீடனைப்பார்த் தொன்றருளிச்செய்கிறார்.

வீட்டிலே சென்று வினைபொறுத்து நின்றிடுவன்
நாட்டிலே நல்வினைகள் செய்திடுவன் - கூட்டிலவாட்
சாத்திரிய நின்றிவேயற் றக்குழ் சேவலிசெய்து
மாத்திர மேயாமல்லாடாய் வந்து.

இ-ள். வீட்டிலே சென்று வினைபொறுத்து நின்றிடு
வென்—மூன்று மலவிடுமாக்க தொழில்களையும் புத்திரமித்திர
களத்திராதிகளையும் வவிட்டுத் அசாதுத்திலேபோய் நின்று
மும் பிரேமைசெய்யேன், நாட்டிலே நல்வினைகள் செய்திடு
வென்—இவ்வுலகத்திலிருந்து நன்றான சொல்லாதி கன்மங்க
ளைச் செய்துமும் பிரேமைசெய்யேன், கூட்டிலவாட் சாத்தி
ரநின்றிவேயற் [illegible] நின்றுமாயி
[illegible] மாகமாகமேல [illegible]
[illegible]
செய்தமாத்திரமே [illegible]
[illegible]
[illegible]

தொருபிரயோசனமுங் கைகூடாமல் நிற்பது போன்மை போற் றேர்போல நீயுங் கர்த்தாவைக் கைவிட்டு வேறுடைய செயலெ ன்றே நின்று பெறுதற்கரிய பேற்றைப்பெறுக் கோணை யானை யா லிப்படிச்செய்யாமை மெத்தவுன்மையிலே நிற்பாயாக. இது திட்டாந்த பூர்வமாக வறிவித்தது. (௫௭)

இன்னமு மிவன் செயலற்றின்று சகத்திற்கு முதலாய்த்துறை யுறுதிப் பிறக்கும் வண்ண மருளிச்செய்கிறார்.

இவன்முதலே யன்றி முதலில்லை யென்னுந்
இவனுடைய தன்னறிவு தன்னால் — இவனவனா
தன்செயலா தாகின்ற தென்று மிவையிறைக்குத்
தன்செயலாக் கொள்ளாமை தான்.

இ - ள். இவன்முதலேயன்றி முதலில்லையென்றும் — இந்த வாய்ச் சத்தரூ பெப்பொருட்குந் தலைமையாய் விருத்திபடைத்தவ னுமாய்க் கைவல்லிய நியாயமுமாய் ... இவ னுறிற கர்த்தாவையொழிய வேறு காணேனை யென்றும் இவ்வுலகில்லை யென்றும், — இவனுடையதன் னறிவுதன்னால் — ... க ள் யாரோ வறிக்கிறதென்கிற வறிவொன்று மறிவதென்று அறியப்படா தானையால் நீயறிவது யானறிவேனென்றும், — இவனவன தன்செயலாதாகின்ற தென்றும் ... மாக்கள் யான்செய்தேனென்று செய்யத்தக்க ... லா மற்றுங் கர்த்தாவின் செயலானதையால் ... வின் செயலேயென்றும், — இவையிறைக்குத் தன்செயலாக் கொ ள்ளாமைதான் — இப்படி நினைப்பன செய்வன செய்வனவான விவற்றை யெப்பொருளுந் தன்னுடைய செயலாகக் கொள்ளா மல் சகலமுங் கர்த்தாவின் செயலேயென்று யாவர் நிலை நா னறிகின்றார்கள் அவர்க ளந்தப்பொருள் தாமாய் விடுவார்கள்.

இனியிந்த வத்துவித சைவசித்தாந்தத்தி லொழிந்த வேறெறு சமயங்களினுடைய வில்லையென் றருளிச்செய்கிறார். (௧௪)

இன்றியிச் சமயத்தி னெல்லைதொறுந் தேறுமுட
னென்றுமெசவி யன்றத்து மின்றவரை - நின்றிங்கே
யங்குறுமிர் பெறுமோ பாடு மழியவரா
வெங்குறுமேல் கண்டா மிது.

இ-ள். இன்றிச் சமயத்தி னெல்லைதொறுந் தேறுமுடனென் றுமெசவி யன்றத்து மின்றவரை - இப்பொழு திந்தச் சைவசித் தாந்தத்தி லொழிந்த இப்பால் சமயத்த பாசகுணத்தைய மரு வியிப்பசு ஞானத்தோடேயுள்ள கற்று நிருவாணத்திலே யெ ழுந்தருளியிருந்த ஆனந்த மிருத்தத்தெய்தருளித் தன்னுடைய மெய்யடியார்க்கு வெளிப்படுகிய ஸ்ரீபாதத்தோ மிப்பகுதியென்று கா ட்டியவைகளுடனே யோனைத்தாயேமொழிந்து நிருக்கண் சாத்தி யருளி யெல்லாரும் காணவோவின்றார் வேறெறு சமயங்களிலு ண்டோ, - இன்றிங்கே யங்குறுமிர்பெறுமோ பாடுமுடியவரா - இன்றிந்த லோகத்திலே ஞானமுதலிய திருமுலைப்பாலைய முதுசெய்து இத்தப்பெருமையாலே சுகிர்தமாக வெற்றியாகக் கிடந்து றென்பிரமோ பிரானைப்பெற்றப் பிள்ளையாரையுள்ள ளையாகுந் தென்று வழுந்திருக்கும்பொ திருவை மலர்க்குளி ருந்தொர் பாசமயிலன் றுக்க வந்துளைத்தாலே நித்துக்காட் டிய வென்றுமன் (நித்தி நித்தமாட்டுகு மீண்டு மப்பொ ழுதே மெய்யாமயிலின் மனையாள் (இப்பா யன்றிலே) யித்தப் பெண்பிள்ளை வெவ்விக்கமயிருக்கு றன்மேல பிராமணவன் கா லத்திருக்கு வாழ்க்கப்பிடித்தென்ற படியாலும் அவரிருந்தப் பொருக்கூடமாலும் இவர்களும் வேண்டுகின்றும் பொருக் காமன் தைத்திகேன்ற பின்னெல்லாருக்காணவே நிருப்பொரு மனைத்திலே கூடப்புகுந்தே இப்படிநடத்தின மிந்தச் சமயத் தில் சம்பந்தப்பெருமா னுபாமுமொழிந்து வேறுமொரு சமயங்

களிலுண்டோ,—என்றுரிலைக் கண்டாயிது = இந்த முறைமைக ளிந்தச் சமயத்திலொழிந்து மாவைகளோ? வேறொரு சமயங் களினு மில்லைகாண். (௯௫)

இனியிந்தச் சைவசித்தாந்தத்தி லுறுதிப்பாட்டிலே நின்ற சிவஞானிகள் பெருமையை யருளிச்செய்கிறார்.

விரிந்தாங் குவிந்தும் விழுங்குவார்கள் மீண்டுந்
தெரிந்துந் தெரியாது நிற்பர் - தெரிந்துந்
தெரியாது நிற்கின்ற சேயிழையா ளென்றும்
பிரியாது நின்றவனைப் பெற்று.

இ - ள். விரிந்தாங்குவிந்தும் விழுங்குவார்கள் = இந்த சிவ ரூபத் தன்னிடத்தி னிற்கிறபோல வெல்லிடத்து நிற்கிற முறைமையைக் கண்டு வேறின்பத்தை யெய்தியு மிதிலுமதனா லே தன்னையும் பிரபஞ்சத்தையு மந்தப்பேரருள் தன்னையு மற ந்து சுபாவத்திலேயழுந்தி யநுபவித்துக்கொண்டிருப்பார்கள்,— மீண்டுந்தெரிந்துந் தெரியாதுநிற்பர் = இந்த முறைமைகளிலே யநுபவியா நிற்கச்செய்தேயும் பிராரத்தத்தாலே பிரபஞ்சத்தை யன்றியுஞ் சொரூபத்தி லைக்கியத்தாலே பிரபஞ்சத்தி லழியா மலந்த வுண்மையைக் கண்டு நில்லாநிற்பார்கள்,— தெரிந்துந்தெ ரியாதுநிற்கின்ற சேயிழையாளென்றும் பிரியாது நின்றவனைப் பெற்று = அநாதியே சர்வத்தையுமறிந்து மறிவித்து நடத்தி நிற் கச் செய்தேயுந் தானொரு விகாரங்களினும் படாமல் நிற்கிற ஞா னசத்தியுடனே யெக்காலமும் பிரியாத சிவனைத் தன்னி டத்தி லுறுதியாகப்பெற்ற சிவஞானிகள். இவர்களுக்குக் கொடுக்கத்திலும் விரிவிலும் இருவினை மிகுதலில்லையே யொ ழியப் பிரபஞ்சவாதனை கடாவுதல் ரறிவித்தது. (௯௬)

இன்னமுமொரு திருவெண்பாவாலே யந்த விளக்கம ருளிச்செய்கிறார்.

ஆதனுமா தனியு மாய்நிறைந்து நின்றவனைச்
சேதனைக் கொண்டே தெளிவுற்றாய் - சேதனனைச்
சேதனனி லேசெலுத்திச் சிற்பரத்த னாயிருப்ப
ரோதமறக் கண்டவர்க ளின்று.

இ - ள். ஆதனை — இன்னுண ஆன்மாக்களுக் கிருப்பிடமான அந்நிலைகளையு மிடையிடமாக நிற்கிற ஆன்மாக்களையு மனாதியே பொருந்தி யமையாமா யல்லவுமாய் நிற்கிற சைதன்னிய சொரூபனை யிவனே யவன்சொரூபன்னியத் திருமேலே ஞானமே திருமேனியாகக்கொண் டெழுந்தருளி வந்த வாசாரியனைக் கொண்டே தெளிந்து தானுமந்தச் சைதன்னிய சொரூபமாய் நிற்கிறதன்னையு மந்தச் சைதன்னியமானது சுயைப்படியந்தச் சிவன் சையிலேகொடுத்து ஞானத்துக்கு மேலாகிய வத்தி யமாகிய பிராமிற்பரன் திரோதாயிசேஷத் தரித்த கவியா னோர்கள். (௬௭)

இப்படி நிற்கத்தக்க சிவஞானிகளிடத் திலுண்டான விசேஷத்தை யருளிச்செய்கிறார்.

காமடங்க வித்தைக் கவைமடங்குந் தாபதர்க
டாமுனி வித்தைக் கவைமுனையுந் - தாமுனியிற்
பூமடங்கை தங்கள் புறம்படங்கை போயகலு
நாமடக்கைக் கில்லா னயந்து.

இ - ள். காமடங்க வித்தைக்கவைமடங்குந் தாபதர்க டாமுனி வித்தைக் கவைமுனையும் = இப்படி ஞானத்திலேயிருந்து சாதித்த கைக வர்த்ச் சிவனோட்டெற்று சிவனிடத்திலே பொருந்திய ஞானமு மொக்கவொக்கநிற்கும், — இப்படிக்கொத்த சிவ ஞானிகள் பிராரத்தத்தாலே மிகவுமிக்காயு முன்பொருக்கொ ஞானமு பொக்கமுமாக்கு முன்பு மாமா யீழ்த்தாத்தோலே

விப்பொழுது மிந்தஞானமே யிவனுக்குத் தனுகரண புவன போகமுமாய் நிற்கும்,—தாமுனியிற் பூமடந்தைதங்காள் புகழ் மடந்தைபோயகலு நாமடந்தைநில்லா ளயர்ந்து = இப்படிப் பட்ட சிவஞானிகளுக்குக் கோபப்பிரியங்க ளில்லையாயினு மிகுத்த பாவிகளால் அவர்கள் திருவுளங்கரிகினகாலத்து அந்தப் பாவிகளுக்குண்டான ஐஸ்வரியமும்போ யவர்கள் கீர்த்தியும் விட்டுப்போ யவர்கள் வாக்குகளுந் தம்பியாநிற்கும். சிவனைக் கூடிநின்ற சிவஞானிகளுக்கும் பிராரத்தத்தாலே நிலைதிரிந்தாலும் விசுவங்கூடாமல் ஞானங்கூடின காரணமேதென்னில்? ஞானத்திலேநின்றவன் விழுந்தா லதற்குக்கீழான பிரபஞ்சத்திலே விழாநிற்பன், ஞேயத்திலேயழுந்தினவனுக்கு நிலைதிரிந்தா லதற்குக்கீழான ஞானத்திலே விழுவன், இதனையொழிந்து விசுவங்கூடாதெனவறிக. (௫௩)

இப்படிச் சிவனைப்பெற்றவர்கள் முத்தராய் விடுவதொழிந்து ஒன்றையாக்குதலழிக்குதல்செய்கிறவிது ஈஸ்வரன்கிருத்தியமாயிருக்க விவர்களுக்குண்டானபடி யெப்படியென்ற மாணாக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

துரியங் கடந்தசுடர்த் தோகையுட னென்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான் - றுரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளு
மாக்கியிடு மன்பர்க் கவன்.

இ - ள். துரியங்கடந்த சுடர்த்தோகையுடனென்றும் பிரியாதே நிற்கின்ற பெம்மான் = ஆன்மபோதத்தா லறிதற்கரிய ஞானசத்தியுடனே யெக்காலமும் விட்டு நீங்காமனிற்கிற பரமேஸ்வரனானவன்,—துரியத்தைச் சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளுமாக்கியிடு மன்பர்க்கவன் = தன்னுடையவளவிலே மிகுந்த வன்பைவைத்த வான்மாக்களை

யான்மபோதங்கூடாமல் விழிப்பித்த ஞானசத்தியிலேகூட்டித் தன்னாலேசெய்யப்பட்ட வநுக்கிரகநிக்கிரகங்களையு மவர்களைக் கொண்டு தான் கூடிநின்றுசெய்வித்து அவர்கள் செய்தார்களாம்படியே நிறுத்தாநிற்பர்கள். (௬௯)

இப்படிப்பட்ட சிவஞானிக ளருளாலே செய்தசாமர்த்தியங்களை நாலுசெய்யுளாலே யருளிச்செய்கிறார்.

ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்த - லேடெதிர்வெப்
பென்புக் குயிர்கொடுத்த லிங்கிவைதா னேங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.

கொல்கரியி னீற்றறையி னஞ்சிற் கொலைதவிர்த்தல்
கல்லே மிதப்பாய்க் கடனீந்த - னல்ல
மருவார் மறைக்காட்டில் வாசு திறப்பித்த
திருவாமூ ராளி செயல்.

மோக மறுத்திடினு முத்தி கொடுப்பதென
வாகமங்கள் சொன்ன வவர்தம்மைத் - தோகையர்பாற்
றூதாகப் போகவிடும் வன்றொண்டன் றொண்டுகளை
யேதாகச் சொல்வே னியான்.

பாய்பரியோன் றந்தப் பரமானந் தப்பானைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து - மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்.

இ - ள். இப்படி நாயன்மார்செய்த செயற்பாடுகளையு மறிவாயாக. (௭௧)

இப்படிப்பட்ட சிவயோகமே முத்தியைத் தருவதென்றும் நின்றயோகங்களெல்லாம் சனனத்தைவிளைக்குமென்று மருளிச் செய்கிறார்.

அம்மையிலு மிம்மையிலு மச்சந் தவிர்த்தடியா
ரெம்மையுமா யெங்கு மியங்குதலான் - மெய்மைச்
சிவயோக மேயோக மல்லாத யோக
மவயோக மென்றே யறி.

இ-ள். அம்மை—யறி=தம்பிரானார் திருவடியைப்பெற்ற சிவயோகிகள் பதமுத்திகளாலுண்டான பயங்களையும் பிராரத்தத்தாலே யிந்தலோகத்திலுண்டான பயங்களையுஞ் சொரூபத்தி னைக்கியத்தாலேகெடுத்து அந்தச் சொரூபத்துக்குள்ளளவும் வியாத்தரா யொருசங்கற்ப விகற்பமின்றியே யெவ்விடத்துந் தங்கள் சுவேச்சையிலே திரிகையால் மாணவகனே ? இப்படிச் சற்காரியமான சிவயோகமே சிவனை யுள்ளபடியறிந்து கூடின யோகமாவது, மற்றுமுள்ள யோகமெல்லாஞ் சிவனை யுள்ளபடி யறியாத யோகமாகையா லவையெல்லாஞ் சனனத்தையுண் டாக்குமென்றே யறிவாயாக. (எச)

ஆன்மாக்க ளெல்லார்க்குங் கர்த்தா வொருவனாயிருக்கச் சிலரைப் பதமுத்திகளிலேவைத்துஞ் சிலரைத் திருவடியிலே சேர்த்துக்கொண்டுஞ் சிலரை விஸ்வத்திலேநிறுத்தியுஞ் செய் தாற் பக்ஷவாதியாகானோ வவனுடையகிருபைக்குப் போது மோவென்ற மாணாக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

மன்னனரு ளெவ்வண்ண மானுடர்பான் மாணவக
வன்ன வகைய தரனருளு - மென்னி
லடியவரோ யெல்லாரு மாங்கவர்தா மொப்பி
லடியவரோ யெல்லா மறி.

இ - ள். மன்—அறி = மாணவகனே? இராஜாவானவன் தன்னுடைய வாக்கினையினாலே தனக்கு நடக்கு மந்தராச்சியங்களில் பிராணிகளெல்லாரையு மிரக்ஷிக்கவேணுமென்கிறகருத்தெப்பொழுது முண்டாயிருக்கச் செய்தேயும் புத்திமான்களுமாய்ச் சாந்தருமாய்த் தன்னுடைய வளவிலே மிகுந்த சிநேகங்களை யுடையவருமா யிருக்கத்தக்கவர்களைத் தானாகப்பார்த்துந் தன்னுடையவளவிலே சிநேகமின்றியே காரியத்தைப்பெற்ற வாக்கினைக்குப் பயந்திருக்கத்தக்கவர்களை யொவ்வொரு முகங்களிலேவைத்தும், குணஹீனரா யிருக்கத்தக்கவர்களை யவர்களுக்குத்தக்க தண்டங்களிலே தண்டித்து அவர்கள் குணவான்களாகும்படிசெய்கிற விவையெல்லாங் கிருபையேயானாற்போலப், பரமேஸ்வரருடைய திருவுள மெல்லாரளவிலு மொத்த வன்பாயிருப்பினு மலபாகமுண்டாமளவும் ஆன்மாகளுக்குத் தனுகரணபுவனபோகங்களையுங் கன்மபலங்களையுங்கூட்டிச் சுகதுக்க வேதனைகளிலேவைத்துச் சிலரைச் சத்திநிபாதத்துக் குறைதலுக்கீடாகப் பதமுத்திகளிலேவைத்து, மிகுத்த சத்திநிபாதமுடையவர்களைத் திருவடியிலே சேர்த்துக்கொண்டு முறைமையிலே சேர்த்தருளா நிற்பனென்று சொல்லுகையாலெல்லாருமவருக்கடிமையாயிருக்கச்செய்தேயுந் திருவடியைப் பெற்றவடியா ரொப்பிலாத வடியாராகையால் நீயு மிவையெல்லாவற்றையுமறிந்து திருவடியிலே பொருந்தியிருக்கிற சிவயோகமே சநநத்தை யறுக்கிறயோகமென்று மிதிலே நிலைநின்றநுபவிப்பாயாக. (எ௫)

இப்படி யொப்பில்லாத வடியார்க்குந் தேகமுள்ளளவும் பிராரத்தம் புசிக்கவேண்டுகையில் பிராரத்தம் புசிக்கச்செய்தே யாகாமியமேறாமற் புசித்தபடி யென்னென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

உடம்புடைய யோகிகடா முற்றசிற் றின்ப
மடங்கத்தம் பேரின்பத் தாக்கிற் - றொடங்கி
முளைப்பதுமொன் றில்லை முடிவதுமொன் றில்லை
யிளைப்பதுமொன் றில்லை யிவர்.

இ-ள். உடம்புடைய யோகிகடா முற்றசிற் றின்பமடங் கத்தம் பேரின்பத் தாக்கில் = பிராரத்தநாசம் பிறக்குமளவு முடம்பிருக்கத்தக்க சிவயோகிகள் தாம் சிற்றின்பத்தைப் பொருந்தினார்களாயினு மந்தச் சிற்றின்பமானது நிலையில் வேறுபாடும் பாவனையில் வேறுபாடுமொழியப் பேரின்பத்திலே வேறுபாடில்லையாகையா லிவர்களுக்கிந்த விரண்டுவேறுபாடுமின்றிச் சொரூபத்திலே நிலைதிரிந்தாலும் ஞானத்திலொழிந்து மலமாயாதி கன்மங்களிற்படார்கள்; ஆதலாலே, கூடின சிற்றின்பங்களெல்லாம் ஞானத்தினிலையாலே மீண்டு மந்தப்பேரின்பத்திலே யாக்கிக்கொள்ளாநிற்பர்கள். இப்படிச்செய்யி லிவர்களுக்கு,—தொடங்கி முளைப்பது மொன்றில்லை முடிவது மொன்றில்லை யிளைப்பதுமொன்றில்லை யிவர் = பிராரத்தம் புசிக்கச்செய்தேயு மறுமைக்குவித்தானவாகாமிய மங்குரிப்பது மொன்றில்லை பிராரத்தநாசம் பிறந்து தேகமானது நழுவுங் காலத்து இவ்வுடம்புடன்கூடி மரிப்பதுமில்லை; ஆகையா லிவர்களொரு கன்மங்களாலு மொருசற்றுஞ் சலியார்கள்.

ஞானத்தாலே சொரூபத்தைக் கூடவேணுமாகி லந்த ஞானந்தானே யமையாதோ சொரூபமென்று ஒரு பொருள்கூட வேணுமோ வென்ற மாணாக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

பேரின்ப மான பிரமக் கிழத்தியுட
னோரின்பத் துள்ளானை யுள்ளபடி - பேரின்பங்
கண்டவரே கண்டார் கடலுயிர்த்த வின்னமுத
முண்டவரே யுண்டார் சுவை.

இ-ள். பேரின்பமான பிரமக்கிழத்தியுட னேரின்பத் துள்ளானை யுள்ளபடி பேரின்பங்கண்டவரே கண்டார் = அள விடப்படாத பரமானந்தமான பிரமசத்தியுடனே யிடைவிடாத சுகரூபனாயிருக்கிற பரமேஸ்வரனை முறைமையிலேகூடி யந்தப் பரமாநந்தமே யநுபவிக்கிற சிவயோகிகளே சிவனை யுள்ளபடி யறிவார்கள்,—கடலுயிர்த்த வின்னமுதமுண்டவரே யுண்டார் சுவை = கடலிற்பிறந்த வினியவமுதத்தைப் புசித்து அதி லுண்டான விரதத்தி லழுந்தினவர்களே யமுதத்தைப் புசித்த வர்களு மிதிற் பிரயோசனமான நித்தியத்துவம் பெற்றவர்களு மல்லது, அந்த வமுதத்தைத் தரிசித்தமாத்திரத்தி லதினுடைய விரதமுந் தெரியாது பேறுங்கூடாது. அதுபோல, மலமாயாதி கன்மங்களை நீங்கி ஞானத்தைத் தரிசித்தாலுஞ் சிவனைக்கூடிப் பரமானந்தத்தை யநுபவித்தா லொழிந்து ஞானமறிந்த மாத்தி ரத்தில் சாயுச்சியங்கூடாது. (எ)

இப்படிச் சுகரூபமாயிருக்கிற பரமேஸ்வரன் நானாவிதமா யிருக்கிற பிரபஞ்சத்துக்குக் கத்தாவாகி லவனும் விகாரியா கானோ வென்ற மாணுக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

நங்கையினா லனைத்துஞ் செய்தாற்போ லுடனைத்து
நங்கையினாற் செய்களிக்கு நாயகனா - நங்கையினு
நம்பியாய்த் தானடுவே நாட்டப் பெறுமிதுகா
ணெம்பெருமா னார்த மியல்பு.

இ-ள். நங்கை—இயல்பு = நம்முடைய நினைவின்வசத் திலேநின்று கைகள்முதலான வங்கங்களெல்லாந் தொழில்களை யுஞ் செய்துமுடியாநிற்க வந்தச் செயற்பாடுகளெல்லா நம் முடையமேலே யேறுமாப்போலச் சுகரூபியாயிருக்கிற சிவன் சாக்ஷிமாத்திரமாயிருக்கத் தன்னுடையசத்தியாலே பிரபஞ்ச நடத்தாநிற்க விந்தச்சத்தியினு நிர்விகாரமாயிருக்கிற சிவன்

தானொன்றைச் செய்யாதிருக்கச் செய்தேயு மிந்தச்சத்திக்குப் பிராணனுமாய் நாயகனுமாகையாலே யிந்தச்சிவனையே கர்த்தாவாகச் சொல்லப்படுதலால் மாணவகனே? இவ்வளவேகாணும் முடைய கத்தாவுக்குச் செயலாயுள்ளது. (௭௮)

இப்படி வெகுவிதமான சத்தியிலே நிர்விகாரமான சிவன் பொருந்தி நின்றபடி யெப்படியென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

பொன்னிறங் கட்டியினும் பூணினு நின்றாற்போ
லந்நிற மண்ணலு மம்பிகையுஞ் - செந்நிறத்த
ளெந்நிறத்த ளாயிருப்ப ளெங்கள் சிவபதியு
மந்நிறத்த னாயிருப்ப னாங்கு.

இ-ள். பொன்—ஆங்கு = பொன்னுக்கு நிறமானமாற்றானது கட்டியானபோது மாபரணங்களானபோது மாற்றுக்கு வேறுபாடில்லாதாற்போலச் சுகரூபனான சிவனும் ஞானசொரூபியமான சத்தியு மிந்த முறைமையேயாதலால் பிரபஞ்சவிசித்ரமாகச் சத்தியானது யாதொருரூபமா யிருந்தது நம்முடைய கத்தாவாகிய சிவனு மந்தவிடங்கடோறு மந்தந்த முறைமைக் காயே யிராநிற்பன். (௭௯)

இன்னமுஞ் சிவனுடைய நிலைமையை விளங்க வருளிச் செய்கிறார்.

தாரத்தோ டொன்றாவர் தாரத்தோர் கூறாவர்
தாரத்தோ டெங்குந் தலைநிற்பர் - தாரத்தி
னாதாந்தத் தேயிருப்பர் நாற்றானத் தேயிருப்பர்
வேதாந்தத் தேயிருப்பர் வேறு.

இ-ள். தாரத்தோ டொன்றாவர் = சிருட்டிகாலத்திலே யான்மாக்கள் சூக்குமதேகத்துடனே யிச்சா ஞானக்கிரியை சீவிக்கைப்பொருட்டாகச் சிவனும் தம்முடைய சத்தியைத்

தோற்றுவித்துத் தாமு மந்தச்சத்தியுடனேகூடி யிச்சாஞானக் கிரியாசொரூபமாவர்— தாரத்தோர் கூறுவர் = அவர்களுக்குத் தூலதேகமாய் வருப்புண்ணவேண்டித் தாமுஞ் சத்தியுமாக அர்த்த நாரீச்சுரயான விக்கிரகமாகாநிற்பர்,—தாரத்தோடெங் குந் தலைநிற்பர் — அந்த வான்மாக்களுக்கு மலபாக முண்டா கைப்பொருட்டு அவர்கள் கன்மங்களிலே யநுபவிக்கவும் ஆர்ஜ ஜிக்கவும்வேண்டி சத்தியுருவமான பிரமவிஷ்ணு உருத்திரர் மகேஸ்வரர் சதாசிவரென்று சொல்லப்பட்ட விக்கிரகங்க ளுடனே யந்தரமூர்த்தியான பிரணவசொரூபமாய் ஆன்மக்க ளிடங்களிலே மாயாதத்துவங்களுடனேகூடி நடத்தாநிற்பர்,— தாரத்திறுதாந்தத்தேயிருப்பர் = மீண்டு மான்மக்களையுந் தத்து வங்களையும் பிரிக்கவேண்டி மஹாமாயாசத்தியான நாதாந்த மான நிருவிகாரத்திலேயிராநிற்பர்,—நாற்றானத்தே யிருப்பர் = இவையொன்றையுமறியாம லுபாதானங்களிலே மறைப்பட வேண்டி நாலாந்தானமான திரோதானசத்தியிலேயிராநிற்பர்,— வேதாந்தத்தேயிருப்பர் = இவற்றுக்கு அநுக்கிரகமேசெய்ய வேண்டி வேதத்திலேமுடிந்தபொருளான பராசத்தியிலே யிரா நிற்பர்,—வேறு = இப்படி யெல்லாமாய் நிற்கச்செய்தேயு மிவற்றுக்குத் தான்வேறுமாய் தன்னுடைய சுபாவமான சொ ரூபமா யிராநிற்பர். (௮௰)

இப்படிப் பரமேஸ்வர னெல்லாமாயல்லவுமாய் நிற்கிற முறைமையைப் பேதமென்னவோ வபேதமென்னவோ பேதா பேதமென்னவோ வென்ற மாணாக்கனைநோக்கி யருளிச்செய் கிறார்.

ஒன்றுரைத்த தொன்றுரையாச் சாத்திரங்க ளொன்றாக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவோ - வின்றுரைக்க
வென்று மியன்றிடுமோ வென்போல்வா ரேதேனுஞ்
சொன்னாற்றா னேறுமோ சொல்.

இ - ள். ஒன்று—சொல்=வெகுவிதமாயுள்ள சாத்திரங்களெல்லாமொரு சற்றுந்தரித்துநின் றவனுடைய வுண்மையையறுதியிட்டுச் சொல்லமாட்டா, இப்படிப்பட்ட தொன்றையிப்பொழு தறுதியிட்டுச்சொல்ல வென்றால்முடியுமோ, வென்னையொப்பார் சிலர் சொன்னாலும் விசுவத்திலுள்ளார்க் கேறுமோசொல்லாய். இன்னமுமிவனுக் கிந்தமுறைமை விளங்கிற்றில்லையென்று நொந்து இப்படி யருளிச்செய்ததெனக் கொள்க. (௫௧)

இதனை யின்ன மிவனறியும்படி யருளிச்செய்கிறார்.

யாதேனுங் காரணத்தா லெவ்வுலகி லெத்திறமு
மாதேயும் பாக னிலச்சினையே - யாதலாற்
பேதமே செய்வா யபேதமே செய்திடுவாய்
பேதாபே தஞ்செய்வாய் பின்.

இ - ள். யாதேனும்—பின் = யாதொருகாரணத்தினாலுஞ் சர்வலோகங்க ளெல்லாப்பொருள்களுஞ் சத்தியைப்பொருந்தின சிவனுடைய வடையாளமேயாகையால் நீயுமிதனைப் பேதமென்பாய் அபேதமென்பாய் பேதாபேதமென்பா யிவற்றிற் பொருந்தினதொன்றைச் சொல்வாயாக. பின்னென்றது ஞாதாக்களுக்கு இந்த மூன்றுகாரியமுங் கருத்தல்லவென்றது. அடையாளமென்றது சர்வமுஞ் சைதன்னியமாக நின்றவர்கட் கன்றி நின்றிரகசிக்கையா லெனவறிக. (௫௨)

இந்தமுறைமையத்தத்திலழுந்தினவனுக்கொழிந்து கேட்டவனுக்கு விளங்காதென்று இன்னமுமிதனை விளங்க வருளிச்செய்கிறார்.

நின்றபடி நின்றவர்கட் கன்றி நிறந்தெரியா
மன்றினுணின் றாடன் மகிழ்ந்தானுந் - தென்றானே
யெண்ணுறுமைம் பூதமுத லெட்டுருவாய் நின்றானும்
பெண்ணுறநின் றாடும் பிரான்.

இ - ள். நின்ற—பிரான்=நீ சொல்லுகிறபேதமும் அபேதமும் பேதாபேதமுமன்று சங்காரகாலத்திலே சத்தியையுமொடுக்கிக்கொண்டு சங்காரதாண்டவஞ் செய்தருளின தம்பிரானே சிருஷ்டிகாலத்திலே தோற்றுவிக்கத்தக்க பொருள்களுடனே பொருந்திய பஞ்சபூதங்களுஞ் சந்திராதித்தரு மான்மாக்களுமாய் நின்றானும், திதிக்காலத்திலே யடியார்பிறவித்துயரங் கெடத்திருவம்பலத்தி லாநந்தநிருத்தத்தை விரும்பினானுமாகையா லநாதியே தன்னுடைய சொரூபந்தோன்றாம லான்மாவாய் நின்ற முறைமைபோல வான்மபோதந்தோன்றாதபடிச் சிவனேயே நின்றவர்களுக்கொழிந்து சிவனுடைய வுண்மைதெரியாது. (அ௩)

இனிச்சொரூபத்திலே யொருதன்மையாய் நிற்குமுறைமைய யருளிச்செய்கிறார்.

சிவமே சிவமாக யானினைந்தாற் போலச்
சிவமாகி யேயிருப்ப தன்றிச் - சிவமென்
றுணர்வாரு மங்கே யுணர்வழியச் சென்று
புணர்வாரு முண்டோ புவி.

இ - ள். சிவமேசிவமாக யானினைந்தாற்போலச் சிவமாகியே யிருப்பதன்றி = பேதமுமபேதமும் பேதாபேதமு மறப் பக்குவத்திற் பிரகாசித்தசிவசொரூபமே சொரூபமாக வேறொரு விகற்பமுங்கூடாமல் நானநுபவித்தபடியே யுன்னையும் நிறுத்த நினைந்தாற்போல மாணவகனே நீயுமொருவிகற்பங்கள் கூடாமலந்தச்சொரூபமே சொரூபமாகவிருப்பதொழிந்து,—சிவமென்றுணர்வாருமங்கே வுணர்வழியச்சென்று வுணர்வாருமுண்டோ புவி = தானுந்தனியே யொருமுதலென்றும் சிவனுந் தனித்தொருமுதலென்றுந் தன்னுடையபோதத்தாலே யிந்தச்சிவனையறியவிசாரிப்பாரு மவ்விடத்தேதான்கெட்டுச் சிவத்துடனே பொருந்த விசாரிப்பாருமுண்டோ வுலகங்களில். (அ௪)

இன்னமு மிதனை விளங்க வருளிச்செய்கிறார்.

அதுவிது வென்று மவனுமே னென்று
மதுநீயே யாகின்று மென்று - மதுவானே
னென்றுந் தமையுணர்ந்தா ரெல்லாமி ரண்டாக
வொன்றாகச் சொல்லியா வற்று.

இ-ள். அது—உற்று = ஆன்மாவுஞ்சிவமு மெப்பொழுது மிரண்டாயிருக்குமென்றும், சிவமென்றொருபதார்த்தமில்லை யான் மாத்திரமே சிவமென்றும், சிவ னீயென்றும் வேறில்லை யுன் னுடைய வுபாதிகள் நீங்கினபொழுது நீதானே சிவமாகிறா யென்றும், நான் சிவனுடனேகூடிச் சிவனாய் விட்டே னென் றும், தம்மையுள்ளபடி யறிந்திருக்கிற சிவயோகிகள் [illegible] பேதமாகவும் அபேதமாகவும் பேதாபேதமாகவும் சொல்லுவார் களோ மாணவகனே. ([illegible])

இனி கர்த்தாவெல்லாமாய்நிற்கிற அபேதத்தை விளங்க வருளிச்செய்கிறார்.

ஈறுமி யங்கே முதலொன்று மிங்கிரண்டாய்
மாறுக வென்னவையாய் மற்றிவற்றின் - வேறு
படாது மிருக்கு முதலுடைய னென்றுங்
கடாது மிருக்கின்றா னன்.

இ-ள். ஈறுமியங்கே முதலொன்றுமிங்கு = [illegible] விட்டுச் சிவமொன்றுமேயாய், — இங்கிரண்டாய் [illegible] இருவடிவாய்நின்றே [illegible] தாருமாய், — மாறுகவென்னவையாய் = [illegible] சத்தியுடனாய்நின்றுந் தோற்றுவிக்கு [illegible] கூடிநின்று நடக்கும்படி பொருளுற்ற [illegible], — மற்றிவற்றின்வேறாய் = இப்படி யிவற்றிற்பொருந்த [illegible]

செய்தேயு மிவற்றுக்குத் தான்வேறுமாய்,—உடனுயிருக்கு முரு வுடைமை = இப்படி வேறுமிற்கச் செய்தேயு மொருமுதல் போல விளைவதுவேயாய் நிற்கிறவுன்னை,—என்றும் கூடு யிருக்கின்றான்கள் = மாணவர்களோ ? எப்பொழுது மவை னுடையாமு யிருக்கின்றான்கள். இது பேதமென்பார்க்கு மபேதமென்பார்க்கும் பேதாபேதமென்பார்க்கு மிவையொன்று மல்லவென்பார்க்கும் பொருந் நிற்பவொன்றுமுறைமை யறி விக்கிறது. (அக)

சிவனுக்குச் சர்வமும் இருமேனியாகி யுடனுறைதலை முழுதுமேதாவென்ற வண்ணத்தைச் சேர்கி யருளிச்செய்கிறார்.

உன்னுதற் கெட்டாத மூநுளதெல்லை
முன்னுடைய தென்றுரீ யுற்றவோ - மன்னுயிர்க
ளெல்லாமே யாகியு மெல்லாமு மாயுதல்
செல்லாமையே நின்றிலன் பால்.

இ - ள். உன்—ன மாணவர்களோ ? உன்னுடையவனாகத் திகை மாறுதலிதமாய்விட்கிற ஒர் ஆக்கம் விசேகிடாக அவை யுமிற கசுதக்கவேதுகோகளெல்லா முனைக்குள்ளவிலைபோல நீ கூடியின் றுடையவிருத்தல் பேசி? அவையான், சர்வத்தையுங்கூடி நிற்கச்செய்தேயு மவையொன்றுமுடனும் பற்றறாதின்று மிகாதிக் கிற சிலையிடத்திலே யலைமுதலோ நிலைபெற் றுநிற்கிற வான் மாக்க ளாகவையறுபூகையுமாம் வருதிறவுன்னை மாசுமுறை றனை பேரமைக்கான். இது சகநாக்கவேதுகோக ளான்மாவுமெல்லாக்கு மெல்லாக்கில்லாமொன்றுமுறைமை யறிவிக்கிறது. (அஉ)

சிவன் சகநாக்கவேதுகோகள்கூடாமல் நிற்கச்செய்தே சர்வமுக்காலத்தை நிற்கிறசைச்சில யருளிச்செய்கிறார்.

அவனே யவனி முதலாயி னானு
மவனே யறிவாய்நின் றானு - மவனேதான்
னானேயிப் பென்றானே யபிமானித் தின்றானுங்
கானானை நின்றானுங் கண்டு.

இ - ள். அவனே—கண்டு — மாணவகனே ? பிருதிவி முதல் நாதமீறானதத்துவங்கள் சேட்டிக்குமிடமாயுள்ள தத்துவங்களுக்குந் தத்துவனாய்நின்றானைப் பதிப்பாசமாகக்கண்டே, மிக்குத் தத்துவங்களைப்பொருந்தி யான்மாக்கள் [illegible] கும்படி. பந்தமான்மாக்களுக்கு அசைவற்றுநின்றானைப் பதிப் பாசமென்றேனே, தோற்றப்பட்ட [illegible] செய்த வினைக்கீடாக பொன்றுவதாகவும் [illegible] வடிவாம்படியமைந்தவனைப் பதிக்க இக்கண [illegible] நின்றானைப் பதிப் பாசமாகவே, இவற்றைப் [illegible] யிலை நானாய்நின்று [illegible] வொன்றுமறியாதபடி. இதனாலே [illegible] மத்தப் பாசமென்றான். (௬௬)

இப்படிப்பட்ட பாசங்களையிக்கு இருக்கின்ற [illegible] வொன்றேதானென்றறிந்தபின்பேயிதுபாதையே [illegible] தோன்றி யருளிச்செய்கிறார்.

இன்றுதா னீபொன்னோர் மன்றுகுந்தும் [illegible]
வன்றிக்கா ளுன்னைக் கண்டி [illegible] - [illegible]
னுருமரைய யீன்றவன் பங்கனையான் [illegible]
பெருமையைச் சொல்ல [illegible].

இ - ள். இன்று—[illegible] கண்டு நிலையெல்லா மறியச்செய்தது [illegible] பற்றை பன்றுடைய மாக்கள் இருப்பது [illegible] வருமிவற்றையெல்லா மறிந்தறிவிக்கி [illegible]

சொரூபத்தை யிந்தத் திருஷ்டியாலே கண்டேனென்றால் யாவற்றுக்குந் தெரியாத மாயையைப்பெற்ற சத்தியைப் பாதியிலே யுடையபரமேச்சரனை மாம்சதிருஷ்டியாலே காணவல்லார் யாவர். விட்டபடாத மாயையாலே மறைக்கத்தக்க மறைப்பை யெல்லாக்கப்பி இந்தத் திருஷ்டிகோசரமாகக்கண்டு வழி பட்டு வீடுபெறுவதைக்கு நம்மைப்போலெழுந்தருளி வந்தருளின சித்த னாசாரியமூர்த்தியையொழிய வேறொருதெய்வமில்லை யென்றறிவித்தது. (௪௯)

இப்படி கடாக்ஷித்த ஞானகுருவின் பெருமையை யருளிச் செய்கிறார்.

கடலைத்தே யாதெற்குங் கலக்க மின்றாய்
கடலைக் காயாதாற் போலப் - படியி
லுருத்திசெய்த வன்பனைவந் தகண்டது மெல்லா
வருத்துவித்துஞ் செயறுப்புங் காண்.

இ-ள். கடலை—காண் = மாணவகனே? கடலின்கண் ணெழுந் திரைகளையடக்கி நின்றுதிற்று வல்லசாமர்த்திய வான்களுக்குங் கடலிறுடையமுறு மலைமு மீனமுறிய வாயாததாபோலப் புவியின்கண்ணே சரீரமெடுத்தவர்களுள் ளேனாதிபத்தியர்களுக்கும் கிடைப்பதரிய ஞான செயறுப்பாதமங்களை யறியவொண்ணாது வல்லவர்களுக்குமன்று பட்டதனையாலே நம்மைப்போலத் தப்பிரான் திருமேனி யெடுத்தெழுந்தருளிவந்த ஞானநிலைதான் விளங்குமின்றுமே மலக்கிடைப்பதரிய பாதங்களை யடைமென்றது. (௫௦)

இனையான் கற்புடையவெழுந்து திருமேனிகொண் டெழுந்தருளிவந்த வாசாரியனே யாருமறிய வருவென் றருளிச்செய்கிறார்.

இவனெனவே தேறினன்யா னென்றமையா லென்றுஞ்
சிவனவனி வந்தபடி செப்பி - லவனிதனி
லுப்பெனவே கூர்மை யுருச் செய்யக் கண்டமையா
லப்படியே கண்டா யவன்.

இ - ள். இவன் — அவன் = இவனேயாமெனத் தேறினேன் காண்க என்று திருவாதவூர் நாயனாருளிச்செய்த பிரமாணப் படி நம்மை யிரக்ஷிக்குங்காரணத்தா [illegible] பரன் நம்மைப்போ லெழுந்தருளிவந்த முறைமை சொல்லி லுலகத்தினி லுவரிதமானகூர்மை யுப்பாகவே வடிவங்கொண் டதெல்லாங் காண்கையா லப்படியேகாண் [illegible] ளாலே சிவன் திருமேனிகொண்ட முறைமை. (கஅ)

இன்னமு மிவன்சங்கேதக் கிராதமூகனி ஆசாரிய ரூபமாக்கனி லொருவனல்லவானபடியைத் திட்டாந்தபூர்வமாக வருளிச்செய்கிறார்.

அவனிவனாய் நின்ற தவனருளா லல்ல
தவனவனாய் நிற்கின்ற தேழு - மவனிதனிற்
றோன்றுமாட் புல்லூரி தொல்லுலகி லப்பாலோ
யின்றிமோ சொல்லா யிது.

இ - ள். அவன் — இது = வாக்குமனாதீத கோசரமாயுள்ள சர்வேஸ்வரன் ஆன்மாக்களைப்போல தேகியாய்த் தோன்றினை விது சகலரிற்பக்குவரான ஆன்மாக்களுக்கு [illegible] திடமாகத் தங்கிடானை சங்காரங்களாலே [illegible] யாதி கன்மங்களைப்போக்கித் தனக்குரை [illegible] தையளிக்கைக்குத் தன்னுடையவருளாலே திருமேனிகொண் டெழுந்தருளிவந்தது [illegible] நிற்பா லொன்றுகொண்டு பரிவில்லாததன்றோ ; அதுபோல வென்னில், பூமியின்கண்ணே தோன்றினையாயினும் [illegible]

பசிக்காலங்களிலே கைம்மாறு கருதாமல் சித்தைசயுள்ளவர்களுக் குப் பலன்களைக்கொடுத்துச் சந்தோஷிப்பியாநிற்கும், இவ் வொழிந்து இந்த மரத்தாரகமாய்நிற்கிற புல்லூரிமரத்தின் பலத் தைக்கொடுக்கவற்றோ மாணவகனே சொல்லாய். இதனால் = இது திருமேனிகொண்டெழுந்தருளிவந்த வாசாரியனைச் சென்று னென்றோ தெளியவறிவித்தது. (௧௨)

அருளென்பதொன்றுவேண்டுமோ சிவமொன்றுமேயமை யாதோவென்ற மாணாக்கனைநோக்கி யத்தச்சிவமு மருளா லொழிந்து மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டாதென் றத்தவரு ளின் பெருமையை யருளிச்செய்கிறார்.

முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்த தருளொன்றுங் - கத்தியினால்
மோகக் கொடிபடவே முத்திப் பழம்பழுக்கு
மோகக் கொடியெழுங்கா ணின்று.

இ - ள். முத்தி — இன்று = முத்தியைப்பெறுவதற்குமுத லான வான்மாவென்ப தொருகொடியிலே பாசத்தியே மனைறக் கத்தக்க வானமலத்தின்காரியமான வஞ்ஞானமானகொடி வெருவிதமாகப்படர்ந்து, இதனாலே யிதாகிதம்வந்து, இத னாலாக மயக்கத்தைச்செய்கிறமாயையாலே பூதகாரியமான வுடம்பு சகசத்தோறும் பலியாநிற்கும். இவை படுவப்பட்ட வெல்லைகளிலேயாழிந்து தம்பிரானுந் திருமேனிகொண்டெழுந் தருளிவந்து ஆசாரியோபதேசஞ்செய்து வினைகதுவாப்பட்ட வானமலே யிக்குவா ணவமலமான மூத்தைத்தேறுக்க, வீண்டாமூலத்தலா மலங்களின்முத வடங்குஞ்சோக்ஷமாய் முத்தியானது வெருடலமாகப் பலியாநிற்கும். இத்தப்பழத்தினுடைய வீர சத்தினாலே சிவமென்று மான்மாவென்று மிரண்டல்லாதபடி யப்பொழுதேயொரு நீங்காயானதப்பாவத்தில் ரிஜன்ருக்கும்.

இனி யிந்தவந்தத்தைத் தமக்கருளிச்செய்து தம்மை யிரக்ஷித்தவாசாரியனையும் இக்கைமுதலாக வவனிரக்ஷித்த முறைமையையுமின்ற வேழுசெய்யுளாலு மருளிச்செய்கிறார்.

அகளத்தி லாநந்தத் தானந்தி யாயே
சகளத்திற் றைய லுடன்றோன்றி - நிகளத்தைப்
போக்குவதுஞ் செய்தான்றன் பொன்னடியென் புன்றலைமே,
லாக்குவதுஞ் செய்தா னவன்.

இ - ள். அகள—அவன் = அடியேனை யீடேற்றுகைப் பொருட்டாகச் சகளீகரமான திருமேனியிலே தன்னுடைய காருண்ணிய சத்தியுடனேதோன்றிக் குற்றமற்ற நிலத்திலுள்ள டாகிய வாநந்தத்தி லாநந்தியாய்ச் சமைக்கெதுழுக் கருவியிருக் தாகியே பிணித்தவிலங்காகிய மலமாயாதிகன்மங்களை யசேக சங்காரங்களாலே போக்கி யிவைதுஞ்செய்து, தன்னுடைய பொலிவினையுடைத்தாகிய திருவடியை யென்னுடைய பொல்லாத்தலையிலே வைப்பதுஞ்செய்தான். இது இக்கைமுறைமை யறிவித்தது. ([illegible])

குற்றமறுத் தென்னையாட் கொண்டருளிக் கொண்ட
னுற்ற தியானத் துடனுறைவார் - முற்றுயிரின் [டமோ
மாட்சியுமாய்நிற்பரியான்மற்றென்றன்றிக்கண்ணடிக
காட்சியுமாய் நிற்பார் கலந்து.

இ - ள். குற்ற - கலந்து = இப்படித் தம்முடைய வருளால் என்னுடைய மலமாயாதி கன்மங்களைப் போக்கியென்னுடைய சுதந்தரத்தையுமறுத் தடிமைகொண்டே ... பிராணனுயிர்நிற்கிற தம்முடைய திருவடி ... சிப்பித்து, யானென்று மதுவென்றுஞ் சொல்லுகிற ... லடையுமறுத்துத் தம்முடையவசத்திலே யாக்கிக்கொண்டு ...

தாங் கூடிக்கொண்ட முறைமையிலே நான் தியானிப்பாரும் நிற்கைக்கு வந்தத் தியானமுந் தாமேயாய் நில்லாநிற்பர். இங் ஙனிலே மூன்றாவதாகிற ஞேயத்தழுந்தலுந் தாமேயாகாநிற்பர். பிராரத்தத்தாலே நிலைநின்று விஷயந்தோன்றுங் காலத்து மந் தவிஷயந் தோன்றாமல் காண்பாரும் காணப்படும் பொருளுந் தாமேயா யிராநிற்பர். இது நிற்கைக்குப்பின்பு உண்மையிலே நிற்றினை நிலையறிவித்த தெனக்கொள்க. (கூ௦)

ஆருடையா னெந்தாரு மாருடையா னேனையறியுந்
தாருடையான் றொண்டர் தலைக்காவ - லாருந்
திருவிசலூ ராருஞ் சிவயோகி யின்றென்
வருவினையை மாற்றினன் வந்து.

இ - ள். ஆருடையான் = இப்படி யொருத்தருமின்றித் தன் னையறிந்தாக வடிமைகொண்டதையாலே யாருடையனேனென் கிற இருகாமத்தையு முடையான்,—எந்தாரு மாருடையானேன = என்னைப்போலுந் தகர்க்கவடியானையு மடிமைகொண்டதனாலு மவனே,—அறியுந்தாருடையான் = சர்வான்மாக்கள் பொருட் டாகப் பஞ்சகிருத்தியத்தையும் நடத்தி நிலை பக்குவப்பட்ட வான்மாக்களை யறிந் திரட்சிக்கவல்ல திருவடியுமுடையான், —தொண்டர் தலைக்காவல் = அடியவரை மயப்படையாவி ட்டு வினைசெய்யாது பாதுகாக்கைக்குத் தலைக்காவலாயுள்ள வன்,—ஆருந்திருவிசலூ ராருஞ்சிவயோகி = எக்காலமுந் திரு விசலூரிலே இருப்பாக வுடைய சிவயோகி,—இன்றென் வருவினையை மாற்றினன் வந்து = இப்பொழுது தன்னுடைய வந்ததனாலே கன்மமலங் காரணமாக மாயையாகிற அசு த்தியிலே பிறவாநின்ற என மனக்கவலையாகிய விசனங்களெல்லா ந்து அசையாநின்றலறிய இருவினையிலே யடைத்தான். இது நம் முடைய வாசாரியன் றிருநாமமு மவதாரமு மகிமையு மருளிச் செய்தபடியைக் கொல்க. (கூஎ)

மேனிகொண் டெழுந்தருளி வந்த தம்பிரானை, அடியேன்கண்ணே நான் பிறந்திறந்து திரியாதபடி பாமானந்தத்தை யளிக்கவனை, எப்பொழுதும் வாழ்த்துமளவில் லெல்லைப்படா தானையால் தன்னைவிட்டு நீங்காத ஞானசத்தியுடையோனை யெவ்விடத்தும் வாழ்ந்திருக்கவென்று சொல்லுவ தல்லாமலவனை யெப்பா[illegible] வாழ்த்துவேன். இது சிவனைக் கூடப்பெற்றவர்க ளுடலையுணர் விறந்து நின்றநுபவிக்கும தொழிற்கு மவற்றுடைய வுலகமா யறிந்து துய்க்கவென்றுமனையிலவுலகையுணர்வுங் கெட்டாத வென்ற விடமறிவித்தது. (௯௰)

ஆதார மாகி யருளோடு நிற்கின்ற
ஞான வின்பச் சுகவடிவை - போதமா
யுள்ளவர்கள் கூடியுணர்வொழிய நிற்பதுவ
தென்னவா ராகே சிவம்.

திருக்களிற்றுப்படியார் மூலமுமுரையும் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

தனியன்.

சேடன் படிபரக்குந் தென்னாடு நாயகனுக்கன்
பாடுங் களிற்றுப் படிதனக்கு - நீடுலகோர்
தேடும் புகழ்ச்செஞ்சொற் சிவப்பிரகாசன் குருக்க
ளடியுளா நாடா காப்பது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணந்திசிவாசாரியார்

அருளிச்செய்த

இருபாவிருபஃது மூலமும்,

திருவாவடுதுறையாதீனம்

நமச்சிவாயத்தம்பிரான்செய்த உரையும்.

இவை,

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்களாற்

பார்வையிடப்பட்டு,

காணியம்பாக்கம்

முருகேசமுதலியாரால்

சென்னை:

ஸ்ரீநிதியலாக்ஷிகல்யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

கஅகூஉ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இருபாவிருபஃது.

வெண்பா.

கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி [கல்லார்
மண்ணிடையின் மாக்கண் மலமகற்றும் - வெண்ணெய்
மெய்கண்டா னென்றொருவன் மேவானேல் வேறின்மை
கைகண்டா ருள்ளத்திற் கண்.

வியாக்கியானம்.

கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி - பூரணக் ஞானமாக விருக்கப்பட்ட ஸ்ரீகண்ட பரமேசுவர ஞானாசிரிய விக்கிரகமாகத் திருமேனிகொண் டெழுந்தருளு மளவுக்கு நெற்றியிற் றிருநயனமுந் திருமிடற்றிற் றரித்தருளின நஞ்சமாகிய கறுப்பினையு மறைத்தருளி, — மண்ணிடையின் மாக்கண் மலமகற்றும் - பூமியிலுள்ளவர்களென விசேடிக்கப்பட்ட ஆன்மாக்களுக்குண்டாய பாசத்தைத் தீக்ஷையாகிய அக்கினியாலே போக்குகிற, — வெண்ணெய்நல்லூர் மெய்கண்டான் - திருவெண்ணெய் நல்லூரென்கிற திருப்பதியிலே திருவவதாரஞ்செய்த மெய்கண்டதேவனென்கிற திருநாமத்தைத் தரித்தருளினவரை, — என்றொருவன் மேவானேல் - ஒருவனுக் [illegible] ருந்தி யிருந்தவர்கள், — வேறின்மை கைகண்டா ருள்ளத்திற் கண் - உயிர்க்குயிராயிருக்கிற சிவனைத் தங்களிடத்திலே புணர்ப்பாகக் கண்டவர்கள். (இதன் கருத்து.) சடமும் [illegible]

குருதாதி என்னவே சிவமென்று மாசாரியனொன்றும் வேறாயிரா
திரண்டு மொருமுதலென்பது கண்டுகொள்க. அப்படியானு
லிக்தச்சிவ னிப்படி மானிடவேடமாக வேண்டுவானேனென
னில் அஃதாவது விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னப்
பட்ட மூவகை யான்மாக்களையுஞ் சிவனிரக்ஷிக்கு மிடத்து யா
தாமொரு பட்சிகளை மிருகங்களைப் பிடிக்கவேண்டினவர்களது
ற்கதற்கேற்ற வினப்பார்வைகளைக் காட்டிப் பிடித்தாற்போல
ஆன்மாக்க ளெடுக்கப்பட்ட வுருவத்துக்குத்தக்க திருமேனிகொ
ண்டருளி யிரட்சிக்கை கடனாகையால் சகலராயுள்ள மானுட
ரை யிரட்சிக்குமிடத் தவர்களைப்போல மானிடச் சட்டை சாத்
தியாசாரிய விக்கிரகமாக வெழுந்தருளினனெனவறிக. சிவனான்
மாக்க ளெடுக்கப்பட்ட வுருவத்துக்குத்தக்க திருமேனிகொண்
டருளுவ னென்பதற்குப் பிரமாணம். ஞானபூசா காணத்தில்.
“எவ்வுலகத்து மூர்த்தி பேதுகொண் டிவனியங்கு, மவ்வுலக
த்து மேனி யதுகொண்டங்கமரு மீசன்”. எ-து. கண்டுகொ
ள்க. சகலராயுள்ள மானுடரை யிரட்சிக்குமிடத் தவர்களைப்
போல மானிடச் சட்டைசாத்தி யாசாரியவிக்கிரகமாக வெழு
தருளுவ னென்பதற்கு. பி - ம். போற்றிப் பஃறொடையில்
“நன்னெறிவிஞ்ஞானகலர் நாடுமலமொன்றினையு, மந்நிலையே
யுண்ணின் றறுத்தருளிப் - பின்னன்பு, மேவாவிளங்கும் பிரள
யாகலருக்குத், தேவாய்மலகன்மந் தீர்த்தருளிப் - பூவலயந், தன்
னின்றுநீங்காச் சகலர்க்கவர்போல, முன்னின்று மும்மலந்தீர்,
தாட்கொள்ள - வன்னவனுங், காதிருண்மாதலிறு லாடுந்தி
த்தொழிலுஞ், சோதி மணிமிடற்றிற் சுந்தரமும் - பாதியாம்
பச்சையிடமும் பவளத் திருச்சடைமே, வைச்சநதியு மதி
கொழுந்து - மச்சமற, வாடரவு மழகார் திருநுதன்மே, னீ
ருவன்னி நெடுங்கண்ணும் - கேடிலயாங், கூட்டுந்தமருகமு
கோலவெரியகலும், பூட்டரவக் கச்சும் புலியதளும் - வீட்

ன்ப, வெள்ளத் தழுத்தி விடுந்தாளினு மடியா, ருள்ளத்தினும் பிரியா வொண்சிலம்புங் - கள்ளவினை, வென்று பிறப்பறுக்கச் சாத்திய வீரக்கழலு, மொன்று முருத்தோன்றும லுள்ளடக்கி- யென்று, மிறவாதவின்பத் தெமையிருத்த வேண்டிப், பிறவா முதல்வன் பிறந்து - நறவாருந், தாருலாவும் புயத்துச் சம்பந்த நாதனென்று, பேரிலா நாதனொரு பேர்புனைந்து - பாரோர்த, முண்டி யுறக்கம் பயமின்ப மொத்தொழுகிக், கொண்டமெய்ழ்ந் தகுணம்போற்றி''என்றும். திருவாசகத்தில். அருபரத்தொருவ னவனியில்வந்து, குருபரனாகி யருளியபெருமையைச், சிறுமை யென்றிகழாதே''-எ-ம். சிவப்பிரகாசத்தில். ''உணர்வாய்நின்ற ஞானக்கூத்த னொருமூர்த்தி கொடுகுறுகி''. எ-ம். '' இறையரு ளுருவாய் வந்துகூட்டிடும்''.எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. இவ்வுதாரணங்களைக்காட்டியது இந்நூலாசாரியனா முன்னிலைக் கத்தாவாக நாட்டிவருகையா லாசாரியருக்குங் கத்தாவுக்கும் வேற்றுமை யில்லையென்னுங் கருத்தைப்பற்றியென வறிக. இந்நூற்பயன் புறச்சமயத்தாரால் மயங்காமை. இந்நூற்காரணம் பொருணிச்சயமுற்று நிட்டை கூடல். (க

இங்ஙன மாசாரிய மூர்த்தியாகவந்து இரட்சிக்கிற தேவரீருயிர்க்குயிராய்நின் றறிவிக்கச் செய்தேயு மடியேனுக்கு அறியாமை யுண்டாவானே னென்னும் வினாவு மதற்கு விடையுமே லருளிச்செய்வா னெடுத்துக் கொண்டருளியது.

நேரிசையாசிரியப்பா.

கண்ணகன் ஞாலத்துக் கதிரவன் றானென
வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவ
காரார் கிரகக் கலியாழ் வெனைநின்
பேரா வின்பத் திருத்திய பெருமை
வினவ லானா துடையே னெனதுளை

நீங்கா நிலைமை யூங்கு முளையா
லறிவின் மைமலம் பிரிவின் மையெனி
னொராவினை யுணர்த்தும் விராய்கின் றனையேற்
றிப்பிய மந்தோ பொய்ப்பகை யாகாய்
சுத்த னமலன் சோதி நாயகன்
முத்தன் பரம்பர னெனும்பெயர் முடியா
வேறுநின் றுணர்த்தின் வியாபக மின்றாய்ப்
பேறு மின்றா மெமக்கெம் பெரும
விருநிலந் தீநீ ரியமா னன்காலெனும்
பெருநிலைத் தாண்டவம் பெருமாற் கிலாதலின்
வேறோ வுடனோ விளம்பல் வேண்டுஞ்
சீறி யருளல் சிறுமை யுடைத்தா
லறியாது கூறினை யபக்குவ பக்குவக்
குறிபார்த் தருளுனங் குருமுத லாயெனி
னபக்குவ மருளினு மறியேன் மிகத்தகும்
பக்குவம் வேண்டிற் பயனிலை நின்னாற்
பக்குவ மதனாற் பயனி வரினே
நின்னைப் பருவ நிகழ்த்தா தன்னோ
தன்னொப் பாரிலி யென்பதுந் தகுமே
மும்மலஞ் சடமணு மூப்பிள மையினீ
நின்மலன் பருவ நிகழ்த்திய தியார்க்கோ
வுணர்வெழு நீக்கத்தை யோதிய தெனினே
யிணையிலி யாயினை யென்பதை யறியேன்
யானே நீக்கினுந் தானே நீங்கினுங்
கோனே வேண்டா கூறல் வேண்டுங்
காண்பா ரியார்கொல் காட்டாக் காலெனு

மாண்புரை யுணர்ந்திலே மன்ற பாண்டியன்
கேட்பக் கிளக்குமெய்ஞ்ஞானத்தி
னுட்பா லவர்க்கரு ளென்பதை யறியே.

வி-ம். கண்ணகன் ஞாலத்துக் கதிரவன்றானென வெண்ணெய்த்தோன்றிய மெய்கண்டதேவ - இடமகன்ற பூமியினிடத் துண்டாகிய விருளைக் கடிவது பொருட்டாக வாகாசமார்க்கத்திலே தோன்றப்பட்ட வாதித்தனைப்போல வான்மாக்களுக்குண்டாகிய வஞ்ஞானமாகிய விருளைக் கடிவதுபொருட்டாகத் திருவெண்ணெய் நல்லூராகிய திருப்படை வீட்டிலே திருவவதாரஞ் செய்தருளின மெய்கண்டநாதனே,—காரார்கிரகக் கலியாழ்வெனைநின் பேராவின்பத் திருத்திய பெரும - அஞ்ஞானமாகிய சிறைச்சாலைப்பட்டு விலங்காகிய தேகத்திற்கிடந் தழுந்துகிற வடியேனை நின்னுடைய வசைவற்ற பேரின்பமான வநுபவத்திலே யிருத்திய தம்பிரானே,—வினவலானுதுடையேன் - அடியேனுக் கொருவினு தேவரீர் சந்நிதியிலே விண்ணப்பஞ்செய்ய வேணுமென்று அனவரதமுமுண்டாயிருந்தது; அதேதென்று கேட்டருளுமாகில், எனதுள நீங்காநிலைமையூங் குழலையால் - அடியே னுள்ளத்தைவிட்டு நீங்காமல் நிற்கிறமுறைமை யநாதியே தொடங்கி மிகவுமுண்டாயிருக்குமிடத்தும்,—அறிவின்மை - அடியேனுக் கறியாமை வருவானேனென்று கேட்கில்,—மலம்பிரி வின்மையெனின் - அஃதான்மாவினேடு மநாதியே கூடிவரப்பட்ட வாணவமல முன்னைவிட்டு நீங்காதபடியினலேகா னுனக்கறியாமை யுண்டானதென்று தேவரீரருளிச்செய்யில்,—ஓராவினையுணர்த்தும் - அடியேனைவிட்டுத் தேவரீர் நீக்கமாக வொதுங்கிநின் றருளுமென்கின்றதை யுண்டாக்கும்,—விராய்நின்றனையேல் - அப்படி நம்மை நீக்கமாகச் சொல்லாது நாமுமுன்னேடு கூடியே நிற்போமென் றருளிச்செய்யில்,—திப்பியமந்தோ - அப்படித் தேவரீ

ராருளிச்செய்தது தெய்வீகமான தோராச்சரியமாக விருக்கிறது. அது வென்னென்று கேட்டருளுமாகில்,—பொய்ப்பகை யா காய் - அப்படி யஞ்ஞானத்தோடு கூடியிருக்கப்பட்ட வடியே னோடு தேவரீருங் கூடியிருக்குமாகில் பொய்யென்கிற வஞ்ஞா னத்தைச் சேதிக்கிறவனென்று தேவரீரைச் சொல்லவேண்டுவ தில்லையாம். அன்றியும்,—சுத்தனமலன் சோதிநாயகன் மூத்த ன்பரம்பரனெனும் பெயர்முடியா - அநாதி சுத்தனாயிருக்கிறவ னென்றும் நின்மலனென்றும் எல்லாத்துக்கு மேலான வாதிய ந்தமில்லாத பேரொளியா யிருக்கப்பட்ட சுத்தனென்றும் சர் வவுபாதி சூரியங்களெல்லாங் கழன் றப்பாற்பட்டவனென்றும் வஸ்துவென்று சொல்லப்பட்டதற்கெல்லா மப்பாற்பட்ட வஸ் துவென்றும் இங்ஙனஞ் சொல்லப்பட்ட திருநாமங்களுந் தேவ ரீருக் குண்டாகா (அதெப்படியென்னில் மலாதிகள் மசைப்பக் தியா யிருக்கிறவனோடு கூடி நில்லானென்று சீடன் வினவ) அப்படியல்ல,—வேறுநின் றுணர்த்தின் - நானுனோடு கூடி நிற்பதில்லை யுன்னறிவுக் கறிவாக வேறேநின்றே யுன்னை யறி வித்து நிற்போமென்று தேவரீ ரருளிச்செய்யில்,—வியாபகமி ன்றாய்ப்பேறு மின்றாமெமக் கெம்பெரும - என்னுடைய பெரு மானே அப்பொழுது தேவரீருக்குச் சர்வ வியாபியென்கிறது மில்லையா யடியேனுக்குச் சாயுச்சியமென்கிற பேறுமில்லை யாம். அன்றியும்,—இருநிலத் திந்திரியமானாற் காலேனும் பொ ருநிலைத் தாண்டவம் பெருமாற்கிலாதலின்.-இருநிலனாய்த் தீயா கி நீருமாகி யியமானனாயெறியுங் காற்றுமாகி யருநிலைய திங்க ளாய் ஞாயிறாகி யாகாசமாய அட்டமூர்த்தி யாகியென்னுந் திரு த்தாண்டகத்தின்படி பூரணமில்லையாகிய திருக்கூத்துந் தேவரீ ருக் கில்லையாகவேணும், ஆகையால்,—வேறேயுடனே யிசைந் பல்வேண்டும் - தேவரீ ரடியேனை யறிவிக்குமிடத்து வேறாய் நின்றறிவிக்குமோ கூடியொன்றாய் நின்றறிவிக்குமோ விசை

யிரண்டினு மொன்று திரவருளிச் செய்தருளவேண்டும்,—சீறி
யருளல் - அப்படி யடியேன்கேட்ட வினாவுக்கு விடையருளா
மற் றிருவுளக்கேடாக வேண்டுவதில்லை. அது வென்னென்று
கேட்டருளுகில்,—சிறுமையடைத்தால் - அடியேன் றற்போத
னாகையால் தோன்றினதை விசாரியாமல் விண்ணப்பஞ்செய்
தேனதற்குத்தா மருளிச்செய்து தெளிவிக்கையே வேண்டு
வது,—அறியாதுகூறினை - அப்படிநீகேட்ட வினாவுக்குத்தாஞ்
சொல்லாமற் கோபித்துக் கொண்டோமென்று நீ யறியாமற்
சொன்னாய். அப்படியானால் தேவரீர் திருவுளக் கேடாவானேன்
னென்று நீகேட்கில்,—அபக்குவபக்குவக் குறிபார்த்தருளினங்
குருமுதலாயெனின் - அநுவயம். குருமுதலாய பக்குவபக்கு
வக் குறிபார்த் தருளினையெனின் - நா மாசாரியமூர்த்த மாகை
யாலே அபக்குவனைக் கண்டாற் கோபிக்கிறதும் பக்குவனைக்
கண்டாற் பிரியப்படுகிறது மாசாரியனுக்கு முறைமையாந் தன்
மைபோல நாஞ்சொன்ன வத்தங்களை நீயாறுபாடாகக்கொள்ள
நாம் கோபித்துக்கொண்டதா யிருக்குமென்னில், அப்படித்
தேவரீர்சொன்ன வத்தங்களை யடியே னறியுமிடத்து,—அபக்
குவ மருளினுமறியேன் - அடியே னபக்குவனாகையாலே தே
வரீ ரருளிச்செய்கிற வத்தங்களை யறியப்போகிறதில்லை. அது
வன்றியும்,—மிகத்தரும் பக்குவம்வேண்டில் - மிகுந்த சத்தினி
பாதத்துக் குரிய பக்குவனாயிருக்க வேணுமென் றருளிச்செய்
யில்,—பயனிலை நின்றால் - பக்குவனுக்கு ஒருவர் சாதனமா
கவுந் தறிவிக்க வேண்டாதது கொண்டே தேவரீராலொரு பிர
யோசனமு மில்லையாம், அல்லது,—பக்குவ மதனாற் பயனீவ
ரினோ - ஆன்மாக்கள் பக்குவத்துக்குத் தக்கபயனைத் தேவரீ
ரொழுந்தருளுமாகில்,—வினையைப் பருவமிகழ்ந்தாது - அந்தப் பக்
குவமென்று சொல்லப்பட்டது சடமானபடியினாலே அது தே
வரீரை யடியேனுக் குண்டாக்க மாட்டாது,—அன்றே - அது

ல்ல, அந்தப் பக்குவமே யுண்டாக்கு மென்கிலோ,—தன்னைப் பாரிலி யென்பதுந் தகுமே - தேவரீரையொத் தாரு மிக்காரு மில்லாதவரென்று சிவாகமங்கள் சொல்லுகிறதும் வழக்கல்ல வாம். அதன்றியும்,—மும்மலஞ் சடமணு மூப்பிளமையினீ நின்மலன்பருவ நிகழ்த்திய தியார்க்கோ - ஆணவமாயை காமி யமென்னு மூன்று மலங்களுஞ் சடமாயிருப்பது கொண்டு பக் குவம் வேண்டுவதில்லை, ஆன்மாவச்சுமாறி யெடுத்தவுடல்தோ றுமடுத்ததின் றன்மையாய் மூப்பிளமை வருதலால் மூப்பிள மை யில்லாதவனுக்குப் பக்குவங் கூடாது, தேவரீரோ வென் றால் தேகசம்பந்த மில்லாம லமலனாயிருக்கையினாலே யருசொ ல்லவொண்ணாது, "ஆதலாற் பக்குவ மார்க்காயதென்று வினாய விடத்து,—உணர்வெழு நீக்கத்தையோதியது - உனக்கோ ரறி வுண்டாமிடத்து அந்தமலங்கணீங்கிற வவதரத்தாற் புண்ணிய பாவந் துலையொப்புவந்துண்டாய்ப் பாசநீங்கினது தானும்பக் குவமென்றது,—எனினே - என்று தேவரீரருளிச்செய்யில்,— இணையிலியாயினை யென்பதையறியேன் - தேவரீரையொப் பாரு மிக்காரு மில்லாதவரென்கிறதை யடியேனின்றுவிட் டேன். அதேதென்று கேட்டருளுகில்,—யானே நீக்கினுந் தானே நீங்கினுங் கோனேவேண்டா - அந்தமலங்களை யடியேன் தானேநீக்கிக்கொள்ளினு மவை தானேநீங்கினுங் கோனாகிய தேவரீர் வேண்டா, ஆகையால் தேவரீர் நீக்க விகாரியல்லீ ரென்று வினாவியவிடத்து,—கூறல்வேண்டும் - அடியேன் விண்ணப்பஞ்செய்யத்தக்க தொன்றுண்டு அதேதென்று கேட் டருகில்,—காண்பார்யார் கொல்காட்டாக்கா லெனுமான்ற புரை யுணர்ந்திலை - "காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்கால்" எனு மழகிய திருத்தாண்டகத்தினுரையைத் தேவரீரின் றிங் கருளிற்றில்லையாம்,—மன்ற - அறுதிப்பட்டு நிச்சயமாக அடி யேனுக்கு முறைமையாவது,—பாண்டியன்கேட்பக் கிளக்கு

மெய்ஞ்ஞானத்தி ளுட்பாலவர்க்கரு ளென்பதையறியே - பாண்டிய ராசாவானவன் கேட்கத்தக்கதாகத் திருஞானசம்பந்த சுவாமிக ளருளிச்செய்த ஆட்பா லவர்க்கருளென்னும் உண்மை ஞான வுபதேசத் திருப்பாட்டினுரையாகிய சிவஞானத்தை யறிந்தேனில்லை, நிச்சயமாக வதுவேயறிவென்று அடியாரா யுள்ளவர்களுக்குத் தேவரீர் நாயனென்று கண்டிருக்கிறதொழிய வேறொன்று விகற்பித்துக்கேட்க வழக்கில்லையென்கிற முறைமையே யறிவாயுள்ளது என்று விளைவற்றேன் - (க-து.) பதியொன்றுண்டென்று மப்பதி தொழிற் படுத்தினலன்றி யாவுந் தொழிற்படாதென்பதாம்.(நுட்பம்) மலம் பிரிவின்மை யெனின் என்பதற்கு ஆன்மாவினேடு மநாதியேகூடி வரப்பட்ட வாணவமல முன்னைவிட்டு நீங்காதபடியினுலென்று பொருள்கூறியதற்கு பி - ம். சித்தியாரில். "அறிவிலன்மூர்த்தனித்தன்" என்னுஞ் செய்யுளில் "பிறிவிலன் மலத்தினேடும் கண்டுகொள்க. விராய்நின்றனையேல் - அப்படி நம்மை நீக்கமாகச்சொல்லாது நாமு முன்னேடுகூடியே நிற்போமென்று பொருள்கூறியதற்கு பி - ம் சிவஞானபோதத்தில். "மெய்ஞ்ஞானந்தன்னில் விளையாதசத்தாதல்" என்றபாடத்தில் "தண்கடனீருப்புப் போற்றுனேயுளமுளவாய்த்தான்" கண்டுகொள்க. வேறுநின்றுணர்த்தின் எ - கு நாமுன்னேடுகூடி நிற்பதில்லை யுன்னறிவுக் கறிவாக நாம் வேறேநின்றே யுன்னை யறிவித்து நிற்போமென்று பொருள் கூறுதற்கு பி - ம். சிவஞானபோதத்தில். "மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகஞ் சேட்டித்த, தென்னு மறையி னியன்மறந்தாய் - சொன்னசிவன், கண்ணே யுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்கா, ணெண்ணேன் சிவனசத்தை யின்று" எ-து கண்டுகொள்க. சிறுமையுடைத்தால் எ - கு ஆசாரியன் மேல்வைத்து ஆன்மா வவனுக்குச் சிறுமையாமென்று பொருளுரைப்பாருமுளர் அது குரு சிஷக்கிரமத்துக்குப் போதாதாகையால் பொருளாகாதென வறிக. பக்குவ மதனுற்

பயனீவரினே எ-கு ஆன்மாக்கள் பக்குவத்துக்குத்தக்க பய஌
கத் தேவரீ ரொழுந்தருளுமாகில் என்று பொருள் கூறியதற்(
பி-ம். சிவப்பிரகாசத்தில். "நாடியசத்திநிபாத நாலுபாத நல
னும்வகை யெண்ணரிய ஞானபாதங், கூடுமவர் தமக்குண
வாய்நின்ற ஞானக் கூத்தனொரு மூர்த்தி கொடுகுறுகிமோ
நீடியகே வலசகல நிகழாவாறு நிறுத்திமல மறுக்குமிது நி
யார்சுத்தங், கேடில்புகழ் தருஞ்சரிதை கிரியாயோகக் கேவ
மையோ விவை யுணர்த்தக் கிளக்குநூலே" கண்டுகொள்
உணர்வெழு நீக்கத்தை யோதியது உனக்கோ ரறிவுண்ட
மிடத்து அந்த மலங்கணீங்கிற வவதரத்தாற் புண்ணிய ட
வந் துலையொப்புவந் துண்டாய்ப் பாசநீங்கினது தானும் பக்
வமென்றதற்கு பி-ம். சிவப்பிரகாசத்தில். "எண்ணரிதா
என்ற விருத்தத்தில் "மலபாகம்பொருந்தியக்கா லருளாலுன்
ணிலவுமொளியதனை லிருளகற்றிப் பாதமுற்றிடும்" எ-து கவ
டுகொள்க. பாண்டியன் கேட்பக் கிளக்குமெய்ஞ்ஞானத்தி னு
பாலவர்க்கரு ளென்பதையறியே எ-கு பாண்டிய ராசாவா
வன் கேட்கத்தக்கதாகத் திருஞானசம்பந்த சுவாமிக ளருளி
செய்த ஆட்பாலவர்க்கருள் என்னு முண்மைஞான வுபதேச
பாட்டினுளையாகிய சிவஞானத்தை யறிந்தேனில்லை நிச்சயமா
வதுவே யறிவென்று அடியார்களா யுள்ளவர்களுக்குத் தேவ
நாயனென்று கண்டிருக்கிறதொழிய வேறொன்று விகற்பிந்
க்கேட்க வழக்கில்லையென்கிற முறைமையே யறிவாயுள்ள
என்று விஞவற்றேன் என்றதுக்கு பி-ம். திருக்கடைக்காப்
"ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதிமாண்புங், கேட்ட
ன்புகிலளவில்லை கிளக்கவேண்டா" கண்டுகொள்க. (உ

இங்ஙனம் பதியிலக்கணங்கேட்ட மாணவகன் பசுவில
கணங்கேட்கும் விஞ மேலருளிச் செய்கின்றது.

அறிவறி யாமை யிரண்டு மடியேன்
செறிதலான் மெய்கண்ட தேவே - யறிவோ
வறியேனோ யாதென்று கூறுகே னாய்ந்து
குறிமாறு கொள்ளாமற் கூறு.

வி-ம். அறிவறியாமை யிரண்டு மடியேன் செறிதலால் - ஓரவதாரத்திலே யறிந்து மோரவதாரத்திலே யறியாமலுமாக விந்தவிரண்டு பகுதியு மடியேன் கூடிவருகையினால்,—மெய்கண்டதேவே - மெய்கண்டதேவனே,—அறிவோவறியேனோ யாதென்றுகூறுகேன் - அடியேனை யறிவென்று சொல்லப் பட் டிருக்குமோ அறியாதவனென்று சொல்லப்பட்டிருக்குமோ விவையிரண்டினுள் யாதென்று விண்ணப்பஞ் செய்வேன்,—ஆய்ந்து - இவ்விரண்டு பகுதியுந் திருவுள்ளத்திலே யாராய்ந்து பார்த்தருளி,—குறிமாறு கொள்ளாமற்கூறு - தேவரீரருளிச்செய்கிற வத்தத்தின்குறிப்புக் கடியேன்மறுத்து விண்ணப்பஞ் செய்யாம லருளிச்செய்தருள். (க - து) ஆன்மா சத்துமல்ல அசத்துமல்ல கூடினது தானுந்தன்மையாற் சதசத்தென்னுஞ் சிறப்பினையுடைத்தாம் அதாவது அறிவித்தா லறிகிறவனென்றது. உ-ம். சித்தியாரில். "அறிவிக்கப்படுஞ் சித்துமிவன்" எ-ம். சிவஞானபோதத்தில். "அறிவிக்கவன்றி யறியா வுளங்கள்" எ-ம். திருவாசகத்தில். "அறிவிலாமை யன்றே கண்டேதாண்டநாள்" எ-ம். கண்டுகொள்க (௬)

பசுவிலக்கணங் கேட்ட மாணவகன் மேற் பாசவிலக்கணங்கேட்கும் வினாவருளிச் செய்கின்றது.

கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
வேறு கிளக்கின் விகற்பங் கற்பங்
குரோத மோகங் கொலையஞர் மதநகை
விராயெண் குணனுமா ணவமென விளம்பினை

யஞ்ஞா னம்பொய் யயர்வே மோகம்
பைசா சூந்திய மார்ச்ச ரியம்பய
மாயவேழ் குணனு மாயைக் கருளினை
யிருத்தலுங் கிடத்தலு மிருவினை யியற்றலும்
விடுத்தலும் பரிந்தை மேவலென் றெடுத்த
வறுவகைக் குணனுங் கருமத் தருளினை
யாங்கவை தானு நீங்காது நின்று
தன்வழிச் செலுத்தித் தானே தானு
யென்வழி யென்பதொன் றின்று மன்ன
ஆரும் பெயரு முருவுங் கொண்டென்
னூரும் பெயரு முருவுங் கெடுத்த
பெண்ணை சூழ்ந்த வெண்ணெயம் பதியிற்
சைவ சிகாமணி மெய்யர் மெய்ய
மும்மலஞ் சடமென மொழிந்தனை யம்ம
மாறுகோள் கூறல் போலுந் தேறுஞ்
சடஞ்செய லதனைச் சார்ந்திடு மெனினே
கடம்பட மதனுட் கண்டிலம் விடம்படு
மூன்றிரள் போன்ற தாயிற் றோன்றி
யணைந்தாங் ககறல் வேண்டுங் குணங்களும்
பன்மையின் றொகு மெம்மைவந் தணைதாத்
தாமோ மாட்டா ரியாமோ செய்கில
நீயோ செய்யாய் நின்மல னையிட்
டியல்பெனிற் போகா தென்று மயல்கெடப்
பந்தம் வந்த வாறிங்
கந்தமாதி யில்லா யருளே.

வி - ம். கூறியமூன்று மலத்தின் குணக்குறி வேறுகிளக்கின் - அடியேனுக்கு முன்னே யுபதேசக் கிரமமாகப் பதி பசு பாசமாகிய திரிபதார்த்தங்களையுந் தேவரீ ரருளிச்செய்கிற வவசரத்து ஆணவ மாயை காமிய மென்னப்பட்ட மூன்று மலங்களினுடைய குணங்களையுங் குறிகளையும் வெவ்வேறாகச் சொல்லுமிடத்து,—விகற்பங் கற்பங் குரோதமோகங் கொலையனூர்மதநகைவிரா யெண்குணனு மாணவமென விளம்பினை - ஆன்மபோதமானது யாதாமொன்றுக்குத் தன்னை விகற்பித்துத் தன்னையொழிய மற்றொருவரு மொவ்வாதவனொன்று நிற்கிறதும், யாதொன்றினைச் சங்கற்பித்துக்கொண்டு நிற்கிறதும், யாதொன்றுக்குக் கோபம்பண்ணிக்கொண்டு நிற்கிறதும் விரோதஞ்செய்கிறதும், யாதொன்றுக் காசைப்படுகிறதும், யாதோருயிர்களைக் கொல்லுதலும், யாதொருதுன்பங்கள் தன்னிடத்தில் வந்துற்றா லதற்கு விதனப்படுகிறதும், யாதொன்று சொல்லுமிடத்துஞ் செய்யுமிடத்து மகங்காரமாய் நிற்கிறதும், யாதொன்றுக்குஞ் சிரித்துக்கொண்டு திரிகிறதுமாக விங்ஙனங் கூறப்பட்ட குணங்களெட்டும் ஆணவ மலத்தினுடையதென் றருளிச்செய்தாய்; அன்றியும்,—அஞ்ஞானம் பொய்யயர்வே மோகம் பைசாசூந்யமார்ச் சரியம்பயமாய வேழ்குணனு மாயைக்கருளினை - பொய்யை மெய்யென்று கொள்ளுதல் பொல்லாங்கு செய்தலும், பொய்சொல்லுதலும், கண்டதை மறந்து மயங்கி வருந்துகிறதும், காமவாசையால் மூர்ச்சிக்கையும், ஆசையுண்டா யதனை யில்லையாக வொளித்தலும், ஆன்மாக்களைக்கொல்ல வடிக்க வெழுநினைவும் பிறர்க் கழுக்காறுசெய்து கேடுநினைக்கிறதும் பிறரோடு வயிராக்கியம் பாராட்டுகிறதும், உயிருக்கிறுதி வருமென்று அச்சப்பட்டுத் திரிகையுமாக விங்ஙனஞ் சொல்லப்பட்ட குணங்களேழும் மாயாமலத்தினுடையதென் றருளிச்செய்தனை,—இருத்தலுங் கிடத்தலு மிருவினை யியற்றலும் விடுத்தலும்பர நிந்தைமேவலென் றெடுத்த வறுவகைக் குணனுங்

கருமத்தருளினை - ஒவ்வொரு தலங்களைப்பற்றி யிருத்தலும், நோயாய்க் கிடத்தலும், புண்ணிய பாவங்களைச் செய்தலும், ஒவ்வொரு பற்றுக்களாய் நின்ற தொந்தனைகளை விடுதலும், சர்வஞாயு நிந்தித்து நடக்கிறதே தொழிலாகப் பொருந்தியிருக்கிறதும், உடல்மாறிப் பிறத்தலு மிகழ்ந்தாருடன் பொருந்தலுமாக விங்ஙனஞ் சேர்ந்திருக்கு மறுவகைக் குணங்களையுங் கன்மமலத்தினுடையதென் றருளினாய்,—ஆங்கவை தானு நீங்காதுநின்று - முன்சொல்லப்பட்ட காரண மலங்களினின்றும் விரியப்பட்ட காரியமாகிய - உக - வகையு மடியேனைவிட்டு நீங்காம லனவரதமுநின்று,— தன்வழிச் செலுத்தி - தனக்குண்டாகிய தொழில்களின் முறைமையிலே யடியேனையுங் காரியப்படுத்தி,—தானேதானாய் - அடியேனென்றொரு முதலில்லையெனும்படி மேலிட்டு நின்றுகொண்டு,—என்வழியென்ப தொன்றுமன்ன - தம்பிரானே அடியே னிச்சைவழி யென்கிறது சற்றும் வருகிறதில்லையாம்,— ஊரும்பெயரு முருவுங்கொண்டென் னூரும்பெயரு முருவுங்கெடுத்த - அடியேனுக்குண்டாயிருக்கப்பட்ட மலங்களை நீக்குகைப் பொருட்டாக ஊரும்பேருமுருவுமில்லா தேவரீர் ஊரும்பேரு முருவுங்கொண்டு அடியேனுக்குண்டாயிருக்கப்பட்ட ஊரினையும்பேரினையு முருவத்தினையுங் கெடுத்தாய் என்னவே மேலொரு சநநமெடாத வண்ணங் கெடுத்துப் போட்டவனென்பது கருத்து.—பெண்ணை சூழ்ந்த வெண்ணெயம் பதியிற் சைவசிகாமணி - பெண்ணை யாற்றுநீர் சூழப்பட்ட திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளி யிருப்பதாய சைவசமயத்துக்கோ ரபிஷேகரத்தினமாயுள்ளவனே,— மெய்யர்மெய்ய - பிரபஞ்சமாகிய பொய்யைக் கடியப்பட்ட சத்தியவான்களுக் குண்மையா யுள்ளவனே,— மும்மலஞ்சடமெனமொழிந்தனை - அடியேனுக்கு முன்னே யுபதேசக் கிரமமாக வருளிச்செய்கிற வவதாரத்தி லாணவமாயை கன்மமென்னப்பட்ட மூன்று மலங்களையுஞ் சடமாகிய வசேதனமென்ற

ருளிச்செய்தனை,—அம்ம - அடியேன் விண்ணப்பஞ்செய்கிற தை அழகிதாகக் கேட்பாயாக,—மாறுகோள் கூறல்போலும் - முன்னே யடியேனுக் கருளிச்செய்கிற வவதாரத்திலே யசித்தாகிய மலங்களைச் சடமென்றும் மாறுபாடாக வருளிச்செய்த தாயிருக்கும். அப்படி யல்லகாண்.—தேறுஞ்சடம் - அறுதியாகவந்த மலங்கள் சடமே தப்பாது என்று தேவரீ ரருளிச்செய்யில் அவை சேட்டைப்படுவானேன்,—செயலதனைச் சார்ந்திடும் - நீ யறிவுள்ளவனுகையா லுன்னோடு கூடுகையி லந்தமலங்களுஞ் சேட்டைப்பட்டதாயிருக்கும்,—எனினே - என்று தேவரீ ரருளிச்செய்யுமாகில்,—கடம்பட மதனுட் கண்டிலம் - கடபடாதிகளாயுள்ள சால் குடம் புடவை சீலைமுதலாயுள்ளவை யடியேனோடு கூடின வவதாரத்து அப்படிச் சேட்டைப்படக் கண்டேனில்லை,—விடம்படு மூன்றிரள்போன்றது - அந்த மலங்கள் கடபடாதிகள்போலல்ல விடத்தையுடைய வசநாவிமுதலாயுள்ள நஞ்சுகள் சடமாயிருந்தாலும் அறிவாயிருந்த வான்மாக்கள் புசித்த வவதாரத் தந்தவறிவை யழித்துத் தன்குண மேலிட்டு மயக்கினாற்போல வந்த மலங்களுஞ் சடமாயிருந்தாலு மறிவாயுள்ள வுன்னோடு சம்பந்தமான வவதாரத்து அவையு மப்படி மேலிட்டு மயக்கும்,—ஆயின் - அப்படியானால்,— தோன்றிய வினைந்தாங் ககறல்வேண்டும் - அந்த நஞ்சானது புசித்தவர்களை மறைத்து மேலிட்டுநின்று மீளவும் விட்டுப்போனாற்போல விந்தமலங்களு மப்படிச் செய்யவேணும் அப்படிக் கண்டோமில்லையே, அன்றியும்,—குணங்களும் பன்மையின்றாகும் - இந்த மலங்களுக் குவமையாகச் சொல்லப்பட்ட நஞ்சுகளுக் கிந்தமலங்களைப்போலப் பலகுணங்கள் செய்யக்கண்டதில்லை, ஆகையாலது திருட்டாந்த விரோதமென்று கண்டுகொள்க, அன்றியுமந்த மலங்கள்தான்,—எம்மைவந் தணைதரத்தானுமாட்டாது- சடமேயானு லடியேனைவந்து பொருந்துகைக்குத் தானுகமாட்டாது,—யானுஞ்செய்கிலன் - அடியேனுக்குக் குற்றமாயுள்ள

துவேணு மென்று அடியேன் தானே யுண்டாக்கிக்'கொள்வது
மில்லை,—நீயோசெய்யாய் நின்மலனாயிட்டு - தேவரீர் மலரஹி
தனாயிருக்கையா லஞ்ஞானமாகிய மலங்களை யடியேனுக் குண்
டாக்கப்போகிறதில்லை. இவை மூன்றுவகையு மன்றி,—இயல்
பெனில் - அந்தமலங்க ளான்மாவுள்ளவன்றே சுபாவமாக வு
ளதென் றருளிச்செய்யில்,—போகாதென்று - பாலில் வெ
ப்புங் கரியிற் கறுப்பும்போல வியல்பாயுள்ள சுபாவத்துக் கெ
ருகாலத்திலு மழிவில்லையாம்,—மயல்கெட - அடியேனுக் கி
தச் சந்தேகந் தீரத்தக்கதாக,—பந்தம்வந்தவாறிங் கந்தமாதி
ல்லாயருளே - முடிவுமுதலு மில்லாத தம்பிரானே மயக்கந்தீ
விந்தப் பாசபந்தங்க ளடியேனோடு வந்துபொருந்தின முறை
யெப்படியென் றருளிச்செய்யவேணும். (க - து.) பாசம் நெ
லுக் குமிபோலவும், செம்பிற் காளிதம்போலவும் நின்றநிலை
கண்டதல்ல நீக்கங்கூட்டமில்லை என்பதாம். உ-ம். சிவஞா
போதத்தில். "நெல்லிற் குமியு நிகழ்செம்பினிற் களிம்பு
சொல்லிற் புதிதன்று தொன்மையே" எ - ம். சித்தியாரி
"மும்மல நெல்லினுக்கு முளையொடு தவிடுமிப்போல்" எ-
சிவப்பிரகாசத்தில். "நெல்லுமுளை தவிடுமிபோ லநாதியாக நி
த்திடுவர்" எ-ம். சொன்னமுறைமை கண்டுகொள்க. (நு-ம்
தேறுஞ்சடம். எ - கு. அநாதியாகவந்த மலங்கள் சடமே
பாது என்று பொருள்கூறியதற்கு பி-ம். உண்மைநெறிவிள
கத்தில். "மலஞ்சடமென்றல்காட்சி" எ - ம். சிவப்பிரகாச
தில். "மாமைதான் சித்துருவாய் மருவமாட்டாது" எ -
சித்தியாரில். "உலகத்துக்கோர் வித்துமாயசித்தாய்'- எ -
கண்டுகொள்க. செயலதனைச்சார்ந்திடும் எ-கு. நீ யறிவுள்ள
னைகையா லுன்னோடு கூடுகையி லந்தமலங்களுஞ் சேட்டைட
ட்டதாயிருக்கும் என்று பொருள்கூறியதற்கு பி-ம். சிவப்பிர
சத்தில். அந்நியமானவையுணர்த்தி யநந்நியமாய் நிறைந்தவ
வறியாமையினானு மருணிலவுங்காலந், தன்னிலவனேயாவு

ய்நின்றதொன்மை தாமுணர்தலானுமுயிர் தானெனவொன்றி லதாய், மன்னியிடுமலம்'' எ-து. கண்டுகொள்க. இவை மூன்று செய்யுளானும் கத்தாவறிவிப்போனென்று மான்மா வறிவித்தா லறிகிறவனென்றும் பாசமறிவித்தாலு மறியாதென்றுங் கூறி யவாறு காண்க. (௬)

இங்ஙனம் பதியிலக்கணம் பசுவிலக்கணம் பாசவிலக்கண ஞ்சொல்லிப் பாசதரிசனஞ்சொன்னபின் ஆன்மதரிசனஞ்சொ ல்லவேண்டுகையாலு மலதரிசனம் வேறே சொல்லாதபடியினு லுந் தேவரீ ரருள்முன்னே பாசநில்லாது, அடியேனுக்குச் சுத ந்திரமாய்க் காண வறிவுமில்லை. இந்தமலத்தைக் கண்டமுறை மை யெப்படி யென்னும் வினு மேலருளிச் செய்கின்றது. *

அருள்முன்பு நில்லா தடியேற்குக் கண்ணின்
றிருள்கண்ட வாறென்கொ லெந்தாய் - மருள்கொண்ட
மாலையா வெண்ணெய்வாழ் மன்னவா வென்னுடைய
மாலையா மாற்ற மதி.

வி - ம். அருள்முன்பு நில்லாது - அந்தமலங்க ளஞ்ஞான மாகையாலே தேவரீர் சந்நிதியிலே நில்லாது,—அடியேற்குக் கண்ணின்று - அடியேனுக்குச் சுதந்தரமாகக் காணுமறிவுமில் லையாம். அப்படியிருக்க,—இருள்கண்டவா றென்கொ லெந் தாய் - தம்பிரானே அடியேனந்த விருண்மலமாகிய வஞ்ஞான த்தை யறிந்தபடி யெப்படி,—† மருள்கொண்ட மாலையா மரு ளாகிய பண்ணை வண்டுகளிருந்து பாடப்பட்ட மாலையினையு டையானே,—வெண்ணெய்வாழ் மன்னவா - திருவெண்ணெ

---

* இங்ஙனஞ் சொல்லப்பட்ட மலங்க ளடியேனோடுந் தே வரீருங் கூடிநின் றறிவிக்கச்செய்தே யடியேனை மயக்கிறவழி யெப்படி யென்னும் வினுமே லருளிச்செய்கின்றதென்று சொ ல்லுவாரு முளர் அது வினுவல்ல.

† மருள். இஃது குறிஞ்சியாழ்த்திறம்.

ய்நல்லூரிலே யெழுந்தருளியிருக்கப்பட்ட தம்பிரானே,—என்னுடையமால்-அடியேனுக் குண்டாயிருக்கப்பட்ட விந்தமயக்கத்தை,—ஐயா - அடியேனுக்குச் சுவாமியாயுள்ளவனே,—மாற்றமதி - போக்கத்தக்கதாகத் திருவுள்ளத்திலே யடைத்தருள். (க-து.) மலதரிசனத்தைப் பரமசுகத்திலே யழுந்துமிடத்திதுவரையு மலசம்பந்தத்தினாலே யல்லோ சுகத்தைப் பெறாதிருந்தோம் என்னு மநுமானத்தினாலே யறிகவென்பதாம். உ - ம். சிவப்பிரகாசத்தில், "அந்நியமானவையுணர்த்தி யநந்நியமாய் நிறைந்த வறிவறியாமையினானு மருணிலவுங்காலந், தன்னிலவனேயாவு மாய்நின்றதொன்மை தாமுணர்தலானுமுயிர் தானெனவொன்றிலதாய் மன்னியிடுமெலம்" எ-து. கண்டுகொள்க.

இங்ஙனம் பாசதரிசனஞ் சொல்லிப் பசுதரிசன மெப்படியென்னும் வினா மேலருளிச் செய்கின்றது.

மதிநுதல் பாக னாகிக் கதிரா
வெண்ணெய்த் தோன்றி நண்ணியுள் புகுந்தென்
னுளம்வெளி செய்துன் னளவில் காட்சிக்
காட்டியெற் காட்டினை யெனினே நாட்டியெ
னுண்மையும் பெருமையு நுவலி னண்ணல்
பாதாள சததி பரியந்த மாக
வோதி யுணர்ந்த யானே யேக
முழுத்து நின்றனனே முதல்வ முழுத்தும்
புலன்கடைப் பூழை நுழைந்தனன் கலங்கி
யாங்கைந் தவத்தையு மடைந்தன னீங்கிப்
போக்கு வரவு புரிந்தனன் றாக்கி
யெவ்விடத் துண்மையு மிவ்விடத் தார்தலுஞ்

செல்லிடத் தெய்தலுந் தெரித்த மூன்றினு
ளொன்றெனக் கருளல் வேண்டு மென்று
மில்ல திலதா யுள்ள துளதெனுஞ்
சொல்லே சொல்லாய்ச் சொல்லுங் காலைச்
சிறுத்தலும் பெருத்தலு மிலவே நிறுத்தி
யானை யெறும்பி னனது போலெனின்
ஞான மன்றவை காய வாழ்க்கை
மற்றவை யடைந்தன வுளவெனி னற்றன்று
விட்ட குறையி னறிந்து தொன்று
தொட்டு வந்தனவென வேண்டு நட்ட
பெரியதிற் பெருமையுஞ் சிறியதிற் சிறுமையு
முரியது நினக்கே யுண்மை பெரியோ
யெனக்கின் றுகு மென்று
மனக்கினி யாயினி மற்றது மொழியே.

வி-ம். மதிநுதல் பாகனுகி - சந்திரனைப்போலத திருநெ ற்றியினையுடைய பரமேஸ்வரியை யொருபாகத்திலே வைத் திருக்கப்பட்ட தேவரீர்,— கதிதர வெண்ணெய்த் தோன்றி - அடியேனுக்கு மோக்ஷத்தைத்தருவது பொருட்டாகத் திருவெ ண்ணெய் நல்லூரிலே திருவவதாரஞ்செய்தருளி,—நண்ணியு ள்புகுந்து - அடியேனிடத்திலே வந்துபொருந்தி,— என்னு ளம் வெளிசெய்து - அடியேனிடத் துண்டாகிய வஞ்ஞானத் தை நீக்கிச் சிவஞானத்தைப் பிரகாசிப்பித்து,—உன்னளவில் காட்சிக்காட்டி - ஆன்மபோதத்தா லளவுபடுத்த வொண்ணுத வுன்னுடை வியல்பினையு மடியேனுக்குத் தரிசனப்படுத்தி,— எற்காட்டினை - அடியேனுடைய வியல்பினையுந் தரிசனப்படுத் தினுய்,—எனினே - அப்படி தரிசனப்படுத்தினு யாஞலும்,— நாட்டியென் னுண்மையும் பெருமையு நுவலில் - தேவரீ ரறு

இப்படித்தி யருளிச்செய்யப்பட்ட வடியேனுடைய நேர்மை
யும் பெருத்த வியாத்தத்தையும் விண்ணப்பஞ் செய்யுமிடத்து,
—அண்ணல், பாதாளசத்தி பரியந்தமாக - நம்பிரானே, பாதா
ளசத்தி முடிவாக,—ஓதியுணர்ந்த யானேயேக முழுத்துநின்ற
னனே - நூல்களைக் கற்றறிந்தடியே னறிவுசென் றறியப்பட்ட
விடமெல்லா மடியேன்றானே முழுவதும் வியாத்தமாய் நின்ற
துண்டே,—முதல்வ - சர்வான்மாக்களுக்கு மொருமுதலாக
நின்றுணர்த்துகிற கர்த்தாவே,—முழுத்தும் - அப்படி யோதியு
ணர்ந்த விடமெங்கு மடியேன் வியாத்தமா யிருக்கச்செய்தே
யும்,—புலன்கடைப் பூழைநுழைந்தனன் - ஒன்றை யறியுமிடத்
துச் சோத்திராதிகளாயுள்ள வைம்பத் துவாரங்களாகிய புலன்க
ளோடுங்கூடி யறிந்தேன். அன்றியும்,—கலங்கியாங் கைத்தவ
த்தையு மடைந்தனன் - அடியேனறிகிற வறிவையும் விட்டு மய
ங்கிய விடத்திலே சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந்
துரியாதீத மென்னப்பட்ட வைந்தவத்தையும்பட்டுநின்றேன்.
அன்றியும்,—நீங்கிப் போக்குவரவு புரிந்தனன் - அப்படிக்கூடி
வாதனைசெய்து நிற்கிற சரீரத்தையும்விட்டு நீங்கி மீளவுமொவ்
வொரு சரீரத்தையும் வந்தெடுப்பதுஞ் செய்தேன்,—ஆங்கி -
இவையிற்றைத் திருவுள்ளத்திலே யாராய்ந்து பார்த்தருளி,—
எவ்விடத்தன்மையும் - அடியே னோதியுணர்ந்த விடமெங்கு
மடியேன் வியாத்தமாயிருக்கிறதும்,—இவ்விடத்தாலும் - இப்
பொழுதிந்தச் சரீரத்தோடுங் கூடிநின்று சீவிக்கிறது மவத்தை
ப்படுகிறதும்,—செல்லிடத் தெய்தலும் - இந்தச் சரீரங்க
ளைவிட்டுப் புண்ணிய பாவங்களுக் கீடான சுவர்க்க நரகங்களி
லே சென்றநுபவிக்கிறதும்,—தெரித்து மூன்றிலு மொன்றெ
னக் கருளல்வேண்டும் - தேவரீ ரிவைமூன்று பகுதியிலு மிது
வாயிருக்கு மான்மாவி னுண்மையென்று மொன்றை யடியேனுக்
குத் தெரிய வருளிச்செய்யவேணும். அப்படி யொன்றைச்
சொல்லுகிறதென்ன வவை மூன்றுபகுதியு மான்மாவுக்குடைய

தல்லோவென்று திருவுளஞ் செய்தருளுமானால்,—என்றுமில்
லதிலதாயுள்ள துளதெனுஞ்சொல்லை சொல்லாய்ச் சொல்லு
ங்காலை - எக்காலத்து மொவ்வொன்றி னியல்புகளைச்சொல்லு
மிடத்து இல்லதில்லாததே யுள்ளதுள்ளதேயென்று சொல்லு
கிற சொல்லை யறுதிப்பட்ட சொல்லாகச் சொல்லுமிடத்து,
—சிறத்தலும் பெருத்தலுமிலவே - ஒருமுதலாயிருக்கப்பட்ட
வான்மா வோரவதாரத்தி லணுவாகச் சிறந்து மோரவதாரத்தி
லே மகத்தாகப் பெருத்தும்வர வழக்கில்லையே. அதுநிற்க,—
திறத்தியானை யெறும்பினானதுபோல் - அப்படிச் சிறந்தும்
பெருத்தும் வாரா தெப்பொழுது மொருதன்மையாகிய வியா
த்தமாய் நிற்கச்செய்தேயும் யோனிசம்பந்தஞ்செய் ததுவது
வாயிருக்கிறது ஆனையாய்நின்ற வான்மா வெறும்பானாற்போ
லிருக்கும்,—எனில் - என்று தேவரீ ரருளிச்செய்யில்,—ஞான
மின்றவை காயவாழ்க்கை - தேவரீ ரருளிச்செய்த தடியேன்
கேட்ட வறிவல்ல சரீரத்தின் வழக்கைச் சொல்லலாம்,—மற்ற
வை யடைந்தனவுள - அதனை நாமப்படிச்சொன்னது மறிவா
யுள்ள வான்மாக்கள் கன்மத்துக்கேற்ற வொவ்வொரு சரீரங்க
ளோடுங் கூடினா லதற்கதற்குத் தக்கதாக வறிவுசீவித்து நிற்கு
மென்றே சொன்னோம்,—எனில் - என்றருளிச் செய்யில்,—
அற்றன்று - அதேதப்படியன்று. அதென்னென்று கேட்டருளு
மாகில்,—விட்டகுறையினறிந்து தொன்றுதொட்டு வந்தனவே
ன்டும் - அப்படிக்கூடின யோனிக்குத்தக்க வறிவாயிருக்குமே
யானால் முன்னேயெடுத்து விட்டுவந்த யோனிகளை யின்னதி
ன்ன தல்லவோவென் றடியேனறியவேணும். அப்படியல்ல
கூடினயோனிக்குத் தக்கதாக வான்மா வறிந்து சீவிக்குமெ
ன்று நான்சொன்னது அந்தந்த வவதாரந்தோறு மெடுக்கப்பட்ட
சிறியயோனிக்கும் பெரியயோனிக்குத்தக்க வறிவாக வறிந்து
சீவிக்கிறதா யிருக்குமென்று தேவரீ ரருளிச்செய்யில்,—கட்ட

பெரியதிற் பெருமையுஞ் சிறியதிற் சிறுமையு முரியது நினக் கேயுண்மை - தேவரீர் கூடினதின் றன்மையென்று நாட்டப் பட்ட பெரியயோனிக்குத் தக்கதாகப் பெருத்தவறிவுஞ் சிறிய யோனிக்குத் தக்கதாகச் சிறுத்தவறிவு மப்படிவருகிற சுதந்த மணுவுக்கணுவு மகத்துக்கு மகத்துமாயிருக்கிற தேவரீருக்கே யுள்ளது,—பெரியோம் - மகத்தாயிருக்கப்பட்ட தம்பிரானே —எனக்கின்றாகும் - அந்தவழக் கடியேனுக்கில்லையாம்,—என் றுமனக்கினியாய் - எக்காலத்து மெம்மனத்துக் கினியையாக விருக்கப்பட்ட தம்பிரானே,—இனி மற்றதுமொழியே - இன் னந் தானுகிலு மடியேன் முன்னேகேட்ட வினவுக்கு விடைய ருளிச் செய்யவேண்டும். (க - து.) ஆன்மாவினிய லெப்படி யென்னிற் படிகம்போல வடுத்ததின்றன்மையாக விருக்குமெ ன்றும் வசிப்பைப்பற்றின வியாபகமென்று மதுவதுவாய் நிற் பதென்றுஞ் சொல்லப்படும். உ-ம். சிவப்பிரகாசத்தில்: ஓரிடத் துணருமுண்மை யொளிதருமுபலம்போலும்''. எ-ம். சித்தியா ரில். "வசித்திடவரும்வியாபி யெனும்வழக்குடையனுகி''எ-ம். வருவது கண்டுகொள்க. (நு-ம்.) அவை மூன்றுபகுதியு மான் மாவுக் குடையதல்லோவென்றுதிருவுளம் பற்றினதுக்கு. பி-ம். சித்தியாரில். "சூக்கும தேகியாகித் தூலரூபத்தின் மன்னிச், சரக்கிரமுதலாயுள்ள வவத்தையுட் டங்கியெங்கும், போக்கொடு வரவுமெல்லாம் புரிந்துபுண் ணியங்கள் பாவ, மாக்கியும் பல ன்களெல்லா மருந்தியு நிற்குமான்மா. எ - து. கண்டுகொள்க. சிறுத்தலும் பெருத்தலு மிலவே. எ-கு. ஒரு முதலாயிருக்கப்ப ட்ட வான்மா வோரவதாரத்தி லணுவாகச் சிறுத்து மோரவதாரத் திலே மகத்தாகப் பெருத்தும்வர வழக்கில்லை. என்று பொருள் கூறியதற்கு. பி - ம். சிவஞானபோதத்தில். "மாயாதனுவிளக் காய் மற்றுள்ளங்காணுதே, லாயாதாமொன்றை யதுவதுவாய்'' எ-து. கண்டுகொள்க. மற்றவை யடைந்தனவுள. எ-கு. நாமப் படிச் சொன்னது மறிவாயுள்ள வான்மாக்கள் கன்மத்துக்கே

ற்ற வொவ்வொரு சரீரங்களோடுகூடினு லதற்கதற்குத் தக்கதா கவறிவு சீவித்து நிற்குமென்று பொருட்கூறியதற்கு. பி - ம். சிவப்பிரகாசத்தில். "செறிந்திடு முடலுண்மன்னிச் சேர்பு லன் வாயில்பற்றி, யறிந்ததிலழுந்தும்" எ-து. கண்டுகொள்க.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட வான்மா வவத்தைப்படுமிடத்து ஓரவத்தையைக் கண்டதொழிய மற்றுள்ளவவத்தைநாலு மடியேனு லறியப்பட்ட தில்லையேயென்னும் வினுமேலருளிச் செய்கின்றது.

> மொழிந்த வவத்தை முதலடியே னின்றுங்
> கொழிந்தன நான்கு முணர - விழிந்தறிந் [வே
> தேறிற்றிங் கில்லை யெழில்வெண்ணெய் மெய்த்வே
> தேறிற்றென் கொண்டு தெரித்து.

பி - ம். மொழிந்த வவத்தை - சொல்லப்பட்ட வவத்தைகளைந்திலும்,—முதலடியேனின்று - முதலவத்தையாகிய சாக்கிரத்திலே யடியேனின்றதுண்டு,—ஆங்கொழிந்தன நான்கும்- அந்தச் சாக்கிரத்தைத்தவிர மற்றுண்டான சொப்பன சுழுத்தி துரியந் துரியாதீத மென்னப்பட்ட நான்கவத்தையும்,—உணர விழிந் தறிந்தேறிற்றிங்கில்லை - அடியேனறிவுக்கு நினைவுண்டாம்படி யொவ்வொன்ருக விறங்கினதுமில்லை யறிந்தே னது மிவ்விடத்திற் கண்டதில்லை,—எழில்வெண்ணெய் மெய்த்தேவே - அழகினையுடைய திருவெண்ணெய்நல்லூரிலே யெழுந்தருளியிருக்கப்பட்ட மெய்கண்ட நாதனே,—தேறிற்றென்கொண்டுதெரித்து - அந்தவவத்தை நாலு முண்டென்று அடியேனுக் கறுதிப்பட்டு வாக்கறுதிவந்தது எந்தப்பிரமாணங்கொண்டறிந்தது. (க-து.) பிறிந்திட வைந்தவத்தைப் பெருகிய மலத்தாற் பேணியுறு மாகையாலே சுத்ததத்துவங்க ணீங்கினவிடத்திலே யைந்தவத்தையும் படுமென் றநுமானப் பிரமாணத்தினுலே யறிகவென்றது. (எ)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட வான்மா வொன்றுண்டென் கிறதைத் தரிசித்த வழியேதென்னும் வினா மேலருளிச் செய்கின்றது.

தெரித்த தென்கொண் டெனை யுருத்திர பசுபதி
செடியே னேனையு மடிமை செய்யப்
படிவங் கொண்டு வடிவு காட்டில்லாப்
பெண்ணை யாளும் வெண்ணெய் மெய்ய
வவத்தையிற் றெரித்தன னாயி னவத்தைத
தெரித்தாங் கிருத்தலு மிலனே இருத்துங்
கால முதலிய கருவி யாயின
மாலும் பிரமனும் வந்தெனை யடையா
ரோதுங் காலை யொன்றையொன் றணையா
சேதன மன்றவை பேதைச் செயலிற்
சேதன வானாற் செயல்கொள வேண்டுதற்
போதன மிவற்றைப் புணர்வதை யறிவோய்
கருவித் திரளினுங் காண்பதோ ரொன்று
யொருவுவ தறியே னுணர்வில னாதலி
னிற்கொடு கண்டன னாயினெற் குக்
கருவி யாயினை பெருமையு மிலமே
யானே பிரமங் கோனே வேண்டா
வின்னுங் கேண்மோ மன்ன மின்னிவ்
முன்ன மென்ற னுணர்வில னாதலி
னென்னைக் காண்பினுங் காண்பல காணு
றன்னைக் காண்பினுங் காண்பல வன்றே
டொருங்கு காண்பினுங் காண்பல வருந்துனோ

கண்டவாறே தெனது கண்ணே
யண்ட வாண வருட்பெருங் கடலே.

வி - ம். தெரித்ததென் கொண்டனை யுருத்திரபசுபதி செடியனேனையு மடிமைசெய்யப் படிவங்கொண்டு வடிவுகாட்டில்லாப் பெண்ணையாளும் வெண்ணெய்மெய்ய, அநுவயம். உருத்திரபசுபதி - உருத்திரமூர்த்தியுமா யான்மாக்களுக் கெல்லாமுயிர்க்குயிராய் நின்றிரக்ஷித்தருளுகிற கத்தாவாயிருக்கப்பட்டவனே,—செடியனேனை-முடலை யாக்கையோடுங் கூடிச் சநநமரண துக்கத்திலே கிடந்தழுந்துகிற பாவியாயிருக்கப்பட்டவென்னையும்,—அடிமைசெய்யப் படிவங்கொண்டு - தேவரீர் திருவடிக் குரித்தாக்கிக் கொள்ளவேண்டி யடியேனைப்போல வடிவை யெடுத்துக்கொண்டு,—வடிவுகாட்டில்லாப் * பெண்ணையாளும் வெண்ணெய்மெய்ய - தேவரீருக் குண்டாயிருக்கப்பட்ட வுண்மைவடிவை யொருவருக்குங் காட்டாத நீபெண்ணையாற்றை யாட்சியாகவுடைய திருவெண்ணெய்நல்லூரிலே யெழுந்தருளி யிருக்கப்பட்ட மெய்கண்ட நாதனே,—தெரித்ததென்கொண்டனை - அடியேனென் றொருமுதலுண் டென்கிறதை யறியப்பட்டதேது பிரகாரமென் றருளிச்செய்யவேணும்,—அவத்தையிற் றெரித்தனையாயின் - அடியேன் சாக்கிராதி பஞ்சவத்தைப்பட்டு வருகையிலுமே யதுகொண்டே யடியேனென்றொரு முதலை யறியப்பட்டதென் றருளிச் செய்யுமாகில்,—அவத்தைத் தெரித்தாங் கிருத்தலு மிலனே - அடியே னப்படியவத்தைப்பட்டு வருகிறதேயுண்டாமாகி லப்படி மறைக்கப்பட்டுவருகிற வத்தைவத்தையு மின்னதின்னதென்று கண்டு அவ்விடங்களிலே யவற்றை யடியேனறிந்து நீக்கிக்கொண்டேனு

* பெண்ணையாளும் என்றதைப் பண்ணையாள எனப்பாடமோதி பண்ணையாளாக நின்றவடியேனை யேவற்பணி கொள்ளப்பட்டவனே என்று பொருள் கூறுவாருமுளர்.

மில்லை,—திருத்துங் காலமுதலிய கருவியாயின் - அப்படி ய
தவவத்தையின் மறைப்பை நீக்குகிறது காலநியதி முதலி
கருவிகளென் றருளிச்செய்யுமாகில்,— மாலும் பிரமனும் வ
தெனையடையார் - அப்பொழுது சிருட்டிக்குந் திதிக்குங் க
தாவாயிருக்கப்பட்ட பிரமனும் விஷ்ணுவு மடியேனைக்கூ
நின் றுணர்த்துகிறதில்லையாம். அன்றியும்,—ஓதுங்காலை யெ
ன்றையொன்றுணரா - அந்தக் கருவிகளியல்பைச் சொல்லு
டத்து ஒருகருவியை யொருகருவி யறியாது. அன்றியும்,-
சேதனமன்றவை பேதைச்செயல் - அந்தக் கருவிகளறிவுள்
தல்ல வறியாமையாயிருப்பதோர்செயல் அப்படியல்ல ஆன்ம
வறிவா யிருப்பதுகொண்டு அந்தக் கருவிகளோடுங்கூடி லை
சேட்டைப்படுமென் றருளிச் செய்யில்,—இச்சேதனவானு
செயல்கொளவேண்டு நற்போத மிவற்றைப் புணர்வதை ய
யேன் - அப்படி யடியேனறியும் பகுதிக்குரியவனுமா யந்த
கருவிகளின் பயனைக் கொள்ளத்தக்கவனுமாயிருக்கி லடியே
டைய வறிவு அந்தக்கருவிகளைக் கூட்டுகிறதை யறிகின்றே
ல்லை. அன்றியும்,—கருவித்திரளினுங் காண்பதோரொன்றுய்
அந்தக் கருவிகளெல்லாங்கூடின சாக்கிரத்தானத்திலுஞ் சத்
திவிடயங்களை யறியுமிடத்து ஒவ்வொன்றாக வறிகிறதொழி
தைந்தையு மொக்கவறிகின்றதில்லை. அன்றியும்,—ஒருவுவத
யே னுணர்விலனுதலின் - அப்படி நின்று சீவிக்கிறவவதரத்
அந்தக் கருவிக ணீங்குகிறதையு மறிகின்றேனில்லை. அறிவி
லாதவனுகையாலே யப்படி யோரொன்றினை யறியுமிடத்
நீயாகத் தனித்தொன்றையு மறியமாட்டாய் நாமறிவித்தா லெ
வையென் றருளிச்செய்யில்,—நிற்கொடுகண்டன னுயிரெ
குக் கருவியாயினை பெருமையுமிலவே - அப்படி யடியேன
கிறதெல்லாந் தேவரீ ரறிவித்தா லறிவே னுமாகி லப்பொழு
தேவரீரா யடியேனுக்குக் கருவியென்று சொல்லப்படும்
தாவென்கிற பெருமையுந் தேவரீருக்கில்லையாம் ஆகையாலே

யானேபிரமங் கோனேவேண்டா - அடியேன்றனே கத்தாவெ ன்று சொல்லப்படும், தேவரீரையடியேனுக்குக் கத்தாவென்ன வேண்டுவது மில்லை. அதுவன்றியும்,—இன்னுங் கேண்மோ மன்ன - தம்பிரானே யடியேன் விண்ணப்பஞ் செய்யத்தக்க தின்னமு மொன்றுண்டு அதுவேதென்று தேவரீர் கேட்டரு ளுமாகில்,—நின்னின் முன்னமென்ற னுணர்வில னாதலின் - அப்படித் தேவரீரறிவிக்க வடியே னறிந்தேனுமாகில் அங்ஙன நின்றறிவிக்கிற தேவரீரை யெதிர்ப்பட்டுநின்று இதுவல்லோ நம்மை யறிவிக்கிற முதலென்று அறியமாட்டுகிறே னில்லை அடியே னறிவில்லாதவ னாகையினாலே. என்னவே யிரண்டாய் நிற்கலாகா தென்பது கருத்து,—என்னைக் காண்பினுங் காண்ப லகாணு துன்னைக்காண்பினுங் காண்பலவுன்றோ டொருங்கு காண்பினுங் காண்பல-இரண்டா யிப்படிநின் றடியேனை யறிய வென்றாலு மறியப்படும் பகுதியுமில்லை. அது வன்றியுந் தேவ ரீரை யறியவென்றாலு மறியப்படும் பகுதியுமில்லை. தேவரீ ரோடு மடியேனுங்கூடி யறியவேணு மென்றாலு மறியப்படும் பகுதியுமில்லை,— அருந்துணைக்கண்ட வாறேதெனது கண் ணேயண்டவாண வருட்பெருங்கடலே. என்பதனைப் பொரு ளுக்கேற்க மாறிக்கொள்க. பொருளாவது. அடியேனுக் கரிய துணையா யிருக்கப்பட்டவனே, அடியேனுக் கறிவாகிய கண் ணுயிருக்கப்பட்டவனே, தேவர்களுக்கும் கத்தாவா யிருக்கப் பட்டவனே, அருளமுத வெள்ளத்தை நின் னடியவர்க்குக் கொடுத்தருளுகிற சமுத்திரமா யிருக்கப்பட்டவனே, யடியே னென்னைத் தரிசிக்கப்பட்டது எது பிரகாரங்கொண்டு. (க-து.) இப்படி கிருபை தாத்பரியமாய்த் திருமேனிகொண்டு ஆன் மா தனக்குச் சுதந்தரமில்லை யென்கிறதை யறிந்து தானந்த ஞானமாய் நிற்கவே தன்னைத் தரிசிக்கலாமென்று அருளிய விடத்தன்றி யானறியும் பகுதி யொன்றுமில்லை யென்பதாம். ஆன்மாதனக்குச் சுதந்தரமில்லை யென்கிறதையறிந்து தானந்த

ஞானமாய் நிற்கவே தன்னைத் தரிசிக்கலாமென்றதற்கு. உ-ம். சிவப்பிரகாசத்தில். "தன்னறிவதனாலேதுந் தனக்கறிவில்லையெனுந், தன்னறிவாகவெல்லாந் தனித்தனிப்பயனருந்துந், தன்னறிவறியுந்தன்மைதன்னாலேதனையறிந்தாற், றன்னையுந்தானே காணுந் தானதுவாகின்றே". எ-ம். பட்டணத்துப் பிள்ளையார் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில். "மாயப்படலங்கிழித்தூய, ஞானநாட்டம் பெற்றனன் பெற்றபின், னின்பெருந்தன்மையுங் கண்டேன்காண்டலு, மென்னையுங் கண்டேன் பிறரையுங்கண்டே, னின்னிலை யனைத்திலுங் கண்டேனென்னை". எ-ம். சித்தியாரில். "அடிஞானமான்மாவிற் றோன்றுந்தோன்றத் தாரியனுஞ்சிவந்தோன்றத்தானுந்தோன்றும்" எ-ம். கண்டுகொள்க. (ரு-ம்) அவத்தையிற் றெரித்தனனுயின் எ-கு. சாக்கிராதி பஞ்சவத்தைப்பட்டு வருகையினாலே யது கொண்டே யடியேனென்றொரு முதலை யறியப்பட்டதென்று பொருள்கூறியதற்கு. பி-ம். சித்தியாரில். "படையொடுபவனி போதும் பார்மன்னன் புகும்போதில்லிற், கடைதொறும் விட்டுவிட்டுக் காவலுமிட்டுப்பின்னை, யடைதருந்தனியேயந்தப் புத்தினிலதுபோலான்மா, வுடலினிலவத்தையைந்து முறுமுயிர்க்காவலாக" எ-து. கண்டுகொள்க. திருந்துங்கால முதலிய கருவியாயின். எ-கு. அப்படி யந்தவவத்தையின் மறைப்பை நீக்குகிறது காலநியதி முதலிய கருவிகளென்று பொருட்கூறியதற்கு. பி-ம். சிவப்பிரகாசத்தில். "இந்தகைமையினாலுயருளா லுயிரறியுமறிவுக்கிடாகவாடாதே யீரிரண்டாலுணர்த்து, வித்தைமுதலைவரான் விளங்குஞான மேவியிடுமெனவுரைப்ப ராகத்தமாயை, வைத்தகலைதான்மூல மலத்திறிசேதிக்கி மருவும்வகைதெரிவிக்கும் வாயில்களின் பயனைப், புத்திதாவித்தைதனிடை நின்றறிவையுயிர்க்குப் பொருந்தியிடும் வகைபுணரும் புனிதசத்தி புணர்ந்தே" எ-து. கண்டுகொள்க. ஆன்மா வறிவாயிருப்பதுகொண்டு அந்தக் கருவிகளோடுங்கூடி லவை சே

ட்டைப்படுமென் றருளியதற்கு. பி - ம். சிவப்பிரகாசத்தில். "தனக்கெனவறிவிலாதான் றத்துவவன்னரூபன், றனக்கென வறிவானலிச் சகலமுநுகருந்தானே" எ - ம். கண்டுகொள்க. அறிவில்லாதவ னுகையாலே யப்படி யோரொன்றினை யறியு மிடத்து நீயாகத் தனித்தொன்றையு மறியமாட்டாய் நாமறிவி த்தா லறிவையென் றருளிச்செய்ததற்கு. பி-ம். சிவப்பிரகாச த்தில். "இருணனியிரவிதான்வந் திரித்தலுமிரவிலெண்ணும், பொருணிலைகண்டுமாந்தர் பொருந்திடுமாறுபோல, மருணிலை யெங்குநீங்க மகிழ்ந்துயிர்தன்னுண்மன்னு, மருளையுமொழிய ஞாலத் தறிந்தவாறறியுமன்றே. எ-து. கண்டுகொள்க. (அ)

இங்ஙனஞ் சொல்லப்பட்டு வருகிற வான்மா மூலாதாரத் திலேயொடுங்கி யதீதப்பட்டுக் கிடக்கு மவதாரத்துணரு முறை மை யெப்படியென்னும் வினுமே லருளிச்செய்கின்றது.

கடலமுதே வெண்ணெய்க் கரும்பேயென் கண்ணே
யுடலகத்து மூலத் தொடுங்கச் - சடலக்
கருவியா தாங்குணர்த்தக் காண்பதுதா னென்னை
மருவியா தென்றுரைக்க மன்.

வி - ம். கடலமுதேவெண்ணெய்க் கரும்பே - சமுத்திரத் திலுண்டாக்கப்பட்ட வமுதம்போலவுந் திருவெண்ணெய்நல் லூரிலே யுண்டாயிருக்கப்பட்ட கரும்புபோலவு மினியவனே, —என்கண்ணே - அடியேனுக்குக் காட்டாயிருக்கப்பட்ட கண் போல வரியவனே அடியே னவத்தைப்படு மவதாரத்து, —உட லகத்துமூலத் தொடுங்க - சரீரத்துக்குள்ளே மூலாதாரத்திலே யொருகருவிகளுங் கூடாம லதீதப்பட்டுக் கிடக்கிறவவதாரத் தடியே னுணருகைக்கு, —சடலக்கருவியா தாங்குணர்த்த - சரீ ரக்கூட்டமாக நின்றுணர்த்தின கருவியெது சடக்கென விளை விலேயுணர, —காண்பதுதா னென்னைமருவி - அடியேனறிகிற

துதானெதுடன்கூடி,—யாதென்றுணாக்கமன்-தேவரீரடியேன் விண்ணப்பஞ்செய்தற்கிதுவென்றுவிளங்க வருளிச்செய்தருள வேண்டும். (க-து.) ஆன்மதத்துவம்-உச. வித்தியாதத்துவம்-எ. சிவதத்துவம்-ரு. இவற்றிற்குமுறையே போககாண்டமென்றும் போக்கியகாண்டமென்றும் பிரேரகாண்டமென்றும் பெயர். இவற்றுள் ஆன்மதத்துவம் - உச-ம். உட்கருவியும் புறக்கருவியுமாய்த் தேகமாய்ப்பொருந்திச் சிவதத்துவங்கள் கலாதிகளைப் பிரேரித்து அறிவிக்குமென்பதாம். உ-ம். சித்தியாரில். "வாயாதிசோத்திராதி புறத்துவாழ்கருவியாகு, மேயாதமனாதிகாயத் துணருமுட்கருவியாகு, மாய்வார்கட்காரகமாதி யவற்றினுட்கருவியென்பர், மாயாடன்வயிற்றிவற்றூற் றடக்குண்டுவாழுமான்மா" எ-ம். போற்றிப்பஃறொடையில். "மூலவருங்கட்டிலுயிர் மூடமாயுட்கிடப்பக், காலநியதியதுகாட்டி - மேலோங்கு, முந்திவியன்கட்டி லுயிர்சேர்த்துக் கலைவித்தை, யந்தவராக மவைமுன்பு-தந்த, தொழிலறிவிச்சைதுணையாகமானி, னெழிலுடைய முக்குணமுமெய்தி - மருளோடு, மன்னுமிதயத்துச் சித்தத்தாற்கண்டபொரு, ளின்னபொருளென் றியம்பவொண்ணு - வந்நிலைபோய்க், கண்டவியன் கட்டிற் கருவிகளினைந்தொழியக், கொண்டுநியமித்தற்றை நாட்கொடுப்பப்- பண்டை, யிருவினையான் முன்புள்ள வின்பதுன்பங்கண், மருவும் வகையங்கே மருவி". எ-ம். சொன்ன முறைமைகளைக் கண்டு கொள்க.

(௧௬)

இங்ஙனஞ் சரீரதொந்தனைப்பட்டு நிற்கிற வடியேனுக்குத் தேவரீர் தீக்ஷாக்கிரமங்களிலே பாசமோசனம் பண்ணியிருக்கவு மடியேன் மீளவு மலமாயாதி கன்மங்களோடு தொந்தித்து நிற்கைக்கு வழியேதென்னும் வினுமே லருளிச்செய்கின்றது.

மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை
யந்நிய மாக்கி யருள்வழி யதனை

லென்னுள் புகுந்தனை யெனினே முன்னைத்
திரிமலந் தீர்த்த தேசிக நின்னோ
டொருவுத லின்றி யுடங்கையே யாகும்
பெருநிலை யாகல் வேண்டு மருவிடு
மும்மல மதனு லெம்முணின் றிலையெனி
னம்மலத் திரிவுஞ் செம்மலர்த் தாணிழற்
சேர்தலு மிலவாய்ச் சார்பவை பற்றிப்
பெயர்வில ருகும் பெரும தீர்வின்
றமைந்த கருமத் தியைந்தவை யல்லது
சமைந்தன விலவெனச் சாற்றின மைந்த
மாயையங் கன்ம மாமல மூன்று
மாயா தாகவே யார்ச்சந மாயையி
னுற்பவந் தீரா தொழுகுமொன் றுென்றி
னிற்சம மாயி னல்லது நிற்பெற
வில்லென மொழிந்த தொல்லறந் தனக்கு
மேயா தாகு நாயே னுளத்து
நின்றனை யென்பனே நின்றிலை யென்பனோ
பொன்றிய பொன்றிற் றிலமல மென்பனோ
வொன்றினை யுரைத்தருண் மன்ற குன்றுப்
பெண்ணைப் புனல்வயல் வெண்ணெய்க் கதிபதி
கைகண் டலைவாய் கால்செவி மூக்குயர்
மெய்கொண் டென்வினை வேரறப் பறித்த
மெய்கண்ட தேவே வினையிலி
மைகொண்ட கண்ட வழுவிலென் மதியே.

வி - ம். மன்னியகன்மச் சமத்திடை மலங்களை யங்கியமா
க்கி-அநாதியே யடியேனோடுங்கூடி நிலைபெற்றுவருகிற கன்ம

மாகிய புண்ணியபாவங்கள் தன்னிற் சமமாகத் துலையொ
வவதாத்து அடியேனோடுங் கூடியிருக்கப்பட்ட மலங்க
தேவரீர் தீக்ஷாக்கிரமங்களினாலே வேறுபடுத்தி,— அருள்
யதனா லென்னுள் புகுந்தனையெனினே - தேவரீ ரநுக்கி
தின் முறைமையாலே யடியேனுள்ளத்திலே யெழுந்தருள
தே யுண்டாமாகில்,—முன்னைத் திரிமலந் தீர்த்ததேசிக
னோடொருவுத லின்றியுடனைதயே யாகும்பெருநிலை யாகல்
ண்டும்-குருமூர்த்தியா யிருக்கப்பட்ட தம்பிரானே யடியே
கநாதியாயிருக்கப்பட்ட மூன்றுமலங்களையுநீக்கின தேவரீ
யடியேன்விட்டு நீங்காம லுடனைதயாய்க் கலந்துநிற்கும்
ரின்பமாகிய திருவருட்பிரகாசமுண்டாக வேண்டும். அதுநி
முன்னேயென்னிடத்தில் தேவரீரில்லையாம்,—மருவிடு மும்
மதனாலெம்மு ணின்றிலையெனில் - அடியேனோடு கூடிவரு
வாணவமாயை காமியமென்னு மூன்று மலங்களினோடும் வ
னைசெய்து நிற்கையினாலேயடியேனுள்ளத்திலே தேவரீரொ
தருளி நின்றதில்லை யாமாகில்,—அம்மலத்திரிவுஞ் செம்மல
தாணிழல் சேர்தலுமிலவாய்ச் சார்பவைபற்றிப் பெயர்வில
கும் பெருமதீர்வு - அந்த மலங்களைத் தேவரீர் போக்கினதும்
லையா யடியேனுஞ் சிவந்ததாமரைமலர்போன்ற ஸ்ரீபாதத்தி
வந்து பொருந்தினது மில்லையாய்ப் பிரபஞ்ச வாதனையா
வந்துபொருந்தின கன்மங்களைப் புசித்து அதனாலே புண்ணி
பாவங்களிற் கட்டுப்பட்டுச் சநநமரண துக்கத்தை விட்டு நீங்
கைக்கு வழியில்லாதவனாகும். தம்பிரானே யிதுநிச்சயம்
பாது. அப்படியல்ல,—இன்றமைந்தகருமத் தியைந்தவை ய
லது சமைந்தன வில்லெனச் சாற்றின் - இப்பொழு தடியே
டுத்தவுடலுக் கடுத்த பிராரத்துவ மநுபவிக்கிறதொழிய மே
டலெடுக்கைக்குள்ள வாகாமியகன்ம மேறுதென் றருளிச்செ
யில்,—அமைந்த மாயேயங்கன்ம மாமலமூன்று மாயாது-அ
யேனுக்கமைந்தபிராரத்துவத்துக்கீடாகவெடுத்தமாயமேயெ

னப்பட்ட காரியமாகி யுடலுள்ளளவு மதன்காரணமாகிய மாயை போகாது, மாயை யுண்டாகவே கன்மமும்போகாது, அப்படி மாயையுங் கன்மமு முண்டாகவே யாணவமல முண்டெனப்படும்,—ஆகவே யார்ச்சநமாயையி னுற்பவந் தீராதொழுகும்- ஆக விங்ஙன மூன்றுமலங்களுமுண்டாகவே யாகாமியங்களை யார்ச்சித்து மாயையின் தோற்றமாயுள்ள சரீரதொந்தனைவிடாமல் மென்மேலுந் தொன்றுதொட்டுவரும். அன்றியும்,—ஒன்றொன்றினிற் சமமாயினல்லது நிற்பெறலில் லெனவொழிந்த தொல்லறந் தனக்குமேயாதாகும் - இருவினையாகிய புண்ணிய பாவங்க ளொன்றுக்கொன்று தம்மிற்சமமாகத் துலையொத்தாலொழியத் தேவரீரை யடியார் பெறுகிறதில்லையென்று சொல்லப்பட்டபகையதாகிய சிவசாத்திரத்துத் தன்மமாகிய திருவாக்கும்பொருந்தாது. ஆகையால்,—நாயேனுளத்து நின்றனையென்பனோ நின்றிலையென்பனோ பொன்றியபொன்றிற் றிலமல மென்பனோ வொன்றினையுரைத்தருண்மன்ற - அடியேனுள்ளத்துத் தேவரீர் கூடி நின்றதென்று விண்ணப்பஞ்செய்வனோ அந்தமலங்கள்கெட்டுப்போனதென்று விண்ணப்பஞ்செய்வனோ கெடாமல் நின்றதென்று விண்ணப்பஞ்செய்வனோ இவையிற்றி லொன்றை யருளிச்செய்தருள் அடியேனுக் கறுதிப்பட,—குன்றாப்பெண்ணைப் புனல்வயல்வெண்ணெய்க்கதிபதி- வளப்பங்கள் குறைவுபடாத பெண்ணையாற்றுநீர் பாயப்பட்ட வயல்களையுடைய திருவெண்ணெய்நல்லூருக்குக் கத்தாவாயிருக்கப்பட்டவனே,—கைகண் டலைவாய்கால் செவிமூக்குயர் மெய்கொண் டென்வினை வேரறப்பறித்த மெய்கண்டதேவே - கரசரணுதியாயுள்ள வவயங்களோடுங்கூடி யிருக்கப்பட்ட திருமேனி யெடுத்துக்கொண்டு அடியேனுக்குண்டாகிய கன்மங்களைக்கிளைப்பறப் பறித்துப்போட்ட மெய்கண்டதேவனே,—வினையிலி - அப்படி ரூபீகரித்திருக்கச்செய்தேயுங் கன்மதொந்தனை யில்லாதவனே,—மைகொண்டகண்ட - நஞ்சமாகிய

கறுப்பினைக் கண்டத்திற்றரித்தருளினை கறைமிடற்றனே,- வழுவிலென்மதியே - அடியேனுக்குக் குற்றமற்ற வறிவாயிருக்கப்பட்ட தம்பிரானே யிவ்விலைத்தன்மை யெனக்கருள்வாய் (க-று.) ஒருருக்கிருவழிப்பருதி தோன்றினவிடத்துச் செல்வனுக்குத் திகைப்புண்டானாற்போலக் கன்மத்தாலேயொப்பிலே சத்திக்குந்திகைப்புவரும், அதுவே சத்தி தன்றொழில் செலுத்தாதிருத்தலாம். அவ்வைதாக் கேவலறிவையல்லது பாவையறிவெ ரென்பதாம். (வு-ம்.) அடியேனுடைய கூடியிருக்கப்பட்ட மலங்களைத் தீக்ஷாக்கிரமங்களினாலே வேறுபடுத்தித் தேவரீர் ரக்ஷிக்கின் முறைமையாலே யடியேனுள்ளத்திலே யெழுந்தருளுவதே யுண்டாமாகில் என்பதற்கு. பி-ம். சித்தியாரில் "மலர்க்குக் கன்மவொப்பில், தவாயிலாசான் மூர்த்தி யாதாரமாய்த் தரித்தொழிப்பன் மலஞ்சத்தி நிபாதத்தால்." எ-ம் "சிறுத்தவதோர் குணமில்லான் றன்னோ டொருவருக்குங் கிடைக்கரியாவொன்று மிலாதோர் படைத்தவன்றோ, பொருட்பட்டமீதானை யருளியதன் வழியே புகுந்திலனைத்துமிலாப் பேதைத் தைப்புரிக்கே." எ-ம். கண்டுகொள்க. மருவியிருப்பமல மதுவெலம்முணரின் றிலேயெனில் - அடியேனுடைய வருமிறதிலைமாயை காமியமென்னு மூன்று மலங்களினாலே சம்பந்தத்தினாலே யடியேனுள்ளத்திலே தேவரீரெழுந்தருளி நின்றதிலையாம் என்னுமொருள் கூறியதற்கு. பி-ம். சிவஞானபோதத்திலே. "அருக்கனேர் சிற்பிறான மல்லிருளோகாணுக், திருட்கண்ணே பாசத்தார்க்கிசன்" எ-ம். "தன்னுணர்வு, சேதத்தம்பானிகழுக்க திகைப்போற், பாசத்தார்க்கின்றுமபதி." எ-ம். போற்றிப்பஃறொடையில். "என்றுமனலென்று மிக்காலுமலித்திருக்கு." எ-ம். கண்டுகொள்க. இன்றனைத்தருமந்தமையத்தையல்லது சமைத்தன விலவொனச்சாற்றின். எ-று. இப்பொழு தடியேனெடுத்த வுடலுக்கெடுத்த பிராரத்துவ மதுபவிக்கிற

தொழியமேனுடலெடுக்கைக்குள்ள வாகாமியகன்மமேறுமென்றருளிச்செய்யில் என்று பொருள்கூறியதற்கு - திருவருட்பயனில். "என்றவினையுடலோடேகு மிடையேறுவினை, தோன்றிலருளே கூடும்." எ-ம். சிவப்பிரகாசத்தில். "தொல்லையில்வருநல்போலத் தோன்றிரு வினையதுண்டேல், அல்லொளிபுரையுஞானத்தழருற வழித்துபோமே." எ-ம். சித்தியாரில். "என்றவுடல்கன்மமதுபவத்திறு மறுத்திவ்வினிச் செய்கன்மமூலமலஞானத்தாலிடிப்பன்-" எ-ம். சிவஞானபோதத்தில். "பின்செய்வினைமாயை யுடனில்லாது." எ-ம். கண்டுகொள்க.
அமைத்தமாயேயாம் கன்மமாமல மூன்றுமாயாது. எ-து. அடியேனுக்கமைந்த பிராரத்துவத்துக் கீடாகவெடுத்த மாயேயமென்னப்பட்ட காரியமாகி யுடலுள்ளளவு மதன்காரணமாகிய மாயைபோகாது; மாயையுண்டாகவே கன்மமும்போகாது. அப்படி மாயையும் கன்மமும் உண்டாகவே யாணவமல மூன்றுடனப்படும் என்றுபொருள் கூறியதற்கு. பி-ம். சித்தியாரில், "அங்கித்தம்பனைவல்லார்க் கனல்சுடாதாகு மடைந்தமந்திரமுடையார்க் கருவிடங்களேறு, மெய்த்திறத்தைக்கன்மமெலாஞ்செய்தாலு ஞானிக்கிருவினைகள் சென்றினையா மூற்செய்வினையிருக்கத், தங்கிப்போம் பாத்திரமூக்குயவன் விளைதவிர்த்த சக்கரமுங்கத்தித்துச் சுழலுமாபோலன், மங்கிப்போய் வாதனையாலுழல்விக்குமெல்லா மலங்களும் பின்காயமொடுமாடு மாயுமன்றே." எ-ம். வாதனை தொடர்த்திருமே யக்கினியைச் சேர்த்த வித்தைப்போலவு மாயன் வெட்டின மாம்போலவும் படம்பாம்பனின பணம்போலவும் வெந்த படம்போலவும் உருவமாத்திரமல்லாமல் பெத்தமில்லையானபடியால் காரணமலங்களுஞ்சரீரத்தோடு தேய்க்குமென்றது கருத்து. தேகசியைடியார் பெறுசிறநில்லையென்று சொல்லப்பட்ட பழையதாகிய விதைத்திரத்துத் தன்மையாகிய திருவாக்கும்பொருத்தாது. எ-து. கருத்தாவது புண்ணியபாவமொன்று சமத்துவமாகுலல்லோ தேவ

நீரைப் பெறுவதென்றுசொன்ன பழைய திருவாக்கு புண்ணி
பாவத்துக்கேற்ற தேகநிற்கவே வினையொத்ததெப்படியெ
சீஷன் வினவியதற்கு இருவினையொப்புக்குச் சரீரமன்னி
யல்ல புண்ணியத்திலேயும் பாவத்திலேயு மிரண்டிலேயுஞ்
மாகவெறுப்புவந்ததே யிருவினையொப்பு அப்போதாசா
மூர்த்தமாகவந்து சிவனிரக்ஷிப்பன். இதற்கு. பி-ம். போற்
பஃறொடையில். "எல்லையிரண்டு மிடையொப்பிற் - பல்பிற
யத்தமதிலன்றே வளவென்று பார்த்திருந்து, சத்திபதிக்கு
ரம்போற்றி." எ - து. கண்டுகொள்க. நாயேனுள்ளத்து நி
றனை யென்பதே நின்றிலையென்பதே எ-கு. அடியேனுள்ள
த்துத் தேவரீர்கூடிநின்ற தென்று விண்ணப்பஞ் செய்வதே
கூடிநின்றதில்லையென்று விண்ணப்பஞ்செய்வதே என
பொருள்கூறியதற்கு. பி - ம். சித்தியாரில். "என்றுந்தானொ
னிறு மெய்தவேண்டா வெங்குமிலனெனனில் வேறுமே
மல்ல, னங்கஞ்சேருயிர்போல்வ னெங்குமாய்த் தமையவல்ல
கண்போலக்காணுவான்மா, விங்கு நாமியம்புத் தத்துவங்களி
வைத்தறிவதிறைஞானந் தந்துதானீதல் கடமிற்ற, ஆன
விழிச்சோதியு மூட்சோதியும் பெற்றாற்போற் சோதிக்கு
சோதியாய்த் தோன்றிடுவன் காணே." எ-து. கண்டுகொள்
பொன்றியபொன்றிற் றிலமலமென்பதே. எ - கு. ஆக்கமல
கள் கெட்டுப்போனதென்று விண்ணப்பஞ்செய்வதே கெட
மல் நின்றதென்று விண்ணப்பஞ்செய்வதே என்று பொரு
கூறியதற்கு. பி-ம். சித்தியாரில். நெல்லினுக்குத்தவிடுமிக
நாதியாயுநெல்லைவிட் டுநீங்கியவைநின் றனிலைவிசுத்தம், சால
யிடிற்றகளற்றவரிசியின் பாலிலைத் தொக்கிருந்து மற்றொரு
நெற்றேற்றிடாவா, றெல்லைவிவைவிடுமாற்றே யவைப்போ
வணுவை மேவுமல மூடல்சன்மமாதி விட்டேகீங்கு, நல்லவி
முத்தியின் கட்டெத்தான்மாவை நணுகிநிற்கு மாதவிஞ்ஞச
மின்றுமே." எ-ம். சிவப்பிரகாசத்தில் "அழிந்திடும் பாசமெ

னினித்தமென் றுரைத்தல்வேண்டா, வழிந்திடாதென்னின் ஞானமடைவது கருதவேண்டா, வழிந்திடு சத்திநித்த மழிந் திடாவொளியின் முன்ன, ரழிந்திடுமிருளு நாசமடைந்திடா மிடைந்திடாவே.'' எ - து. கண்டுகொள்க. (௧௦)

அடியேனறியப்பட்டதெல்லாந் தேவரீர்கூடிநின் றறிவிக் கிறதாகவிருக்கவு மடியேனிந்த வஞ்ஞானத்தோடுங்கூடிமயங்கி நிற்கைக்கு வழியேதென்னும் வினாமேலருளிச்செய்கின் றது.

மதிநின்பா லிந்த மலத்தின்பா னிற்க
விதியென்கொல் வெண்ணெய்வாழ் மெய்ய-பதிநின்பால்
வந்தா லிதில்வரத்தில் வந்திரண்டும் பற்றுகிலேன்
எந்தா யிரண்டாமா றென்.

வி - ம். மதிநின்பால் - அடியேனுக் குண்டாயிருக்கப்பட் டவறிவு தேவரீர் பகுதியிலே யுண்டானது. அப்படியிருக்க வும்,—இந்த மலத்தின்பானிற்க விதியென்கொல் - அடியேனி ந்த மலத்தின் பகுதியிலேகூடி மயங்கிநிற்கைக்கு முறைமை யேது,—வெண்ணெய்வாழ்மெய்ய - திருவெண்ணெய் நல்லூ ரிலே யெழுந்தருளியிருக்கப்பட்ட மெய்கண்டநாதனே,—பதி நின்பால்வந்தால். - கர்த்தாவாயிருக்கப்பட்ட தேவரீரை யடி யேன்வந்து கூடினால்,—இதில் வரத்தில்-இந்தமலத்திலே மீள வருகைக்கு வழக்கில்லை,— வந்திரண்டும் பற்றுகிலேன் - தேவ ரீரைவந்துகூடினு லந்த வருளோடு மிந்தமலத்தோடு மொக்க நிற்கிற தடியேனுக்குண்டாகாது,—எந்தாயிரண்டா மாறென். அடியேனுக்குச்சுவாமியாயிருக்கப்பட்டவனே அடியேனொருத் தன் தேவரீரோடுங்கூடியறிந்து மிந்தமலத்தோடுங்கூடி யறி யாமலுமா யிரண்டோடுங்கூடி யதுவதுவாய் நிற்கைக்கு வழக் கேது.-(க-து.) அறிவுயிருத்தவனு மாகாமலறிவில்லாத மூடனு

மாகாமல் கழிபெறவேண்டுமென்கிற கவொத்தன்மையா யன் தான் பாசத்திடத்தும் பரத்தினிடத்து மாசைப்பற் பொழுதிரண்டிலு மன்றிப்பற்றிய தத்துவத்துவாயமிற்பவ்ர். (உ- சித்தியாரில். "பாசமொருட்டத்திற் கல்வினைவிட்டெடுப்பப பொழுது நீங்கியது விடும்பொழுதுபாக்கு, மாசுபடிமலமாக யழுங்கன்ம மினைத்து மாணடியைய புணருக்போதகஞ்ம் பி னையுந் சேசமொடு இருவடிக்கீழ்நீங்காதே யாங்கு நிலை டையோர் நின்றிடுவர் நிலையிதுவேயாகு, மாசைவொழி வ மிங்கு மாறியலம்வருவோரும் பாசமறுக்கும் வகையறி வழியுனைப்பாம்." என- கண்டுகொள். (அ-ம்) மதிமன்னமலி மலத்தின்பாணிற்கவிழ வென்கொல். எ - ரு. அடியேனுக்கு டாயிருக்கப்பட்ட வறிவு தேவரீர் பதுமியிலே புண்டையிருக், மடியேனிக்க மலத்தின் பதுமெயிலேகூடி. மயக்கநிற்பதங் முறைமையேதென்றும் விருவுக்குக் கூத்த கன்மத்தில் வ நடத்துவதென்பது கருத்து. பி - ம். சிவஞானபோதத்தில் "அவையே தானேயா யிருவினையிற், போக்குவரவு புரிய வாணையி, னீக்கமின்றி." என- கண்டுகொள்க. (௧௮

தேவரீரவசரமு முயிர்க்குயிராய்நின் றறிவிக்குமென்று ருக்கையிலே யடியேனுடை பொருளற்கடியு மொருகாலிக் யும் வருகைக்கு வழியேதென்று மாணவகன்கேட்கும் விருவே லருளிச்செய்கின்றது.

என்றுரை விளங்க விருட்படாஅம் போக்கி
முண்டக மலர்த்தி முகத்திலறுது
மேதினி பரப்ப மெய்ப்பயன் சோதி
கோதிலமுதக் குணப்பெருங் குன்றே
வெள்ளிக் குன்றத்து மதுர பொன்னொ
துன்னிற் றுய்ப்பி புருவியிற் போய்வு

மென்று மருவே நின்னியல் பெனியோ
வியங்கோ ளாளு மாகி யியங்கலு
முன்டெனப் படுவை யெண்டோன் முக்கண்
யாங்கணும் பிரியா தோங்கு நின்னிலையின்
யான் வந்தணைந்து மீன்குவை றுயி
றுற்றுத் துயருற் றோரணி நிருணைசு
வீற்று வீற்றெழுதா வேண்டலும் வெறுத்தலு
மின்றிச் சாயைக்கு நன்றுமன் னியல்பே
யனைவை யாருவை நினைவருங் காலை
யிந்நிலை யகனி னேனைமுயேற் கெங்கி
நின்னை வெளிப்படுத் தொளிப்பட நீயே
லருண்மா றருளும் பெருமவ நன்றியு
நிற்பெற் றவர்க்கு முற்பவ முன்டெனுந்
சொற்பெறு மீறித் தொல்லுல கில்லை
யவ்வவ் வமைவுஞ் சோர்வு மயர்வறச்
சொல்லிற் சொல்லெதிர் சொல்லாச்
சொல்லே சொல்லுக சொல்லிறந் தோயே.

வி - ம். எண்டிசைவிளங்க விருட்படாம்போக்கி முண்டக மலர்த்தி முதநிலைருறும். - மட்டுத்திக்கிலுமுள்ள வந்தகாரங் கனிவிக்கித் தாமரைமுகிழ்முமலர்த்து மாதிக்கலேகட்போல வடிவேன் றெனிநாடுபெற வெண்டிசைக்கு [illegible] வெண்டிம் பருதிக்கெல்லாம் [illegible] வேயிர மறைக்கப்பட்ட [illegible] படிவேயவிருஅப்பகமைத்தெழு மலர்த்து [illegible] ட்ட திருவருளோடு மடியேனுக்குக் [illegible] னியுதய. - முதியிலே தோன்றியருளிய [illegible]

மெய்கண்டதேவ-மெய்கண்டதேவனென்கிற திருநாமத்தை யுடையவனே,—கோதிலமுத - குற்றமற்ற வமுதமாயிருக்கப் பட்டவனே, — குணப்பெருங்குன்ற - நற்குணங்களெல்லா முடைய பெரியமலையே. என்னவே மலைபோலும் பெருமையை யுடையவனே,—என்னினைந்தனை மகறலு மென்னைகோல் - எ. கும் பூரணனாயிருக்கிற தேவரீரடியேனோடு மோரவதாரத்திலே கூடியு மோரவதாரத்திலே நீங்கியுநிற்கிறதென்று பிரகாரமென றருளிச்செய்தருள். கொல் - ஐயம்,—உன்னாற் றுன்னி யுன்னை டிற்பெயர்குவ மென்னு மதுவே நின்னியல்பெனின்—அப் படித் தேவரீர்கூடியும் பிறிந்து நிற்கிறது அடியேனினைக்கும் பொழுது கூடியுநினையாதபொழுது நீங்கியுமிருக்கிறதே தேவ ரீருக்கு முறைமையாமென்றருளிச்செய்யில், — வியங்கோள னுமாகி யியங்கலுமுண்டெனப்படுமை-அப்பொழுது தேவ ரடியேனுக்கே வற்றொழில் செய்கிறவனுமாய்ப் பூரணமில்லாமை போக்குவரவு செய்யப்பட்ட ஏகதேசியென்றுசொல்லவும் படும் அப்படியல்ல நாமசைவறநிற்க நீதானேன்கூடியும் பிரிந்தும் வரு குவையென்னில்,—எவ்வேடான்றுமக்கண் யாங்களும் பிரியா தோங்கி நின்னிலையின்யான் வந்தணைந்து மீள்குவனெனின் எட்டுத்திருப்புயமு மூன்று திருநயனமுமுடைத்தா யெவ்விட முநீங்காம லுயர்ந்து நின்னுடைய பூரணநிலையிலே யடியேன் வந்துகூடி மீளவும் பிரிவேனாகில், — ஆற்றாத்தயருற்றேன் ணைநிழனசை இ வீற்றுவீற்றெழுதா வேண்டலும் வெறுத்தலு மின்றிச் சாயைக்கு நன்றுமன்னியல்பே - வழிநடக்கிறவர்கள் வெயிற்சூட்டினால் வருத்தப்பட்ட வருத்தம் அழுகிறாகக்குளிர் ந்தநிழலுக்காசைப்பட்டுச்சென்று வேண்டத்தக்கவிடங்களிலே யிருந்திருந்துபோமிடத்து இவர்களிங்ஙனம் வந்திருக்கப்பெற் றதேயென்கிற பிரியமும் நம்மைவிட்டுப் போனார்களென்கிற வப்பிரியமுமந்த விருக்ஷத்திற்கில்லையானாற்போல பொய்புச் சொல்லாததேவரீருக்குண்டான முறைமையுமன்று,—அன்னையை

யாகுவை நினைவருங்காலை-தேவரீர் சர்வஞ்ஞனென்றிருக்கு மவ
தாரத்து மிங்ஙனமருளிச் செய்ததே தாம். விசாரிக்கு மிடத்தப்
படியல்ல, நீயுநாமும் போக்குவரவின்றி நின்றநிலை யதனிலே
நீநினைக்கும்பொழுது நாம் பிரகாசித்து நீநினையாதபொழுதும
றைந்துநிற்போமென்னில்—இந்நிலையதனி னேழையேற்கிரங்
கிநின்னை வெளிப்படுத்தொளிப்பைநீயேல் - இப்பொழுதிங்ஙன
நின்றநிலைதன்னிற் கொச்சையா யிருக்கப்பட்ட வடியேனுக்கா
கக் கிருபைஜநித் தடியேனிடத்திலே யெழுந்தருளி மீளவும
றைந்து நிற்குமாயின்—அருண்மாறுகும் பெரும - தம்பிரானே
தேவரீ ரநுக்கிரகவா னென்கிறதற்கு மாறுபாடுண்டாம்—அஃ
தன்றியும் -அப்படியன்றியும்—நிற்பெற்றவர்க்கு முற்பவமுண்
டெனுஞ் சொற்பெறும் - அப்படி யநுக்கிரகவானல்ல வென்
கிற தன்றியுந் தேவரீர் திருவடியை யடைந்தவர்களுக்கு மீள
வும் ஜநநமுண்டென்கிற சொல்லையுமுடைத்தாயிருக்கும்—அஃ
தித்தொல்லுலகில்லை - அப்படி யநாதியே தொடங்கித் தேவ
ரீர் திருவடியைப்பெற்ற பெரியோரொன்று சிலருண்டாகப்போ
கிறதுமில்லை ; ஆகையால்—அவ்வவ்வமையும்-அடியேன் விண்
ணப்பஞ்செய்யு மந்தந்த நிறைவும்—சோர்வுமயர்வற - அடியே
னுக்கு மயக்கமுந் தீரத்தக்கதாக—சொல்லில் - தேவரீரருளிச்
செய்யில்—சொல்லெதிர் சொல்லாச் சொல்லேசொல்லுக -
அடியேன் மறுத் தெதிருத்தரம் விண்ணப்பஞ் செய்யாதபடிய
ருளிச்செய்யல்வேண்டும்—சொல்லிறந்தோயே - வாக்கினாலுச்
சரித்தற்கு மப்பாற்பட்ட தம்பிரானே. (க - து.) அவ்வவ்விட
த்திலே சிவ னிறைந்திருக்கிறது மான்மாபொருந்தி யிருக்கிற
துமெப்படியென்னில். —வது. உடலு முயிரும்போலுங் கண்
ணுமாதித்தன்போலு மான்மாவு மான்மக் கியானமும்போலும்
விட்டு நீங்காமற் பொருந்தியிருக்கும் அப்படியிருக்க விட்டும்
பற்றியும் வருவானேனென்னில் அநாதியே மலசம்பந்த முகை
யாலே நீ நினைத்த விடத்திலே பிரகாசிப்போம் நினையாதவிட

த்திலே நீங்கி நிற்போமென்று திருவுளம்பற்றினது. உ-வது
விட்டுநீங்காத பரிபூரண நிலையிலே யான்மாவந்து பொருந்தி
ங்குவனென்று சொன்னது மலபோத நீங்கினவிடத்திலே சிவ
னைப் பொருந்துவனென்றும் போத மேலிட்டகாலத்திலே சிவ
னை யிழந்து நிற்பனென்றுஞ் சொன்னது. ங-வது. ஏழையாயு
ள்ள வடிமைக்கிரங்கி யநுக்கிரகம்பண்ணி நிற்போமென்றது
பத்தியினாலே வழிபடுகிறவடியார்களுக்கு மனதபீஷ்டந்தீர்த்து
நீங்கிநிற்போமென்று திருவுளம்பற்றினது. ஆகையாலே விட்
டும்பற்றியும் வருகிறது மூன்று பிரகரணமாகத் திருவுளம்பற்றி
னதுங் கண்டுகொள்க.(நு-ம்)உன்னிற்றுன்னியு னுவிடிற்பெயா
குவ மென்னுமதுவே நின்னியல்பெனினே. எ-கு. தேவரீர் கூ
டியும்பிரிந்துநிற்கிறது அடியேனினைக்கும்பொழுது கூடியுநினை
யாதபொழுது நீங்கியுமிருக்கிறதே தேவரீருக்கு முறைமையெ
ன்று பொருள் கூறியதற்கு. பி-ம். தேவாரம். "பன்னிலூறும்
பழத்திலுமின்சுவை,யென்னிலூறி யெனக்கேகளிதரு, முன்னி
லுன்னுமுனுவிடில் விட்டிடு, மென்னுளீச னிருந்தவியற்கை
யே" எ-து. கண்டுகொள்க. எண்டோண்முக்கண் யாங்கணும்
பிரியா தோங்கிநின்னிலையின் யான்வந்தணைந்து மீள்குவனு
யின். எ-கு. எட்டுத்திருப்புயங்களு மூன்று திருநயனமுமு
டைத்தா யெவ்விடமு நீங்காமலுயர்ந்த நின்னுடைய பூரண
நிலையிலே யடியேன் வந்துகூடி மீளவும் பிரிவேனுமாகில் என்
றுபொருள் கூறியதற்கு. பி-ம். சிவஞானபோதத்தில். "ஐம்பொ
றியினல்லையெனு மந்தரசிவனை, ஐம்பொறியை விட்டங்கணை
சகல - னைம்பொறியி, னீங்கானீர்ப்பாசிபோ னீங்கிமலகன்மம்
வரி, னீங்கரனைநீங்கு நினைந்து" எ-ம். ஊசல்கயிறற்றாற்றாய்த்
தரையேயாம். எ-ம். ஒழிவிலொடுக்கத்தில். "போதம்பதைப்பற
வேபூரணமாம் பூரணமும், போதம்பதைத்தெழலே பொய்யா
கும்." எ-ம். கண்டுகொள்க. இந்நிலையதனி னேழையேற்கிர
ங்கி நின்னைவெளிப்படுத் தொளிப்பை நீயேல். எ-கு. இப்பொ

மூதிங்ஙனை நின்றநிலைதன்னிற் கொச்சையாயிருக்கப்பட்ட வடியேனுக்காகக் கிருபைஜநித் தடியேனிடத்திலே யெழுந்தருளி மீளவு மறைந்து நிற்குமாயின் என்று பொருள் கூறியதற்கு. பி-ம். சித்தியாரில், "இருஞ்சுரபிக்கெங்கு, முருக்காணவொண்ணுத பான்முலைப்பால் விம்மி யொழுகுவதுபோல் வெளிப்பட் டருளுவ னன்பர்க்கே." எ-து. கண்டுகொள்க. (கஉ)

இங்ஙனந் தத்துவாதீதனுயிருக்கிற தேவரீ ரடியேனுக்கிந்த மாயா கருவிகளையுண்டாக்கி யடியே னதனோடுங் கூடியிருந்துங் கூடாமல் நின்றும் வருகைக்கு வினுமே லருளிச்செய்கின்றது.

இறந்தோய் கரணங்க ளெல்லா மெனக்குச்
சிறந்தோ யெனினுமெய்த் தேவே- பிறந்துடனுங்
காயங் கொளவுங் கொளாமலுங் கண்டதுநீ
யாயன்கொல் பாதவத் தற்று.

வி - ம். இறந்தோய் கரணங்களெல்லாம் - கருவிகரணுதிகளைக்கொண்டறியுமறிவுக் கெட்டாம லகன்றுநிற்கிறநீ,— எனக்குச் சிறந்தோய் - அவையிற்றை யெனக்குண்டாக்கினுய்,— எனினும் - அப்படியுண்டாக்கவும், — மெய்த்தேவே பிறந்துடனுங் காயங்கொளவுங் கொளாமலுங் கண்டதுநீ - மெய்கண்ட தேவனே பிறந்துடனுய் மெய்போலப் பொருந்தியிருக்கிற சரீரமிது பொய்யென்று பொருந்தாமலும் பண்ணினது தேவரீர், —ஆயன்கொல்பாதவத்தற்று - இடையன்வெட்டின மரம்போலப் பாதியச்சையும் பாதியுலர்ந்ததும்போல மெய்யாயிருந்த சரீரம் பொய்யென்றறிவித்து நீங்கியுநீங்காமலிருந்தது. (நு-ம்.) சரீரத்திலே பொருந்தியிருக்கையிலே காயநீக்க மெப்படியென்னில் சரீரம் பொய்யென்றறிவித்துத் தீக்ஷாக்கிரமங்களினுலே மலங்களைப்போக்கினபடியினுலேயு மருளிலே பொருந்தினபடி

யினுலேயுஞ் சிவனிடத்திலே சம்பந்தமில்லாமல் காயத்தி
சம்பந்தமில்லை. இதற்கு. பி-ம். சித்தியாரில். "தெரிவரிய
ய்ஞ்ஞானஞ் சேர்ந்தவாறே சிவம்பிரகாசிக்குமிங்கே சீவன்மு
தனுகு, முரியமலமௌடதத்தாற் றடைப்புண்ட விடமுமொ
ளெரியினெளி முன்னரிருளுந்தேற்றின், வருபால்சேர் நீர்ம
வுகலங்கலும்போலாகி மாயாதே தன்சத்திமாய்ந்துகாயங், தி
யுமளவும்முளதாய்ப் பின்புகாயஞ்சேராத வகைதானுந்தேயும
றே." எ-து, கண்டுகொள்க. மெய்போலிருந்த சரீரம் பொ
யென்றதற்கு. பி-ம் சித்தியார். "மண்டனில்வாழ்வும்வான
தாசயன்மாலார்வாழு, மெண்டருபூதபேத யோனிகள்யாவு
ல்லாங், கண்டவிந்திரமாசாலங் கனக்கழுதிரதங்காட்டி, யுண்
போலின்றும்பண்பி லுலகினையசத்துமென்பர்". எ-ம். "கண
திடைத்தோன்றிநின்று கழியுமென் றறிந்தொருக்கால், வ
குதீரனையென்றும் வானவர்வணங்கவைப்பன்"எ-ம். தேவ
ரத்தில். "வாழ்வாவதுமாய மிதுமண்ணுவதுதிண்ணம்"எ-
" இன்றுளேனுளையில்லே னென்செய்வான் றோன்றினேனே
எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்ளக. (க

அடியேனுக்குப் புண்ணியபாவங்க ளுண்டென்கைக்
வழியேதென்னும் வினுமே லருளிச்செய்கின்றது.

அற்றதென் பாசமுற்றதுன் கழலே
யருட்டுறை யுறையும்பொ ருட்சுவை நாத,
வேறென் றிருந்த வென்னை யான்பெற
வேறின்மை கண்ட மெய்கண்ட தேவ
விருவினை யென்ப தென்னைகொ லருளிய
மனமே காயம் வாக்கெனு மூன்றி
னிதமே யகித மெனுமிவை யாயிற்
கணத்திடை யழியுந் தினைத்துணை யாகா

காரணஞ் சடமதன் காரிய மஃதா
லாரணங் காம்வழி யடியேற் கென்னைகொல்
செயலென தாயினுஞ் செயலே வாரா
நியமன் செய்திய தற்கெனி னமையும்
பின்னையின் றுகு மன்னது மிங்குச்
செய்திக் குள்ள செயலவை யருத்தின்
மையறிரி யமற்கு வழக்கில்லை மன்ன
வொருவமோ யமையு மொருவா வொருவற்
கிருவரும் வேண்டா விறைவனு நின்றனை
நின்னது கருணை சொல்லள வின்றே
யமைத்தது துய்ப்பி னெமக்கணை வின்று.
முன்னது போகா நில்லது வாரா
துள்ளதே யுள்ள தெனுமுறை யதனாற்
றொள்ளும் வகையாற் கொளுத்திடு மாயின்
வள்ளன் மையெலா முன்னிட வமையு
மீய வேண்டு மெனும்விதி யின்று
மாயினு மென்னை யருந்துயர்ப் படுத்த
நாயி னேற்கு நன்றுமன் மாயக்
கருமமுங் கரும பந்தமுந்
தெருள வருளு சிவபெருமானே.

வி - ம். அற்றதென்பாச முற்றதுன்கழலே - தேவரீரநு ங்கிரகத்தினாலே யடியேனுக் குண்டாயிருக்கப்பட்ட பாசப ந்தங்களை நீக்கினதுந் தப்பாது. உன்னுடைய திருவடியிலே கூடினதுந் தப்பாது — அருட்டுறை யுறையும் பொருட்சுவை நாத — திருவருட்டுறையாகிய திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளி யிருக்கப்பட்ட வடியேனுக் கினிமைப் பயனு

யிருந்துள்ள தம்பிரானே, — வேறென்றிருந்த வென்னையா
ன்பெற வேறின்மைகண்ட மெய்கண்டதேவ - தேவரீரைவிட்
டந்நியமா யிருப்பனென்று கண்டிருந்த வடியேனை யடிமையெ
ன்கிற முதலுங்கெடாமற் றேவரீரைவிட் டந்நியமாகாத முறை
மையுங் கடாக்ஷித்தருளின மெய்கண்டநாதனே,— இருவினை
யென்ப தென்னைகொல் அடியேனுக்குப் புண்ணியபாவமுண்
டென்றதேது காரணங்கொண்டு,—கொல் - ஐயம்—அருளிய
மனமேகாயம் வாக்கெனுமூன்றி னிதமேயகிதமெனு மிவையா
யில் - தேவரீரருளிச்செய்யப்பட்ட மனத்தினினைவாலும் வாக்
கின் சொல்லாலுங் காயத்தின் றொழிலாலு முண்டாகப்பட்ட
விருப்பு வெறுப்பினாலே யிருவினையாகிய புண்ணியபாவங்க
ளுண்டாமாகில்,—கணத்திடையழியுந்தினைத்துணையாகா - அப்
படியுண்டாகப்பட்ட நினைவுஞ் சொல்லுந் தொழிலுந் தோன்
றினவுடனே யழிந்துபோ மவையிற்றுக் கொருதினையளவு கண்
டிப்பு மில்லையாம். அன்றியும்—காரணஞ்சடமதன் காரியமஃ
தால் - அந்த மனவாக்குக் காயங்களாகிய கன்மத்தின் காரண
ஞ்சடமா யிருப்பதொன்று; அதன் காரியங்களு மப்படிச் சட
மேயானல்—ஆரணங்காம்வழி யடியேற்கென்னைகொல் - அப்
படிச் சடமாயிருக்கப்பட்ட கன்மகாரியங்க ளடியேன் மேலெ
டுக்கிற ஜநநங்களிலேவந்து பொருந்தி வருந்துகைக்குச் செய
லுண்டாம் வழியெதுதான். கொல். ஐயம். அப்படியந்தக் கன்ம
ங்கள் சடமாயிருந்தாலு நீயறிவாயுள்ளவனுகையாலே யுன்னோ
டேகூடி மவதாரத்திற் செயலுண்டாயிருக்கும்—செயலெனதா
யினுஞ் செயலேவாராது - அப்படி யடியேனுக்குச் செயலுண்
டென்று சொல்லுகைக்கு வழியில்லை, அப்படியறிவுண்டாமாகி
லடியே னிச்சைப்படியே முடியக் கண்டதுமில்லை. அன்றியும்
—இயமன்செய்தியதற்கென் - அடியேனுக் கப்படிவேண்டின
காரியங்கள்செய்துகொள்ளுகிறதுக்குச் செயலுண்டாமாகி லடி
யேனுக் கியமதண்டமுண்டாக்கத்தக்க பொல்லாங்குகள் செய்

ஞுகொள்வதில்லை. அதுவுமன்றியும், — நின்னமையும் பின்னை யின்ருகும் - அப்படி யடியேனுக்குவேண்டுங் காரியஞ்செய்து கொள்ளத்தக்க செயலுண்டாமாகில் தேவரீர் செய்விக்கிறதுமி ல்லையாய்முடியும் — அன்னதுமிங்குச் செய்திக்குள்ள செயல வையருத்தின் - அப்படித் தேவரீர்செய்விக்கிறது மிப்பொழு தடியேன்செய்த கன்மத்துக்குத் தக்கது மேலைக்குப் புசிப்புமா கில்—மையறிரியமற்கு வழக்கில்லைமன்ன-தம்பிரானே மயக்க மற்றவியம னடியேனைத் தண்டப்படுத்துகைக்கு வழக்கில்லை யாம். அப்படியானுலு நீசெய்ததற்குத்தக்கது நாமுஞ் செய்விப் போ மியமனுந் தண்டப்படுத்துவன் என்னில், — ஒருவரோய மையு மொருவாவொருவற் கிருவரும்வேண்டா. அநுவயம். ஒருவாவொருவற் கொருவரோயமையு மிருவரும்வேண்டா - ஒப் பற்ற தனிமுதலாயுள்ளவனே யடியேனொருத்தனுக் கொருத் தரோ யமையும் தேவரீரு மியமனுங்கூடித் தண்டிக்கவேண்டுவ தில்லை; ஆகையால், —இறைவனுநின்றனை - சர்வமுந் தேவரீர் செயற்படுமென் றிருக்குமிடத்தும் வேறேயு மொருவனைக்கூ டித் தேவரீர் செயற்படுத்துகில் தேவரீர் சர்வகர்த்தாவென்கிற துமின்றே நின்றது. அதுவேனென்று கேட்டருளுகில்—நின் னதுகருணை சொல்லளவின்றே - தேவரீர் காருண்ணியத்தின் பகுதியை யடியேனல் விண்ணப்பஞ்செய் தளவுபடுத்தத்தக்க தல்லவே, அப்படியிருக்க—அமைத்ததுதுய்ப்பி னெமக்கணைவி ன்ரு மூன்னாறுபோகா தில்லதுவாரா துள்ளதேயுள்ள தெனுமு றையதனுல் அமைத்ததுதுய்ப்பி னெமக்கணை வின்ரும் - அடி யேனுக்குண்டாகிய கன்மம் யாதொன்றுண்டு அது போகாது இல்லாதகன்மங்கள் வாராது ஆகையால் யாதொன் றாழிலேயு ண்டாக்கப்பட்டதுவே யிப்பொழுதுண்டாமென்று தேவரீ ரருளிச்செய்த திருவாக்கினு லடியேனுக் குண்டான பிராரத் தம் புசிக்கிறதொழிய மேலைக்குற்பத்தியாக வாகாமிய மூண் டாகைக்கு வழக்கில்லையே— கொள்ளும்வகையாற் கொளுத்தி

டொயின் - பிராரத்தம் புசிக்குமிடத் தாகாமிய முண்டாமென் றருளிச்செய்யில் — வள்ளன்மையெலா முன்னிடவமையும் - தேவரீருக்குண்டாகிய வளப்பாடுகளெல்லா நினைந்திருந்தாற் போதும், அன்றியும்—ஈயவேண்டுமெனும் விதியின்றாம் - அப்படிப் பிராரத்தம் புசிக்குமிடத் தாகாமிய மேறுமாகில் கொடுத்துப் புண்ணியம் பெறவேணுமென்று நூல்களை விதிக்கவேண்டுவதில்லையாம்—ஆயினும்- அடியேன்கேட்ட வினவுக்குத் தேவரீர் புலப்பட வருளிச்செய்ததில்லையாகிலு மின்னமுந் தேவரீரருளிச்செய்யாம லடியே னறியும் பகுதியில்லை—என்னையருந்துயர்ப்படுத்த நாயினேற்கு நன்றுமன்மாயக் கருமமுங் கருமபந்தமுந் தெருளவருளு சிவபெருமானே. அநுவயம். என்னையருந்துயர்ப்படுத்த கருமமுங் கருமபந்தமு நாயினேற்கு நன்றுமன்மாயத் தெருளவருளு சிவபெருமானே - அடியேனுக்குரிய துக்கங்களை யுண்டாக்கப்பட்ட கருமமாகிய புண்ணியபாவங்களுண்டாகிறது மந்தப் புண்ணியபாவங்க ளநுபவிக்கு மிடத்து ஜநநத்திற் கேதுவாகிய வாகாமிய கன்மமான கருமபந்தங்களுண்டாகிறது நாயாயிருக்கப்பட்ட வடியேனுக்குத் தேவரீர் திருவுளம் வாழ்ந்தருளி விளங்க வருளிச்செய் தருளவேணும் சிவமுதலாயிருக்கப்பட்ட தம்பிரானே. (நு-ம்) அருளியமனமே காயம்வாக்கெனுமூன் றினிதமேயகித மெனுமிவை யாயில். எ-கு. தேவரீரருளிச்செய்யப்பட்ட மனத்தினினைவாலும் வாக்கின் சொல்லாலுங் காயத்தின் றொழிலாலு முண்டாகப்பட்ட விருப்பு வெறுப்பினாலே யிருவினையாகிய புண்ணியபாவங்களுண்டாமாகில் என்று பொருள்கூறியதற்கு. பி-ம். சிவப்பிரகாசத்தில். உற்றதொழில் நினைவுரையி லிருவினையுமுளவாம்'' எ-து. கண்டுகொள்க, இருவினையாகிய மனவாக்குக் காயங்களினாலே தோன்றப்பட்ட கன்மமும் ஜடமதன்காரணமும் ஜடமாகையா லந்தக்கன்மங்கள் சநநமரணத்திலேவந்து பொருந்துகைக்கு வழியேதென்று கேட்கவதற் கறிவாயுள்ள வான்ம

வோடு பொருந்தினவிடத்திலே செயலுண்டென்ன வப்படிச் செயலுண்டாகி லியமதண்டம் வருவானேனென்ன அதுவு நீ செய்த கன்மத்துக்கேற்றபடி செய்வோமென்ன வதற்குத் தேவரீர் போதுமியமனைக்கொண்டு தண்டிக்கவேணுமோ வெ ன்ன வியமனுந் தண்டிப்பா னுமுந்தண்டிப்போம் என்றதற்கு. பி-ம். சிவப்பிரகாசத்தில். "படைத்தவொருபடி" என்ற விரு த்தமுழுவதும். போற்றிப்பஃறொடையில். "தான்மாள, வெற் றிக்கடுந்தூதர் வேகத்துடன்வந்து, பற்றித்தம் வெங்குருவின் பாற்கட்ட - விற்றைறக்கு, மில்லையோபாவி பிறவாமையென் றெடுத்து, நல்லதோரின்சொ ணடுவாகச் - சொல்லியிவர், செ ய்திக்குத்தக்க செயலுறுத்து வீரொன்று, வெய்துற்றுறைக்க விடைகொண்டு - மையருஞ், செக்கிலிடைந்திரித்துந் தீவா யிலிட்டெரித்துந், தக்கநெருப்புத்தூண் டழுவித்து - மிக்கோ ங்கு, நாராசங்காய்ச்சிச் செவியடுத்துநாவரிந்து மீராவுன் னூ னைத் தின்னென்றடித்தும் - போராம, லங்காழ்நரகத் தழுத்து வித்தும் பின்னுந்தம், வெங்கோபமாறாத வேட்கையரா - யங் கொருகா, லெண்ணிறந்கல்காணாத வின்னற்கடுநரகம், பன்னெ டுநாட்செல்லும் பணிகொண்டு - முன்னூடிக், கண்டுகடன்கழி த்தல் காரியமாமென்றெண்ணிக், கொண்டுவருநோயின் குறிப் பறிவார் - மண்டெரியிற், காய்ச்சிச்சுடவறுக்க கண்ணூரிக்க நன்றறிய, மீத்துத்தாய்தந்தைதும ரின்புறுதல்"போல வப்ப டிச் செய்கிறதுங் கருணையே. எ-ம். வருமேதுக்களைக் கண்டு கொள்க. கொள்ளும்வகையாற் கொளுந்திடுமாயின். எ-கு. பிரா ரத்தம் புசிக்குமிடத் தாகாமியமுண்டாமென் றருளிச்செய் யில் என்று பொருள்கூறியதற்கு. பி - ம். சிவப்பிரகாசத்தில். "மேலைக்குவருவினையே தென்னிலங்கண் விருப்புவெறுப்பெ னவறியவ் வினையுமெல்லா, மூலத்தவினைப்பயில்வா மென்னி னுமேமன்மூற்றியதன் பயனுக்கு மூளைக்குமென்பர்" எ-து. கண் டுகொள்க. (கச)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட கன்மங்களு மடியேனுங்கூடு கைக்கு வழியேதென்று கேட்கும் வினுமே லருளிச் செய்கின்றது.

மானமருஞ் செங்கை மதில்வெண்ணெய் வாழ்மன்ன
போனவினை தானே பொருந்துமோ - யானதனி
லாவனோ வாக்கா யமலனு நின்னருடான்
றேவனே யாதுக்கோ தேர்.

வி - ம். மானமருஞ் செங்கை மதில்வெண்ணெய் வாழ்மன்ன - செந்தாமரை மலர்போன்ற ஸ்ரீயத்தத்திலே மான்மறியைத் தரித்துக்கொண்டு திருமதிளினுயர்ச்சியாலே சிறப்பினையுடைத்தாகிய திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளியிருக்கப்பட்ட தம்பிரானே—போனவினை தானே பொருந்துமோ - முன்ஜனநத்திலே யடியேன்செய்த புண்ணிய பாவங்களான வினைகள் தானேவந் தடியேனைக் கூடுமோ—யானதனிலாவனோ - அடியேன் தானந்த வினைகளைக் கூடுவேனோ—ஆக்காய் - இவையிரண்டுமின்றித் தேவரீர் கூட்டி முடியாதபொழுது—அமலனுநின்னருடான் றேவனே யாதுக்கோ தேர்-நின்மலனாகிய வுன்னுடைய வருளானது தானேதுக்குண்டானதென்று திருவுளத்திலே விசாரித்தருளிச் செய்தருள். (க - து.) கன்மமுமநாதி யான்மாவு மநாதி சிவமுமநாதி யாகையினாலே யவரவ ரார்ச்சித்த கன்மத்தைக் கர்த்தாகூட்டி முடிப்பன் என்பதாம். உ-ம். சிவஞானபோதத்தில். " அவ்வினையைச்செய்வதனிலவ்வினைஞர் தாஞ்சென்றங், கவ்வினையைக் காந்தபாசம்போ - லவ்வினையைப், பேராமலூட்டும் பிரானினுகராரோ, லார்தாமறிந்தணைப்பா ராங்கு" என்-து. கண்டுகொள்க. (௧௫)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட கன்மங்கள் தேவரீர் தீக்ஷைகளினாலே சுத்திபண்ணியிருக்கவு மீளவும் புசிக்கைக்குவழியேதென்னும் வினுமே லருளிச்செய்கின்றது.

தோரா துரைப்பன் றெருமா லுளத்தொடு
போரா தருளுதல் பெரியோர் கடனே
நின்னைக் கலப்பதென் னுண்மை யெனின்
நின்னது நேர்மை சொன்மனத் தின்றே
யெழுவகைத் தாதுவி னெழுதுளை யிரண்டும்
பெருமுழைக் குரம்பையிற் பெய்தகத் தடக்கி
நீக்கி யென்றனைப் போக்கற நிறுத்தி
யிச்சை முதலிய வெழுப்பி நடத்திடும்
விச்சை சாலவும் வியப்பது நிற்க
வாக்கு மனமும் போக்குள தநுவுஞ்
சொல்லு நினைவுஞ் செய்யுஞ் செயலு
நல்லவுந் தீயவு மெல்லா மறிந்து
முறைபிற ழாமற் குறைவுநிறை வின்றாய்க்
காலமுந் தேசமு மாலற வகுத்து
நடுவுநின் றருத்தலி னடுவணு குதியே
சான்றோர் செய்தி மான்றிருப் பின்றே
சாலார் செயலே மாலா குவதே
யத்துவா மெத்தி யடங்கா வினைகளுஞ்
சுத்திசெய் தனையே யொத்தகன் மத்திடை
நீங்கன வெண்ணெ யூங்கூழ் வினைகளு
மாங்கவை யருத்துவ தாரைகொ லதனாற்
கரும மருத்துங் கடனது வின்றாந்
தருமம் புரக்கல் பெருமைய தன்றே
கண்ணினுண் மணிய கருத்தினுட் கருத்த
வெண்ணெய் வேந்த மெய்கண்ட தேவ

விடர்ப்படு குரம்பையு ணிருத்தித்
துடைப்பதில் லாவரு டோன்றிடச் சொல்லே.

வி|-ம், தோராதுரைப்பன் றெற்றுமரலுளத்தொடு - தேவரீர் சந்நிதியிலொருவிஞ விசாரியாமல் விண்ணப்பஞ் செய்கிறேன் அடியேன் விதனத்தையுற்றவ ஞகையினுலே. அன்றியும்,— பேராதருளுதல் பெரியோர்கடனே - பேதையா யிருக்கப்பட்டவர்கள் தங்கள் தாகத்தின் மிகுதியாலே தங்களுக்குவேண்டின தொன்றை யெழுந்தது புத்தியாக விண்ணப்பஞ் செய்தாலுமவர்கள்தாகங்கண்டே கடாக்ஷித்தருளுகிறது பெரியோர்களுக்கு முறைமை யாகையாலும் விசாரியாமல் விண்ணப்பஞ் செய்தேன். அது வேதென்று கேட்டருளுகில்,—நின்னைக்கலப்பதென்னுண்மை யெனின் - தேவரீரைக் கூடி யநுபவிக்கிறது அடியேனுடைய வற்பபோதமாமென்று தேவரீர் திருவுளம்பற்றுகில், — நின்னது நேர்மை சொன்மனத் தின்றே - தேவரீருடைய நுட்பத்தை விசாரிக்குமிடத்து வாக்கு மனத்துக்கு மெட்டப்பட்டதல்லவே, அப்படியிருக்கிற தேவரீருக்குள்ளே யடங்கியிருக்கப்பட்ட வடியேனைத் தேவரீர்—எழுவகைத் தாதுவினழுதுளையிரண்டும் பெருமுழைக் குரம்பையிற் பெய்துகந்துக்கி - நரம்பு எலும்பு மூளை தசை தோல் இரத்தம் சுக்கிலம் என்னப்பட்ட தாதுக்களேழும், கண் மூக்கு செவி உபத்தமெனப்பட்ட வற்பத்துவாரங்க ளேழும், வாய் அபானமென்னப்பட்ட பெரியதுவார மிரண்டுமாகத் துவார மொன்பதுமாயிருக்கப்பட்ட சரீரத்திலேயிட் டுள்ளே யொடுக்கிவைத்து—நீக்கியென்றனைப் போக்கறநிறுத்தி - என்றனைப் போக்கற நிறுத்தி நீக்கி - அடியேனந்தச் சரீரத்தைவிட்டுப் போகாமலும் நிறுத்தியதனை விட்டுப்போ மவதரத்து விடுவிப்பதுஞ்செய்து — இச்சைமுதலிய வெழுப்பிநடத்திடும் விச்னசாலவும் வியப்பு - அடியேனுக் குண்டாயிருக்கப்பட்ட விச்சாஞானக் கிரியைக

ளையும் பிரேரிப்பித்துக் காரியப்படுத்துகின்ற வித்தை மிகவுங் கொண்டாட்டமா யிருந்தது— அதுநிற்க - இங்ஙனந் தேவரீர் செய்தருளினகாரிய மடியேனுலேயோ புகழப்பட்டிருப்பது அதுநிற்கட்டும்—வாக்குமனமும் போக்குளதநுவுஞ் சொல்லுநினைவுஞ் செய்யுஞ்செயலு நல்லவுந்தியவு மெல்லாமறிந்து-அடியேன் வாக்கினுற் சொல்லுகிறதினுலும் மனத்தினுல் நினைக்கிறதினுலுங் காயத்தாற்செய்கிற தொழிலினுலு முண்டாக்கப்பட்ட நன்மை தீமைகளாயுள்ள புண்ணிய பாவங்களெல்லாந் தேவரீர் திருவுளத் தடைத்தருளி—முறைபிறழாமற் குறைவு நிறைவின்றாய்க் காலமுந்தேசமு மாலறவகுத்து நடுவுநின்றருத்தலி னடுவனுகுநியே- அடியேன் செய்துவந்த வடைவுக்குத் தவறுவாராம லதற்கேற்றக் குறைச்சலற வந்தப் புண்ணிய பாவங்களை யநுபவிக்கத்தக்க காலங்களையு மவையிற்றைப் புசிக்கைக் கிருப்பிடமான தேசங்களையு மயக்கமற வகுத்து அடியேனையு மந்தக் கன்மங்களையுங்கூட்டித் தேவரீர் நடுவனுக நின்று புரிப்பிக்கையினுலே தேவரீரை நடுவனென்கிறது முண்டே ஆகையாலே— சான்றோர்செய்தி மான்றிருப்பின்றே - நடுவாயிருக்கப்பட்ட பெரியோர்க ளியல்புக்கு மயக்கமுண்டாகாதே —சாலார்செயலேமாலாகுவதே-சான்றோரல்லாத வறிவீனராயுள்ளவர்கள் செயல்களே மயக்கமுண்டாவது. அப்படியிருக்க— அந்துவாமெத்தி யடங்காவினைகளுஞ் சுத்திசெய்தனையே-மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகளென்று சொல்லப்பட்ட வாறுவகையாலும் நிரம்பி மிஞ்சிக் கிடக்கிற கன்மங்களை யெல்லாந் தீக்ஷைகளினுலே தேவரீர் சோதனைசெய் தடியேனுக்குச் சுத்திவருத்தினதுண்டே அது வுண்டென் றருளிச்செய்யில்—ஒத்தகன்மத்திடைநீங்கின வென்னை - அடியேனுக் கிருவினையொப்பிலே போனதென்ன — வலங்கூழ்வினைகளு மாங்கவை யருத்துவ தாரை - இவ்விடத்துண்டான வூழ்வினைகள் தேவரீர் செய்யப்பட்ட தீக்ஷைகளிலே

சத்திசெய்தவிடத் தந்தக்கன்மங்கள் புசிக்கிற தாமாயாம், அத ஞல்—கருமமருத்துங் கடனதுவின்றும்—தேவரீ சுத்திசெய்த வர்கள் தன்னையென் றருளிச்செய்யில் தேவரீர் சுத்திசெய்த வழக்கினல் மீளவுங் கன்மங்கள் நின்று புசிப்பிக்கைக்குக் கட னில்லையாம், அப்படிப் புசிப்பிக்குமென் றருளிச்செய்யில்— தருமம்புரத்தல் பெருமையதன்றே - தேவரீர் தருமகத்தாவென் றெழுந்தருளி யிருக்கிறது பெருமைக் கத்தனேயென்று விண் ணப்பஞ் செய்யப்படும்— கண்ணினுண் மணிய - கண்ணுக்குமணிபோலக் காட்டாகவுள்ளவனே — கருத்தினுட்கருத்த - அறி வுக்கறிவாக வுள்ளவனே— வெண்ணெய்வேந்த - திருவெண் ணெய் நல்லூருக்குக் கத்தாவாக வுள்ளவனே — மெய்கண்ட தேவ - மெய்கண்டநாதனே—இடர்ப்படு குரம்பையுளிருத்தித் துடைப்பதில்லா வருடோன்றிடச் சொல்லே-துக்கத்துக் கே துவாயுள்ள சரீரத்துக்குள்ளே யடியேனை யிருத்திவைத்து அடியேனுக் குண்டான கன்மங்களைத் துய்ப்பதாகப் போகாத வந்த வநுக்கிரகத்தை யடியேனுக்கு விளங்க வருளிச்செய்த ருள். (க-து.) தேவரீரைக் கலந்திருக்கிறதென் னுண்மையா னல் தேவரீருடைய நுட்பமான வாக்குக் கெட்டாதென்று சொல்லவேண்டுவ தில்லையாம், எனெனில் சிவனு மான்மாவு மெக்காலமு மிடைவிடாம விருக்கையிலேயு மான்மா மலத்தி லே பற்றினபடியினலே சிவனிடத்திலே கூடிநின்றும் பற்றி ல்லை யாகையா லச்சிவன் பெத்தத்திலு மொத்திருப்ப னென்ப தாம். உ - ம். போற்றிப்பஃறொடையில். "உள்ளமென்று நீங் கா தொளித்திருந்து தோன்றநின்ற, கள்ளமின்று காட்டுங் கழ ல்போற்றி" எ-து. கண்டுகொள்க. (நு-ம்.) எழுவகைத் தாது க்களினலும் நவத்துவாரங்களினலு மிந்தச் சரீரத்திலே பொ ருந்தவைத்து ஜநநமரணமும் படுத்தி யடியேனுக் குண்டாயிரு க்கப்பட்ட விச்சாஞானக் கிரியைகளையும் பிரேரிப்பித்து நடப் பித்ததுங் கொண்டாட்டமா யிருந்ததென்று சொல்லுவானேன்

லினன்னில் சிவனைப் பொருந்தியுஞ் சரீரபெந்தத்திலே வைப்பானே னென்பது கருத்து. அது மலசம்பந்த மாகையாலே மலக்குருடனுக்கு மலநீங்கவேண்டி மாயையாகிய கோல் கொடுத்ததெனவறிக. பி-ம். போற்றிப் பஃறொடையில். "கட்புலனார்காணார்தங் கைக்கொடுத்த கோலேபோற், பொற்புடையமாயைப் புணர்ப்பின்கண்" எ - து. கண்டுகொள்க. மனவாக்குக் காயங்களினாலே யார்ச்சிக்கப்பட்ட புண்ணியபாவங்களைத் தேவரீர் திருவுள்ளத் தடைந்தருளிக் கன்மங்களை நடுவனாகநின்று புசிப்பிக்கையினாலே நடுவனென்று சொல்லப்பட்டிருக்கவும் பெரியோர்களியல்புக்கு மயக்கமு முண்டாகாதே ஆறத்துவாவுஞ் சுத்திபண்ணின துண்டே * கன்மசமத்துவத்திலே போனதென்ன வெனில், கன்மசமத்துவம்வந்தவிடத்துச் சத்திநிபாதமுண்டா யதினாலே கத்தா வாசாரியமூர்த்தமாகத் திருமேனி கொண்டுவந்து தீக்ஷாக்கிரமங்களினாலே யத்துவா சுத்திபண்ணி மலத்தைப்போக்கி யிரக்ஷிப்பன். பி-ம். சித்தியாரில். "அநாதிமுத்தனாய்ப் பரனாயசலனாயெல்லா வறிவுதொழிலநுக்கிரகமுடையவரன்கன்ம, நுனாதிகமற் றொத்தவிடத்தே சத்திநிபாத நுழைவித்துமலங்களெலா நுங்கநோக்கி, மனாதிகரணங்களெலாமடக்கித் தன்னைவழிபடுநல் லறிவருளிமாக்கருணைக்கையா, லினாநுபிறப்பினினின்று மெடுத்துமாறா வின்பமுத்திக்கே வைப்பனெங்கண் முத்தியிதுவே" எ - ம். போற்றிப்பஃறொடையில். "நாடும்வினை, யெல்லையிரண்டு மிடையொப்பிற் - பல்பிறவி, யத்தமதிலன்றே வளவென்றுபார்த்திருந்து, சத்திபதிக்குந் தரம்போற்றி - முத்திதரு, நன்னெறிவிஞ்ஞான கலர் நாடுமலமொன்றினையு, மந்நிலையே யுண்ணின் றறுத்தருளிப்-பின்னன்பு, மேவாவிளங்கும் பிரளையாகலருக்குத், தேவாய்

* கன்மசமத்துவமாவது புண்ணியபாவங்க ளிரண்டிலே யுமுவர்ப்புவந்தது.

மலகன்மந்தீர்த்தருளிப் - பூவலயந், தன்னின்று நீங்காச் சக லர்க்கவர்போல, முன்னின்றும் மலந்தீர்த்தாட் கொள்கை.'' எ - ம். கண்டுகொள்க. இப்படிச் சுத்திபண்ணி யிருக்குமிடத் தும் பிராரத்தமாகிய வினை புசிக்கவந்ததாரை ? சுத்திபண் ணின ஆன்மாக்களை. அதெப்படியென்னில் சஞ்சித மாசாரியர் ஞானதிருஷ்டியினாலு மாகாமிய மாசாரியர்வைத்தஞானத்தினா லும் பிராரத்தம் சரீரத்தோடேயும் நீங்கும். பி-ம். சிவப்பிரகாச த்தில். ''தீங்குறுமாயை சேராவகைவினை திரிவிதத்தால் நீங் கிட'' எ-ம். திருவாதவூரருக்கு அநுக்கிரகம் பண்ணினதில, ''விரிந்த சஞ்சிதவினைக ளன்புறும் விழிக்க வெந்தறு விரும்பு மிப்பிறப்பிற், புரிந்தவல்வினை யுடலுடனகலும் புந்திசேரருள் வருவினைபோக்கு'' எ-ம். திருவருட்பயனில். என்ற வினையுட லோ டேகுமிடை யேறுவினை தோன்றி லருளே சுடும். எ - ம். சித்தியாரில் ''அரும்பருவ மடைதலுமே யாசானாகித், தோன் றிநுகராதவகை முற்செய்கன்மத் துகளறுத்தங் கந்துவாதொட க்கறவேசோதித், தேன்றவுடற் கன்மவநுபவத்தினா லறுத்திங் கினிச்செய்கன்ம மூலமலஞானத்தாலிடிப்பன். எ-ம். சொன்ன துகண்டுகொள்க. ஆகையாலே யாசாரியர் கடாக்ஷத்தினாலே மோக்ஷத்தையடைந்தாலும் பிராரத்தம் புசிக்குமளவும் சரீர நிற்குமென்றது. ஆனால் ஞானவான்கள் புசிக்கிறது பிராரத்த முமா யவர்கள் தேகமும் பிராரத்ததேகமானா லவர்களை யர்ச் சனைபண்ணினதினாலேயு நிவேதித்ததினாலேயு மான்மாக்கள் கதியடைவார்களென்று சொல்ல வேண்டுவதில்லை யென்னில் அவர்கள் போகஞ் சிவனே யேற்றுக்கொள்ளுகையினாலே சிவ போக மாச்சுது. மாயாபதார்த்தஞ் சிவபோகமாமோ வென் மாயா பதார்த்தஞ் சுத்திபட்டு மந்திர மயமாய் மந்திரமு ஞான திருஷ்டியினாலே பார்க்கப்பட்டு ஆன்மாவைச் சிவனுடலா கக்கொண்டு புசிக்கையினாலே சிவபோகமாச்சுது. பி - ம். உண் மைநெறி விளக்கத்தில். ''பாதகங்கள் செய்திடினுங் கொலை

கனவுகளைப் பயின்றிடினு நெறியல்லா நெறிபயிற்றிவரினுஞ், சாதிநெறி தப்பிடினுந் தவறுகள்செய்திடினுந் தனக்கெனவோர் செயலற்றுத்தானதுவாய்நிற்கி, னாதனிவனுடலுயிராயுண்டுறங்கி நடந்து நானாபோகங்களையுந் தானாகச்செய்து, பேதமறநின்றிவனைத்தானாக்கிவிடுவன் பெருகுசிவபோகமெனப் பேசுநெறியிதுவே." எ - று. கண்டுகொள்க. அவர்கள் திருமேனி பிராரத்ததேகமல்லவென்றதற்குத் திருட்டாந்தம் : திருஞானசம்பந்தமூர்த்தி கடாக்ஷம்பெற்ற கலியாணத்துக்குவந்த ஞாதாக்கள் திருமேனியடங்கலும் ஞானத்திலே பொருந்துகையினாலும் அப்பர்சுவாமிகள் திருமேனி சர்வான்மாக்களுங்காண ஞானப்பிழம்பாகிய மகாலிங்கத்திலே யடைதலினாலும் பட்டணத்துப்பிள்ளை ஞானமாகிய லிங்கமாய் முளைக்கையினாலேயும் திருவாதவூரர் சர்வான்மாக்களுங்காணத் திருவாசகத்துக்கு உண்மைப் பொருளைக்கேட்கப் பொருளிதுவென்று ஞானாகாசத்திலே பொருந்தினபடியினாலேயும் பிராரத்ததேகமாகிய மாயாதேகத்துக்கும் ஞானத்துக்குஞ் சம்பந்தமில்லாதபடியினாலே அவர்கள் திருமேனியும் ஞானமென்றே கண்டுகொள்க. (கரு)

சர்வான்மாக்களுந் தேவரீருக்கடிமையாக விருக்கையிலேயுஞ் சிலர்க்குந் திருவருள்கடாக்ஷித்தும் சிலர்க்குக் கடாக்ஷியாமலு மிருப்பானேனென்றுகேட்கும் வினாமே லருளிச்செய்கிறது.

சொற்றொழும்பு கொள்ளநீ சூழ்ந்ததுவு நிற்செயல்காண்
மற்றவர்க ளின்னோக்கின் மாய்ந்தவுயிர்க் - குற்றங்
கொளுத்தியாங் கைய வுயர்வெண்ணெய் நல்லூர்க்
குளித்தமதுக் கொன்றையெங் கோ.

வி - ம். சொற்றொழும்பு கொள்ளநீ சூழ்ந்ததுவும்-சர்வான்மாக்களுந் தேவரீருக்கடிமையாக விருக்கவுஞ் சிலர் தேவரீர்

திருவருளைப் பெறத்தக்கதான வடிமைத்திறங்கள் செய்து
வருமுபாயங் கொடுத்தருளினாய், — நிற்செயல்கண் மற்றவர்
கள் - மற்றுள்ள பெத்தான்மாக்களையுந் தேவரீர் சேட்டைப்
படுத்துகையினாலே செயற்பட்டுவருகிறவர்கள் இங்ஙனமிரண்டு
வகையிலுள்ள ஆன்மாக்களுந் தேவரீராலே செயற்பட்டு வரு
மிடத்தும், — நின்றேக்கின் மாய்ந்தவுயிர்க்கு மற்றையாங்கு - தேவ
ரீர் திருக்கண்சாத்தினாலே செயலறுகைவந்த வான்மாக்களிட
த்திலே யநுக்கிரகஞ்செய்து பிரகாசித்துநின்றும், — மற்றை
யாங்கு - மற்றுள்ளபெத்தரிடத்திலே கூடிநின்றுமிடத்து மறை
ந்துநின்றும். இங்ஙனம் வருகிற முறைமையை, — ஐய - அடி
யேனுக்குச் சுவாமியாயுள்ளவனே, — உயர்வெண்ணெய்நல்
லூர்க் குளிர்த்தமருக் கொன்றையெய்கோ - சிறப்பினாலுயர்ந்
திருக்கப்பட்ட திருவெண்ணெய்நல்லூரிலே மதுக்களினால்
முழுகப்பட்ட கொன்றைமாலையைச்சாத்தி யெழுந்தருளியிருக்
கப்பட்ட கர்த்தாவாயுள்ளவனே, — சொல் - அடியேன் விண்
ணப்பஞ்செய்த காரியமிரண்டையு மருளிச்செய்தருள். (எ-று.)
சிவன் கத்தாவென்கிறதும் ஆன்மாக்க ளடிமையென்கிறதும்
பொது. இனிச்சிறப்பாவது கத்தாவை யாண்டவனென்றறிந்த
இரண்டற்றவன்பினாலே வழிபடுகின்ற ஞானவான்களுக்குத்
தயிரினெய்போற்றோன்றியிருப்பன். ஆண்டவனடிமையென்
றறியாத பெத்தான்மாக்களிடத்திலே பாலினெய்போலத் தோ
ன்றாதுநிற்பன். உ-ம். சிவஞானபோதத்தில். "தன்னுணரு
நேசத்தர்தம் பானிகழுந்தது நெய்போற் பாசத்தார்க் கின்றாம்
பதி." எ-ம். திருவாசகத்தில். "அரசேபொன்னம்பலத்தாடும்"
என்னும் செய்யுளில் "பிறைசேர் பாலினெய்ப்போலப் பேசா
திருந்தா லேசாரோ." எ-ம். தேவாரம். "விறகிற்றீயினன்
பாலிற்படுநெய்போல், மறைய நின்றுளன் மாமணிச்சோதி
யான்." எ-ம், வருமேதுக்களைக் கண்டுகொள்க. (கஎ)

இங்ஙன முயிர்க்குயிராய்நின்று காரியப்படுத்துகிற சிவன் பெத்தத்தில் மறைந்துநின்று காரியப்படுத்துகிற முறைமையு முத்தியிற் பிரகாசித்துத்தான் மேலிட்டுநின் றுபகரிக்குமுறை மையு மேலருளிச்செய்கின்றது.

சேலங் கொண்ட வாளுனை நாடே
குரவங் கானை வரியாமொனைக் கொளீஇப்
பொய்யை மெய்யெனப் புகன்று வையத்
தேடாப் பூட்கை நாடு நாட
கொண்முட் டாக்கிகன் பின்னைக் குருளி
பெண்ணையுந் தன்னையு மறிவின் றியற்று
பென்னது யானெனு மகங்கை யங்கண்
டியாவரி யாவையு மியாங்குறுத் தென்று
புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்த்து
மிக்க போகம் விழியால் விளைத்திட்
டேற்பவரி யாவர் பெண்ணைப்பிரி யாதே
யொழுகு மின்மொழி வாடல் யாத்திட்
டென்னுழி நின்றனை யெங்கை யன்றே
வருணமிக வுண்டோயி னருட்டொற வந்து
பொருந்தின வருடலும் பொய்ப்படுகை யாதலும்
வைகன்றி பொன்னனைக் கடலை கழிய
மெய்கண்ட தேவனைப் பொய்யினீஇத்
தன்றுறு காத்த தன்மறன் குறித்
தன்னைத் தானுமா பொன்னையின் றுக்கித்
தன்னையு மென்னையுந் தந்து தனது
செய்யா வாயுமெ னாதுசெய வின்மையு

மெம்மான் காட்டி யெய்த
லம்மா வெனக்கே யதிசயந் தருமே.

வி-ம். கோலங் கொண்ட வாறுணராதே ஞாலங் கா
வலனி யானெனக் கொளீஇ - துக்கத்துக் கேதுவாயிருக்கப்பட்ட
சரீரத்ததையெடுத்தோமே யென்கிறதை விசாரியாமல் பூமிக்கி
ராசாவாயிருக்கிறவ னுமல்லோவென்று கருதிக்கொண்டு,—
பொய்யை மெய்யெனப் புகன்று - அசத்தியமாயிருக்கப்பட்ட
தேகாதிப்பிரபஞ்சத்தை சத்தியமென்று சொல்லிக்கொண்டு
—வையத்தோடாப்பூட்கை நாடிநாடா வென்றுட்கரந்து
பிரபஞ்ச வியாத்தியண்ணுகிறதே மேற்கொளாகவிருப்பதைத
செய்து நமக்கொருகத்தா வுண்டென்று விசாரியாதபடி யெ
னக்குள்ளே மறைந்துநின்று,—என்பின்வந்தருளி - நான்செய்
யுஞ் செயலுக்கெல்லா மொத்தொழுகிநின்று,—என்னையுந் தன்
னையு மறிவின்றியற்று மென்னறியாளெனு மகந்தையுங்கண்டு
நாமோரடிமையென்றுந் தானொரு நாயனென்று மறியாமல்
செய்கிற யானெனதென்னு மகந்தையுங்கண்டு, — யாவரியா
வையு மியாங்களுஞ்சென்று -. உயர்திணை யஃறிணையாகிய
யோனிபேதங்களினும் பூமியந்தரசுவர்க்கமென்கிற வுலகங்களி
னுமென்னோடொக்கச்சென்று,—புக்குழிப்புகு-நான் சென்று
ஜநிக்கிறவிடங்களிலேதானுமொக்கப்புகுந்து,—பெயர்த்துழிப்
பெயர்த்து - நான் விட்டுப்போகுமிடத்துத்தானு மொக்கப்
போந்து,—மிக்கபோகம் விதியால்விளைத்து - வெகுவிதபோகங்
களையு மெனக்குள்ள முறைமையின்படியேயுண்டாக்கி,—இங்
கெற்பணியாளாய் - இவ்விடத்தென்னையூட்டி யுறக்கிற்கிற
பண்ணையாளுமாய், — எனைப்பிரியாதே - என்னைவிட்டுநீங்கு
வதுஞ் செய்யாமல்,—ஓடிமீன் கெண்வாடல் பார்த்திட் டெங்
வழிநின்றன னெந்தையன்றோ-நான்சநநமரணப்பட்டுப்போக்கு
வரவுசெய்கிற நாடகத்தையும்பார்த்துத் தன்முதன்மையும்விட்

டென்வசத்திலேநின்ற னெம்முடைய சுவாமியாயுள்ளவன். இஃதாச்சரியம். இந்தநிலைபெத்தம். மேல்முத்தி. அருண்மிகவுடைமையின் - தனக்குக் கிருபைமிகுத் திருக்கையினாலே,— அருட்டுறைவந்து - திருவெண்ணெய்நல்லூராகிய திருப்படைவீட்டிலே திருவவதாரஞ்செய்தருளி, — பொருண்மிகவருடலும் - சிவாநுபவமாகியபொருளானது மிகுதியாகநின்று அநுக்கிரகிக்கிறதையும்,—பொய்ப்பகை யாதலும் - அந்தப்பொருள் பிரபஞ்சமாகிய பொய்யைக்கடிந்து தீர்க்கிறவழக்கையுங்,— கைகண்டுகொள்ளென - பிரத்தியக்ஷமாகக் கண்டுகொள்ளெனக் காட்டியருளி,—கடலுலகறிய மெய்கண்டதேவனெனப்பெயர் விரீஇ - சமுத்திரஞ்சூழ்ந்த வையகத்தா ரறியத்தக்கதாக மெய்கண்டநாதனென்கிற திருநாமத்தினையும் பரப்பியருளி,—தன்னுட்கரந்து தான்முன்னாகி - தன்னுடைய பேரறிவினுள்ளே யென்னுடைய சிற்றறிவை யடக்கிக்கொண்டு தன்செயலே மேலீடாக,—தன்னதுந்தானுமா யென்னையின்றாக்கி - தன்னுடைய வருளுந் தானுமா யென்னையு மென்னுடைய ஞானத்தோற்றத்தையுமடக்கி தன்னையு மென்னையுந்தந்து - தானொரு முதலுண்டென்கிறதுங் கெடாமல் யானொரு முதலுண்டென்கிறதுங் கெடாம லெனக்குப் புலப்படவறிவித்து,— தனது செய்யாமையு மெனது செயலின்மையும் - தான் சர்வமுங் காரியப்படுத்தி நிற்குமிடத்துந் தானொன்றிலுஞ் சுட்டியறியாமற் றோய்வறநிற்கிற முறைமையினையு நான் சர்வமுஞ் செய்து நிற்குமிடத்து மென்றுமொன்று முடியாதென்கிற செயலறுதியையும்,—எம்மான் காட்டியெய்தல் - எம்முடைய சுவாமியாயிருக்கிறவ னெனக்குத் தரிசனப்பட்டு நின்ற முறைமையைப்பார்த்தவிடத்து,—அம்மா வெனக்கே யதிசயந் தருமே - மிகவுங் கொண்டாடப்பட்டு எனக்குத்தானே யாச்சரியத்தையுந் தராநிற்கும். (கஎ)

இங்ஙனம் பாசக்ஷயம்பண்ணின வாச்சாரியத்தை மேலரு ளிச்செய்கின்றது.

தருமா தருமத் தலைநின்றாழ் வேனைக்
கருமா கடல்விடமுண் கண்டப் - பெருமான்
திருவெண்ணெய் நல்லூர்ச் சுவேத வனத்தா
னுருவென்ன வந்தெடுத்தா னுற்று.

வி - ம். தருமா தருமத் தலைநின் றாழ்வேனை - தன்மமாகிய பசுபுண்ணியத்தையு மதன்மமாகிய பாவத்தையுஞ்செய்து துக்க சாகரத்திலே கிடந்தழுந்துகிற வென்னை, — கருமாகடல் விடமுண்கண்டப் பெருமான் - கருமைபொருந்தின மகத்தாகிய சமுத்திரத்திலே யுண்டாகப்பட்ட நஞ்சினை யமுதுசெய்தருளப் பட்ட கண்டத்தினையுடைய கர்த்தாவாயுள்ளவனே, — திருவெண்ணெய்நல்லூர்ச் சுவேதவனத்தான் - திருவெண்ணெய் நல்லூராகிய திருப்படைவீட்டிலே யெழுந்தருளியிருக்கப்பட்ட சுவேதவனப்பெருமாளென்னும் பிள்ளைத் திருநாமத்தையுடையவன், — உருவென்ன வந்தெடுத்தானுற்று - சரீரதொந்தனைப் பட்டு நிற்கிற வென்னைப்போலே யுருப்பட்டுவந்து நான் சனனக் குழியிலழுந்தாம லெடுத்துத் தனது திருவடியிலே கூட்டிக் கொண்டருளினான். (௯௩)

கர்த்தா விங்ஙன மாசாரியமூர்த்தியாகத் திருமேனிகொண் டெழுந்தருளிப் பாசச்சேதனம்பண்ணித் தனது காருண்ணிய மாகிய வுண்மைஞானத்தைக் கடாக்ஷித்த முறைமையை வியப் புரையாகப் புகழ்ந்தமுறைமை மேலருளிச் செய்கின்றது.

உற்றவர் பெற்றவ ரற்றவர் முற்று
மற்றவர்க் கற்றவ னல்லவர்க் கல்லவ
னந்த மாதி யில்லவன் வந்து

கூக்கு மனத்துக் கொடியேன் பாக்கும்
பாப்பைக் குவித்து நிறுத்திப் பிடித்திட்
டிருள்வெளி யாகு மருளினை யறுத்து
வந்து புகுதலுஞ் சென்று நீங்கலு
மின்றி யொன்றாய் நின்றவந் நிலையி
லொன்ரு காம விரண் டாகாம
லொன்று மிரண்டு மின்ரு காமற்
றன்னது பெருமை தாக்கா ளுயினு
மென்னது பெருமை யெல்லா மெய்தித்
தன்னை யெனக்குத் தருவதை யன்றியு
மென்னையு மெனக்கே தந்து தன்னது
பேரா னந்தப் பெருங்கட லதனு
ளாரா வின்ப மளித்துத் தீரா
வுள்ளும் புறம்பு மொழிவின்றி நின்ற
வள்ளன் மைகாட்டி மலரடி யருளிய
மன்ன னெங்கோன் வார்புனற் பெண்ணை
வெண்ணெய்க் காவலன் மெய்கண்ட தேவ
னண்ணலருளா லயத்த னண்ணிய
மலமுத லாயின மாய்க்கு
மூலக வுயிர்க்கெல் லாமொரு கண்ணே.

வி-ம். உற்றவர்பெற்றவ ரற்றவர்மூற்று மற்றவர்க்கற்ற வன் - தனையுறவின் முறையாயுள்ளவர்கள் மாதாபிதாக்கள் தனக்கு வேற்றுமையற்றிருக்கப்பட்ட ஸ்ரீ மற்றுமுண்டான தனை தான்னியக்ஷேத்திரங்கள் முதலாயுள்ள சர்வவுபாதியாயிருக்கப் பட்ட தேகாதி பிரபஞ்சத்தை நீக்கினவர்களுக் கிரண்டற்றுப் பிரிவறநிற்கப்பட்டவன், — அல்லவர்க்கல்லவன் - அப்படிச்

சர்வவுபாதிகளையும் நீங்காதவர்களுக்கு வேறாய்நிற்கப்பட்ட வன்,—அந்தமாதியில்லவன்-தனக்குமுடிவுமுதலுமில்லாதவன் —வந்து-ஆசாரியமூர்த்தமாகத்திருமேனிகொண்டெழுந்தருளி வந்து,—குரக்குமனத்துக் கொடியேன்பரக்கும் பரப்பைக்குல த்து - குரக்குப்போதம்போல வொன்றிலுந் தரிப்பில்லாமலெ ழுந்தது புத்தியாகத்திரிகிற பாவியாயிருக்கிறவென்னைப் பிர பஞ்சப்பரப்பில் திரிகிற வியாத்தியை யொடுக்குவித்து,—நிறுத் திப் பிடித்திட் டிருள்வெளி யாகுமரு ளினையருந்து - தன து திருவடி ஞானத்திலேநிறுத்திப் பழைய பிரபஞ்சவாதனையிலே போகாமற் பிடித்துக்கொண்டு கேவலசகலமென்கிற மயக்கத் தையுநீக்கி,—வந்துபுகுதலுஞ்சென்று நீங்கலுமின்றி - தான்வந் தென்னுள்ளத்திற் புகுதுகிறதும் நான்சென்று தன்னோடே கூடி யெனக்குண்டானபாசங்களை நீக்குகிறதுமில்லாமல்,— ஒன்றாய்நின்ற வந்நிலையில் - அநாதியேதானு நானுநீங்காமல் நின்றநிலையிலே,— ஒன்றாகாம லிரண்டாகாமல் - தானு நானு மொன்றுபடுவதுஞ்செய்யாம லிரண்டுபடுவதுஞ்செய்யாமல்,— * ஒன்றுமிரண்டு மின்றாகாமல் - தானும்யானும் ஒன்றுபட்டு நிற்கிறதும் பெறுவானும்பேறுமா யிரண்டுபட்டு நிற்கிறது மில்லையாகாமல்,—தன்னதுபெருமைதாக்காதாயினுமென்னது பெருமை யெல்லாமெய்தி - தனக்குண்டான சர்வஞ்ஞமும் பஞ்சகிருத்தியமுமெனக் குண்டாக்கினானில்லையாயினு மெனக் குண்டாயிருக்கப்பட்ட விச்சாஞானக்கிரியைகளையும் வியாத்தி வியாபகங்களாகிய பெருமையு மிவைகளெல்லாந் தன்னுடைய பூரணத்திலே யடக்கிக்கொண்டு, — தன்னை யெனக்குத்தருவ தையன்றியு மென்னையு மெனக்கேதந்து - தன்னுடைய வாநந்த

---

* ஒன்றாகாமலிரண்டாகாம லொன்றுமிரண்டுமின்றாகாமல் என்பதற்கு. பேதமுமபேதமும் பேதாபேதமுமாகாமல் என்று பொருளுரைப்பினுமாம்.

சொரூபத்தை யெனக்குக் கடாக்ஷித்ததுமன்றியே யந்தப்பே
ரின்பத்தோடுங்கூடி யநுபவித்திருக்கிற வான்மபோதமாகிய
சிற்றறிவுகெடாமற் கெட்டுநிற்கிறமுறைமையு மெனக்குக் கடா
க்ஷித்தருளி,—தன்னது பேரானந்தப் பெருங்கடலதனு ளாரா
வின்பமளித்து - தன்னுடைய பரிபூரணமாகிய வாநந்தவெள்ள
மான பெரியவருட் சமுத்திரத்திலே விளையப்பட்டிருப்பதாய
வொருகாலத்தினு மூவட்டாத வின்பத்தை யெனக்குக் கடா
க்ஷித்தருளி, — நீராவுள்ளும் புறம்புமொழி வின்றிநின்ற வள்
ளன்மைகாட்டி - ஒருகாலத்திலும் விடப்படாம லகம்புறமெங்
கும் பூரணமாய்நின் றனவரதமு மறிவித்துநிற்கிற வளப்பாட்
டையுந் தரிசிப்பித்து,— மலரடியருளியமன்ன - தாமரை மலர்
போன்ற ஸ்ரீபாதத்தைக் கடாக்ஷித்தருளின தம்பிரானே,—எங்
கோன் - எமக்குக் கர்த்தாவாயுள்ளவன், — வார்புனற்பெண்ணை
வெண்ணெய்க்காவலன் - மென்மேலும் வருகிறபுனலினாலே
பெருகப்பட்ட பெண்ணையாற்றையுடைய திருவெண்ணெய்
நல்லூருக்குக் கர்த்தாவாயிருக்கப்பட்டவன், — மெய்கண்டதே
வன் - மெய்கண்டதேவனென்கிற திருநாமத்தினையுடையவன்,
—அண்ணல் - எனக்குச் சுவாமியாயிருக்கிறவன், — அருளால
யத்தன் -தனதருளே கோயிலாகவெழுந்தருளி யிருக்கப்பட்ட
வன்,—நண்ணிய - என்னைவந்துபொருந்திய,—மலமுதலாயின
மாய்க்கு மூலவுயிர்க்கெல்லாமொருகண்ணே - ஆணவமலமுத
லாயுள்ள மலங்களையெல்லாஞ் சேதனம்பண்ணினவன் சர்வ
லோகங்களிலுமுள்ள வான்மாக்களுக்கெல்லா மோரறிவாக
நின்றநுக்கிரகஞ்செய்தருளுகிறவன் (ரு-ம்.) அற்றவர்க்கற்றவன்
எ-து தேகாதி பிரபஞ்சங்களை நீக்கப்பட்ட தபோதனர்க்குக்
கர்த்தா விரண்டற்று நிற்பனென்று பொருள்கூறியதற்கு- பி-ம்.
தேவாரம். "உலகினிலியற்கையையொழித்திட், டற்றவாகத்
துச்சிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே." எ-ம். தேகாதி

யென்றது உடம்புமுதலானவற்றைநீக்கவே தவமாமென்பது கருத்தாகையா லெனவறிக. இதற்கு பி-ம். திருவாசகம். "பாவியேற்குமுண்டாங்கொல் பரமானந்தப்பழங்கடல்சேர்ந், தாவியாக்கையானெனதென்யாதுமின்றியறுதலே." எ-ம். திருவள்ளுவப்பயன். "மற்றுந்தொடர்ப்பாடெவன்கொல் பிறப்பறுக்கலுற்றார்க்குடம்புமிகை," எ-ம். கண்டுகொள்க, அந்த மாதியில்லவன். எ-கு. முடிவுமுதலுமில்லாதவனென்று பொருள் கூறியதேதென்னில் சிவன்றோற்றமு மீறுமில்லாதவனாகையாலே யப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். திருவெம்பாவையில். "ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ்சோதியை." என்பது கண்டுகொள்க. இனிவந்து. எ-கு. ஆசாரியவிக்கிரகமாக வெழுந்தருளியென்று பொருள்கூறியதற்கு. பி-ம். திருவெம்பாவையில். "இங்குநம்மில்லங்கடோறு மெழுந்தருளிச் செங்கமலப்பொற்பாதந்தந்தருளுஞ்சேவகனை." எ-து. கண்டுகொள்க. குரக்குமனத்துக்கொடியேன் பாக்குப்பாட்டைக்குலித்து. எ-கு. பிரபஞ்சவியாத்தியையொடுக்குவித்து என்று பொருள்கூறியதற்கு. பி-ம். சிவஞானபோதத்தில். "ஊறாவிட், டலைகடலிற்சென்றடங்குமாறுபோன்மீளா, தலைவிலான் பாதத்தையுற்று." எ-து. கண்டுகொள்க. இருள்வெளியாகு மருளினை யறுத்து. எ-கு. கேவலசகல மிரண்டினையுநீக்கியென்று பொருள்கூறியதேதென்னில் கேவலத்திலாணவத்தால் மறைப்புண்டுகிடைக்கையா லிருளென்றதெனவறிக. சகலத்திற்கலையாதி தத்துவங்களோடுங்கூடி ஜீவிக்கையா லொளியென்றதெனவறிக. இதற்கு. பி-ம். சிவப்பிரகாசத்தில். "புகலுமலமொழித்தற்கு" என்னுஞ் செய்யுளில் "இகலிவருமிவையுணரி லிருள்வெளியாந்தன்மையெய்தும்." எ-து. கண்டுகொள்க. இனிவந்து புகுதலுஞ்சென்று நீங்கலுமின்றியொன்றாய் நின்றவந்நிலையில். எ-கு. சிவனான்மாவைவந்துகூடவுமில்லை. ஆன்மா

என்று சிவனைக் கூடுவதில்லையென்று பொருள்கூறியதற்கு பி-ம். போற்றிப்பஃறொடையில். "உள்ளமென்றுநீங்காதொளித்திருந்தே தோன்றினின்ற, கள்ளமின்றுகாட்டுங்கழல்போற்றி" எ-து. கண்டுகொள்க. ஒன்றாகாம லிரண்டாகாம லொன்று மிரண்டு மின்றாகாமல் எ-து. ஆன்மாவுஞ் சிவனு மிரண்டுமூத னையிருக்குமிடத்து ஒன்றுபட்டு நில்லாதென்று மிரண்டுபட்டு நில்லாதென்று மொன்றுமிரண்டுமில்லாம லிராதென்றும் பொருள்கூறியதற்கு. பி-ம். சிவப்பிரகாசத்தில். "உடலுயிர்க்கண்ணருக்கனறிவொளிபோற்பிறிவருமத்துவிதமாகும்." எ-ம். திருக்களிற்றுப் படியில். "உடையும்பொருளுமுயிருமுடனும், விடையமலருக்கே போலவிட்டிலிச் - சிதைவின்றிச், சென்றவாறெங் கண் றிருக்கயிலைப்பெருமா, னின்றவாறெங்குநிறைந்து." எ-ம். கண்டுகொள்க. இனி அன்னதுபெருமையைத் தாக்காறுயிறும். எ-து. அனைக்குண்டாகிய சர்வஞ்ஞத்துவமும் பஞ்சகிருத்தியமு மனைக்குண்டாக்கிறதில்லையாயினுமென்று பொருள்கூறியதே நல்லதன்றில் ஆன்மா முத்திபெற்றவிடத்துஞ் சிவனுக்குண்டான தன்மை யுண்டாகாதென்பது கருத்து. இதற்கு. பி-ம். சிவப்பிரகாசத்தில். "ஒன்றுமோர்குறைபாடக்கு மியல்பிலோனைத் தினையனைத்து, நின்றதே தானதைக்கோத்தானி கழ்வுடனாதோ றுன்னுள்ளத், தொன்றியவுணர் வுதம்பாலுள்ள கத்தான், அக்கொடுத்தவே சனிதனைக் கொண்டு தானே." எ-ம். சித்தியாரில். "உயிர்தானுஞ் சிவானுபவமொன்றினுக்குமுரித்தே." எ-ம். சங்கற்பநிராகரணத்தில். "காழி வெண்ணைக்குறிப்பினை மறவலாதுகுறைத்து முகலுணாவேண்டும்." எ-ம். கண்டுகொள்க. என்னது பெருமையெல்லாமெய்தி- எ-து. ஆன்மாவுக்குள்ள வீக்கனாதிலக்கணங்களையும் விடாத் தியல்பாகவுடையதாய சிவனுக்கோ படைக்கொள்ளுமென்று பொருள் கூறியதற்கு பி-ம். சித்தியாரில். "விரும்பிப்பொன்

னிலைக்குளிகையொளிப்பதுபோலடக்கி.'' எ-நு. கண்டு கொள்க. இனிதன்னையெனக்குத்தருவதையன்றியும். எ-கு. பி-ம். சித்தியாரில். ''இந்தனத்தினெரிபாலினெய்.'' என்னுஞ் செய்யுளிலே ''தானாகித்தன்னுருவப்பரப்பையெல்லாங் கொடு புகுந்துபதிப்பனிவன்பாலே.'' எ-ம். திருவாசகத்தில். ''தந்த துன் றன்னைக்கொண்ட தென்றன்னைச்சங்கரா வார்கோலோ சதுர்த்த, ரந்தமொன்றில்லாவானந்தம்பெற்றேன் யாதுநீபெற்ற தொன்றென்பால்.'' எ-ம்.கண்டுகொள்க. என்னையுமெனக்குத் தந்து. எ-கு. அந்தச் சிவாநுபவத்தை யநுபவிக்கின்ற சிற்றறி வுங்கெடாமலென்றுபொருட் கூறியதேதென்னில் சிற்றறிவு கெட்டாலநுபவிப்பாரில்லாதாகையா லப்படிச்சொன்னதென வறிக. முத்தியிலான்மாநின்றநுபவிக்குமென்பதற்கு. பி-ம். உண்மைவிளக்கத்தில். ''முத்திதனில்மூன்றுமுதலுமொழியக் கேள்.'' என்ற பாட்டும். சித்தியாரில். ''உயிர்தானுஞ்சிவாநு பவமொன்றினுக்குமுரித்தே.'' எ-ம். சொன்னதிப் பொருள் பற்றியெனவறிக. ''தன்னதுபேராநந்தப் பெருங்கடலநாளு ளா ராவின்பமளித்து.'' எ-கு. அருட்சமுத்திரத்திலே விளையப் பட்ட வின்பத்தை யெனக்குங் கடாக்ஷித்தென்று பொருள்கூறி யதற்கு வி-ம். சித்தியாரில். ''சித்தாந்தத்தேசிவன்றன் றிருக் கடைக்கண்சேர்த்திச்சநநமொன்றிலேசீவன்முத்தராக, வைத் தாண்டுமலங்கழுவிஞானவாரிமடுத்தாநந்தம்பொழிந்து.'' எ-நு. கண்டுகொள்க. நீராவுள்ளும் புறம்பு மொழிவின்றிநின்ற வள் ளன்மைகாட்டி. எ-கு. ஒருகாலத்தினும் விடப்படாமல் சிவ னுள்ளும் புறம்புமாய்நிறைந்து நிற்பனென்று பொருள்கூறிய தற்கு. பி-ம். திருவாசகத்தில், ''உம்பர்கட்கரசேயொழிவற நிறைந்தயோகமே'' எ-து. கண்டுகொள்க. மலரடியருளிய மன்னனெங்கோன். எ-கு. தாமரைமலர்போன்ற ஸ்ரீபாதத் தைக் கடாக்ஷித்தருளினவனென்று பொருள்கூறியதற்கு பி-ம்.

திருவெம்பாவையில். "செங்கமலப்பொற்பாதந்தந்தருளுஞ் சேவகனை." எ-து. கண்டுகொள்க. அருளாலயத்தன். எ-து. அருள்கோயிலாக வெழுந்தருளியிருக்கப்பட்டவனென்று பொருள்கூறியதேதென்னில் சிவன் தனதருளாகிய சத்தியுடம்பாக வெழுந்தருளி யிருக்கையாலெனவறிக. இதற்கு. பி-ம். சிவப்பிரகாசத்தில். "நீடுபராசத்திநிகழிச்சாஞானங்கிரியைத் தரவுதனைமலன்மேவி, நாடரியகருணைத்திருவுருவமாகி." எ-ம். சித்தியாரில். "காயமோமாயையன்றுகாண்பதுசத்திதன்னால்." எ-ம். திருவாசகத்தில். "உடையாணடுவுநீயிருத்தி." எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. இனிமலமுதலாயினமாய்க்கும். எ-து. ஆணவமலமுதலாயின வெல்லாவற்றையுஞ் சேதனம்பண்ணினவனென்று பொருள்கூறியதற்கு. பி-ம். போற்றிப்பஃறொடையில். "முன்னின்றுமும்மலந்தீர்த்தாட்கொள்கை. எ-ம். தத்துவவிளக்கத்தில். "கதிதருகாழிமன்கட்டிடும் பாசங்கண்மூன்றனைத்தாம், புதிதருமாணவம்போகஞ்செய்கன்மமாயையுமா, முதியதுதானென்றுமுன்பினில்வந்ததுசேதனன்க, ணதிகமறைப்பனவாயிரகோடிவிருத்திகளே," எ-ம். கண்டுகொள்க. உலகவுயிர்க்கெல்லாமொருகண்ணே. எ-து. சர்வான்மாக்களுக்கும் ஓரறிவாகிநின் றறிவிக்கிறவனென்ற தேதென்னில் ஆதித்த னொன்றேயிருந்தும் பலகண்களுக்குங் காட்டாநின்றதுபோ லெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "கண்கட்கிருளினையொளியாலோட்டிரவியைப்போலீசன்." எ-து. கண்டுகொள்க.

இங்ஙனம் வியாக்கியைச்செய்யப்பட்ட விந்த இருபாவிருபஃது என்னும் நூலுக்குச் செய்யுட்கடோறு மாசாரியரைச் சீஷன்கேட்டும் வினாவுக்குவிடையமாக வாசாரியாருளிச்செய்யப்பட்ட சொற்களையெல்லா மினவுஞ் சீஷன் மறுத்தமொழியாகவுருக்கையா லாசாரிய ரருளிச்செய்ததெல்லாஞ் சீழ்ப்பட்டுச்

சீஷன்சொல்லே மேற்பட்டு வருமதைப் பொருளெனக்கொள் வாருமுளர், அது சித்தாந்தப்பொருளுக்கு விரோதமெனவறிக. அப்படியானால் வேறுபொருள் கொள்ளுமிடத்து மற்றுமுண்டான நூல்களையோதியறிந்து குருமுகாந்தரமாகக்கேட்டறிந்து சம்பிரதாயம்வந்த சித்தாந்திகளுக்கொழிய தற்போதங்கொண்டறிவார்க் கறியப்படாதெனவறிக. அப்படி யாசாரியர் சத்தியமுஞ் சீஷன்சொல் லசத்தியமென்னுங் கருத்தைப்பற்றி யிந்நூலுக்கு வியாக்கியை யெழுதினதேதென்னில் கல்லனைக்கல் ஞாலத்து என்னு முதலகவலிலே சீறியருளல் சிறுமையுடைத்தாலென்று சீஷன் கூறியதற்குத்தரமாக வாசாரியர் அபக்குவ பக்குவக்குறிப்பார்தருளினங் குருமுதலாய். எ - று. பொருள் நாம்சொன்னவத்தங்களை மாறுபாடாகக் கொள்ளுகையாலே நாங்கோபித்துக்கொண்டோமென் றாசாரியர் திருவுளம்பற்றுகையாலே யாசாரியர் திருவுளம்பற்றினதே சத்தியம். ஆகவாசாரியர் வாக்கியத்துக்குச் சாத்திரசம்மதி யெழுதினதினாலும் ஆசாரியர் திருவுளம்பற்றினது சத்தியமென்கிறதைக் குருமுகாந்தரமாகக்கேட்டு அநுபவத்தாற் கண்டுகொள்க.

திருச்சிற்றம்பலம்.

இருபாவிருபஃது மூலமும் உரையும்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவதிகை மனவாசகங்கடந்தார்

அருளிச்செய்த

உண்மைவிளக்கமூலம்,

இதற்குரையுடன்

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

காணியம்பாக்கம்

முருகேசமுதலியாரால்

சென்னை:

இந்துதியாலாஜிகல்யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

௧௮௯௨.

உ

சிவமயம்.

தனியன்.

மன்னதிகை வாழு மனவா சகங்கடந்தான்
பின்னனைய வாழ்விலுறு மெய்கண்டான் - பன்மறைகள்
வண்மைதரு மாகமநூல் வைத்த பொருள்வழுவா
யுண்மைவிளக் கஞ்செய்தா னுற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

உண்மைவிளக்கம்.

வெண்பா

வண்மைதரு மாகமநூல் வைத்த பொருள்வழுவா
வுண்மை விளக்க முறைசெய்யத் - திண்மதஞ்சேர்
அந்திநிறத் தந்திமுகத் தொந்திவயிற் றைங்கரனைப்
பந்தமறப் புந்தியுள்வைப் பாம்.

இ-ள். வண்மைதருமாகமநூல் - வளப்பத்தைத்தாராநின்ற வாகமநூலிலே, — வைத்தபொருள் வழுவாவுண்மைவிளக்க முறைசெய்ய - பரமேஸ்வர னருளிச்செய்துவைத்த பதியினுண்மையும் பசுவினுண்மையும் பாசத்தினுண்மையும் வழுவாம லிந்தநூலிலே விளங்கச்செய்வது பொருட்டாக,—திண்மதஞ்சேர் - திண்ணிய மூன்றுமதமும் பொருந்தப்பட்ட,— அந்திநிறத்து - செக்கர்வானம்போன்ற சிவந்த திருமேனியினையும்,—தந்திமுகத்து - யானைமுகத்தினையும், — தொந்திவயிற்று - பண்டியுண்டான திருவுந்தியினையும், — ஐங்கரனை - ஐந்து ஸ்ரீ அத்தத்தினையுமுடைய விக்கினேஸ்வரப் பிள்ளையாரை,—பந்தமற-பாசபந்தங்களெல்லாநீங்க,—புந்தியுள்வைப்பாம்-அடியேனுடைய மனதிலே தியானம்பண்ணாநின்றேன்.

பொய்காட்டிப் பொய்யகற்றிப் போதாநந் தப்பொருளா
மெய்காட்டுமெய்கண்டாய்விண்ணப்பம்- பொய்காட்டா
மெய்யா திருவெண்ணெய் வித்தகா சுத்தவினு
வையாநீ தான்கேட் டருள்.

இ-ள். பொய்காட்டி - தேகாதி பிரபஞ்சத்தைப் பொய் யெனக்காட்டி,—பொய்யகற்றி - பொய்யைநீக்கி,—போதாநந் தப்பொருளா மெய்காட்டு மெய்கண்டாய் விண்ணப்பம் - அறி விலே யாநந்த சொரூபமாயிருக்கிற வுண்மையைக்காட்டுகிற மெய்கண்டநாதனேயொருவிண்ணப்பம்—பொய்காட்டாமெய் யா - பொய்யைக்காட்டாத மெய்ச்சத்தியத்தையுடையவனே, —திருவெண்ணெய் வித்தகா - திருவெண்ணெய் நல்லூரிலே எழுந்தருளியிருக்கப்பட்ட ஞானசாரியனே,—சுத்தவினு வை யாநீதான் கேட்டருள் - சுத்தமாகிய வினுவினைச் சுவாமீ தேவ ரீர் திருச்செவி சாற்றியருளவேண்டும். (உ)

ஆறாறு தத்துவமே தாணவமே தன்றேதான்
மாறா வினையேது மற்றிவற்றின் - வேறாக
நானேது நீயேது நாதனட மஞ்செழுத்துந்
தானேது தேசிகனே சாற்று.

இ-ள். ஆறாறுதத்துவமேது-முப்பத்தாறுதத்துவங்களாவ தேது,—ஆணவமேது - ஆணவமலமாவதேது,—அன்றேதான் மாறாவினையேது - அநாதியிலேவிட்டு நீங்காமலிருக்கிற வினை யாவதேது,—மற்றிவற்றின் வேறாகநானேது - இந்த மலங்களு க்கு வேறாகாம லொன்றுபட்டிருக்கிற வென்னுடைய சொரூப மாவதேது,—நீயேது - தேவரீருடைய சொரூபமாவதேது,— நாதனடம் - பரமேஸ்வரனுடைய திருநடமாவதேது, — அஞ் செழுத்துத் தானேது - பஞ்சாக்கரத்தினுண்மையாவதேது,— தேசிகனே சாற்று-சுவாமீ திருவுளம்பற்றி யருளவேண்டும். (ங)

உள்ளபடி யித்தை யுரைக்கக்கே ளென்றனக்கு
வள்ளலரு ளாலன்று வாய்மலர்ந்து - தெள்ளியசீ
ராகமங்கள் சொன்ன வடைவிலே யாநந்த
யோக நிகழ்புதல்வா வுற்று.

இ-ள். உள்ளபடியித்தை யுரைக்கக்கே ளென்றனக்கு - உண்டானபடியே நீ கேட்டவினவைச் சொல்லுகிறேன்கேள், —வள்ளலருளாலன்று வாய்மலர்ந்து - பரமேஸ்வரன் றனது காருணியத்தினாலே யநாதியிலே திருவாய்மலர்ந்து,—தெள்ளியசீராகமங்கள் சொன்னவடைவிலே - தெளிவாயிருக்கிற வாகமங்கள் சொன்ன முறைமையிலே, — ஆநந்தயோகநிகழ் புதல்வாவுற்று - ஆநந்தயோகத்திலே யடங்கியிருக்கிறபிள்ளாய் யுற்றுப்பொருந்திக்கேள். (௭)

நாற்கோணம் பூமிபுனல் நண்ணுமதி யின்பாதி
யேற்குமனல் முக்கோண மெப்போது - மார்க்கு
மறுகோணங் கால்வட்ட மாகாய மான்மா
வுறுகாய மாமிவற்று றுற்று.

இ-நாற்கோணம்பூமி-பிருதிவி நாலுகோணமாயிருக்கும், —புனல்நண்ணுமதியின்பாதி-அப்புவானது அர்த்த சந்திரனைப் போன்றதாயிருக்கும்,—எற்குமனல்முக்கோணம் - பொருந்தப் பட்ட தேயுவானது மூன்றுகோணமாயிருக்கும், — எப்போது மார்க்கு மறுகோணங்கால் - பொருந்தப்பட்ட வாயுவானது எந்தக்காலமு மறுகோணமாயிருக்கும்,—வட்டமாகாயம்-ஆகாய மானது வட்டமாயிருக்கும்,—ஆன்மா வுறுகாயமா மிவற்று றுற்று - ஆன்மாவுக்குப் பஞ்சபூதம் பரிணமமாயிருக்கிற தேக மாய்வந்து பொருந்தும். (௮)

மண்கடின மாய்த்தரிக்கும் வாரிகுளிர்ந் தேபதமா
மொண்கனல்சுட் டொன்றுவிக்கு மோவாமல்-வண்கால்
பரந்துசலித் துத்திரட்டும் பார்க்கிலா காயம்
நிரந்தரமாய் நிற்கு நிறைந்து.

இ - ள். மண்கடினமாய்த்தரிக்கும் - பிருதிவியானது விடயங்களிலே கடினகுணத்தைக் கொடுத்துக்கொண்டுநிற்கும்,— வாரிகுளிர்ந்தேபதமாம் - அப்புவானது விடயங்களிலே நெகிழ்ந்தகுணத்தைக் கொடுத்துக்கொண்டுநிற்கும், — ஒண்கனல்சுட்டொன்றுவிக்கும் - தேயுவானது விடயங்களிலே சுட்டொன்றுதலைப் பண்ணிக்கொண்டு நிற்கும்,—ஓவாமல் - விட்டுநீங்காமல்,—வண்கால்பரந்து சலித்துத்திரட்டும் - வளப்பத்தையுடைய வாயுவானது விடயங்களிலே திரட்டிக்கூடாநிற்கும்,—பார்க்கிலாகாயம் நிரந்தரமாய் நிற்குநிறைந்து - விசாரிக்குமிடத்து ஆகாயம் விடயங்களுக்கெல்லா நிரந்தரமா யிடங்கொடுத்துக்கொண்டு நிற்கும். (க0)

உள்ளபடி மாபூத மோதினோ முன்றனக்குக்
கள்ளமிகு மைம்புலனுங் கட்டுரைக்கில் - மெள்ளவே
யோசை பரிச முருவஞ் சுவைநாற்ற
மாசைதரு மைம்புலனே யாம்.

இ - ள். உள்ளபடிமாபூதமோதினோ முன்றனக்கு - உண்டானபடியே மகத்தாகிய பஞ்சபூதங்களுஞ் சொன்னோம்,— கள்ளமிகுமைம்புலனுங் கட்டுரைக்கில் - கள்ளமிகுந்து வரப்படாநின்ற சத்தாதிவிடயங்களைச் சொல்லுமிடத்து,—மெள்ளவே - பையவே,—ஓசைபரிசமுருவஞ் சுவைநாற்ற மாசைதரு மைம்புலனேயாம் - ஆசையைக் கொடாநின்ற சத்தபரிசரூப ரச கந்தமென்றறிவாயாக. (கக)

ஞானேந் திரியங்கள் நன்று யுரைக்கக்கே
ளூன மிகுபூத முற்றிடமா - யீனமாஞ்
சத்தாதி யையறியுந் தானஞ் செவிதோல்கண்
ணத்தாலு மூக்கென் றறி.

இ - ள். ஞானேந்திரியங்கள் நன்றுயுரைக்கக்கேள் - ஞானேந்திரியங்கள் நன்றாய்ச் சொல்லுகிறேன்கேள்.—ஊனமிகு பூதமுற்றிடமாம் - ஊனமிகுத்துவரப்படாநின்ற பஞ்சபூதங்களிடமாக,—ஈனமாஞ் சத்தாதியையறியுந் தானஞ்செவிதோல் கண்ணத்தாலுமூக்கென்றறி - ஈனத்துவமாயிருக்கிற சத்தாதி விடயங்களை யறிகிறவிடமேதென்று கேட்கிறாயானால் சுரோத்திரம் தொக்கு சக்ஷு சிங்ஙுவை யாக்கிராணமென் றறிவாயாக.

வானிடமாய் நின்றுசெவி மன்னு மொலியதனை
யீனமிகுந் தோல்கா லிடமாக - வூனப்
பரிசந் தனையறியும் பார்வையிற்கண் ணங்கி
யிரவியுரு வங்காணு மே.

இ - ள். வானிடமாய்நின்று செவிமன்னு மொலியதனை - ஆகாயத்தினிடமாகநின்று சுரோத்திரஞ் சத்தத்தையறியும்,—ஈனமிகுந்தோல் காலிடமாக வூனப்பரிசந்தனையறியும் - வாயுவினிடமாகநின்று ஈனத்துவமாயிருக்கிற தொக்கு பரிசத்தையறியும்,—பார்வையிற்கண்ணங்கி யிரவியுருவங்காணுமே - தேயுவினிடமாகநின்று சக்ஷு ரூபத்தையறியும். (கரு)

நன்றாக நீரிடமாய் நாவிரதந் தானறியும்
பொன்றா மணமூக்குப் பூவிடமாய் - நின்றறியு
மென்றோது மன்றே யிறையா கமமிதனை
யென்றார்சென் றாரின்ப வீடு.

காலநியதி கருதுங் கலைவித்தை
யேலவிரா கம்புருட னேமாயை - மாலறவே
சொன்னோ மடைவாகச் சொன்னவிவை தன்னுண்மை
யுன்னி யுரைக்கநா முற்று.

இ-ள். காலநியதி கருதுங்கலைவித்தை யேலவிராகம் புருடனேமாயை மாலறவே - காலம் நியதி கலை வித்தை இராகம் புருடன் மாயை மயக்க மறவே,—சொன்னோமடைவாக-இந்த முறைமையிலே சொன்னோம்,—சொன்னவிவை தன்னுண்மை யுன்னியுரைக்கநாமுற்று - இதனுடைய சுபாவத்தைச் சொல்லுகிறோம் உற்றுப் பொருந்திக்கேள். (கக)

எல்லை பலம்புதுமை யெப்போது நிச்சயித்தல்
அல்ல றருங்கிரியை யான்மாவுக் - கொல்லை
யறிவாசை யைம்புலனு மாரவருங் காலங்
குறியாய் மயக்கென்று கொள்.

இ-ள். எல்லைபலம்புதுமை - காலதத்துவமானது கழிகாலத்தெல்லையும் நிகழ்காலத்துப் பலத்தையும் எதிர்காலத்துப் புதுமையும் பொருத்துவிக்கும்,—எப்போது நிச்சயித்தல்-நியதி தத்துவமானது எந்தக்காலமும் கன்மத்தை யிவ்வளவென்று நிச்சயம்பண்ணிநிறுத்தும்,—அல்லறருங்கிரியை - கலையானது ஆணவத்தைச் சிறிதுநீக்கி யான்மாவுக்குக் கிரியையை யெழுப்பும்,—ஆன்மாவுக்கொல்லை யறிவு - வித்தியாதத்துவமான தான்மாவுக்குச் சீக்கிரத்திலே யறிவையெழுப்பும்.—ஆசை - இராக தத்துவமானதுபெற்றபதார்த்தங்களைச்சிறிதாக்கிப்பெருதனிலே யிச்சையுண்டாக்கும்; — ஐம்புலனுமாரவருங்காலம் - ஆன்மா பஞ்சேந்திரியங்களிடமாகச் சத்தாதிவிடயங்களைப் புசிக்கவருகிற வவதரத்தில் புருடதத்துவமானது விடயத்திலே யழுத்து

விக்கும்,—குறியாய்மயக்கென்றுகொள் - மாயையானது வொன்றை நினைக்கவொட்டாமல் மயக்கத்தைச்செய்யுமென் றறிவாயாக. (உ0)

வித்தியா தத்துவங்க ளேழும் விளம்பினோம்
சுத்தமாந் தத்துவங்கள் சொல்லக்கேள் - நித்தமாஞ்
சுத்தவித்தை யீசுரம்பின் சொல்லுஞ் சதாசிவநற்
சத்திசிவங் காணவைக டான்.

இ-ள். வித்தியா தத்துவங்களேழும் விளம்பினோம் - வித்தியா தத்துவங்க ளேழுஞ்சொன்னோம், — சுத்தமாந்தத்துவங்கள் சொல்லக்கேள் - சுத்தமாயிருக்கிற சிவதத்துவங்களைந்தையுஞ் சொல்லுகிறோங்கேள், — நித்தமாஞ் சுத்தவித்தை யீசுரம் பின்சொல்லும் சதாசிவ நற்சத்தி சிவங்காணவைகடான் - நித்தியமாயிருக்கிற சுத்தவித்தை ஈஸ்வரம் சாதாக்கியம் சத்தி சிவம் என்றறிவாயாக. (உக)

சுத்தவித்தை ஞானமிகுந் தொன்மையா மீசுரந்தா
னத்தன் றொழிலதிக மாக்கியிடு - மொத்தல்வை
* சாதாக் கியமென்றுஞ் சத்தி சிவங்கிரியை
யாதார ஞானவுரு வாம்.

இ-ள். சுத்தவித்தை ஞானமிகும் - சுத்தவித்தை ஞானமேறிக் கிரியை குறைந்திருக்கும், — தொன்மையா மீசுரந்தானத்தன் றொழிலதிகமாக்கியிடும் - பழைமையாக வரப்படாநின்ற ஈஸ்வரதத்துவமானது ஞானங்குறைந்து கிரியையேறியிருக்கும்,—ஒத்தல்வை சாதாக்கியமென்றும் - சாதாக்கிய தத்துவம் ஞானமுங்கிரியையுமொத்திருக்கும், — சத்திசிவங்கிரியை யாதாரஞானவுருவாம் - சத்தி தத்துவம் கிரியையாயிருக்கும் சிவதத்துவம் ஞானமாயிருக்கும். (உஉ)

---

* சாதாக்கியத்தின்விரிவைச் சதாசிவரூபமென்னு னூலிற்காண்க.

ஆறாறு தத்துவமுஞ் சொன்னோ மடைவாக
மாறா மலமிரண்டும் வாசொல்லக் - கூறி
லறியாமை யாணவநீ யானசுக துக்கங்
குறியா வினையென்று கொள்.

இ - ள். ஆறாறுதத்துவமுஞ் சொன்னோ மடைவாக - முப்பத்தாறு தத்துவங்களுடைய முறைமையுஞ் சொன்னோம்,— மாறாமலமிரண்டும்வா சொல்ல - விட்டுநீங்காமலிருக்கிற வாணவமலத்தையுங் கன்மமலத்தையுஞ் சொல்லுகிறோங்கேள், — கூறில் - சொல்லுமிடத்து, — அறியாமையாணவம் - அறியாமையைப் பண்ணிக்கொண்டு நிற்கிற தாணவமலம்,—நீயானசுகதுக்கங்குறியாவினையென்றுகொள் - சுகதுக்கமொன்றையு நினையாமல் நீதானாயிருக்கிறது தானே கன்மமலமென்றறிவாயாக. (உக)

ஆறாறு தத்துவமு மாணவமும் வல்வினையு
மாறா வருளால் வகுத்துரைத்தீர் - வேறாக
வென்னை யெனக்கறியக் காட்டீ ரிவைகண்டே
னுன்னரிய தேசிகனே யுற்று

இ - ள். ஆறாறுதத்துவமும் - முப்பத்தாறுதத்துவமும்,— ஆணவமும் - ஆணவமலத்தையும்,—வல்வினையும் - கன்மமலத்தையும், — மாறாவருளால் வகுத்துரைத்தீர் - விட்டுநீங்காத கிருபையினாலே பகுத்தருளிச்செய்தீர், — வேறாகவென்னை யெனக்கறியக்காட்டீர் - இந்தமலங்களுக்கு வேறாகமலொன்றுபட்டிருக்கிற வென்னுடைய சொரூபத்தையு மருளிச்செய்யவேணும்,—இவை கண்டேன் - இந்த மூன்றுமலங்களையுந்தரிசித்தேன்,—உன்னரியதேசிகனே யுற்று - நினைத்தற்கரிதாகிய தேசிகனே யுற்றுப்பொருந்தத்தக்கதாக. (உஉ)

நன்றா யுரைக்கக்கேள் நல்லசித்தின் முன்னசித்திங்
கொன்றாது சித்தசித்தை யோராது - நின்றிவற்றை
யன்றே பகுத்தறிவ தான்மாவே யென்றுமறை
குன்றாம லோதுங் குறித்து.

இ-ள். நன்றாயுரைக்கக்கேள் - நீகேட்ட வான்மதரிசனத்தை நன்றாகச்சொல்லுகிறோங்கேள், — நல்லசித்தின் முன்னசித்திங்கொன்றாது - நல்லசித்தாகிய சிவத்தின்முன்னே யசித்தாகிய பாசநில்லாது,—சித்தசித்தையோராது-நல்ல சித்தாகிய சிவத்துக்கு அசித்தாகிய பாசத்தையறிய வேண்டுவதில்லை,—நின்றிவற்றையன்றே பகுத்தறிவதான்மாவே - சித்தாகிய சிவத்தையும் அசித்தாகியபாசத்தையும் அநாதியிலே பொருந்தி விசாரித்தறிந்து அறிகிற தான்மாவே,—என்றுமறை குன்றாமலோதுங்குறித்து - பரமேஸ்வரனுடைய வேதாகமங்களிலே குறையாமற்சொல்லும். (உரு)

தத்துவங்க ளாறாறுந் தன்னைத்தா னென்றறியா
தெத்தன்மை யென்னி லியம்பக்கேள் - சுத்தமா
மாறு சுவையு மறியாது தன்னைத்தான்
கூறி லவையிவைபோற் கொள்.

இ-ள். தத்துவங்களாறாறுந் தன்னைத்தானென்றறியாது - முப்பத்தாறுதத்துவங்களும் ஜடமாகையினாலே தன்னுடைய சொரூபத்தைத் தானறியச்செய்யாது, — எத்தன்மையென்னி லியம்பக்கேள்-எந்தமுறைமையென்று கேட்கிறாயானால் சொல்லுகிறோங்கேள், — சுத்தமா மாறுசுவையுமறியாது தன்னைத்தான் - சுத்தமாயிருக்கிற வறுவகைச்சுவையுந் தன்னுடைய சொரூபத்தைத் தானறியச்செய்யாது,—கூறில் - சொல்லுமிடத்து,—அவையிவைபோற்கொள் - முப்பத்தாறுதத்துவங்களுஞ் சுவைகளைப்போலத் தன்னுடையசொரூபத்தைத் தானறியச் செய்யாது. (உசு)

ஆறு சுவையு மருந்தி யவைதன்னை
வேறொருவன் கூறியிடு மேன்மைபோ - லாறாறு
மொன்றொன்றாய் நாடியுணர்ந் தோதியதி லுற்றறிவாய்
நின்றபொரு டானேகா ணீ.

இ-ள். ஆறுசுவையு மருந்தியவைதன்னை வேறொருவன் கூறியிடுமேன்மைபோல் - ஆறுவகைச்சுவையும் புசித்துக்கைக்கிறது கார்க்கிறது * கூர்க்கிறது துவர்க்கிறது புளிக்கிறது இனிக்கிறதெனக் கண்டுணர்ந்தொருவன் சொல்லுகிற முறைமைபோல, — ஆறாறுமொன்றொன்றாய் நாடியுணர்ந்து - முப்பத்தாறு தத்துவங்களையு மொன்றொன்றாக விசாரித்தறிந்து,— ஓதில் - சொல்லுமிடத்து, — அதிலுற்றறிவாய் நின்றபொருடானேகாணீ-முப்பத்தாறு தத்துவங்களையும்பொருந்தியறிந்து வருகிற வறிவுகாணீயாகியவான்மா. (உஎ)

குன்றா வருளாலே கூறினீ ரென்வடிவு
பொன்றாத நும்முருவம் போயீர் - நின்றருக்கன்
கண்ணுக்குக் காட்டுமா போலே யுனதறிவில்
நண்ணியறி வித்திடுவோ நாம்.

இ-ள். குன்றாவருளாலே கூறினீரென்வடிவு - கெடாத கிருபையினாலே அடியேனுடைய சொரூபத்தை யருளிச்செய்தீர், — பொன்றாத நும்முருவம்போதியீர் - கெடாத தேவரீருடைய சொரூபத்தையு மடியேனுக் கருளிச்செய்யவேண்டும், —நின்றருக்கன்கண்ணுக்குக் காட்டுமாபோல் - ஆதித்தப்பிரகாசமானது கண்ணுக்குப் பதார்த்தங்களைக் காட்டிக்கொண்டு நிற்கிறதுபோல,—உனதறிவினண்ணியறி வித்திடுவோநாம் - உனதறிவிலே பொருந்திநின் றறிவித்துவருவோம் நாம்.

---

* கூர்க்கிறது - உவர்க்கிறது.

அன்றியுங்கே ளான்மாவா லாய்ந்தறியு மைம்பொறிக
ளின்றி யறியா திவையென்ன - நின்றதுபோ
லோவாம லுன்னை யுணர்த்துவோ முன்னறிவின்
மேவாமன் மேவிநா மே.

இ-ள். அன்றியுங்கேள் - அறிவல்லாமலுஞ் சொல்லுகி றோங்கேள்,—ஆன்மாவாலாய்ந்தறியு மைம்பொறிகளின்றி யறியா திவையென்ன - ஆன்மாவிலேயறிந்து காரியப்பட்டுவருகிற பஞ்சேந்திரியங்களும் ஆன்மாவினாலேயறிந்து காரியப்பட்டு வருகிறோமென் றறியச்செய்யாது,—நின்றதுபோல் - அந்தப் பஞ்சேந்திரியங்களைப்போல், — ஓவாமலுன்னை யுணர்த்துவோம் - விட்டு நீங்காமனின் றுனக்கறிவிப்போம்,—உன்னறிவின் மேவாமன் மேவிநாமே - உன்னறிவிலே பொருந்தாமற் பொருந்திநின் றறிவித்துவரச்செய்தேயு நீயறியாமலிருந்தது மப்படிபோல. (உக)

அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்றாற்போல்
மிக்க வுயிர்க்குயிராய் மேவினோ - மெக்கண்ணு
நில்லா விடத்துயிர்க்கு நில்லா தறிவென்று
நல்லா கமமோது நாடு.

இ-ள். அக்கரங்கட்கெல்லா மகரவுயிர் நின்றாற்போல் - ஐம்பத்தோரக்ஷரத்துக்கும் அகரமாகிய வக்ஷரமுயிராய் நின்றது போல், — மிக்கவுயிர்க்குயிராய் மேவினோம் - சர்வான்மாக்களிடத்திலேயும் அறிவுக்கறிவாய்ப் பொருந்திநின்றும்,—எக்கண்ணுநில்லா விடத்துயிர்க்குநில்லா தறிவென்று - ஜடசித்துகளெல்லாம் கர்த்தாநிறைந்து நின்றறிவித்தாலல்ல தறியச்செய்யாதென்று,—நல்லாகம மோதுநாடு - நல்ல வேதாகமங்களிலே சொல்லுமென்று விசாரித்தறிவாயாக. (கஉ)

நற்றவத்தோர் தான்காண நாதாந்தத் தஞ்செழுத்தா
லுற்றுருவாய் நின்றாட லுள்ளபடி - பெற்றிடநான்
விண்ணார் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே
தண்ணா ரருளாலே சாற்று.

இ-ள். நற்றவத்தோர் தான்காண - நல்ல தவத்தை யுடைய வான்மாக்கள் தரிசிக்கத்தக்கதாக, — நாதாந்தத் தஞ்செழுத்தா லுற்றுருவாய் நின்றாடல் - நாதாந்தத்தின்முடிவிலே பஞ்சாக்கரமே திருமேனியாகக்கொண்டு நிருத்தஞ்செய்கிற முறைமை, — உள்ளபடி பெற்றிட நான் - உண்டானபடியே யடியேன் தரிசிக்கத்தக்கதாக,—விண்ணார்பொழில்வெண்ணெய் மெய்கண்டநாதனே - ஆகாயத்தை யளாவியிருக்கா நின்ற சோலைகள் சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூரே திருப்பதியாக வெழுந்தருளியிருக்கிறமெய்கண்டசுவாமி,— தண்ணாரருளாலே சாற்று - குளிர்ந்த கிருபையினாலே திருவுளம்பற்றி யருள வேண்டும். (சுக)

எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் - சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவெழுத்தஞ் சாலே
யவாயமற நின்றாடு வான்.

இ-ள். எட்டுமிரண்டு முருவானலிங்கத்தே நட்டம்-எட்டு மிரண்டு முருவாயிருக்கிற யகாரமாகிய வான்மாவினிடத்திலே நடனம்,—புதல்வாநவில்க்கேள் - பிள்ளாய் சொல்லக்கேள்,— சிட்டன் - பரமசிவன்,— சிவாயநமவென்னுந் திருவெழுத்தஞ் சாலே யவாயமறநின்றாடுவான் - பஞ்சாக்கரமே திருமேனியாகக்கொண்டு ஆன்மாக்கள் பிறவியறத்தக்கதாக நிருத்தஞ் செய்வன். (சுஉ)

ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரம் - கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

இ - ள். ஆடும்படிகேணல்லம்பலத்தானையனே-ஐய! நல்ல திருவம்பலத்தின்கண்ணே எழுந்தருளிநின்று நிருத்தஞ்செய்கிற முறைமையைச் சொல்லுகிறோம் கேள்,—நாடுந்திருவடியிலேநகரம் - உன்னரிய ஸ்ரீபாதத்திலே நகாரமாகவும்,—கூடுமகாமுதரம் - பொருந்தப்பட்ட திருவுந்தியிலே மகாரமாகவும்,—வளர்தோள் சிகரம்-மிகுந்துவரப்படாநின்ற திருத்தோளிலே சிகாரமாகவும், — பகருமுகம்வா - சொல்லப்பட்ட திருமுகத்திலே வகாரமாகவும்,—முடியப்பார்-திருமுடியிலே யகாரமாகவும் இந்த முறைமையிலே நமசிவாயவென்கிற பஞ்சாக்கரமே திருமேனியாகக்கொண்டு நிருத்தஞ்செய்வாரென்று விசாரித்தறிவாயாக. (கூகூ)

சேர்க்குந் துடிசிகரம் சிக்கனவா வீசுகர
மார்க்கும் யகர மபயகரம் - பார்க்கிலிறைக்
கங்கி நகர மடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்.

இ - ள். சேர்க்குந்துடிசிகரம் - டமரகமேந்திய ஸ்ரீ அத்தத்திலே சிகாரமாகவும்,—சிக்கனவாவீசுகரம் - வீசிய ஸ்ரீ அத்தத்திலே வகாரமாகவும், — ஆர்க்கும்யகர மபயகரம் - அமைத்த ஸ்ரீ அத்தத்திலே யகாரமாகவும்,—பார்க்கிலிறைக்கங்கிநகரம் - அக்கினியேந்திய ஸ்ரீ அத்தத்திலே நகாரமாகவும்,—அடிக்கீழ் முயலகனார் தங்குமகரமதுதான் - முயலகனைமிதித்த பாதத்திலே மகாரமாகவும் இந்த முறைமையிலே பஞ்சாக்கரமே திருமேனியாகக்கொண்டு நிருத்தஞ்செய்வானென் றறிவாயாக.

ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனி
னீங்கா வெழுத்தே நிறைசுடரா - மாங்கார
மற்ரு ரறிவரணி யம்பலத்தா ளுடலிது
பெற்ருர் பிறப்பற்ருர் பின்.

இ-ள். ஓங்காரமேநற்றிருவாசி - பிரணவந்தானே நல்ல திருவாசியாகவும், — உற்றதனி னீங்காவெழுத்தே நிறைசுடராம் - பிரணவத்தைவிட்டு நீங்காத பஞ்சாக்கரமே யுள்ளொளியாகவும்,—ஆங்காரமற்ரு ரறிவர்-யானெனதென்னுஞ் செருக்கற்றவர்களறிவார்கள், — அணியம்பலத்தா ளுடலிதுபெற்ருர் பிறப்பற்ருர்பின் - அழகிய திருவம்பலத்தின்கண்ணிலே யெழுந்தருளிநின்று நிருத்தஞ்செய்யு முறைமையைத் தெரிசித்தவர்களே பின்பு சநநமரணமற்றவர்கள். (௩௫)

தோற்றந் துடியதனிற் ரேயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்கார - மூற்றமா
யூன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

இ-ள். தோற்றந்துடியதனில் - டமரகமேந்திய ஸ்ரீ அத்தத்திலே சிருஷ்டியாகவும்,—தோயுந்திதியமைப்பில்-அமைத்த ஸ்ரீஅத்தத்திலே ஆன்மா இரக்ஷையாகவும், — சாற்றியிடுமங்கியிலே சங்காரம் - அக்கினியேந்திய ஸ்ரீ அத்தத்திலே மலசங்காரமாகவும்,—ஊற்றமாயூன்று மலர்ப்பதத்தி லுற்றதிரோதம்-உறுதியாயூன்றிய ஸ்ரீபாதத்திலே பிரபஞ்சத்தை மறைக்குந்திரோதமாகவும்,—முத்தி நான்ற மலர்ப்பதத்தேநாடு - தூக்கிய ஸ்ரீபாதத்திலே யநுக்கிரக முத்தியாகவும் இந்தமுறைமையிலே முத்தி பஞ்ச கிருத்தியமே திருக்கூத்தென்று விசாரித்தறிவாயாக. (௩௬)

மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய வமுக்கியரு டானெடுத்து - நேயத்தா
லானந்த வாரிதியி லான்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பாதந் தான்.

இ-ள். மாயைதனையுதறி - டமரகமேந்திய ஸ்ரீ அத்தத்தினாலே மாயையைநீக்கி,— வல்வினையைச்சுட்டு-அக்கினியேந்திய ஸ்ரீ அத்தத்தினாலே கன்மமலத்தைச்சுட்டு,—மலஞ்சாயவமுக்கி-ஊன்றிய ஸ்ரீபாதத்தினாலே மலமேலிடாமலமிழ்த்தி;—அருடானெடுத்து - தூக்கியபாதத்தினாலே யருளே தனுவாக நிறுத்தி,— நேயத்தாலானந்தவாரிதியி லான்மாவைத் தானழுத்தல்தான்-கிருபையினாலே யமைத்த ஸ்ரீ அத்தத்தினாலே யானந்த வெள்ளத்திலே ஆன்மாவை யழுத்துகிறதுதான்,—எந்தையார் பாதந்தான் - எம்முடைய சுவாமியாகிய பரமேஸ்வரனுடைய திருக்கூத்துமுறைமை. (௩௭)

மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடு - மானந்த
மொண்டருந்தி நின்றாடல் காணுமருண் மூர்த்தியாய்க்
கொண்டதிரு வம்பலத்தான் கூத்து.

இ-ள். மோனந்தமாமுனிவர் மும்மலத்தை மோசித்து - மௌனஞானிகள் கத்தாவினுடைய கிருபையினாலே மூன்று மலங்களையுநீக்கி,— தானந்தமானிடத்தே தங்கியிடும் - ஆன்மபோத முடிந்தவிடத்திலேயுதயமாகிற,—ஆனந்தமொண்டருந்தி நின்றாடல்காணும் - ஆனந்தவெள்ளத்திலே முகந்துகொண்டநுபவிக்கிறதுதான்,— அருண்மூர்த்தியாய்க்கொண்ட திருவம்பலத்தான்கூத்து - ஆன்மாக்களை யிரக்ஷிக்கவேணுமென்கிற காருணியமே திருமேனியாகக்கொண்டு திருவம்பலத்தின்கண்ணிலெழுந்தருளிநின்று நிருத்தஞ்செய்கிற முறைமைத்தாம்.

உரையுணர்வுக் கெட்டா வொருவன்மிகு பஞ்சாக்
கரத்தால் வரைமகடான் பாதி - பரையிடமாய்க்
காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
பேணு மவர்க்குண்டோ பிறப்பு.

இ-ள். உரையுணர்வுக்கெட்டா வொருவன் - மனவாக்குக் காயங்களுக்கெட்டாத வொப்பற்ற பரமேஸ்வரன்,—மிகுபஞ்சாக்கரத்தால் - பஞ்சாக்கரத்தினாலே மிகுந்தகாருணியமே திருமேனியாகக்கொண்டு, — பரையிடமாய் நின்று - பராசத்தியாகிய திருவம்பலமிடமாகநின்று, — வரைமகடான் காணும் படியே - மலையரையன்மகள் காணும்படிக்கு,—கருணை யுருக் கொண்டு - கிருபையினாலே திருமேனிகொண்டெழுந்தருளி, —ஆடல் பேணுமவர்க்குண்டோபிறப்பு - ஆடியருளிய திருக்கூத்தை விரும்பினபெயர்கள் பின்பு சநநமற்றவர்கள். (கூக)

நாதாந்த நாடகத்தை நன்றா யருள்செய்தீ
ரோதீ ரெழுத்தஞ்சு முள்ளபடி - தீதறவே
யஞ்செழுத்தி தாகி லழியுமெழுத் தாய்விடுமோ
தஞ்ச வருட்குருவே சாற்று.

இ-ள். நாதாந்தநாடகத்தை நன்றா யருள்செய்தீர்-தத்துவாதீதமாயிருக்கிற திருக்கூத்து முறைமையை நன்றாயருள் செய்தீர், — அஞ்செழுத்திதாகி லழியுமெழுத்தாய்விடுமோ - பஞ்சாக்கர மெழுத்துகளிலே யொன்றாயிருக்குமாகில் அழிகிற வெழுத்துகளாமோ,—தஞ்சவருட்குருவே- புகலிடமாயிருக்கிற கிருபையுடைய தேசிகனே, — தீதறவேயோதீ ரெழுத்தஞ்சு முள்ளபடிசாற்று - குற்றமற்ற பஞ்சாக்கரத்தி னுண்மையை யுண்டானபடியே யடியேனுக் கருள்செய்யவேண்டும். (௬0)

உற்ற குறியழியு மோதுங்காற் பாடைகளிற்
சற்றும் பொருடான் சலியாது - மற்றதுகே
ளீசனரு ளாவி யெழிலார் திரோதமல
மாசிலெழுத் தஞ்சினடை வாம்.

இ-ள். ஓதுங்கால் - சொல்லுமிடத்து, — உற்றகுறியழியும் - பொருந்தப்பட்ட வெழுத்துகளுடைய குறிகளழியும், — பாடைகளிற்சாற்றும்பொருடான் சலியாது - பதினெண்பாடைகளிலே யுண்டானபொருள்கள் சற்றுங்கெடாது, — மற்றதுகேள் பஞ்சாக்கரத்தினுண்மையைச் சொல்லுகிறமுறைமைகேள், —ஈசனருளாவி யெழிலார்திரோதமலம் ஆசிலெழுத்தஞ்சினடைவாம் - சிவன் அருள் ஆன்மா வழகியதிரோதம் மலம் ஐந்தும் குற்றமில்லாத பஞ்சாக்கரத்தின் முறைமைத்தாம்.

சிவனரு ளாவி திரோதமல மைந்து
மவனெழுத் தஞ்சி னடைவா - மிவனின்று
நம்முதலா யோதிலரு ளூடாது நாடுமருள்
சிமுதலா யோதுநீ சென்று.

இ-ள். சிவனருளாவி திரோதமலமைந்து மவனெழுத்தஞ்சினடைவாம் - சிவம் அருள் ஆன்மா திரோதம் மலம் ஐந்தும் பரமேஸ்வரனுடைய பஞ்சாக்கரத்தின் முறைமைத்தாம், —இவனின்று - பக்குவப்பட்டவான்மாநின்று, — நம்முதலாயோதிலருளூடாது - நகாரமுதலாகவுச்சரிக்கில் அருள்பொருந்தாது, — நாடுமருள் சிம்முதலாயோது நீசென்று - ஆசாரியானுக்கிரகம்பண்ணின முறைமையிலேநின்று சிகாரமுதலாக வுச்சரிக்கி லருள்பொருந்தும். (கஉ)

அண்ணல் முதலா யழகா ரெழுத்தைந்து
மெண்ணி லிராப்பகலற் றின்பத்தே - நண்ணி
யருளா னதுசிவத்தே யாக்கு மணுவை
யிருளா னதுதீர வின்று.

இ - ள். அண்ணல்முதலாயழகாரெழுத்தைந்தும்-சிவமுதலா யழகுபொருந்திய பஞ்சாக்கரமைந்தும்,—எண்ணில் - இடைவிடாம லுச்சரிக்கில்,—இராப்பகலற்றின்பத்தே - கேவலசகல மற்ற விடத்தே,— நண்ணியருளானது சிவத்தேயாக்கு மணுவை யிருளானது தீரவின்று - ஆன்மாவுக்கு ஆணவமலமானது நீங்க வருளானது பேரின்பமாகிய சிவத்திலே பொருத்திவிக்கும். (சாக)

ஆதி மலமிரண்டு மாதியா யோதினுற்
சேதியா மும்மலமுந் தீர்வாகா - போத
மதிப்பரிதா மின்பத்தே வாழலா மாறி
விதிப்படியோ தஞ்செழுத்து மே.

இ - ள். ஆதிமலமிரண்டு மாதியா யோதினுற் சேதியா மும்மலமுந்தீர்வாகா - ஆதியாகிய நகாரமும் மலமாகிய மகாரமும் இரண்டுமெடியாக வுச்சரித்தால் உறுதியாக மும்மலமுநீங்கி ஆன்மா வருளைப்பொருந்திப் பேரின்பவாழ்வையுறமாட்டாது. உறுமுறைமை கூறுமிடத்து,—மாறிவிதிப்படியோதஞ்செழுத்தும் (ஓதினுல்) போத மதிப்பரிதா மின்பத்தேவாழலாம்-நகாரமுதலாக வுச்சரிக்கு முறைமையைமாறிச் சிவமுன்னுக அத்திருவெழுத்தஞ்சையும் விதிப்படியுச்சரிக்கவான்மபோதத்தால் மதித்தற்கரிதாகிய பேரின்பவாழ்விலெய்தி வாழலாம் நீயும் சிவமுன்னுக வுச்சரிப்பாயாக. (சச)

அஞ்செழுத்தே யாகமமு மண்ண லருமறையு
மஞ்செழுத்தே யாதிபுரா ணம்மனைத்து-மஞ்செழுத்தே
யானந்தத் தாண்டவமும் யாவைக்கு மப்பாலா
மோனந்த மாமுத்தி யும்.

இ - ள். அஞ்செழுத்தேயாகமமு மண்ணலருமறையும்-பரமேஸ்வரன் திருவுளம்பற்றுகின்ற இருபத்தெட்டு திவ்வியாக

மங்களும் நாலுவேதமும் பஞ்சாக்கரமே, — அஞ்செழுத்தே யாதிபுராணம் மனைத்தும் - பதினெண்புராணங்களனைத்தும் பஞ்சாக்கரமே, — அஞ்செழுத்தே யாநந்தத் தாண்டவமும் - ஆநந்தநடனமும் பஞ்சாக்கரமே,—யாவைக்கு மப்பாலா மோனந்தமாமுத்தியும் - தத்துவாதீதமாகிய மௌனஞானமாயிருக்கிற பரமுத்தியும் பஞ்சாக்கரமே. (சரு)

முத்தி தனையடைந்தோர் முந்துபழம் போதங்கி
வித்தகமாம் வீணை யிசையிற்றி - னைத்த
விரதமணம் வெம்மை யெழிஞதம் போல
விரவுவரென் றோதும் விதி.

இ - ள், முத்திதனையடைந்தோர் - மோக்ஷத்தையடைந்த பெயர்கள் பேரின்பத்திலே யிரண்டற நிற்கிற முறைமைக்குத் திருஷ்டாந்த மெப்படியென்று கேட்கிறாயானால், — முந்து பழம்போதங்கிவித்தகயாம்வீணையிசையிற்றினைத்தவிரதமணம் வெம்மையெழிஞதம்போல - பழமும் ரசமும்போலவும் பூவு மணமும்போலவும் அக்கினியும் வெம்மையும்போலவும் பண்ணு மோசையும் போலவும்,—விரவுவரென்றோதும் விதி - இப்படி யிரண்டறப்பொருந்தி நிற்பார்களென்றாகமங்களிலேசொல்லும்.

தத்துவங்க ளெல்லாஞ் சகசமா யான்மாவிற்
பெத்தத்தி னிற்கின்ற பெற்றிபோல் - முத்திதனிற்
சித்தமல மற்றூர் செறிந்திடுவ ரென்றுமறை
சத்தியமா யோதியிடுந் தான்.

இ - ள். தத்துவங்களெல்லாஞ் சகசமா யான்மாவிற் பெத்தத்தினிற்கின்ற பெற்றிபோல் - பெத்தத்திசையிலே தத்துவங்களெல்லாம் ஆன்மாவினிடத்திலே யிரண்டறநிற்கிறமுறைமைபோல,—முத்திதனிற்சித்தமலமற்றூர் செறிந்திடுவரென்றுமறை சத்தியமா யோதியிடுந்தான் - முத்தித்திசையிலே சகச

மலமற்ற பக்குவப்பட்ட வான்மாக்கள் சிவனிடத்திலே இரண்டறப் பொருந்துவார்களென்று சத்தியமாகவே சிவாகமஞ் சொல்லும். (சஎ)

ஆதவன்றன் சந்நிதியி லம்புலியி னார்சோதி
பேதமற நிற்கின்ற பெற்றிபோ - னாதாந்தத்
தண்ணா றிருவடியி லான்மா வணைந்தின்பக்
கண்ணி லழுந்தியிடுங் காண்.

இ-ள். ஆதவன்றன்சந்நிதியி லம்புலியினார்சோதி பேதமறநிற்கின்ற பெற்றிபோல் - ஆதித்தப்பிரகாசத்தின் முன்னே சந்திரப் பிரகாசமான திரண்டறநிற்கிற முறைமைபோல,— நாதாந்தத்தண்ணா றிருவடியி லான்மாவணைந்து - தத்துவாதீதமாயிருக்கிற திருவடி ஞானத்திலே யான்மாப்பொருந்தி,— இன்பக்கண்ணி லழுந்தியிடுங் காண் - பேரின்பத்திலே யிரண்டறப் பொருந்துமென் றறிவாயாக. (சஅ)

சென்றிவன்று னொன்றிற் சிவபூ ரணஞ்சிதையு
மன்றவன்று னொன்றுமெனி லந்நியமா - மின்றிரண்டு
மற்றநிலை யேதென்னி லாதித்த னந்தன்விழிக்
குற்றமற நின்றதுபோற் கொள்.

இ-ள். சென்றிவன்றானொன்றிற் சிவபூரணஞ்சிதையும்- ஆன்மா சிவனைச்சென்று பொருந்துவானாகில் சிவனுக்குப் பூரணத்துவமில்லையாகவேணும்,— அன்றவன்றானொன்றுமெனி லந்நியமாம் - சிவனான்மாவைச்சென்று பொருந்துவானாகி லப்போ வான்மா வேறாயிருக்கவேணும், — இன்றிரண்டு மற்ற நிலையேதென்னில்-இரண்டுமுறைமையுமல்லாமல்நின்ற நிலைக்குத் திருஷ்டாந்தமெப்படியென்று கேட்கிறாயானால்,—ஆதித்தனந்தன்விழிக் குற்றமறநின்றதுபோற்கொள் - அந்தகனுக்குப்

படலநீங்கினகாலத்து ஆதித்தப்பிரகாசமுங் கண்ணினுடைய வொளியும் இரண்டறக்கலந்து நின்றாற்போல. (சக)

வாக்கு மனமிறந்த வான்கருணை யாளனொரு
தாக்கறவே நிற்குந் தனிமுதல்வா - நீக்காப்
பதியினைப்போ னித்தம் பசுபாச மென்றாய்
கதியிடத்து மூன்றினையுங் காட்டு.

இ-ள். வாக்குமனமிறந்த வான்கருணை யாளனொரு தாக்கறவேநிற்குந் தனிமுதல்வா - மனவாக்குக் காயங்களுக் கெட்டாதபொருளே வடிவாய் அடியார்களிடத்திலே யிரண்டறநிற்கிற வொப்பற்ற கத்தாவே.—நீக்காப் பதியினைப்போ னித்தம் பசுபாச மென்றாய் - விட்டு நீங்காமலிருக்கிற பதியினைப்போற் பசுவும் பாசமு நித்தியமென் றருளிச்செய்தது,—கதியிடத்து மூன்றினையுங்காட்டு - முத்தியிலும் பதி பசு பாச மூன்றுமுத லும் அழியாமனிற்கிற முறைமையை அடியேனுக்கு அருளிச்செய்யவேணும். (ருo)

முத்திதனில் மூன்று முதலு மொழியக்கேள்
சுத்தவநு போகத்தைத் துய்த்தலணு - மெத்தவே
யின்பங்கொ டுத்தல் றை யித்தவினை வித்தல்மல
மன்புடனே கண்டுகொளப் பா.

இ-ள். முத்திதனில் மூன்றுமுதலு மொழியக்கேளப்பா-அப்பனே முத்தியிலும் பதிபசுபாச மூன்று முதலுமழியாமனிற்கிற முறைமையைச்சொல்லுகிறேங்கேள்,— சுத்தவநு போகத்தைத் துய்த்தலணு-பேரின்பத்தைப் புசிக்கிற தான்மா,—மெத்தவே யின்பங்கொடுத்த லிறை - பேரின்பத்தை மிகுதியுங் கொடுக்கிறது கத்தா,—இத்தைதவிளைவித்தல்மலம் - பேரின்பத்தை மேன்மேலும் விளைக்கிறது மலம்,— அன்புடனே கண்டுகொள் - அன்பினாலே யறிவாயாக. (ருக)

அப்பாவிம் முத்திக் கழியாத காரணந்தான்
செப்பா யருளாலே செப்பக்கே - ளொப்பில்
குருலிங்க வேடமெனக் கூறிலிவை கொண்டார்
கருவொன்றி லில்லார்கள் காண்.

இ-ள். அப்பா விம்முத்திக் கழியாத காரணந்தான் செப்பாயருளாலே செப்பக்கேள் - அப்பனே முத்தியைப்பெறுகைக் கழியாதகாரணஞ் சொல்லுகிறோங் கேட்பாயாக. — ஒப்பில் - உவமையில்லா திருக்கிற சிவம்,—குருலிங்கவேடமெனக்கூறில் குருவும் லிங்கமும் சங்கமமுமேயென்று கூறுகையால் சிந்திதுகைக்கண்டு வழிபடுகிற சிவமென்று,—இவை கொண்டோர் - இந்த முப்பொருளேயு முண்மையாகக் கொண்டோர், — கருவொன்றி லில்லார்கள்காண் - கருவிலேபொருந்திப் பிறந்திறவார்கள். (ருஉ)

கற்று மனம்போற் கசிந்துகசிந் தேயுருகி
யுற்றுசா னிலிங்க முயர்வேடம் - பற்றுக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனி னின்றிடுவர் பார்.

இ-ள். கற்றுமனம்போற்கசிந்துகசிந்தேயுருகி - ஈன்றண்ணிதான பசுவைப்போலுள்ளுருகிக் கசிந்துகசிந்து,—உற்றுசானிலிங்க முயர்வேடம்பற்றுக - மானிடதேகத்தைப்பொருந்திவந்த ஆசாரியனையும் சிவலிங்கப்பெருமானையும் பெரியவேடத்தாரையும் இந்த மூன்றுவடிவைத் தங்களுக்குப்பற்றான தெய்வமாகக்கொண்டு, — முத்தித்தலைவர் முழுமலத்தை மோசிக்கும் பத்திதனில்நின்றிடுவர்பார் - பரமமுத்தியைப் பெறுகைக்குத் தலையான சத்திநிபாதத்தையுடையதபோதனர் முழுமலமாகிய பாசநீங்குகைக்குக் கரையழிந்த பத்தியின்கண்ணே நிற்பார் நீயுமிந்த முறைமையிலேபார்த்து வழிபட்டு நிற்பாயாக. (ருக)

வாழ்ந்தே னருட்கடலே வற்றாப் பவக்கடலில்
வீழ்ந்தே யலையாமன் மேதினியிற் - சூழ்ந்துவிடா
வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே
யுண்மைத் தவப்பயனே யுற்று.

இ - ள். சூழ்ந்துவிடாவெண்ணெய் மேதினியில் சுவேதவனமெய்கண்டநாதனே - சத்தியத்தைத் தரிசித்தவர் விட்டு நீங்காத திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளியிருக்கப் பட்டசுவேதவனனென்கிற பிள்ளைத் திருநாமத்தையுடைய மெய்கண்டநாதனே, — உண்மைத்தவப்பயனே - உண்மையான தவத்தைப்பண்ணினவர்களுக்குப் பயனாயுள்ளவனே,— வற்றாப்பவக்கடலில் வீழ்ந்தேயலையாமல்-பிறவியாகியகடலில் அடியேன் வீழ்ந்தலையாமல், — அருட்கடலே வாழ்ந்தேன் - தேவரீர் காருண்ணியத்தினாலே வாழ்ந்தேன். (ருச)

திருச்சிற்றம்பலம்.

உண்மைவிளக்க மூலமும் உரையும்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர்

அருளிச்செய்த

திருவருட்பயன்.

இதற்குப் பதவுரையும்

நிரம்பவழகியர் பொழிப்புரையும்.

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

காணியம்பாக்கம்

முருகேசமுதலியாரால்

சென்னை;

இந்துதியலாஜிகல்யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

௧௮௯௨.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

அலைகடல்சூழ்ந்த நிலவுலகின்கண் ஆன்மாக்களனைவற்றிற்கும் அருள்சுரந்தளிக்கும் அறப்பெருங்கடவுள் அன்பின்வழியறிந் தடிமைபூண்டொழுகும் சிற்றறிவுயிர்கள் சிற்சில விருப்பினும், கருணையிற்சிறந்த வொருபெருங்கடவுள் பழமையிற்பழமையாய்க் கல்வியறிவொழுக்கங்களாற் கற்றுணர்ந்தடங்கு மானிடர்கள் பாசத்தாற் சுழித்தலைத்துப் பவமாகியகடலில் அழுந்தாவண்ணம் வேதங்களை யருளிச்செய்தனர் என்பது பலசமயத்தவர்க்கும் ஒப்பமுடிந்ததேயாம்.

அதனை யவரவர் கன்மத்தளவா யறிவுறுத்தும் ஆசாரியர்களநேகர் தோன்றி அவ்வவ்காலத்தில் அவ்வச்சமயங்களைச் சீடர்கள்கட்டுண் டொருவழிப்பட ஏற்படுத்தினமையால் சமயங்களு மதற்கேற்றநூல்களும் பலவாய்விரிந்தன.

அவ்வாறு பலவேறு பொருள்கொண்டு மயங்குறுவண்ணம் மெய்ப்பொருளை திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவராயவதரித்துச் சிவஞானபோதமென்னு நூலருளிச்செய்தனர்.

சிவஞான போதத்தை விரித்து அவர் மாணக்கர் அருணந்திதேவர் சிவஞானசித்தி செய்தருளினர்.

அருணந்திதேவர் மாணாக்கராகிய மறைஞானசம்பந்தரிடம் அநுக்கிரகம்பெற்ற உமாபதிசிவாசாரியர் சிவஞானசித்தியைத் தொகுத்துச் சிவப்பிரகாசமென யாவரும் எளிதிலுணரும்படி யோர்நூ லருளிச்செய்தனர்.

உமாபதி சிவாசாரியர் தாம்செய்த சிவப்பிரகாசம் முன்னூற்கேற்ப முடிந்தமையால் சிறிது விரிந்திருப்பதைப்பற்றி மிருபக்குவமுடைய அடியார்க்கு வருத்தமின்றி மனனமாகும்பொருட்டுத் திருவருட்செயலால் திருவருளடையும் திருவருட்பயனென் னிந்நூலருளிச்செய்தனர்.

இதற்குப் பதவுரைசெய்தவர் நாமம் பிரதிகளில் காணப்படவில்லை, ஆயினும் சித்தாந்தசாத்திரங்களுக்குப்பெரும்பாலும் பதவுரை வேலப்பபண்டாரம் செய்திருக்கின்றனர் ; இவ்வுரையும் அந்நடையே கொண்டிருக்கின்றது.

சேதுபுராணஞ் செய்தவரும், சேதுமடாலய சைவாசாரியருமாகிய நிரம்பவழகியர், இந்நூலுக்குப் பொழிப்புரை யருளிச்செய்தனர்.

இவ் விருவகையுரையும் சிற்சிலவிடங்களில் விசேஷக் கருத்தடங்கி யிருப்பதாலும் சித்தாந்த நூலுணர்வோர் கல்விப் பயிற்சியில் சிறிதடைந் திருப்பினும் இவ்வுரைகளை வாசிப்பதால் பெரும்பய னெளிதிலடைந்து மிகவும் வித்தியாசாகர ராவாரெனவும் கருதிப் பலர் தெரிவித்தபடி சேர்த்து அச்சிடப்பட்டது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

காப்பு.

நேசத் தடியர் நினைந்துருகி நின்றிட்ட
வாசத் தினைகடக்க மாட்டாது - பாசத்
திருகோட்டு முக்கட் சிவபெருமா னீந்த
வொருகோட்டு நால்வாயுவா.

நேரிசையாசிரியப்பா.

திருமகன்பிறந்த விரிதிரைப்பாற்கடற்
றுறையயங்கலங்காற் சுழற்றுபுவெடுப்ப
வலைவுதறவெழுந் தண்டமீப்படர்ந்து
நிலைபெறுகின்ற நெடுந்திரளன்ன
வின்னாறீரிண்ட நன்னலந்தசாக்கவின்
விளங்கெழிற் றருமந் திரண்டெயிற்றிருந்த
வண்ணமும்போறு மன்னைறன்கயிலை
காவலிற்பாக்குங் கன்னறுதற்கடவு
ளாங்கிதாள்சுமத்துவந் தவ்வழிக்கொண்டற்
பெண்ணையாறடுத்த வெண்ணெய்நின்றுருத்த
தொண்டர்களிதய முண்டகமலர்த்தும்
விருதைசானரவி மெய்கண்டதேவன்
மறையகத்தடக்கிய வொருதனிக்குடிலையு
மருளுணவிறைந்த பொருண்முழுதுணர்த்து
மாடிபோலக் கூடியகாட்சியிற்
புகல்சிவஞான போதநூறெருக்க
வகல்பொருட்டோர்தற் கருமையுமாங்கவன்
சம்பிரதாயத் தத்தமில்லான்பொரு

கரு

ஞாலவாய்ப்பெருங்களி யுள்ளம்படைத்த
பண்பின்மேதகைய சண்பையர்கோமான்
றற்பலன்றோராப் பற்பலசமயிகள்
மலைத்தலைக்கொண்மூ மாருதமறைந்தெனத்
தலைத்தலையிரியத் தானினிதுரைத்த
புகழ்சிவஞான போதமுள்ளுறையாந்
திகழ்சிவஞான சித்தியின்விரிவு
மென்போன்மருண்ட புன்புலமாக்க
டராவிடும்பையுந் திருவுளங்கொண்டுதன்
றூக்காதலி னூக்கியோனுகப்
பாவிடங்கொண்டதன் னாவிடங்கொண்டு
பவப்பிரகாசப் படரிருள்விழுங்குஞ்
சிவப்பிரகாசத் திருப்பெயர்மேவித்
திசைமகண்மருங்கிற் பரிவுடன்வளைத்த
நரலையின்றுறைக்கு நான்மடங்குடைய
சைவநூற்சலதி நொய்தினிற்கடத்து
மரக்கலமதற்கு மாலுமியொப்ப
வெழிலீரைந்தும் வழுவறப்புணர்த்தித்
தெள்ளுசீர்ப்புலமை வள்ளுவன்றனக்கோர்
நற்றுணையுடைத்தெனக் கற்றவர்களிப்ப
வருட்பயனென்று வதற்கொருநாமந்
தெருட்படப்புனைந்து செந்தமிழ்யாப்பிற்
குறளடிவெள்ளை யொருநூறியம்பினன்
மற்றவன்புலியூர் வளநகர்க்கீழ்பாற்
கொற்றவன்குடியிற் குடிகொண்டுறைந்த
பூசுரனுறைந்த புதுமதிவேணியுங்
காசறுங்கண்டமுங் கரந்த
தேசிகனுமாபதி சிவனென்பவனே.

சிறப்புப்பாயிர முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பயன்.

உமாபதிசிவனென்னும் பிள்ளைத் திருநாமத்திற்கும் இந்நூற்கும் முதல்வராகிய கொற்றவன்குடி முதலியார், அறம் பொருள் இன்பம் வீடு என்னு நான்கினுள் வீட்டுநெறி காட்டுவான் தம்மா லெடுத்துக்கொள்ளப்பட்ட இலக்கியம் இடையூறின்றி யினிதுமுற்றுதற் பொருட்டு, ஆதிக்கண்ணே கரிமுகக் கடவுளை வணக்கஞ் செய்தருளுகின்றார். வழிபடு தெய்வ வணக்கஞ்செய்து மங்கல மொழிமுதல் வகுத்தெடுத்துக் கொள்ளப்பட்ட இலக்கண விலக்கியம் இடுக்கணின்றி யினிதுமுடியு மென்பாராகலின்.

காப்பு.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

என்பது, அடைந்தோர்பாற் செய்யு நல்லருளினையுடைய யானைமுகத்தினையும், என்று மொருபடித்தா யிருக்கும் இளமையினையும் பெற்ற கடவுளை, ஒருவர்மன மொழி மெய்களால் வந்திப்பாராயின், அவர்க்கு வேதாகம புராணமுதலிய கலைகள் யாவும் வருந்திக்கற்கும் பண்டமல்ல என்றவாறு. இதனாற்றானே யெளிதின் வருமென்பதாம்.

உலகத்துஆனைகளெல்லாம் அடைந்தோர்பாற் றுன்பஞ்செய்தலின் இதனை நற்குஞ்சரக் கன்றென் றருளிச்செய்தார். யானை யறிந் தறிந்தும் பாகனையே கொல்லும் என்றறிக. இஃதாகுபெயர்.

இந்நூலின் காப்பும் உரையும் சிறப்புப்பாயிரமும் அதன் முன் னுரைக்கும் உரையாசிரியர் காப்பும் சேது நிரம்பவழகியர் உரையிலிருந் தெடுத்துச் சேர்க்கப்பட்டன.

க - வது. பதிமுது நிலை.

அஃதாவது மேலாகிய இறைவனது இயல்பு.
சிவனுக்குத் தன்னியல்பேதென்னில்?

அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து.

எ - து. அகரவுயிர்போல் - அக்கரங்களுக்கெல்லாம் அகாரமாகிய வெழுத்துப் பிராணனாய் நின்றாற்போல்,—அறிவாகி - ஆன்மாக்களுக் கெல்லாமறிவாகி,—எங்கும் - சடத்திலுஞ் சித்திலும்,—நிகரிலிறை - ஒப்பில்லாத கடவுள்,—நிற்கு நிறைந்து - சர்வத்திர பரிபூரணனா யசைவற்று நிற்பன் என்றவாறு.

நி - வ - உ. அகரமாகியவுயிர் எழுத்துக்களெல்லாவற்றினும் பொருந்தி வேறற நின்றாற்போலத் தனக்கோர் உவமனில்லாத் தலைவன் உலகுயிர்முழுதும் ஒழிவற நிரம்பி ஞானவுருவாய் அழிவின்றிநிலைபெறும்.

அகரம் தானேதனித்தும் ஏனையுயிருடம்புக் கெல்லாம் வேறின்றிப்புணர்ந்தும் நிற்றலானும், அங்ஙனம்புணர்க்க வழியுந் தன்னுருவுதோன்றாதாகலானும், முதற்கண் வைக்கப்படுத

லானும், விகாரமின்றி நாதமாத்திரையா யியல்பாற் பிறத்தலானும், இறைவற் குவமையாயிற்று. இவ்வொப்புவமையாற் சடமாகியவொலி வடிவன்றென்பதற்கு அறிவாகியென்றும், அகரம்போலவொருகாற் புணர்ந்து நீங்காதென்பதற்கு நிறைந்தென்றும், அவ்வகரமுதலிய வெழுத்துக்களு மூட்டபடுதற் கெங்குமென்றும், மாணாக்கற் கறிவித்தற் பொருட்டு உவமனொடுபுணர்த்தினும் அன்னதன்றென்பதற்கு நிகரிலென்றுங் கூறியருளினார்.

“அக்கரங்கடோறுஞ் சென்றிடு மகரம்போல நின்றனன் சிவனுஞ்சேர்ந்தே” என்றருளிச் செய்தவாறுங்காண்க.

இதனா லிறைவன துண்மையும், அவன் வேறற நின்றமையுங் கூறப்பட்டன. (க)

இப்படி மனம் வாக்குக் காயங்களுங் கெட்டாமலிருந்தா லான்மாக்கள் மலபரிபாகம்வந்து மோக்ஷமடைகிற தெப்படி யென்னில்?

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலா னெங்கள் பிரான்.

எ - து. தன்னிலைமைமன்னுயிர்கள் - தன்னுடைய நின்மலமாகிய சுவதந்திரத்தை நிலைபெற்றவான்மாக்கள்,—சார - பொருந்த,—தருஞ்சத்தி - கூட்டு மருட்சத்தி. அதனாற் சத்தியுஞ் சிவமு மிரண்டோ வென்னில்?,—பின்னமிலா னெங்கள்பிரான் - இரண்டில்லாதவன் எங்கள்சுவாமி.

நி - வை - உ. வாக்குமனங்கட் கெட்டாத தனது விமலஞானாந்த வீட்டினெல்லையை நிலைபெற்ற ஆன்மாக்கள் வந்து பொருந்தும்படிசெய்யும் அருளாகிய பராசத்தியுடனே பேதமின்றியொன்றி நிற்பான் எம்முடைய இறைவன்.

மன்னுயிர்களென்றதனால் ஆன்மாக்கள் வினைவயத்தில் உருவுந்தொழிலும் வேறுபடுவதன்றி நிலமுதல் நாதமீறாகிய தத்துவங்கள்போலப் பிறந்திறப்பன வல்லவாம்.

இதனால் அவன் ஓர் சத்தியோடும் கூடிநிற்பனென்பதூஉம், அது கருணைவடி விற்றென்பதூஉம் கூறப்பட்டன. (௨)

அப்படி யும்முடையகடவுள் மகத்துவமோ வென்னில்?

பெருமைக்கு நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றி
னருமைக்கு மொப்பின்மையான்.

எ - து. பெருமைக்கும் - ஆன்மபோதத்தாலே யறியப்படாத மகத்துவத்துக்கும்,—நுண்மைக்கும் - இப்படிப் பஞ்சகிருத்திய நடத்தைநயிலேயு மான்மாக்களாலே யறியப்படாத விரகசியத்துக்கும்,—பேரருட்கும் - ஆன்மாக்கள்மேல் வைத்த மிகுந்த கிருபைக்கும்,—பேற்றினருமைக்கும் - சரிதை கிரியா யோகங்கண் முடிந்த விறுதியிலே சாயுச்சியத்தைக்கொடுக்கப்பட்ட வாச்சரியத்துக்கும்,—ஒப்பின்மையான் - இவனுக்குவமையில்லை.

வி - வ - உ. எவ்விடத்துமுளதாய நிறைவினானும், நொய்மையினானும், மிகுந்த கருணையினானும், ஒருவாற் பெறுதற்கருமையானும், ஆயவிந்நான்கினுந் தனக்கோ ரொப்புவமையில்லாதான் முன்னங்கிளந்த எம்மிறைவன்.

இவ்வாற்றால் தனக்குவமனில்லானுகவே பற்றனைத்தியல்பினானும் ஒப்பிலனாதலினால் உய்த்துணர்க.

“ அண்டப்பகுதியி னுண்டைப்பிறக்க
வளப்பருந்தன்மை வளப்பெருங்காட்சி
யொன்றினுக்கொன்று நின்றெழில்பகரி
னூற்றொருகோடியின் மேற்படவிரிந்தன
வின்னுழைகதிரின் றுன்னணுப்புரையச்

சிறியவாகப்பெரியோ னெனவும்
செருமைக்கண்டமனுத்தர
வணுவண்டத்து
நின்றுதுணங்கிய தண்டாச்சீர்த்தி”
எனவு மருளிச்செய்தவாறு காண்க.

குவ்வுருபு மூன்றும்வேற்றுமைப் பொருள்தந்தது. “யாத னுருபிற் கூறிற்றாயினும், பொருள்செல்மருங்கின் வேற்றுமை சாரும்” என்பதிலக்கணமாதலின்.

இதனாலிறைவன துயர்புகூறப்பட்டது. (௬)

இவனுக்கொப்பில்லை யென்பானேன், மூவரி லொருவ னல்லவோ வெனின்?

ஆக்கி யெவையு மளித்தா சடங்கப்
போக்குமவன் போகாப் புகல்.

எ - து. ஆக்கி - பிரமாவை யுண்டாக்கிச் சகத்தைச் சிருட்டிப்பித்து,—எவையுமளித்து - விட்டுணுவை யுண்டாக்கிச் சகத்தையெல்லா மிரட்சிப்பித்து,—ஆசடங்கப்போக்குமவன் - முடிவின் மாயாமலத்திலே யெல்லாமடங்கச் சங்கரிக்குந் தன்மையையுடைய கர்த்தாவாய்,—போகாப்புகல் - தானென்று முடிவில்லாம லந்தப்பிரமா விட்டுணு ஜகமெவையிற்றுக்கும் புகலாகிய வாண்டவனும்.

வி - வ - உ. இனையனாகிய அக்கடவுள் ஒருவன் ஒருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட வுலகங்களெல்லாவற்றினையும் படைத்துநிறுத்தி யிச்சா ஞானக் கிரியைக ளுணராதவண்ணம் ஆன்மாக்களெல்லாம் மூலமலத்துடனே அடங்கியிருக்கும்படி அழித்தலைச் செய்யுந் தான் எஞ்ஞான்று நீங்காததோர் புகலிடமாயிருக்கும்.

ஆசுடனடங்கவென்றதனல் புனருற்பத்தி யுண்டென்பது கூறியதாயிற்று. "உயிரவையொடுங்கிப் பின்னுமுதிப்பதெனரன்பாலென்னிற் - செயிருறுமலத்தினுகும்" என்றருளிச் செய்தவாறுகாண்க.

இதனல் அவனொருவனே முத்தொழிற்கும் உரியனென்பது கூறப்பட்டது. (ங)

அவனருவமோ வுருவமோ வருவா ரூபமோ வென்னில்?

அருவு முருவு மறிஞர்க் கறிவா
முருவ முடையா னுளன்.

எ-து. அருவு முருவும் - அருவமு முருவமு மருவாருபமுமாம்,—அறிஞர்க்கு - அறிவான்மிக்க நாதாக்களுக்கு,—அறிவாமுருவம் - ஞானமாகிய வருட்டிருமேனியை,—உடையானுளன் - உடைத்தானவனு யிருக்கின்றான்.

நி-வ-உ. சிவம் சத்தி நாதம் விந்து என்னும் அருவடிவு நான்கும், மகேசுரன் உருத்திரன் மால் அயனென்னும் உருவடிவு நான்குமுடையன், அவ்விறைவன் அறிவுடையாரது உள்ளத்தின் தோன்றும் ஞானவுருவினையு முடையனுகலான்.

அருவும் உருவும் உளனெனவே அருவுருவாகிய சதாசிவவடிவமென்பது கூறவேண்டா வாயிற்று.

"சிவஞ் சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழுமீச - னுவந்தருளுருத்தி ரன்றான்மாலய னொன்றினொன்றாய்ப், பவந்தருமுருவநாலிங் கருவநான் குபயமொன்று, நவந்தரு பேதமாகநாதனுடிப்ப னென்ப" என்றும் "குறித்ததொன் றாகமாட்டாக் குறைவில னுதலானும்." என்றும் அருளிச்செய்தவாறுகாண்க.

இதனு லவனருவுருவு கூறப்பட்டன. (ச)

உடமையாகி லொருவ னுண்டாக்கிக் கொடுக்கவேண்டு மென்னில்?

பல்லா ருயிருணரும் பான்மையென மேலொருவ
னில்லாதா னெங்க ளிறை.

எ - று. பல்லாருயிருணரும் - சர்வான்மாக்களுந் தங்கட்குக் கந்தா தனு கரண புவன போகங்களைத் தந்தறிவிக்கவறிகின்ற,—பான்மையென - முறைமைபோல,—மேலொருவனில்லாதான்-தானே யறிதலன்றித் தனக்கு மேலொருவ னறிவிக்கவேண்டுவ தில்லை யாதலாற் றனிமேனித் திருமேனியைத் தரித்துக்கொள்வன்,—எங்களிறை - எமதுகுத்தா.

நி - வ - உ. நிறைந்து எண்ணிறந்த ஆன்மாக்களும் அறிவிக்கவறியும் பகுதிபோலத் தனக்கு மேலாய் நின்று உணர்த்துவதோர் கடவுளை யில்லாதான் எம்முடைய இறைவன்.

இதனாற் கடவுட்டன்மை யொருவராற் பெறுது இயல்பாகவுடையன் என்பது கூறப்பட்டது. (கசு)

உம்முடைய கர்த்தாவை எல்லாராலு மறியலாமோவென்னில்?

ஆறு வறிவா யகலா னடியவர்க்கு
வாறுடர் காறு தமன்.

எ - று. ஆறுவறிவாய் - எவ்விடத்தும் நீங்காதபேரறிவாய்,—அகலானடியவர்க்கு - விட்டுநீங்கான் ஞானவான்களுக்கு,—வாறுடர்காறுதமன் - தன்னையறியாத பிரம விட்டுணு முதலாகியதேவர்களுக்கு அவர்கள் மனவாக்குக்காயத்துக்கெட்டாத ஞானவான்.

நி - வ - உ. நீங்காத ஞானமாய் அடியார்கள் உள்ளக்கம

லத்தினைவிட்டு ஒருபொழுதும் பிரிதல்செய்யான், தான் தேவர்களால் காண்டற்கரிய மேலோனாயினும்.

அடியவனெனவும், வானுடனெனவும், பொதுப்படக் கூறினமையால் யாவராயினும் அன்பர்க்கெளியனாதலும் அன்பால்லாதவர்க்கு அரியனாதலும் உடையன் என்பதாய்.

"கனவிலுந்தேவர்க் கரியாய்போற்றி, நனவிலுநாயேற் கருளினைபோற்றி" என்றருளிச்செய்தார் போதவூர் புகழகம் போர்த்த மெய்யன், வாதவூர் வந்தமறைமுதற்றலைவர்.

இதனால் அவன் அருள்புரியுமாறு கூறப்பட்டது. (எ)

உமதுகத்தா வேகதேசனோ வியாபகனோவென்னில்?

எங்கு மெனையு மெரியுறுநீர் போலேகந்
தங்குமவன் றானே தனி.

எ - து. எங்குமெனையும் - சித்தினும் சடத்தினும்,—எரியுறு நீர்போல - அக்கினியைப் பொருந்தின சலம்போல,—ஏகந்தங்கும் - கர்த்தாவிரண்டற வேகத்துவமாய்ப் பொருந்திநிற்பன்,—அவன்றானே தனி - அந்தக்கடவுடானே யொப்பில்லாதவன்.

நி - வ - உ. எல்லா வுலகங்களிடத்தும் அளவிறந்த வுயிர்களிடத்தும் நீரிடைநின்ற தழல்போல இரண்டறக் கலந்திருந்தானாயினும் அக்கடவுள் அப்பதங்களிற்றங்காது நீங்கி யேகனாய் நிற்பன்.

ஏகாரம் - பிரிநிலை. "பார்பதமண்டமனைத்துமாய்" என்பதனுள் "நீருறுதீ" என்றருளிச்செய்தவாறுகாண்க.

நீருறுதீயென்பது, காய்ந்த புனலின்கணுளதாயவெம்மை

இதனால் யாண்டுநிரம்பி நிற்பினும் அதிற்றோயானென்பது கூறப்பட்டது. (அ)

கர்த்தா வெங்ஙனமொருபடித்தாய்நிற்பனோ வென்னில்?

நலமில னண்ணார்க்கு நண்ணினார்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்.

எ - து. நலமிலனண்ணார்க்கு - தன்னை வழிபடாதபேர்களுக்குத் தங்களாலேயுள்ள சனன மரணமாகிய துக்கத்தைநீக்கித் தன்னாலேயுள்ள வின்பநலத்தைக் கொடான்,—நண்ணினார்க்குநல்லன் - தன்னை வழிபட்டபேர்களுக்குத் துன்பத்தை நீக்கி யின்பநலத்தைத் தருவான். வழிபடாதபேர்க்குத் துன்பத்தை நீக்காமலும் வழிபட்டபேர்க்குத் துன்பத்தைநீக்கியு மிருக்கையினாலே பிரபஞ்சவாதியோவென்னில்?—சலமிலன் பேர் சங்கரன் - விருப்பு வெறுப்பில்லாதவன் சுகத்தை யான்மாக்களுக்குக் கொடுக்கையினாலே சங்கரனென்ற திருநாமத்தையுடையவன்.

தன்றாளினை யடைந்தார்மாட்டு நன்மையினைச்செய்யலும், அதுசெய்யார்மாட்டு அதுசெய்யா திருத்தலும் உடையனாயினும் வயிரமென்பது சிறிதுமிலன்; இன்பத்தினைப் பண்ணுஞ் சங்கரனென்னும் பெயரினையுடையான் ஆகலான்.

வடமொழியில் சம் என்பது சுகம், கரன் என்பது பண்ணுவான் இவையிரண்டும் புணர்ந்து சங்கரனெனநின்றது.

இதனால், விருப்பு வெறுப்பிலனென்பதும், அவரவர் செய்திக்கொத்த பயனுதவும் நடுநிலைமையை யுடையவனென்பதும் கூறப்பட்டன. (க)

வழிபட்டவர்களாலே யந்தப்பொருளைப் பெறலாமோ வென்னின்?

உன்னுமுள தையமில துணர்வா யோவாது
மன்னுபவத் தீர்க்கு மருந்து.

எ - து. உன்னும் - நினையுங்கள்,—உளது - உண்டு,—ஐயமிலது - சந்தேகமில்லை,—உணர்வாயோவாது - அறிவுக்கறிவாய் விட்டுநீங்காது. அப்படி விட்டுநீங்காமலிருந் தென்செய்யுமென்னில்?—மன்னுபவந் தீர்க்குமருந்து - பொருந்திய சனன மரணமாகிய வியாதியைத் தீர்க்கின்றதற்கு நல்ல பரமௌஷதம்.

நி - வ - உ. ஞானமயமாய்ப் பிரிப்பின்றி நின்று அநாதியேதொடர்ந்துவரும் பிறவிப் பிணியினை அறுத்தற்கு ஓர்மருந்தாந் தன்மையினையுடையன் அக்கடவுள். அதற்கு ஓர் ஐயமில்லை. அதனையென்ஞான்றும் இடைவிடாது அன்புடன் நினைப்பீராக.

இதனால் பதியினை வழிபடவேண்டுமென்பதூஉம் உறுதிப்பாடுங் கூறப்பட்டன. (கo)

பதிமுதுநிலை முற்றிற்று.

உ - வது. பசு நிலை.

அஃதாவது பலவாய வுயிர்களது முறைமை.

இதனைப் பன்மைவாசகப்படுத்திய வதனால் பதியொன்றே யென்பது தானே கொண்டிடக்கது. பதியி னியல்பு கூறிப் பசுக்களியல்பு கூறிற்றாகலான், மேலை யதிகாரத்தோடு இதற்கியைபுடைத்து எனக்கொள்க. பசு - உயிர் - சேதனன் - புற்கலன் - சீவன் - அணு - வியாபகன் - ஆன்மா - என்பன ஒரு பொருட்கிளவி.

இதிலடைந்தவருண்டோவென்னில்?

பிறந்தநாண் மேலும் பிறக்குநாள் போலுந்
துறந்தோர் துறப்போர் தொகை.

எ - து. பிறந்தநாண்மேலும் பிறக்குநாள்போலும் - பிறந்த வான்மாக்களுக்குத் தொகையுண்டானாற் போலவு மினிமேற்பிறக்கு மான்மாக்களுக்குத் தொகையுண்டானாற்போலவும், துறந்தோர் துறப்போர் தொகை - தேகாதிப் பிரபஞ்சத்தைப் பொய்யென்று நீங்கி மோக்கத்தை யடைந்தோர்க்குந் தொகையுண்டு, இனிமே லப்படி மோக்கத்தை யடைவோர்க்குந் தொகையுண்டு, அதற்கு மளவில்லை இதற்குமளவில்லை.

நி - வு - உ. உயிர்கள்தோற்றிய காலத்தினது தொகையும், மேற்றோற்றுங் காலத்தினது தொகையும், இறைவன்திருவடியை அடைந்தாரது தொகையும், மேல் அடைதற்குரியாரது தொகையும், தம்மிலொக்கும். —இஃதளவிலவென்பதாம்.

சுற்றிநின்றதொகை நான்கினோடுங் கூட்டப்பட்டது. இதில் உயிருண்மை யுடைத்தெனக்கூறியது எதனாலென்னில் பொருளுண்மைபெற்றே அதனியல்பு கூறவேண்டும்; பித்திகை யுடைத்தாயே சித்திரமெழுதவேண்டுமாறுபோல.

இதனா லுயிர்களது உண்மையும், மிகுதியும் கூறப்பட்டன. (க)

ஆன்மாக்களெல்லா மொருபடித்தோவென்னில்?

திரிமலத்தா ரொன்றதனிற் சென்றார்க ளன்றி
யொருமலத்தா ராயு முளர்.

எ - து. திரிமலத்தார் - ஆணவம் கன்மம் மாயை யென்னும் மும்மலத்தையுடைய சகலராயும், —ஒன்றதனிற் சென்றார்கள் மாயாமலத்தை நீங்கி மற்றிருமலமு முடைய பிரளயாகல ராகியும், —அன்றி - அவையன்றி, —ஒருமலத்தாராயும் - மாயாமலத்தையும் கன்மமலத்தையும நீங்கி மற்றொருமலமுடைய விஞ்ஞானகலராகியும், —உளர் - இப்படி மூவகை யான்மாக்களாயிருப்பார்கள்.

நி - வ - உ. ஆணவம் கன்மம் மாயை என்னு மலங்கள் மூன்றுடையாராகியும், இம்மூன்றில் மாயை நீங்கி யேனைய இரண்டு முடையாராகியும், அவ்விருவகையுமல்லாது ஆணவ மொன்றினையு முடையாராகியும், சொல்லப்பட்ட மூன்றுதிறத் தினையுடையார் அவ்வான்மாக்கள்.

ஆயுமென்பது மூன்றிடத்துங் கூட்டப்பட்டது. அவர்கள் நிரனிறையிற் சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலராம். "உரை தருமிப் பசுவர்க்க மூணாரின் மூன்று முயரும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர், நிரையின்மல மலங்கன்ம மலங்கன்ம மாயையிற்கும்" என்றருளிச் செய்தவாறுகாண்க.

இதனால் தொடர்பின் விகற்பத்தால் உயிர்கள் மூவகைப்பட்ட தன்மை கூறப்பட்டது. (உ)

இவர்க ளொருவர்க்கொருவர் அதிகமோ வெனின்?

மூன்றுதிறத் துள்ளாரு மூலமலத் துள்ளார்க
டோன்றலர் தோற்றுள்ளார் துணை.

எ - து. மூன்றுதிறத்துள்ளாரும் - அம்மூவகைப்பட்ட வான்மாக்களும், அநாதியிலே,—மூலமலத்துள்ளார்கள் - ஆணவமல சம்பந்தர்களா யிருக்கிறவர்க ளாகையினலே,—தோன்ற லர்தோற்றுள்ளார்துணை - தோன்றாத்துணையா யிருக்கிற சிவ னுக்கு அடியவரா யிருப்பர், அம்மூவர்க்குங் கர்த்தாவே துணை.

நி - வ - உ. இம்மூன்றுதிறத் தான்மாக்களும்; மூலமல மாகிய ஆணவத்தாற் பிணிக்கப்பட்டவர்களே. அவருள், மா யையென்னுந் துணையினையுடைய சகலர், தாம்கட்டுற்றவை யொன்றுந் தன்மை தமக்குத் தெரிதலிலர்.

ஏனையரிருவருக்குந் தெரியுமென்பதாம்.

மலமென்பது அழுக்கு. உம்மை - முற்றும்மை.

இதனால் முன்னரொவ்வொன்றாக நீக்கப்பட்டது மாயையும் கன்மமும் அல்லது ஆணவமன்றென்பது கூறப்பட்டது.

அடிமையல்லாத வான்மாவுக் கறிவுண்டென்னில்.

கண்டவற்றை நாளுங் கனவிற் கலங்கியிடுந்
திண்டிறலுக் கென்னோ செயல்.

எ - து. கண்டவற்றைநாளும் - நாளும் நனவிலே கண்ட பொருள்களை நாடோறும்,—கனவிற்கலங்கியிடும் - சொப்பனத்திலே மறக்கப்படும். அப்படிப்பட்ட,—திண்டிறலுக்கென்னோசெயல் - அற்பவலிமையுள்ள வறிவில்லாத வான்மாக்களுக்குச் சுதந்தரமாகிய செயலேதுண்டு.

நி - வ - உ. பலகாலுஞ் சகலாவத்தையில் தாம் கண்டறிந்த பொருள்களைச் சொப்பன அவத்தையில் திரிபுடக்காணுந் திணிந்தவெற்றியினையுடைய வுயிர்களுக்குச் செயலுடைத்தென்பது எவ்வண்ணமோ?

திண்டிறலென்பது அன்மொழித்தொகையாய் இகழ்ச்சிக் குறிப்பு மொழியாய்நின்றது. திரிபுடக் காண்டலாவது - நல்குரவாளர்தமைச் செல்வராகவும், செல்வர்தமை நல்கூர்ந்தவராகவும், உறுப்பில்லார்தமை யுறுப்புடையராகவும், உறுப்புள்ளார்தமை யுறுப்பிலாராகவும், ஒன்று ஒன்றாக மாறுபாடாகக்காண்டல் முதலியனவெல்லாம். (எ)

சொப்பனத்திலேயல்லோ மறந்தான் நனவிலே தானே யறிவா னென்னில்?

பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்
கறிவென்ற பேர்நன் றற.

எ - து. பொறியின்றி - ஐந்திந்திரியங்களி னொன்றினல்லாமல்,—ஒன்றும் புணராதபுந்திக்கு - ஒருவிடயங்களையு மறி

யாத வான்மாக்களுக்கு,—அறிவென்றபேர் - தானேயறியு மறிவையுடையனவென்றபேர்,—நன்றற - மிகவுநன்று.

நி - வ - உ. செவிமுதலிய கருவிகள் கூடாமல் யாதொரு விடயமும் எய்தமாட்டாத வுணர்வினையுடைய வுயிர்களுக்கு நூல்வல்லோர் அறிவுடையன வென்றிட்டபேர் மிகவும் அழகிது.

பொறியின்றியொன்றும் புணராதென்பதனுல், கூடிப்புணரு மென்பதாயிற்று. புந்தி ஆகுபெயர். நன்றென்பது முன்னையதுபோ லிகழ்ச்சிக் குறிப்புமொழி.

இவை யிரண்டுபாட்டானும் உயிர்கட்கோர்முன்னிலையான் அன்றி அறிவுந் தொழிலுங்கூடாமை கூறப்பட்டது. (ரு)

அப்படி இந்திரியங்களைக் கொண்டன்றி ஆன்மாவுக்கறிவில்லையோ வென்னில்.

ஒளியு மிருளு முலகு மலர்கட்
டெளிவி லெனிலென் செய.

எ - து. ஒளியும் - சோமசூரியாக்கினிப் பிரகாசமும்,—இருளும் - பூதவிருளும்,—உலகும் - பிரபஞ்சமும்,—அலர்கட்டெளிவிலெனில் - அலர்விழிக்கண்ணுக்குப் பிரகாசமில்லையாயில்,—என்செய - இதுமூன்று மிருந்துபிரயோசனமேது? அப்படிப்போல வொளியாகிய சிவமு மிருளாகியவாணவமலமும் பிரபஞ்சமாகிய மாயையும் அலர்விழியாகிய வான்மாவுக்குஅறிவில்லையாகில் அம்மூன்று மிருந்துபிரயோசன மென்ன? ஆகையா லறிவுமே யான்மாவுக்கறிவுண்டு.

நி - வ - உ. விளக்கஞ்செய்யும் ஞாயிறு திங்கள் அக்கினியென்னுஞ் சுடர்களும், மயக்கினைச்செய்யும் அந்தகாரமும், பலவகைப் பொருளோடு சிறந்தவுலகமும், விழித்திராநின்ற

கண்ணினிடத்துச் சோதியில்லையாயின் என்னபயனைச் செய்தற் பொருட்டு? எ-று. எனவே யாதுமின் றென்பதாம்.

இவ்வுவமையால் மிகுந்த பிரகாசமாகிய சிவனுடைய ஞானமும், இருளாகிய ஆணவமும், கலைமுதல் நிலனீறாகிய தத்துவங்களும், நித்தமாகிய வுயிர்களிடத்து உணர்வில்லையாயின் என்னபயனைச் செய்யுமென்னும் பொருள்தோன்றி நின்றது. இஃது ஒட்டென்பதோ ரலங்காரம். இம்மூன்று வகையினானும் நன்றுதீதுகளை யடைவனவுயிர்களேயா மென்பதாயிற்று.

இதனால் விளக்க விளங்குங் கண்போல உணர்த்த வுணருமவர் வினையுடைய ரென்பதூஉங் கூறப்பட்டது. (அ)

ஆனாலிந்த மூன்றுபொருளையு மறிவதியாதென்னில்? பதிக்கும் பாசத்துக்கு மறியவேண்டுவ தில்லை, பசுவே பகுத்தறியு மென்றது.

சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணிவை
யுய்த்தல் சதசத்தா முயிர்.

எ-து. சத்தசத்தைச் சாராது - சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தைப் பொருந்தாது,— அசத்தறியாது - அசத்தாகிய பாசஞ் சடமாகையா லஃதொன்றையும் அறியமாட்டாது,—அங்கண் - அவ்விடத்தில்,—இவை - இவ்விரண்டையும்,— உய்த்தல் - பொருந்தியறிகிறது,— சதசத்தாமுயிர் - சதசத்தாகிய வான்மா.

இ-வ-உ. நிலைபெற்ற ஞானமாகிய சிவனுக்கு அசித்தங்களான சடப்பொருள்களைப் புதிதாகச் சுட்டியறிய வேண்டுவதில்லை. அசேதனங்களாகிய தத்துவங்கட் கறிவென்பதில்லை. இவ்விரண்டு தன்மையாயின், அவ்விடத் திவற்றைத் தன்னுணர்வு செலுத்திப் பகுத்தறியு முயிர்கள் சத்துமசத்துமன்றியே சதசத்தாதல்வேண்டும். அல்லதுகூடாதென்பது கருத்து.

உயிர்களுஞ் சித்தென்று வழங்கப்படுமாயினும் சிவனுடைய ஞானத்தினோ டொருதன்மை யல்லவென்பதாம்.

“சிவன்சிவனென் றிரண்டுஞ் சித்தென்றாமென்னிற் - சிவனருட்சித்திவ னருளைச்சேருஞ் சித்திவன்றான், பலங்கெடுபுத்திமுத்தி பண்ணுஞ்சித்தவற்றிற் - படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்றா, னவன்றானேயறியுஞ் சித்தாதலினாலிரண்டு மிணைந்தாலுமொன்றாகா தங்கியமாயிருக்கு, மிவன்றானும் புத்தியுஞ்சித்திவனுமோ புத்தி - யிதுவசித்தென்றிடி லவனுஞ் சிவனுமசித்தாமே” என்றருளிச் செய்தவாறு காண்க.

இதனா லுயிர்கள் சுத்தவறிவுஞ் சடமுமல்ல வாதல் கூறப்பட்டது. (எ)

அப்படியான்மா சத்தும் அசத்துமானதற்குவமையுண்டோ வென்னில்?

இருளி லிருளாகி யெல்லிடத்தி லெல்லாம்
பொருள்க ளிலதோ புவி.

எ - து. இருளிலிருளாகி - இருளோடுகூடி யிருளாயிருந்தும்,—எல்லிடத்திலெல்லாம் - ஒளியோடுகூடி யொளியாயிருந்தும்,— பொருள்களிலதோபுவி - இந்தப் பூமியின்கண்ணே யிப்படிக்கொத்த பொருள்களில்லையோ? உண்டு. அதாவது, கண்ணும் - படிகமும் - ஆகாசமும்போல வான்மாவு மதுவதுவாக நின்றறிதற் குவமையாம்.

வி - வ - உ. இருள்வந் திருந்தகாலை மறைந்தும் ஒளிவந் திருந்தகாலை விளங்கியுநிற்கும் பொருள்களை யுடையதன்றோ வுலகம்.

பொருள்களென்ற பன்மையால் அவை கண்ணும் ஆடியும் விண்ணுமுதலாயின. ஓகாரம் எதிர்மறை. இதுவுமொட்டென் பதோ ரலங்காரம்.

இதனால் சுத்தஉணர்வுஞ் சடமுமன்றி யிடைப்பட்டதொன்றில்லை யென்பாரை யுண்டென மறுத்து மேல்வலி யுறுத்தப்பட்டது. (அ)

ஒளியு மறுதியேகூடி நிற்கவே ஒளியோடுங்கூடி நின்று இருளோடுங் கூடுவானே னென்னில்?

ஊமன்கண் போல வொளியு மிகவிருளே
வாமன்கண் காணா தவை.

எ - து. ஊமன்கண்போல - கோட்டானுடைய கண்ணுக்கு,—ஒளியுமிகவிருளே- ஆதித்தப் பிரகாசமு மந்தகாரமாயிருக்கும். அதுபோல,—வாமன்கண் காணாதவை - நிலைபெற்ற சிவஞானத்தை யான்மாக்கள் காணாமலிருக்கிறது, இருளாகிய வாணவமலத்தால்.

நி - வ - உ. உதயஞ்செய்து விளங்காநின்ற சூரியனைக்காணாத கூகையினது கண்போல முற்கூறிய வுயிர்களும் கருத்தாவாகிய சிவனுடைய ஞானத்தினைக் காணமாட்டா. அந்த ஞானமும் அந்தக் கூகையினது கண்ணுக்குச் சூரியன் சிறிதுந் தோன்றாது நின்றாற்போல வுயிர்களுக்குந் தோன்றாது நிற்கும்.

உம்மை - சிறப்பும்மை. ஏகாரம் - தேற்றம்.

இதனானுயிர்கள் தமக்கு உயிராகி விளங்கிநின்ற ஞானத்தினைக் காணாமைக்கு, உவமேயமெடுத்துக் கூறப்பட்டது. (கூ)

இந்த வான்மாக்களறியாமையை நீங்கி யருளைப்பெறுவது மெக்காலம்! என்றிரங்கியது.

அன்றளவு மாற்றுயி ரந்தோ வருவெடரிவ
தென்றளவொன் றில்லா விடர்.

எ - து. அன்றளவும் - அநாதியேதொடங்கி,— ஆற்றுயிர் - சுமந்து தடுமாறப்பட்ட வான்மாக்களுக்கு,— அந்தோ -

ஐயோ!, — அருடெரிவதென்று - அஞ்ஞான நீங்கிச் சிவஞானம் பிரகாசிப்பது எக்காலம்!,—அளவொன்றில்லாவிடர் - அளவில்லாத சனன மரணமாகிய துக்கத்தை யநாதிதொடங்கி யாற்றுமென் றிரங்கியது.

நி - வ - உ. அநாதியேதொடங்கி யிற்றைவரையும் எண்ணிறந்த துன்பத்தினைத் தாங்கிநிற்கு முயிர்கள் அந்தோ எந்தநாளோ திருவருளாகிய ஞானத்தினைக் கண்டு தம்பிறவியை நீர்ந்து பேரின்பத்தை யெய்துநாள்.

அந்தோவென்ப திரக்கத்தின்கட் குறிப்பு.

இதனு லுயிர்படுந் துன்பமிகுதிக்கிரங்கிக் கூறப்பட்டது.

இவ்வதிகாரத்தை உரையாசிரியர் நிரம்பவழகியர் உயிரவை நிலையெனக்கூறினர்.

பசுநிலை முற்றிற்று.

ரு-வது. பாசநிலை.

இவ்வதிகாரத்திற்கு இருண்மலநிலை.

அஃதாவது, அறியாமையே வடிவாகிய ஆணவமலத்தினது தன்மை. உயிரவை நிலையென்பதுபோலப் பொருட்படட்ப் பாசங்களதுநிலையென்றாது இருண்மலநிலையென்றதனுல், ஒழிந்த மாயை கன்மங்களெவ்வா றடங்குமோவெனின், "ஒருமொழி யொழிதன் னினங்கொளற்குரித்தே" என்பதனு லடங்கும். முற்கிளந்த வுயிர்களாற் புணரப்பட்ட பாசத்தினியல்பு கூறுதலின், மேலை யதிகாரத்தினேடிதற் கியைபுண்மை யறிக என்றார் நிரம்பவழகியர்.

ஆன்மாவைப் பொருந்திய விடராவதேதென்னில்?

துன்றும் பவத்துயரு மின்புந் துணைப்பொருளு
மின்றென்ப தெவ்வாறு மில்.

எ - து. துன்றும்பவத்துயரும் - நெருங்கி யிருக்கப்பட்ட சனனமரணமாகிய துக்கத்தையும்,—இன்பும் -பேரின்பமாகிய வீட்டையும்,—துணைப்பொருளும் - எல்லாத்துக்குந் தாரகமா யிருக்கப்பட்ட திருவருளையும், — இன்றென்பது - இல்லையெ னச்செய்வது, — எவ்வாறுமில் - தானுமெவ்வழியானு மில்லை யென்னும்படி மறைந்துநிற்கும் இந்த வாணவமலம்.

நி - வ - உ. தொன்றுதொட் டிடைவிடாதுவரும் பிறவித் துன்பமும், மேலாய வீட்டின்பமும், இவற்றைக்கூட்டி முடி ப்பதாய் முதற்றுணை நிமித்தங்களும் இல்லையென் றறுதியிட் டுக் கூறுதல், காண்டல் முதலிய அளவைக ளெல்லாவற்றானு மில்லை. (க)

இந்த வாணவமலத்துக் கொப்புண்டோ வென்னில் ?

இருளான தன்றி யிலதெவையு மேகப்
பொருளாகி நிற்கும் பொருள்.

எ - து. இருளானதன்றி - பூதவிருளானது தன்னைக் கா ட்டுதலன்றி,—இலதெவையும் - எல்லாப் பதார்த்தத்தையுங் கா ட்டாமல் மறைத்து,—ஏகப்பொருளாகி- தானொருபொருளாகி, நிற்கும்பொருள் - ஆணவமலமான திப்படி நின்றுவிடும்.

நி - வ - உ. உலகத்து வெவ்வேறு பலவகைப்பட்ட குண ங்களையுடைய பொருள்க ளெல்லாவற்றினையும் ஒருபொருளாக வேற்றுமை தோன்றாது மறைத்துக்கொண்டு நிற்பது இருளு ருவானதற் கன்றிப் பிறிதொரு பொருட்கில்லை.

ஆதலா லிதுபோலப் பிறப் பிறப்புக்களும், வீட்டுநெறி

யும், காரணங்களும், பகுத்தறியாதபடி மறைத்தது ஆணவமெ ன்ப தாயிற்று.

இவை யிரண்டுபொட்டானும் ஆணவத்தினது உண்மை யும், அஃதிருள்போல மருள்வடிவிற் றென்பதூஉம், கூறப் பட்டன. (உ)

இருள்போலத் தானோ வென்னில்?

ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டு
மிருபொருளுங் காட்டா திது.

எ-து. ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டும் - பூதவிருளான தெல்லாப் பதார்த்தத்தையு மறைத்துத் தன்னைக் காட்டி நிற்கும்,—இருபொருளுங் காட்டா திது - இந்தவாணவ மலமானது தன்னையுங் காட்டாது தனக்குள்ளே யிருக்கிற வா ன்மாவையுங் காட்டாது.

நி-வ-உ. அந்தகாரமானது வேறொரு பொருளையுங் காணாமல் மறைத்துத் தன்னுருவங் காட்டிநிற்கும், ஆணவமானது தன்னுருவத்தையும் ஞானத்தையுங் காட்டாமல் நிற்கும்.

இதனை லிவ்விருளினு மிகக்கொடியது ஆணவமென்று கூறப்பட்டது. (௩)

காட்டாமல் மறைப்பது பதிக்குமோ வென்னில்?

அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடையடங்கி
யின்றளவு நின்ற திருள்

எ-து. அன்று - அநாதியே,—அளவி - ஆத்மாவைப்பொ ருந்தி,— உள்ளொளியோ டாவி யிடையடங்கி - சிவஞானத் தைப் பிராணனுயுடைய வான்மாவைப்பொருந்தி மறைந்து,— இன்றளவு நின்ற திருள் - சிவனது திருவடித்தாமனையைப் பெறுமளவு நின்ற திந்தவாணவ மலம்.

நி - வ - உ. அகவிளக்காகிய ஞானத்திஞேடே தானும் அஞுதியே கலந்துகொண்டு அந்த ஞானத்தின்மேற்படராது உயிரளவிலே யமைவுற்று இது நாள்வரையும் நீங்காது நின்றது ஆணவமாகிய அந்தகாரம்.

உள்ளொளியோடு என்பது உயர்வின்கண்வந்தது. "ஒரு வினையொடுசொ லுயர்பின் வழித்தே" என்ப திலக்கண மாதலின்.

இதனுல் ஆணவமாகிய அந்தகாரம் அஞுதியென்பதும், மாயை கருமம்போல நீங்கிப் புணர்ந்த தன்றென்பதும் கூறப்பட்டன. (௬)

அப்படி யிவனிடத்திலே யடங்கியிருக்கப்பட்ட வாணவமலத்தை யிவனுலே யறியப்படாதோ வென்னில்?

பலரைப்புணர்ந்துமிருட் பாவைக்குண் டென்றுங்
கணவற்குந் தோன்ருத கற்பு.

எ - து. பலரைப் புணர்ந்தும் - எல்லா வான்ம வர்க்கங்களையும் பொருந்திப் புணர்ந்தும், — இருட்பாவைக்குண்டு - இருண்மலசத்திக்குண்டு, — என்றுங்கணவற்குந் தோன்ருத கற்பு - எப்போதுந் தன்பர்த்தாவுக்கு விபசாரியென்றது தோன்ருத கற்புடைய தன்மை - இந்த வாணவமல மான்மாக்களுக்குத் தோன்ரும லிற்ப திப்படியென்க- இது முடிக்கருதளிற் கருத்துரை.

நி - வ - உ. எண்ணிலராகிய ஆன்மாக்களைப் பேதமறக் கலந்து இடையருது நின்ருலும், இருள்மலமாகிய மகளுக் கொருநாளுந் தனது தலைவராகிய ஆன்மாக்களுக்குத் தன்னைக் காட்டாது நிற்பதோர் நியமமுண்டு.

பாவையெனவுங் கணவனெனவுங் கூட்டம்பற்றியுருவகஞ் செய்ததன்றி ஆண்குறி பெண்குறி யவ்விடத்தில்லையெனக்

கொள்க. என்றும் என்றதனால் கேவல சகல சுத்த மூன்றினு மென்பது பெற்றாம். சிறப்பும்மை யிரண்டனுள், பின்னரது இழிவுகுறித்து நின்றது. இடை நின்ற உம்மை முற்றும்மை.

இதனா லாணவத்தினது தன்மை கூறப்பட்டது (ரு)

இந்தவாணவமலத்தை யறிவதெவ்வா றென்னில்?

பன்மொழிக ளென்னுணரும் பான்மை தெரியாத
தன்மையிரு ளார்தந் தது.

எ-து. பன்மொழிக ளென்னுணரும் பான்மைதெரியாத தன்மை-பலவாகச்சொல்லுவதென்ன? நித்திய அநித்தியத்தை யறியப்படாத முறைமை,—இருளார்தந்தது - இந்த வாணவமலங் கொடுத்ததென் றறிவாயாக.

நி-வ-உ. பற்பலவார்த்தைகளாற் பயனென்னை? அறிய வேண்டும் பொருள்களை யறியும் பகுதிதோன்றாது நின்றவியல் பெல்லாங் கருமை நிறத்தினையுடைய மூலமலமாயினோர் கொடுத்தது-

அறியவேண்டும் பொருள்களாவன பதி பசு பாசமெனு மூவகைப்பொருள்களும், சரியை கிரியை யோக ஞானங்களென்ற நால்வகை யொழுக்கமுமாம். இருளாரென்பது செறலின்கண் வந்த அஃறிணை வழுவமைதி.

இதனால் மூலமலத்தினால்வந்த அறியாமை வலியுறுத்தப் பட்டது. (சு)

ஆணவமல மில்லை யென்னில்?

இருளின்றேற் றுன்பே னுயிரியல்பேற் போக்கும்
பொருளுண்டே லொன்றாகப் போம்.

எ-து. இருளின்றேல்-ஆணவமல மில்லையென்று நீ சொல்லுவாயாகில்,—துன்பேன் - சுகதுக்க வேதனைவருவானேன்,

—உயிரியல்பேல் - ஆன்மாவுக்கியற்கையென்று சொல்லுவை யென்னில் (இயற்கையாவது கறுப்பும் வெளுப்பும் காக்கும் பாலுக்கு மியற்கை யானாற்போலவாம்), — போக்கும் பொரு ளுண்டே லொன்ருகப்போம் - அப்போதாணவமல நீங்குகிற பொழுது ஆன்மாவுங் கூடக் கெடுமென் - ஆகையாற் குணமுங் குணியுமாகச்சொல்வ தடாது.

நி - வ - உ. இருளாகிய அவிச்சையில்லையாயின், இந்திரி யங்கட்கு ஏவல்செய்யும் பிறவித்துன்பம் படற்குக் காரணமெ ன்னே ? அஃது ஆன்மாவினது சுபாவமாயின் நீங்காது, நீக்குஞ் சிவஞான முண்டாயின் அதனுடனே உயிருங் கெட்டுப்போ மாதலால் - எனவே பிறவித்துன்பத்துக்கு நிமித்தம் அவிச்சை யென்பதாயிற்று.

இதனுல் அவிச்சையில்லையென்பாரை யுண்டென்றுமறுத் துக் கூறப்பட்டது. (எ)

ஆணவிந்தமலம் நடுவேவந்ததென்னில்?

ஆசா தியேலணைவ காரணமென் முத்திநிலை

பேசாதகவும்பிணி.

எ - து. ஆசாதியேல் - ஆணவமலமாதியென்றல், அணை வகாரணமென் - இடையிலேவந்து பொருந்தக்காரணமென்ன? பொருந்தக்காரணமுண்டு. வெள்ளைப்புடைவையி லழுக்குப் போலவுங் கண்ணாடிக்குக் காளிதம் போலவுமென்னில்,— முத்திநிலைபேசாது - மோக்ஷமுண்டென்று சொல்லவேண்டுவ தில்லை,—அகவும்பிணி - இந்த மலமாகிய வியாதி மோக்ஷத்தி லும்வந்து பொருந்தும்.

நி - வ - உ. அவிச்சை யிடையிட்டுவந்ததாயின், அஃதோர் காரணமில்லாமல் வந்துபொருந்திய தென்னே ? அன்றி முத்தி யினு முறையாடாதுவந்து கவர்ந்து கொள்ளுமன்றே.

உரையாடாது கவர்தல் - தோன்றாது விரைவிற் கவர்தல்.

இதனால் அவிச்சை யாதியென்பாரை மறுத்துக் கூறப்பட்டது. (அ)

அறுதியாகி லொருக்காலு நீங்காதென்னில்?
ஒன்றுமிகினு மொளிகவரா தே லுள்ள
மென்று மகலா திருள்.

எ - து. ஒன்றுமிகினும் - பூதவிருள் மேலிட்ட காலத்து, —ஒளிகவராதேல்- விளக்கினொளி யவ்விருளைச் சற்றேறினும், அப்படி நீக்காதென்றால், — உள்ளமென்றுமகலாதிருள் - அது போல வாணவமலமான தொருக்காலு மான்மாவை விட்டுநீங்காது, ஆணவமலமானது கலாதிக்கிடங் கொடாதேயிருந்தா லாசாரியராலும் நீங்காது, கலாதிகளுக் கிடங்கொடுக்கையி னாலே யாசாரியராலே நீங்குமென் றறிவாயாக.

நி - வ - உ. மலமாயையென்றுமிரண்டினுள், மலமாகிய விருள் வியாபக மெல்லாமறைத்ததாயினும், ஏகதேச விளக்க மாகிய மாயாகாரியத்தினை யுயிர்கள்கவர்ந்து கொள்ளாதாயின் எந்த ஞான்றும் அவ்விச்சை யவைகளைவிட்டு நீங்குவதில்லை- கருந்தன்மை யுயிர்களுக்குண்டாகவேண்டுமென்பது கருத்து.
என்றுமென்ப தருளுதையாமானகாலத்திறு . மென்பது காட்டிநின்றது.

இதனா லுயிர்கள் அவிச்சைநீங்கி முத்தியடைதற் கோர் நிமித்தங் கூறப்பட்டது. (கூ)

மலமறையாது மாயை மறைக்கு மென்னில்?

விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத் துவந்து.

எ - து. விடிவாமளவும் - பூதவிரு ணீங்கு மளவும்,—விளக் கனைய - விளக்கானதுபிரகாசித்து நின்றாற்போலவும்,—மாயை

வடிவாதி கன்மத்துவந்து . மாயை கன்மத்துக்கீடாகத் தனுவாதியாகவிரிந்து கன்மமுள்ள மட்டுஞ் சீவித்துநிற்கும். திருவருள் விளங்கினவிடத்து விடிவளவில் விளக்கொளி மழுங்கினாற்போல மாயைசீவியாது.

நி - வ - உ சிவனுடைய ஞானமாகிய கிரணந்தோன்றி ஆணவவிருள் நீங்குமளவும், மாயையினிடத்திலே நின்றுந் தனுகரண புவனபோகங்கள் தத்தம் புண்ணியபாவங்களுக்கீடாகத் தோன்றிச் சிறிதே மலவிருளினைநீக்கி விடய வின்பங்களைக் காட்டும் விளக்குகள் போலவாம்.

மலமுமாயையும், இருளுமொளியும்போலத் தம்முள் மாறுடைத்தென்பதாயிற்று.

சிறிதேநீக்குதல்-விளக்கனைய-என்பதனாற் பெற்றாம். விடிவாமளவும் என்றதனான் மாயாகாரியங்கள் சங்காரகாலத்திற் றமதுகாரணத்திலேயடங்கினும் உயிர்களைவிட்டு நீங்கினவன் றென்பதாம் "இருளிரிசுட ரிரண்டாநின்ற முழுமலமாயை" என் றருளிச்செய்தவாறு காண்க.

இதனால் அவ்வவிச்சையால் நீங்காது தொடர்ந்து நின்ற மாயை, கருமம், இரண்டின் முறைமையுங் கூறப்பட்டது.

பாசநிலைமுற்றிற்று.

---

௪ - வது. அருளதுநிலை.

அஃதாவது - கருணையுருவாகிய ஞானத்தின் முறைமை. இத்தன்மையவாகிய அவிச்சையைத்துறந்து வீட்டுநெறி காட்டுதற்பொருட்டு அதற்கு மாறாகிய அருளினது முறைமைகூறலின், மேலை அதிகாரத்தினோடிதற் கியைபுண்மையறிக.

விடிவாவ தேதென்னில்!

அருளிற் பெரிய தகிலத்து வேண்டும்
பொருளிற் றலையிலது போல்.

எ-து. அருளிற் பெரியது - திருவருளுக்கு மேலாகிய தொருபொருளில்லை. அஃதென்போலவென்னில்,—அகிலத்து வேண்டும்பொருளிற் றலையிலதுபோல் - பூமியினிடத் தான் மாக்கள் அவரவர் விரும்பும் பதார்த்தத்துக்கு மேலான தொரு பொரு ளில்லாதது போல.

நி-வ-உ. ஒருவர்க் கெல்லாப் பொருள்களுள்ளுந் தாம் விரும்பிய பொருளின் மேலாய பொருளில்லாத வாறுபோலத் திருவருளின் மிக்கதாகியபொருள் உலகத்தில்லை.

இதனு லருளினது உயர்வுகூறப்பட்டது. (௯)

அருளதுநின் றென்னசெய்யுமோ வென்னில்?

பெருக்க நுகர்வினை பேரொளியா யெங்கு
மருக்கனென நிற்கு மருள்.

எ-து. பெருக்கம் - சஞ்சித மிகுதியுங் கட்டுப்படவும்,—நுகர் - பிராரத்துவமிகுதியும் புசிக்கவும்,—வினை - ஆகாமிய மேறவும்,—பேரொளியாய் - இதுகளுக்கெல்லா மிருந்தபிரகாசமாய்,—நிற்கும் - நிற்கும்,—எங்கும் - எவ்விடத்தும்,—அருள் - திருவருளானது. அதற்குவமை யென்னென்னில்?—அருக்கனென - ஆதித்தனுலே சகத்துக்குக் காரியப்படுவதுபோல.

நி-வ-உ. உலகத்து மக்கட் டொகுதிகள் பொருளினை யீட்டவும் துய்க்கவும் நிமித்தமாய்நின்ற சூரியனைப்போல, அருளும் உயிர்களெல்லாம் புண்ணியபாவங்களை வளர்க்கவும் அவற்றின்பயனாகிய சுகதுக்கங்களை யருந்தவும் காரணமாய் மிகுந்த வொளியாகி யெவ்விடத்தும் நிறைந்துநிற்கும்.

அருக்கனெனவென்றதனால், அவ்வாறு காரணமாதல் ஒருவராற் செய்துகொள்ளப்பட்டதல்லவாம். பொதுப்பட வினையென்றதனால் புண்ணியபாவ மிரண்டுமாம். சூரியனைப்போலவோரிடத்துண்டாயகாலை யோரிடத் தின்றாயிருப்பதில்லையென்பார், எங்கு மென்றருளிச்செய்தார்.

இதனால் அருள் காரணமாதல் கூறப்பட்டது. (உ)

அருள்காரியப்படுத்த வேண்டுவதில்லை, தானே செய்துகொள்வார்களெனில்?

ஊனறியாதொன்று முயிரறியா தொன்றுமிவை
தானறியா தாறிவார் தான்.

எ - து. ஊனறியா தொன்றும் - சரீரஞ் சடமாகையாலதொன்றையு மறியமாட்டாது,—உயிரறியாதொன்றும் - ஆன்மாசிற்றறிவாகையினாலே தான் தனக்கென வறிவில்லை,—இவைதானறியா தாறிவார்தான் - இந்தத் திருவருளறிந்து புசிப்பியாதபொழு தாரறிந்து புசிப்பார்.

நி - வ - உ. அசேதனங்களாகிய தத்துவங்கட்கு எஞ்ஞான்றும அறிவுண்டாவதில்லை, உயிர்கள் யாதொன்றுந் தாங்களாய் அறிய மாட்டா, ஆதலால் அந்த அருள் தாமறிந்தறிவியாமல் உலகத்தின்கண் அறிவினைப்பெறுவார் யாவர். அருளறிந் தறிவித்தே யறியவேண்டு மென்பதாம்.

இதனை யருளிற்கு அறியவேண்டுவ தில்லை யென்பானை, உயிர்கட் கறிவித்தற்பொருட்டு வேண்டுமென மறுத்துக் கூறப்பட்டது. (௩)

இப்படி நடத்துகின்ற வருளை யான்மாக்க ளறியாமலிருக்கிறதெப்படி யென்னில்?

பாலாழி மீனுளும் பான்மைத் தருளுயிர்கள்
மாலாழியாளு மறித்து.

எ - து. பாலாழி மீனுளும் பான்மைத்து - பாற்சமுத்தி ரத்திலே திரிகிற மீனனது அப்பாலைக் குடித்துப் பசிதீராமற் றனக்குக் கீழாகிய சந்துக்களைத் தின்கிற முறைமைபோல,— அருளுயிர்கள் மாலாழியாருமறிந்து - அருட்கடலிலே யிருக் கிற வான்மாக்கள் சிவாநுபோகங்களைப் புசித்து ஜநன மரணங் களைப் போக்கிக் கொள்ளாமற் சத்தாதிவிடயங்களிலே திரியும்.

தி - வ - உ. மேலாய வருளின்கட்பட்ட வுயிர்கள், அத னோடு பொருந்திநின்று பேரின்பத்தை நுகராமல் மாயாபோக மாகிய மயக்கவேலையு ளாழ்ந்து அழுந்துந்தன்மை, திருப்பாற் கடலின்கண் வைகிய மீன்கள், பாலைப்பருகாது, அதனுள் சிறி தாய பிராணிகளை வருந்தித் தேடியுண்ணு முறைமையினை யுடைத்து.

மீன்களும் பாலைப்பருகுமாயின், சந்துக்களைத்தேடி வ ருகாற் கிடைத்துங் கிடையாதும் உழலாமல், நின்றநிலையிலே வேண்டுமளவும் பருகும். உயிர்களும் அருளினோடு கலந்து நிற்குமாயின், சிற்றின்பங்களைத்தேடி அவ்வாறுழலாமல், பே ரின்பத்தினைத்தாமும் அந்நிலையிலேயிடையறாது அநுபவிக்கு மென்பதாம்.

இதனு லருளோடு கூடிநின்றும் உயிர்களின்புறாமை இழிபு கூறப்பட்டது. (௪௪)

அரு ளறிவிப்பதை யறியாத தெப்படி யென்னில்?

அணுகு துணையறியா வாற்றேரொளி லேந்து
முணர்வை யுணரா வுயிர்.

எ - து. அணுகு துணையறியா வாற்றேரொளிலேந்தும் - ஆன் மாவினிடத்திலே பொருந்தியிருக்கிற பஞ்சேந்திரியங்க ளான் மாவினாலே காரியப்பட்டு வருகையிலேயும் ஆன்மாவினாலே காரியப்படுகிறோமென் றறியாத முறைமைபோல,— உணர்வை யுணராவுயிர் - உயிரிந்த ஆன்மாவுந் திருவருளினாலே காரியப்

படச்செயுந் திருவருளினுலே காரியப்படுகிறோமென் றறியாத வுண்மையு மத்தன் மைத்து.

வி - வ - உ. தனக்கு மருங்காக வுடன்வருந் துணையினைத் துணையெனநாடாது வழிச்செல்வான்போலவும், தமக்கு முதலாய்நின்று உணர்த்துந் தன்மையறியாத இந்திரியங்கள் போலவும், உயிர்கள் தாமுந் தமக்குயிராய் நின்றுணர்த்தும் அருளினை அறியமாட்டா.

இவை துணைமையுந் தலைமையும் பற்றிவந்த எடுத்துக் காட்டுவமை. (௫)

அருணடத்து விப்பதனை யறியாத தெப்படி யென்னில்?

தரையை யறியாது தாமேதிரிவார்
புரையை யுணரா புவி.

எ - து. தரையையறியாது தாமேதிரிவார்புரையை - பூமியினிடத்திலே யிருக்கப்பட்ட வான்மாக்கள் பூமிதாரகமாக நடக்கச்செயும் பூமிதாரகத்தைமறந்து நானடந்தேனென்று மதுபோல,—உணராபுவி - பூமியினிடத்திலே யிருக்கப்பட்ட வான்மாக்களுக்குந் திருவருளினுலே தொழிற்படச்செயுந் திருவருளினுலே தொழிற்படுகிறோ மென்றறியாத முறைமையு மித்தன்மைத்து.

வி - வ - உ. பூமியைத் தமக்கு ஆதாரமென்றறியச் செய்யாது தாமேதமக்காதாரமாகப் போக்குவரவு செய்வாரைப் போல், அருளினைத் தமக் காதாரமென்று அறியா உயிர்களும்.

புவியென்ப தின்னுயிர்கண்மே னின்றது. (௬)

அருளைத் தேடியறிவாரேது வென்னில்?

மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத் தோர்
ஞானம், தலைகெடுத்தோர் தம்மேடர்தாம்.

எ - று. மலைகெடுத்தோர் - மலைமேலிருந்து மலையைத் தேடினவர்போலவும்,—மண்கெடுத்தோர் - பூமியிலே யிருந்து பூமியைத் தேடினவர் போலவும்,—வான்கெடுத்தோர் - ஆகாயத்துக்குள்ளே யிருந்து ஆகாயத்தைத் தேடினவர் போலவும்,—ஞானம் தலைகெடுத்தோர் - ஞானமாகியவறிவைக் கெடுத்துத் தேடுவார்கள், — தற்கெடர்தாம் - தம்மைத் தெரியாத வான்மாக்கள்.

நி - வ - உ. மலையினை யிழந்தோரும், மண்ணினை யிழந்தோரும், ஆகாயத்தினை யிழந்தோரும், எங்குநு நிறைந்த போறிவினை யிழந்தோரும், தானென்பதனை யிழந்தோரும், தம்மிற்று மொப்பர்.

மலை நிலம் ஆகாயம் நான் என்பனவற்றைக் கெடுத்தோர் உலகின்கணில்லை- உள்ளாராயின் அவர்போல அருளினை யிழந்தோரும் பேதைய ரென்பதாம்-

ஈண்டுத்தற்கேட ரென்பது யாக்கைமேல் நின்றது. (எ)

ஞானத்தை யிழந்து இரிவ தேதென்னில்?

வெள்ளத்து ளுநாவற்றி யெங்கும் விடிந்திருளாம்
கள்ளத் தலைவர் கடன்.

எ - று. வெள்ளத்துளுநாவற்றி - கழுத்தளவு தண்ணீரிலே போகிறவன் ஒருவிடாயத்திலே யகப்பட்டுப் போகிறதுபோலவும்,—எங்கும் விடிந்திருளாம் - ஆதித்தனெங்கும் பிரகாசிக்கச் செய்தேயும் பிறவிக்குருடனுக்கு யிருந்த விருளாயிருந்தது போலவும்,—கள்ளத்தலைவர்கடன் - கவட்டுத்தியர்களுக்கு முறைமையாயிருக்கிற வான்மாக்கள் முறைமையு மித்தன்மைத்து.

நி - வ - உ. நிறைந்த நறுநீரின்கண்ணே நின்றும் அதனைப் பருகாது நாவறண்டும், எவ்விடத்தும் இருள்நீங்கி விடிந்திரு

க்க மயங்கியுயிர்க்கு மடவோரது தன்மையே, தாம் நிறைந்த அருளோடு கலந்து நின்றும் அதனால்வரும் பேரின்பத்தை நுகராத வஞ்சத் தலைமையுடைய ஆன்மாக்களது முறைமை.

உயிர்கண்மாட் டுளதாய குறையேயன்றி அருளின்குறை யன்றென்பதாம்.

வஞ்சத் தலைமையாவது, தாமொன்றிற்குங் கருத்தா வல்லவாயிருக்கவும் யானெனதென் றகங்கரித்தல். (அ)

அஞ்ஞானநீங்கி யறிவ தெவ்வாறெனில் ?

பரப்பமைந்த கேண்மினிது பாற்கலன்மேற் பூனை
கரப்பருந்த நாடுங் கடன்.

எ-து. பரப்பமைந்து கேண்மினிது-அருட்பொருளைக் கேட்குமிடத்துக் கரணவியாத்திகளைவிட்டு இன்பமாகக் கேண்மின். அப்படிக் கேளாமலிந்திரியங்களின் வழியிலே திரிந்தாற் கேட்டபொருளும் பலியாது, சநநமரணமு நீங்காது, அதென்போலவென்னில், — பாற்கலன்மேற் பூனை - பாற்சட்டியின்மேலிருக்கிற பூனையானது பாலைக்குடித்துப் பசிதீராமல், — கரப்பருந்த நாடுங் கடன் - கரப்பைத்தின்ன விருப்பைநாடு முறைமைபோல.

நி-வ-உ. சஞ்சல மனத்தாற் படும் விளைவினை யடக்கி அருளின் றன்மையே யினிதாகக் கேட்டு மனங்கொள்வீராக. அதனை நாடாது சிற்றின்பங்கள் மேற்படரும் இப்புல்லறிவாண்மை, உறியின்மேல் வைகும் இனிய பாற்குடத்தின் மீதிருக்கும் பூனையானது, சுவர்த்தலையிலோடுங் கரப்பினைத் தாவிப்பற்றி நுகரவிசாரிக்கு முறைமையினை யொக்குமாகலான்.

பூனையும் உறியின்கட் பாற்குடத்தின்மே லிருந்தவாறே அதனைப் பருகாது கரப்பினைப்பற்ற விசைகொண்டு வாயுங்கால், அது கைப்படின், சிறிதின்மையில்லாத வுணவாதலே

யன்றித் தாவலான் மிக்கவருத்தமு மெய்தும். கைப்படாக்கால், வருத்தத்தோடு காப்பினையும் போக்கிப் பாற்குடத்தினையு முடைத்து மிக்க துன்பமெய்தும். உயிர்களும் அநாதியே கூடிநின்ற அருளகத் தடங்கிப் பேரின்பத்தினை யெய்தாது சிற்றின்பங்கண்மேற் படருமாயின், அதுபோல வொருகாலெய்துஞ் சிற்றின்பத்துக்கு மனமொழி மெய்களாற் றுன்பமுற்றும், அஃதெய்தாக்கால் இருமையின்பமு மிழந்தும், மிக்க இடர்ப்படு மென்பதாம்.

உறியின்மேல் வைக்கும் பாற்குடமெனவும், சுவர்த் துளையிலோடுங் காப்பெனவும், விரித்த தறுபவம்.

இவை யைந்துபாட்டானும், அருள் தனையும் இறைமையுமாகியும் ஆதாரமாகியும் நிற்றலை யறியாதிருத்தலும், எவ்விடத்தும் இருப்பதனைக் காணாது மயங்கலும், அதனுள்வரு மின்ப மெய்தாமையும், அதன்மேற் பற்றுச் செய்யாமையுமான உயிரின் குற்றங் கூறப்பட்டன. (௬)

அமையாதார்க் கறியப்படாதோ வென்னில் ?

இற்றவரை யிசைந்து மேதும் பழக்கமில்லா
வெற்றுயிர்க்கு வீடு மிலை.

எ - து. இற்றவரையிசைந்தும் சிவனுள்ள காலந்தொடங்கி யான்மா திருவடியைப் பெறுமளவும், திருவருளுடனிருந்து வரச்செயுந் திருவருளுடனே, — ஏதும் பழக்கமில்லா - சற்றுமுறவில்லாத, — வெற்றுயிர்க்கு - அறிவில்லாத வான்மாக்களுக்கு,— வீடுமிலை - மோக்ஷமொன்றுமே கிட்டாது. இருவினையொப்பு வந்தல்லது ஞானம் பிரவேசியா தென்பது கருத்து.

வி - வ - உ. அநாதியே தொடங்கி இன்றளவும் அருளோடிரண்டறக் கலந்து நின்றும், சிறிதும் அதிற்றோய்ந்த பழமை

தோற்றுதலில்லாத வெறிய வுயிர்கட்கு வீடுசேர்த லென்பது மிகுதி. தகாதென்பதாம்.

வெறுமை, பயன்கொளாமை. பழமை தோற்றுதல், உலகவெறுப்புத் தோன்றுதல்.

இதனா லருளோடு கலந்துநின்றும் வீடுகூட நினையாத வுயிரினைப் பழித்துக் கூறப்பட்டது. (௪௰)

அருளதுநிலை முற்றிற்று.

---

௫ - வது. அருளுருநிலை.

அஃதாவது, ஞானவடிவாகிய குருவினது தன்மை. அருளதுநிலைகூறி, அருளாலும் வடிவினது நிலைகூறுதலின், மேலையதிகாரத்தினோடு இதற்கியைபுடைத் தெனக்கொள்க.

இருவினை யொப்பி லிறைவர் வருவா ரென்னில்?

அறியாமை யுண்ணின் றளித்ததே காணுங்
குறியாகி நீங்காத கோ.

எ - து. அறியாமை யுண்ணின் றளித்ததே - அறியாமையாகிய பெத்தகாலத்திலே, அறிவுக்கறிவாய்நின்று இரட்சித்த திருவடிதானே,—காணுங்குறியாகி - காசறுதிகருடனே குருவாயெழுந்தருளி வந்தது. அதுவுளதோ யில்லையோ வென்னில்?—நீங்காதகோ - உள்ளும் புறம்பும் விட்டு நீங்காத ஞானாசாரியாகிய குரு.

வி - வ - உ. தோன்றாத் துணையாய்க்கலந்து நின்று காத்து நடத்தின அருளே, கண்ணாற் காணப்படும் வடிவினையுடையதாக விட்டு நீங்காத குரிசில்.

இதனால் அருள் குருவடிவு கொண்டுவந்தமை கூறப்பட்டது. (௧)

அவரோ குருவாக வரவேணுமோ, படித்திருக்கிற வித்துவான்க ளாகாதோ வென்னில்?

அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி யதனைச்
சகத்தவருங் காண்பாரோ தான்.

எ - து- அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி - ஒருவனுக்கந்தரங்கமான விடத்திலே வந்த வியாதியை அவனுக் கந்தாங்கமானபே ரறிந்து நிற்பது,—அதனைச் சகத்தவருங் காண்பாரோதான் - அந்த வாணவமலமாகிய வியாதியைச் சகத்திலேயுள்ள காரியம்போலக் குருவாலே நீங்கப்போகாது; சிவனேயாசாரிய மூர்த்தமா யெழுந்தருளிவந்து நீக்கினல் நீங்கு மல்லது.

நி - வ - உ. ஓர் இல்லின்கண் ஒருவர் கொண்டபிணியை அவ்வில்லின்கண் வாழ்வார் அறிவதன்றி, அதனைச் சேய்மைக் கண்ணராகிய உலகத்தார் அறிய வல்லரோதாம்.

தான் என்பது அசைநிலை. ஓகாரம் எதிர்மறை.

இதனல் இங்ஙனம் வடிவுகோடற்கு அருளாதல் வேண்டுமோவென்னும் ஐயத்தினை யகற்றி வலியுறுத்தப்பட்டது. (௨)

இப்படி வரப்பட்ட ஞானசாரியனை யெல்லாராலு மறியலாமோ வென்னில்?

அருளா வகையா லருள்புரிய வந்த
பொருளா ரறிவார் புவி

எ - து. அருளாவகையா லருள்புரியவந்த - அருட்பிரகாசியாத முறைமையினலே யருளைக் கொடுக்கவந்த,—பொருளா

ரறிவார் புவி - இப்படிக்கொத்த ஞானாசாரியனைப் பூமியிலுள்ள வான்மாக்க ளறியமாட்டார்கள்.

ஙி - வ - உ. படைப்பு நிலை ஈறு மறைப்பு என்னும் நான் கினையுந் தோன்றாது செய்தவாறுபோல, அருளென்னுந் தொழி லினையுந் தான் பண்ணாததுபோலப் பண்ணும்படி, மானுடவடி வென்னும் அங்கியால் மறைத்துக் கொண்டுவந்த உண்மைப்பொ ருளை இக்குருவடி வென்பதனை அறியமாட்டாது உலகு.

தம்போ லொரு மானிடமாக நினைக்கு மென்பதாம். (௯)

உத்தம ரல்லாதா ரறியப்படாத தெந்த வேதுவினாலென் னில்?

பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் போதமா
மெய்யிரண்டுங் காணார் மிக.

எ - து. பொய்யிருண்டசிந்தைப் பொறியிலார் - அஞ்ஞா னமிகுதியாலே பொருந்தப்பட்ட சித்தத்தையுடையவர்கள் பஞ் சேந்திரியங்களிலே திரியப்பட்ட வான்மாக்கள், — போதமா மெய்யிரண்டுங் காணார்மிக-அறிவுக்கறிவாயிருக்கிற திருவருளை யும், அந்தத் திருவருடானே திருமேனியாய் வந்தவாசாரியனை யும், ஆக விரண்டு விதத்தையு மிகுதியுற் றறியமாட்டார்கள்.

ஙி - வ - உ. நிலையாத காயவாழ்க்கையினையும், ஆணவமல த்தால் மறைந்தவுணர்வினையும் உடையராய், ஞானமென்னுஞ் செல்வத்தினையும் எய்துதலில்லாதார், அறிவுமயமாகிய அரு ளும், அவ்வருளான் ஆகிய தேசிகவடிவும் என்னு மூண்மைப் பொருளிரண்டினையும் சிறிது மறியமாட்டார்.

இத்தன்மையவாகிய ஆசாரியவடிவினை, அருள்கொண்டவ டிவமாக வுணராராகவே; நின்மலமாய், அகண்டமாய், சின்மய மாய், ஒழிவற நிறைந்த அவ்வருளினையும் உணரமாட்டா ரென் பது கருத்து. (௰)

இறைவன் அனுதியே உயிரோடு கலந்து நிற்பினும் குரு வுருக்கொடு வந்தல்லது பாசம் நீங்காதென்பதாயிற்று. இது சகலரைக் குறித்து நின்றது.

இதனால் ஆசாரியனால் பாசம்நீங்கவேண்டு மென்பது கூறப்பட்டது. (எ)

இவர் குருமூர்த்தமா யெழுந்தருளிவந்து இரட்சிப்பது ஒருவகைக்கோ வென்னில்?

அகலத் தருமருளை யாக்கும் வினைநீக்குஞ்
சகலர்க்கு வந்தருளுந் தான்,

எ-து. அகலத்தருமருளை யாக்கும் - விஞ்ஞானகலரிற் பக்குவர்க்கு அறிவிலே ஞானத்தை யுதிப்பிப்பன். ஆணவமலத்தை நீங்குவன்,—வினைநீக்கும் - பிரளயாகலரிற்பக்குவர்க்கு அவர்களைப்போல வமானும் மழுவுஞ் சதுர்ப்புயமுங் காளகண்டமு மூன்றுநேத்திரமுமாக எழுந்தருளிவந்து ஆணவமலத்தை நீக்கிச் சிவஞானத்தைப் பிரகாசிப்பிப்பன்,—சகலர்க்குவந்தருளுந்தான் - சகலரிற் பக்குவர்க்கு அறுவகைத் திட்சையினாலேயு மும்மலத்தையு நீக்கிக் கிரமத்திலே சிவஞானத்தைப் பிரகாசிப்பிப்பன் கர்த்தா.

நி-வ-உ. கலையினின்றும் நீங்கின விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்க்கும் நிராதாரமாய்நின்று அருளைவிளக்கும். கன்மமலச்சேதனம் பண்ணுதற்குப் பக்குவராகிய சகலர்க்கும் குரு வுருவினை யாதாரமாகக் கொண்டவர்போலத் தானேவந் தநுக்கிரகம் பண்ணும். அவ்வா றருள்புரிதல் சகலர்க்குங் கூடா தென்பதாம்.

பிரளயாகலர்க்குக் கலைநீங்கலாவது, அதன் வயத்தாகாதிருத்தல். குவ்வுருபு விகாரத்தால் தொக்கது. முதலிருவர்க்கு

"நிராதாரமாகிக் கரையிலருட்பரன் றுவிதா சத்திநிபாதத்தால்" என்றருளிச் செய்தவாறு காண்க.

இதனால் அருள் மானிடச்சட்டை சாத்திவருதற்குக் காரணங் கூறப்பட்டது. (அ)

குரு வாராம லாகாதோ வென்னில்?

ஆரறிவா ரெல்லா மகன்ற நெறியருளும்
பேரறிவான் வாராத பின்.

எ - து. ஆரறிவார் - ஆரறிந்து மோக்ஷமடையப் போகிறார்,—எல்லா மகன்ற நெறியருளும் - முப்பத்தாறு கருவிகளும் நீங்கும்படி பண்ணிச் சாயுச்சியமான வீட்டைக் கொடுக்கப்பண்ணின,—பேரறிவான் வாராதபின் - மகத்தாகிய சிவஞானத்தையுடைய சிவன் வாராதபோது.

நி - வ - உ. மந்திரமுதல் கலையீறாகிய ஆறிரண்டு அத்துவாவுங்கடந்த வீட்டுநெறியினை வெளிப்படுத்தும் நிறைந்தஞானத்தினையுடைய இறைவனே, குருவுருக்கொண்டு வாராதவிடத்து, அதனை அறியவல்லார்யார். ஒருவருமில்லை யென்பதாம்.

இதனால் நிறைந்த அறிவனாகிய இறைவனே உருக்கொடு வரினல்லது உண்மையையுணர்தல் கூடாதென்பது கூறப்பட்டது. (க)

இவர் வேறுமுத்தராக வரவேணுமோ என்னறிவிலேயிருக்கிறது போதாதோ வென்னில்?

ஞான மிவனொழிய நண்ணியிடுநற்கலநற்
பானு வொழியப் படின்.

எ - து. ஞான மிவனொழிய நண்ணியிடும் - இவன் ஞானாசாரியனாக வாராமல் ஞானம் பிரகாசிக்கும்,—நற்கல நற்பானு

வொழியப்படின் - நல்ல சூரியகாந்தக் கல்லினிடத்திலே யாதித்தனில்லாம லக்கினியுண்டாகின்.

இவ்விரண்டு மப்படியாகா தென்பது கருத்து.

நி - வ - உ. அருள்வடிவாகிய குரவனையன்றி யொருவற்கு ஞானமுண்டாதல்கூடும், ஆதித்தனாலன்றி மாசிலாச் சூரியகாந்தக் கல்லினிடத்து நெருப்புத்தோன்றுமாயின். இரண்டுமில்லை யென்பதாம்.

இதனால் திருவடிஞானம் குரவனையின்றியமையாச் சிறப்பிற்றென மேலதுவலியுறுத்தப்பட்டது. (௰)

அருளுருநிலை முற்றிற்று.

---

௬ - வது. அறியுநெறி.

அஃதாவது, உண்மைப்பொருளையுணரு முறைமை. அருளுருநிலைகூறி அதனா லறியும்பொருளுண்மை கூறுதலின், மேலையதிகாரத்தினோடு இதற்கியை புண்மையறிக.

அவரெப்போது குருவாவா ரென்னில்?

நீடு மிருவினைக ணேராக நேராதல்
கூடுமிறைசத்தி கொளல்.

எ - து. நீடு மிருவினைகள் - மிகுத்த புண்ணிய பாவங்களிரண்டும்,—நேராக நேராதல் - துலை யொத்தவிடத்து,— கூடுமிறைசத்திகொளல் - கத்தா திருமேனிகொள்வர், அப்போ சத்தி பதியும்.

நி - வ - உ. ஒன்றையொன்றேவ்வாது மிக்குவளர்ந்துவரும் புண்ணியபாவங்க ளிரண்டும் தம்மிலொப்பாகவரும் பருவத்திலே யுண்டாகும், சிவனுடைய சத்திபதிதல்.

நேராக நேராதல், ஓர் புண்ணியத்துக் கோர்பாவமோர் வகை யாளுைத்திருத்தலாம். அதுவன்றி வாக்குமனங் காய மென்னு மூவகையா லியற்றப்பட்ட புண்ணியங்கள் முழுவது மோர்பங்கும், பாவங்கள் முழுவது மோர்பங்கு மாகப், பொன் னும் இரும்பும் கன்மத்தாற் றுலையொக்கத் தூங்குதல்போலப், பலத்தாற் சமனுதல். சத்தி பதிதலாவது, நிலையாத வியல்பினை யுடைய வுலக நடையினையஞ்சி வீட்டுநெறியினை விரும்பும் வண்ணம் உயிர்கள துணர்வினைத் திருந்தச் செய்தல். ஒன்றை யொன் றேற்றத் தாழ்வுபடில் அவையவை யிகல்செய்திழுக்கு மென்பதாம்.

இதனு லுண்மை வுணர்தற் கேதுவான சத்திபதியு மெல் லைகூறப்பட்டது. (க)

கத்தா திருமேனிகொண்டுவந் தென்னத்தை யறிவிப்பா ரொனில்?

ஏக னனேக னிருள்கரும மாயையிரண்
டாகவிவை யாறு மநாதியில்.

எ - து. ஏகன் - கத்தாவும்,—அனேகன் - ஆன்மாவும்,— இருள் - ஆணவமலமும்,—கருமம் - கன்மமலமும்,—மாயை யிரண்டு - சுத்த மாயை யசுத்தமாயையும்,—ஆகவிவை - ஆக விந்தவாறுபொருளும்,—அநாதியில் - அநாதியிலே யுண்டான தென் றறிவித்தார்.

நி - வ - உ. ஒருவனாகிய இறைவனும், அளவில வாகியவு யிர்களும், இருள்வடிவாகிய ஆணவமலமும், கன்மமலமும், சுத் தமசுத்தமென்னு மிருவகை மாயைகளுமாகிய இப்பொருள் கள் ஆறும் அநாதியாகிய பொருள்கள்.

அனேகன் என்பதில் ஈற்றுமகரம் னகரமாய்த் திரிந்து நின்றது. இவையாறுமென அஃறிணை வாசகங்கொண்டு மிக

வினால்முடிந்த திணைவழுவமைதி. ஆறுமென்னு முற்றும்மை செய்யுள்விகாரத்தாற் றொக்கது.

இதனால் நித்தியப்பொருள்க ளிவையெனத் தொகுத்துக் கூறப்பட்டன. (உ)

அனாதியாகி லாறுபொருளினு மறிவ தேதெனில்?

செய்வானுஞ் செய்வினையுஞ் சேர்பயனுஞ் சேர்ப்பவனு
முய்வா னுளனென் றுணர்.

எ - து. செய்வானும் - கன்மத்தைச் செய்யப்பட்ட வான்மாவும்,—செய்வினையும் - செய்யப்பட்ட புண்ணியபாவமும்,—சேர்பயனும் - புண்ணிய பாவத்துக் கேதுவாகிய சுகதுக்கமும்,—சேர்ப்பவனும் - இந்தக் கன்மத்தைக் கூட்டிப் புசிப்பிக்கப்பட்ட கத்தாவும்,—உய்வானுளனென்றுணர் - இஃதெல்லா மறிந்து பிழைக்கிறவனுன்மா.

நி - வ - உ. புண்ணிய பாவங்களைப் பண்ணும் புருடனும், அவனாற் செய்யப்படும் வினைகளும், அவற்றின் பயனாகிய இன்பதுன்பங்களும், அவற்றைக் கூட்டியருத்துமிறைவனு மென்னுமிந்நான்கு திறத்தினையுடையனாக வுன்னையறிவாயாக. மாணவகனே! நீ கதிசேர்தற்பொருட்டு.

இவை யுணராதிருக்கவே யானெனதென்னுஞ் செருக்கரு து பிறவித்துன்ப முறுமென்பதாம். உடையனாதல் இருவினைகளைச்செய் திறைவனு லவற்றின்பயனை நுகர்தற்குத் தானுரியனாதல். (ங)

உய்வான் றனேயறிவனோ வென்னில்?

ஊனுயிரால் வாழு மொருமைத்தே யூனுடுயிர்
தானுணர்வோ டொன்றுந் தரம்.

எ - று. ஊனுயிரால்வாழு மொருமைத்தே - சரீரமானது ஆன்மாவினாலே யொருபடித்தாய் சீவிக்கிற முறைமைபோல், —ஊனொடுயிர் - இந்தச் சரீரத்தேயிருக்கிற வான்மாவும்,— தானுணர்வோ டொன்றாந்தரம். இந்தத் திருவருளினாலே சீவித்து நிற்கிறது மித்தன்மைத்து.

நி - வ - உ. உடம்பானது உயிரோடுகூடிப் பிரிப்பின்றி நடைபெறு மொற்றுமையினை யுடைத்து. அவ்வுடம்போ டுயிர்கணிறைந்த ஞானத்தோடுகூடி யொன்றுபட்டு வேறற நிலைபெறுந் தகுதியன. உடலகத்துயிர்போலக் கலந்துநின்று நடத்துமென்பதாம்.

உடம்பென்ற பொதுவகையால் ஐவகையுடம்பு மடங்கும். அவையடங்கவே நிலமுதல் நாதமீறாகிய தத்துவமெல்லா மடங்குமெனக் கொள்க. (ச)

அருளாற் காரியப்படுத லெப்படி யென்னில்?

தன்னிறமும் பன்னிறமுந் தானுங்கற் றன்மைதரும்
பொன்னிறம்போன் மன்னிறமிப் பூ.

எ - று. தன்னிறமும் - படிகந் தன்னுடைய பிரகாசத்தையும்,—பன்னிறமும் - பஞ்ச வன்னங்களினுடைய விளக்கத்தையும்,—தானுங்கற் றன்மைதரும் பொன்னிறம்போல் - இவ்விரண்டையுங் கூட்டிக் காரியப்படுத்தப்பட்ட வாதித்தப் பிரகாசத்தைப்போல,—மன்னிறமிப்பூ - கத்தாவினுடைய திருவருளுஞ் சித்துக்கறிவும் சடத்துப் பிரேரகமாயிருக்கிறது மித்தன்மைத்து.

நி - வ - உ. அடுத்த பலவன்னங்களையுங் கவர்தலும், அவையடுத்திருக்கினுந் தன்னிறமேகாட்டி நிற்றலுமாகிய படிகத்தினதுதன்மை யிரண்டிற்கும் தான் காரணமாகிநின்று பண்

னும் சூரியன் கிரணம்போலாம், இவ்வுலகிற்கு இறைவனது சுடராகிய ஞானசத்தி.

கட்டுவீடென்னு மிரண்டிற்குந்தானொன்றே காரணமெ ன்பதாம்.

இவை மூன்று பாட்டானும் இறைவ னுலகினை நடத்து மாறு கூறப்பட்டது. (௫)

அருளால் காணவேண்டுவதில்லை நானே காண்பனென் னில்?

கண்டொல்லை காணுநெறி கண்ணுயிர் நாப்பணொளி
யுண்டில்லை யல்லா தொளி.

எ - து. கண்டொல்லைகாணுநெறி-சீக்கிரமதினாலே காணப் பட்டது,—கண் - கண்ணொளி விளக்கானது கண்ணுக் கும் பதார்த்தத்துக்கு நடுவே பிரகாசித்தாற் கண்ணானது பதார் த்தத்தைக்காணும்,—உயிர் நாப்பணொளியுண்டு - ஆன்மாவுக்கு நேயத்துக்கு நடுவே யருள் பிரகாசித்தா லான்மா நேயத்தைப் பெறுகிறதுண்டு,—இல்லையல்லாதொளி - ஒளியாகிய திருவ ருள் பிரகாசியாதபோது நேயமே விளங்காது.

நி - வ - உ. நினைவினையுடைய வுயிரினது நடுவாக ஞான வொளிக்கு நிலையுண்டாதல் வேண்டுமென்றாயின் வாயில்வழி யாற் புலன்களை யுற்றுப்பார்த்து விளைவிலுணரு முறைமை யில்லை.

நடுவாகநிற்றல் கலந்து நிற்றல். இதனால் ஞானமுன்னிற் பினல்லது அறிதல் கூடாதென்பதோ ரநுபவவகையால் விள ங்கக் கூறப்பட்டது.

இது குரவனுலன்றி யுரைகொண்டுணர்த லரிதெனக் கொள்க. (௬)

அரனருளாற் காணுஞ்செய லென்போல வென்னில்?

புன்செயலி னோடும் புலன்செயல்போ னின்செய
மன்செயல தாக மதி. [௭௦

எ - து. புன்செயலினோடும் புலன்செயல்போல் - ஆன்மா பஞ்சேந்திரியங்களினாலே யொருவிடயத்தை யறிகிற முறைமைபோல,—நின்செயலை - உன்னுடைய செயலையும்,—மன்செயலதாகமதி - நிலைபெற்ற திருவருளினாலே காரியப் படுகிறதென் றறிவாயாக.

நி - வ - உ. புருடனது சிறுதொழிலின் வழியே திரிபின்றி நடக்கு மித்திரியங்களது செயல்போல, மாணவகனே! நின்னுடைய செய்தியையும் இறைவனது கிரியாசத்திவழியே யவ்வாறு நடப்பதாகக் கருதுவாயாக. அவ்வாறு கருதவே வினைத்தொடர்பின்றிப் பிறவிநீங்கி நிற்பனென்பதாம்.

இதனா லிறைவனது செயல்வழி நிற்றல் கூறப்பட்டது.

அருளாற் செயற்பட்டறிவ தேதென்னில்?

ஓராதே யொன்றையுமுற் றுன்னாதே நீமுந்திப்
பாராதே பார்த்ததனைப் பார்.

எ - து. ஓராதே - ஒன்றையும் விசாரியாதே கேவலத்திலும்,—ஒன்றையுமுற் றுன்னாதே - சகலத்திலும் நீ யொன்றையு நினையாதிருக்கச் செய்தேயிரு,—நீமுந்திப்பாராதே - சுத்தத்திலு நீ யதுவிதுவென்று சுட்டிப்பாராதே,—பார்த்ததனைப்பார் - இந்த மூன்றவத்தையிலு மதுவதுவாக வருவிக்கப் பட்ட திருவருளையே காண்பாயாக.

நி - வ - உ. ஞான மெவ்வண்ண மிருக்குமோவென் றோராயாமல், அதனையும் விடயங்கள்போலக் குறிக்கொண் டேன்றிநி

னையாமல், நீயாகமுன்சென்று மேற்கொண்டு காண்டலுஞ் செய்யாமல், உன்னைக்கண்ட ஞானத்தினைக் காண்பாயாக.

இவ்வா றசைவின்றி நிற்கவே அவ்வகண்டமாகிய ஞானந் தானே தோன்றுமென்பது கருத்து. (அ)

அப்படித் திருவருளை யெதிரிட்டுப் பார்க்கி லெனக்குச் சந்தோஷம் வருமே யென்னில்?

களியே மிகுபுல னுக்கருதி ஞான
வொளியே யொளியா வொளி.

எ-து. களியே மிகுபுலனுக் கருதி-அந்தச்சந்தோஷமே மிகுத்தவிடயமாக நினைத்து, — ஞானவொளியே யொளியா வொளி - ஞானமாகிய பிரகாசமே மறைவாக ஒளித்து நிற்பாயாக.

நி-வ-உ. இத்தன்மையவாகிய ஞானத்தினைக் காணப் பெற்றமையால், வருமகிழ்ச்சியைப் பெரியவிடயமாக நினைந்து ஞானமாகிய வொளியன்றி வேறுனக்கோ ரொளியின்றாகும் படி அதனுட் புக்குக்கரந்து நிற்பாயாக.

கரந்துநிற்றல் விகற்பமறக் கூடிநிற்றல். (கூ)

என்று மிவையிழந்துநிற்கிற தெப்படி யென்னில் ?

கண்டபடி யேகண்டு காணுமை காணுமை.
கொண்டபடி யேகொண் டிரு.

எ-து. கண்டபடியேகண்டு - திருவருளைத் தரிசித்த படியே தரிசித்து,—காணுமை காணுமை - சகல கேவல நீங்கினபடியே நீங்கி,—கொண்டபடியே கொண்டிரு - திருவருளுன்னைக் கருத்துக் கொண்டபடியே நீயுமசைவற நிற்பாயாக.

நி-வ-உ. ஞானமான துனக்கு யாதொருபடியே வெளிப்பட்டது, அப்படியே நீயும் கண்டறியாமையாகிய அதீதா

வத்தைவந்து தோன்றாமல், யாதொருபடி யுன்னை விழுங்கிற் றப்படியேநீயும் விழுங்கக் கொடுத்திருப்பாயாக.

இம்மூன்றுபாட்டானு ஞானத்தினைக்காணுமாறும், கண்டா லதனுட்கலக்குமாறும், அவ்வழித் தன்னை அதன் வயத்த னாக்குமாறும் கூறப்பட்டன. மாணவகனேயென்ப திம்மூன் றிற்குங் கூட்டி யுரைக்கப்பட்டது. (௬0)

அறியுநெறி முற்றிற்று.

எ - வது. உயிர் விளக்கம்.

அஃதாவது ஆன்மசுத்தி பண்ணும்படி அறியுநெறியிற் கூறியவாற்றான் அறிந்தபடிநின்று யானெனதென்னுஞ் செருக்கறுத்தல் கூறினமையின், மேலையதிகாரத்தினோ டிதற்கியை புடைத்தெனக் கொள்க.

கொண்டபடி கொள்வ தெக்கால மென்னில்?

தூநிழலார் தற்காருஞ் சொல்லார் தொகுமிதுபோற்
றானதுவாய் நிற்குந் தரம்.

எ - து. தூநிழலார் தற்காருஞ் சொல்லார் பவுத்திரமாகிய தன்னுடையநிழல் ஆதித்தன் மத்தியத்திலேவந்தாற் றனக்குள்ளேயடங்கிநிற்கிறதற்கு யாருஞ் சொல்ல வேண்டியதில்லை,— தொகுமிதுபோல் - இந்தமுறைமைபோல,— தானதுவாய்நிற்குந்தரம் - இருவினை யொப்புவந்தா லான்மா திருவருளானாய் நிற்கிதற்கு மியாருஞ்சொல்லவேண்டுவதில்லை.

நி - வ - உ. கோடையான் வெதும்பினோன் குளிர்ந்தநிழலை யடைதற்கு அடைதியென வொருவருஞ் சொல்லார், தானே விரைவினடையுந் தன்மையினை யொக்கும்; மாயாவிகார வெம்

மையான் வருந்தினே னொருவன் தானவ்வருளினையடைந் ததுவாய்நிற்குமுறைமை.

உலகுவெறுப்பினல்லது அருளினை யடைதல் கூடாதென் பதாம்.

இதனா லருளினையடைதற்கு ஏது கூறப்பட்டது. (௪)

எல்லார்க்குமொக்க விந்தத்திருவரு ளில்லாத தென் னெனில்?

தித்திக்கும் பாலுங் கைக்குந் திருந்திடுநாப்
பித்தத்தின் றன்றவிர்ந்த பின்.

எ - து. தித்திக்கும் பாலுங் கைக்கும்-பித்த மேலிட்ட பொழுது தித்திக்கிறபாலுங் கசக்கும்,—திருந்திடு நாப்பித்தத் திற் றன்றவிர்ந்த பின் - திருத்தமாகவறிகிற நாவிலே பித்த நீங்கினபோது கசந்தபாலுந் தித்திக்கும். அதுபோல வாண வமல மேலீட்டினாலே குருலிங்க சங்கமத்திலே யாசையறப் பண்ணும், அந்த வாணவமல நீங்கினபோது குருலிங்க சங்க மத்திலே விருப்பமுண்டாம்.

நி - வ - உ. குற்றந்தீர்ந்த நாவானது பித்தநோயினின் றும் தான் நீங்கினபின்னர் முன்கைத்தபாலும் தித்திக்கும் அதனைத்தானுங் கண்டறியும்.

மலவிருள் தீர்ந்தபின்னர் முன்னைத் திரோபவித்து நின்ற மருளும் அருள்வடிவாகி வெளிப்படும், அதனையுயிர்களுங் காணுமென்பது பொருள். மாசுதீரின் விளங்கித் தோன்றுந் தன்மை யினையுடையது உயிரென்பதற்கு உவமித்து இதனைத் திருந்திடு நாவென்றருளிச்செய்தார். இதுவும் ஒட்டென்னு மலங்காரம்.

இதனு லருள்வெளிப்படுங் காலமும், உயிர் அதனைத்திருந் திக் காணுங்காலமு மொன்றென்பது கூறப்பட்டது. (உ)

அறியாமைநீங்க வறிந்தவ னென்னில்?

காண்பா னொளியிருளிற் காட்டிடவுந் தான்கண்ட
வீண்பாவ மெந்நாள் விழும்.

எ - று. காண்பா னொளியிருளிற் காட்டிடவும் - காணப்பட்ட வான்மாவுக்குத் திருவருளான ஞானம் மலத்தைநீக்கி ஞேயத்தைக்காட்டச்செய்தேயும், — தான்கண்ட வீண்பாவ மெந்நாள்விழும் - நான்கண்டேனென்கிற பாவ மெந்தச்சமயத்திலே தள்ளுமோ?

கி - வ - உ. ஒளிவடிவாகிய ஞானம், தன்னைக் கண்டறிதற்பொருட்டு மலவிருளிலே மருண்டுகிடக்கின்ற வுயிர்கட்குத் தன்னை வெளிப்படுத்தவும், அதனைநாடாது உயிர் தானேகாண்பதாகக் கண்டமையாலே வறிதேவரும் பாவமென்னபயனைச் செய்ததாய்வந்துமுற்றும்.

ஓர் புலனுணர்வான் வரும் பாவம்போலாது வாளா வருதலின் வீண்பாவமென் றருளிச்செய்தார்.

பித்தம் பாலானன்றி மற்றொன்றானுந் தீராவாறுபோல, மலமும் அருளாலன்றிப் பிறிதொன்றால் தீராதென்பதூஉம், அருள் மறைந்துநில்லாது வெளிப்பட்டுநிற்பினும் அந்நாக்குச் சுவைகண்டல்போலத் தானே கண்டல் கூடாதென்பதூஉம், இதனுட் கொண்டுகிடந்தவாறு கண்டுகொள்க.

இதனால் அருளைமுன்கொண்டு காணாக்கால் குற்றமுடைத்தென்பது கூறப்பட்டது. (ங)

தெளிந்தார் செயலுந் தெளியாதார் செயலு மெப்படியோ வென்னில்?

ஒளியு மிருளு மொருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல்.

எ - து. ஒளியுமிருளு மொருமைத்து படலமுடைய கண்ணுக்கு ஆதித்தப்பிரகாசமும் பூதவிருளு மொருபடித்து,—பன்மை - இந்தமுறைமைபோல,—தெளிவு தெளியார்செயல்-மல மாயா கன்ம மேலிட்ட பேர்க்குப் பாசமும் பதியுமொரு படித்தாய் விளங்காநிற்கும்.

நி - வ - உ. பலவாய பொருள்கடம்பன்மைதோன்றாது ஒருபடித்தா யிருத்தல் ஒளியின்கண்ணும் இருளின்கண்ணு மொக்கத் தெளிந்து நிற்றலும் மருண்டு நிற்றலுமாய செயல்கள் அவ்விடத்துப்பேதம்.

இதனு லருளோடுகூடி நிற்றல் ஒருவகையா யிருளோடு கூடிநிற்றல்போலு மென்பது கூறப்பட்டது. பிறிதொன்றாந் தோன்று தென்பது கருத்து. (ஞ)

தெளிந்தறிந்துகூடுவ தெல்லார்க்குந்தெரியுமோவென்னில்?

கிடைக்கத் தகுமேநற் கேண்மையார்க் கல்லா
லெடுத்துச் சுமப்பானை யின்று.

எ - து. நற்கேண்மையார்க்கல்லால் - நல்ல கேள்வியினை யுடைய நாதாக்களுக்கேயல்லாமல், — எடுத்துச் சுமப்பானை - எல்லாப்பதார்த்தத்தையுஞ் சுமத்தச் சுமக்கிறசிவனை,—இன்று-இப்பொழுது,—கிடைக்கத்தகுமே கிடைக்குமே கிடையாதோ பின்னை.

நி - வ - உ. நல்ல கேளினை யுடையார்க்குத் தம்மேல் பாரமுழுதுஞ் சுமத்தச் சுமக்குமொருவனை யிப்பொழுதே கிட்டுதல் கூடுமோ.

நற்கேண்மையென் றருளிச்செய்தார் அருளோடு கூடிய தென்பதற்கு.

இதனால் அருளாகுங்கேண்மையினையுடையாற்குத் தன்னை யடைந்தார் வினைகளெல்லாம் அவரைத் தொடராது தன்செயலாகக் கொள்ளு ஞேயம் வெளிப்படுதலெளிதென்பது கூறப் பட்டது.

"சிவனு மிவன்செய்தி யெல்லாமென்செய்தியென்றும் செய்தவெனக் கிவனுக்குச் செய்தவென்றும், பவமகலவுடனாகி நின்றுகொள்வன் பரிவார் பாதகத்தைச் செய்திடினும் பணி யாக்கிவிடுமே" என்றருளிச் செய்தவாறுகாண்க. (ரு)

எடுக்கிறவனொருத்தன் சுமக்கிறவனொருத்தனோ, எல்லாம் பிரமந்தானே யென்னில்?

வஞ்ச முடனொருவன் வைத்த நிதிகவரத்
துஞ்சினையோ போயினையோ சொல்.

எ-து. வஞ்சமுடனொருவன் - வஞ்சகமாக வொருவன், —வைத்தநிதிகவர - வைத்த திரவியத்தை யெடுத்துக்கொள்ள வைத்தவன்வந்துகேட்க வில்லையென்ன,—துஞ்சினையோ போயினையோசொல்-தூங்கித்தான் கிடந்தாயோ இவ்விடம்விட்டுத் தான்போனாயோ சொல்? அப்படிப்போலச் சிவன் தனு கரண புவன போகங்களைக் கொடுத்திருக்கவும், கொடுத்தவன்றானே குருலிங்கசங்கமமாய்வந்து என்னுடைமையைத்தா வென்று கேட்க, இல்லையென்றுசொல்லிக் கொடுத்தவனை மறைக்கையினாலே நீ பிரமமல்ல அடிமை.

நி-வ-உ. ஒருவன் சேமித்த பொருளினை ஒருவன் களவினால் கவர்ந்துகொண்டேக, மற்றவனுறங்குதல் செய்தானோ, அவ்விடம் விட்டுநீங்குதல் செய்தானோ, மாணவகனே? சொல்வாயாக.

அதுபோலக் கேடின்றி நிரம்பிநிற்கு ஞானசத்தியினை வஞ்சித்து அதன் முதலாயஞேயத்தினை யுடைத்தாதல் அரிதென்பது இதனாற் கூறப்பட்டது.

இதுவும், முன்னதுவும் ஒட்டென்னு மலங்காரத்தாற் கூறப்பட்டன. அஞ்சினையோ போயினையோ என்பதனை அஞ்சினனோ போயினனோ எனப் பாடமுரைத்து அஞ்சுதல் செய்தானோ அவ்விடம் விட்டு நீங்குதல் செய்தானோ என உரை கூறினர் நிரம்ப வழகியர். (௬)

இப்படி யடிமையாகிய ஞானவானிடத்திலே மலங்கள் வாராதோ வென்னில்?

தனக்கு நிழலின்று மொளிகவருந் தம்ப
மெனக்கவர நில்லா திருள்.

எ - து. தனக்கு நிழலின்று மொளிகவருந் தம்பமென - ஆதித்த னுச்சியிலே வருகிறபோது படிகத்தம்பமானது பஞ்சவன்னங்கவராம லாதித்தன்றனாய் நின்றதுபோல, — கவர நில்லாதிருள் - ஆன்மாவுக் கிருவினையொப்பு மலபரிபாகம்வந்த வவதரத்தி லருள்பிரகாசிக்கவே பஞ்சமலங்களையும்பொருந்தாம லருளேநிகழ நிற்பது மிப்படியேபோல.

நி - வு - உ. தனக்கென வேறோரொளி தோன்றாதவண்ணம் சூரியகிரணத்தாற் கவர்ந்துகொள்ளும் படிகத் தம்பம்போல ஆன்மா தன்னுடையபோதந்தோன்றாதுநிற்கும் வண்ணம் அருள் கவர்தலைச்செய்யுமாயின் அந்நிலையே யிருளானது தன்பால் நிலைபெறாதுநீங்கும்.

சூரிய கிரணத்தினுள்ளே தன்னைக் கொடுத்து நிற்கும் படிகம்போல ஆன்மாவுந் தன்னையருளினுள்ளேகொடுத்து நிற்றல் வேண்டு மென்பதாம்.

இதனால் ஆன்மாவை அருள் தன்வயத்தாக்குமாறு கூறப்பட்டது.

(எ)

மலந்தோன்றாம லருளேநிகழநிற்ப தெப்படியென்னில் ?

உற்கைதரும் பொற்கை யுடையவர்போ லுண்மைப்பி
னிற்க வருளார் நிலை.

எ - று. உற்கைதரும் பொற்கை யுடையவர்போல்-பொலிவினையுடைய கையிலே விளக்கைப்பிடித்து முன்னிட்டுப் போனவர், நினைத்த பதார்த்தங்களை யெடுப்பார்கள்,—உண்மைப்பினிற் கவருளார்நிலை - ஆன்மாவருளை முன்னிட்டுக்கொண்டு நிற்கவே ஞேயத்தைப் பொருந்துவன்.

நி - வ - உ. தழற்கொள்ளியினைப் பிடித்திருக்கு மழகிய கையினையுடையோர், தாம்வேண்டிய பொருள்களைக் காணுமளவும் அதனைமுன்னிட்டுத் தாம் பின்னிற்கு மாறுபோல, ஞேயமானது வெளிப்படுமளவும் அருளைத் தமக்கு முன்னாக்கித் தாம் அதன்பின்னிற்றலே யருளோடு பொருந்திநிற்கு நிலையாவது.

இதனாலருளோடு பொருந்திநிற்குமுபாயங்கூறப்பட்டது.

அருளையறியும், யானறிய வேண்டுவதில்லை யென்னில் ?

ஐம்புலனாற் றான்கண் டகன்றா லதுவொழிய
வைம்புலனார் தாமா ரதற்கு.

எ - று. ஐம்புலனாற் றான்கண்டகன்றா லதுவொழிய-ஆன்மா பஞ்சேந்திரியங்களினாலே யொருவிடயத்தை யறிகிறதல்லாமல்,—ஐம்புலனார் தாமாரதற்கு-இந்திரியங்களான்மாவுக்குவிடயங்களை யறிவிக்கிறதல்லாம லிந்திரியங்களுக் கறியவேண்டுவதில்லை, அப்படிப்போல வான்மா திருவருளினாலே ஞேயத்தைப் பொருந்துகிற தல்லாமல் திருவருளுக் கறியவேண்டுவதில்லை

நி - வ - உ. மெய் வாய் கண் மூக்குச் செவிகளால் தாம் கண்டறிந்த விடயங்களுள் ஒன்றல்லவாயின், அவ்வருளானே யன்றிப் பேரின்பமாகிய நேயத்தினை யடைதற் கவ்வைம் பொறிகள்தான் ஆர் ? உயிர்கள்தாம் ஆர் ?

சுட்டிறந்து நின்றமையா லிவர்க் கடைத லுரிமையில்லை யென்பார் ஆமொன்றருளிச்செய்தார். (௯)

அருள் காட்டவேண்டுவதில்லை, நானேகாண்ப னெனில்?

தாமே தருமவரைத் தம்வலியி னாற்கருத
லாமே யிவனு ரதற்கு.

எ - று. தாமேதருமவரை - ஒருத்தன் றயவினாலேகொடுக்கச் செய்தே,—தம்வலியினாற்கருதல் - தம்முடைய வலிமையினாலே பறித்தாற் கொடாது,—ஆமே - அப்படிப்போல,—இவனாரதற்கு - திருவருளானது தன்னுடைய கிருபையினாலே நேயத்தைக் காட்டாநிற்க வான்ம போதத்தாலே நேயத்தைப் பொருந்தப் போகாது.

நி - வ - உ. ஒருபொருளினை யொருவற்குத் தாமே கருந்தாகநின்று விரும்பித்தருதற்கு உரியாரைத் தம்வலியால் தந்தவராகநினைத்தல் முறைமையன்றே, ஆதலால், அவ்வருளாற்பெறும் பேரின்பத்திற்கு அப்பெற்றியினையடைய நிற்கும் இவன் யார்.

இவை யிரண்டுபாட்டானும் பேரின்பமாவ தருளாலே யன்றிக் கரணங்களோடு கூடியும் தனித்தும் உயிர்களால் அடையப்படா தென்பது கூறப்பட்டது. (௪0)

உயிர்விளக்கமுற்றிற்று.

நி - வ - உ. மெய் வாய் கண் மூக்குச் செவிகளால் தாம் கண்டறிந்த விடயங்களுள் ஒன்றல்லவாயின், அவ்வருளானே யன்றிப் பேரின்பமாகிய நேயத்தினை யடைதற் கவ்வைம் பொறிகள்தான் ஆர் ? உயிர்கள்தாம் ஆர் ?

சுட்டிறந்து நின்றமையா லிவர்க் கடைத லுரிமையில்லை யென்பார் ஆமொன்றருளிச்செய்தார். (கூ)

அருள் காட்டவேண்டுவதில்லை, நானேகாண்ப னெனில்?

தாமே தருமவரைத் தம்வலியி னாற்கருத
லாமே யிவனு ரதற்கு.

எ - து. தாமேதருமவரை - ஒருத்தன் றயவினாலேகொடுக்கச் செய்தே,—தம்வலியினாற்கருதல் - தம்முடைய வலிமையினாலே பறித்தாற் கொடாது,—ஆமே - அப்படிப்போல,—இவனாரதற்கு - திருவருளானது தன்னுடைய கிருபையினாலே நேயத்தைக் காட்டாநிற்க வான்ம போதத்தாலே நேயத்தைப் பொருந்தப் போகாது.

நி - வ - உ. ஒருபொருளினை யொருவற்குத் தாமே கருந்தாகநின்று விரும்பித்தருதற்கு உரியாரைத் தம்வலியால் தந்தவராகநினைத்தல் முறைமையன்றே, ஆதலால், அவ்வருளாற்பெறும் பேரின்பத்திற்கு அப்பெற்றியினையடைய நிற்கும் இவன் யார்.

இவை யிரண்டுபாட்டானும் பேரின்பமாவ தருளாலே யன்றிக் கரணங்களோடு கூடியும் தனித்தும் உயிர்களால் அடையப்படா தென்பது கூறப்பட்டது. (௪௦)

உயிர்விளக்கமுற்றிற்று.

இதனாற் பேரின்பத்தை யெய்துவா ரிவரென்பது கூறப் பட்டது. (க)

அருளேபோதாதோ, அதற்குமேலாகியநேயமேனென்னில்?

இருவர் மடந்தையருக் கென்பயனின் புண்டா
மொருவ னொருத்தி யுறின்.

எ - து. இருவர் மடந்தையருக் கென்பயன் - இரண்டு ஸ்திரீகளுங்கூடினா லின்பமில்லை, — இன்புண்டாமொருவ னொருத்தியுறின்-ஒருவனு மொருத்தியுங் கூடினா லின்பமுண்டு ஆன்மா நேயத்தைக் கூடுமிடத்துப் பேரின்பமாகிய போகமுமுண்டாம்.

நி - வ - உ. இரண்டுபேர் மகளிர்க்குத்தம் புணர்ச்சியால் வரும்பயனென்னை ? ஓர் புருடனு மோர் மகளுந்தம்மிற் புணர்வாராயினன்றே யின்பமுண்டாவது.

உயிர்க்கும் அருட்கு முதலாயநேயம் வெளிப்படினல்லது இன்பமுண்டாகா தென்பதுபொருள். ஒருவனொருத்தியென் னும் உவமம் தலைமையும் தன்மையும் பற்றிவந்தது. இதற்கிவ் வாறன்றி யுயிரினைப் பெண்ணியல்பினதாகவும் இறைவனை யாணியல்பினதாகவும் அறிவில்லார் கூறுமது பொருளன்று, அன்னவியற்கை அசேதனவடிவிற்கல்லது சேதனவடிவிற் கின் றாதலான்-

இதனாற் பேரின்பத்தினையெய்து மெல்லை கூறப்பட்டது.

ஆன்மா நேயத்தைக் கூடுமிடத்து இவனுடைய நேயத்துக் கின்பமுண்டோ வென்னில்?

இன்பதனை யெய்துவார்க் கீயு மவர்க்குருப
மின்பகன மாதலி னில்.

எ - து. இன்பதனை யெய்துவார்க் கீயும் - இன்பத்தைப் பெறவேணு மென்றவர்களுக்குக் கொடுப்பார், — அவர்க்குருப மின்பகனமாதலினாலில் - அந்தச்சிவனுக்குப் பேரின்பமே சொரூப மாகையினாலே இன்ப மொருவர் கொடுக்கவேண்டிய தில்லை.

நி - வ - உ. தன்னைவந் தடையுமவர்க்குப் பேரின்பத்தினை வழங்கும் அவ்விறைவன் றனக்கு வடிவம் ஆநந்தமயமாதலால், தான் றன்னை நுகர்வதில்லை.

அநாதியே யாணவமலத்தால் மறைப்புண்டு அதுநீங்கி யிப்பொழுது நவமாகவந்ததுபோலக் கருதுமுயிர்கள்போலாது, இறைவன் அநாதி மலமுத்தனாதலான் அஃதுமில்லை யென்றரு ளிச் செய்தார். புதிதாக வந்ததன்றென்பது கருத்து.

இதனா லுயிர்களுக்குக் கொடுப்பதன்றி யிறைவன் றானு மவ்வின்பத்தினை நுகர்வனோவென்னுஞ் சங்கையினையகற்றிக் கூறப்பட்டது. (௯)

அந்நியமாயிருந் தவ்வின்ப மநுபவிப்பதேது வென்னில்?

தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலை நீயேகமெனக் கொள்.

எ - து. தாடலைபோற் கூடியவை - ளவ்வுந் தவ்வுந் தோன்றாமை டவ்வாய்நின்றதுபோல, — தானிகழா வேற்றின்பக் கூடலை - தற்போதந் நிகழாதவிடத்திலே விளங்கப்பட்ட பேரின்பத்தை, — நீயேகமெனக்கொள் - நீ யொன்றென்றே யறிவாயாக.

நி - வ - உ. தாள்தலையென்னுஞ் சொல்லிரண்டுந் தம் பொருள் பிரிந்து தோன்றாது பொருந்தியவாறுபோல், புணர்ச்சிக் கண்ணொருகாலு முண்டாகாத வேற்றுமையினையு மின்பத்தி

னையுமுடைய கலப்பினையிறைவனோ டொன்றாத லெனக்கொள் வாயாக மாணவகனே !

அச்சொற்கள் ஓரொருகாற் பிரிதலும், புணர்வாற் றம்டெ றும்பயனின்மையுங் கருதி, யிவை யன்னவல்லவென்பதற்கு நிகழாவேற்றின்பக் கூடலென் றருளிச்செய்தார். தானுந்தலையு மென்னுஞ் சொற்களாற் கூறியது, உயிரினது தாழ்வு மிறை வனது உயர்வுங் காட்டுதற்காம்.

இதனால் ஞேயத்தழுந்தி யொன்றுபட்டு நிற்குநிலை கூறப் பட்டது. (௪)

பின்னம் ஏகம்பெறா என்னில் ?

ஒன்றாலு மொன்றா திரண்டாலு மோசையெழா
தென்றாலு மோரிரண்டு மில்.

எ - து. ஒன்றாலு மொன்றாது - ஆன்மாவுஞ் சிவனுமொன் றென்று சொல்லுவாயென்னில் அப்பொழுது பெறுவானும் பேறுமில்லை,—இரண்டாலு மோசையெழாதென்றாலும் - ஆன் மாவுஞ் சிவனு மிரண்டென்று சொல்லுவாயென்னில் ஆன்மா வுஞ் சிவனு மேகத்துவமாகிய சாயுச்சியமு மில்லையென்றாம். இப்படியாகையினாலேயோ,—ஓரிரண்டுமில் - துவிதாத்துவித மில்லை.

நி - வ - உ. இறைவனையு முயிரினையு மொன்றென்போ மாயினும் பின்னர்ப் பொருந்தவேண்டுவதில்லை, இரண்டென் போமாயினுந் தம்முட்டாக்கியவொலியெழுதலைச்செய்யாது, ஆதலா லொருபொருளுமல்ல விரண்டாவது மில்லை.

இதனா லிறைவனையும் உயிரினையுமேக மென்பாரையு மிரண்டென்பாரையு மறுத்து அத்துவிதங் கூறப்பட்டது. அத் துவிதமாவது தம்மிற் கலப்பா லநந்நியமா யிருத்தல். (௫)

கூடிப்பொருந்துங் கொள்கை யாதா மென்னில் ?

உற்றாரும் பெற்றாரு மோவா துரையொழியப்
பற்றாரு மற்றார் பவம்.

எ - து. உற்றாரும் - அந்தப் பொருளைப் பொருந்தினே னென்கிறவர்களும்,—பெற்றாரும் - அந்தப்பொருளைப் பெற்றேனென்கிறவர்களும்,—ஓவாது - கூடாது,—உரையொழிய - இந்தவிரண்டுவசனமு நீங்க,—பற்றாரும் - இந்தப்பற்றுக்க ளற்றவரோ,—அற்றார்பவம் - அவர்களே சநந மரணங்களை நீக்கி நிட்டையைப் பொருந்தின நாதாக்கள்.

நி - வ - உ. பேரின்பமாகிய முத்தியினை யடைந்தாரும், அதற்கு நேரே காரணமாகிய சமாதியை யடைந்தாரும், மெய்ப்பொருளினை யொருகாலு நீங்குதல் செய்யார். அவ்வாறு வாக்கிறக்கும்படி அதனைப்பற்றி நில்லாதாரும்பிறப்பினை யற்றவர்.

உரையொழியப்பற்று றென்றதனால் கேட்டல் சிந்தித்தல் தெளிதலாகிய நிலையின்கண் நிற்பரென்பதாம். பிறப்பற்று ரென்பது பதமுத்திகளை யடைவாரென்பது கருத்து.

இதனால் வீட்டினையடைவாரது வகைமை கூறப்பட்டது.

உரையொழியப்பெற்ற தென்போல வென்னில் ?

பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமே
நீயொன்றுஞ் செய்யாம னில்.

எ - து. பேயொன்றுந் தன்மைபிறக்குமளவும் - பேய்பிடியுண்டவன் முறைமை வருமளவும்,—நீயொன்றுஞ் செய்யாமனில் - உனக் கந்தச்சிவாநுபூதி பிறக்குமளவு மான்மபோதஞ் சிவியாம லப்பொருளிலே நிற்பாயாக.

நி - வை - உ. பேய் பிடியுண்டோரது தன்மை யுனக்குண்டாமளவு நீ மேல் யாதொரு செயலுஞ்செய்யா ததைசவற நிற்பாயாக.

பேய்பிடியுண்டாரது செயலெல்லாம் பேயின் செயலாமாறுபோல வுன்செயலனைத்தும் இறைவன்செயலாமளவு மென்பது கருத்து. பின்னர்ச் சாதனையின்றென்பதாம். இனியென்றதனான் முன்னர்ச் செய்யவேண்டுவ வனைத்துஞ்செய்து முற்றியதென்பதும் பின்னிலைக்குச் செயலின்மையே வேண்டுவ தென்பதுங் கண்டுகொள்க.

இதனாற் சமாதிசெய்வோர்க் கதுமுதிர்ந்து கைவருமாறு கூறப்பட்டது. (எ

பொருள்பெறுவார் செயல்போ லெதன்போல வென்னில்

ஒண்பொருட்க ளுற்றா ருபாயமே யல்லாது
கண்படுப் போர் கைப்பொருள்போற் காண்.

எ - து. ஒண்பொருட்க ளுற்றார்க்கு - ஞேயத்தைப் பொருந்தின ஞாதாக்களுக்கு,—உபாயமேயல்லாது - ஞேயமொன்றுமே யல்லாமல் மற்றக்கிரியைகள் செய்வாரோ வென்னில்?—கண்படுப் போர் கைப்பொருள்போற்காண் - நித்திரை பண்ணினவன் கையிற் பதார்த்தம் விழுந்தது தெரியாததுபோல.

நி - வை - உ. ஒள்ளியதாய மெய்ப்பொருளினது எல்லையைத் தலைப்பட்டோர்க் கவ்விடத்தேயும் பேரின்பமே யன்றி மற்றுள்ள யோகமுதலிய தொழிலெவையும் உறங்குவோர்கையிற் பண்டம்போல மெல்லெனத் தம்மைத்திலே நீங்குவதாக வுறுதி. தாமே வலிந்தீர்ப்ப தன்றென்பதாம்.

இதனா லவர்சமயாசாரம் நீங்கு முறைமைகூறப்பட்டது.

கூடியது கூறலாமோ வென்னில் ?

மூன்றாய தன்மை யவர்தம்மின் மிகமுயங்கித்
தோன்றாத வின்பமதன் சொல்.

எ - து. மூன்றாயதன்மை - ஞாதுரு ஞான ஞேயந்தோன்றாத விடத்திலே,—அவர்தம்மின் மிகமுயங்கி - அந்தச் சிவனிடத்திலே மிகுதியும் பிரியப்பட்டு,—தோன்றாத வின்பமதன் சொல் - ஆன்மபோதத்தாலே யறியப்படாத பேரின்பத்தைச் சொல்லப்படாது.

நி - வ - உ. ஞாதுரு ஞான ஞேயமென்னு மூன்றுவகைப்பட்ட தன்மையுஞ் சிவசிவபாவங்களிரண்டுந் தம்மின் மிகவுங் கூடியகலப்பினாற் றோன்றுதலைச் செய்யாத வின்ப மவ்விடத் துவார்த்தையாது.

இதனா லவ்வானந்தமிகுதியின் அதிசயங் கூறப்பட்டது.

எவ்வா றப்பொரு ளெய்துவ தென்னில் ?

இன்பி னினிதென்ற வின்புண்டே யின்புண்டா
மன்பு நிலையே யது.

எ - து. இன்பினினி தென்றல் - எல்லாவின்பத்துக்கு மேலானதென்னிற் பேரின்பம், — இன்புண்டே யின்புண்டாம் - அந்தப் பேரின்பத்திலே சித்தையுண்டான வந்நேயமே யன்புநிலையுண்டாம்,—அன்புநிலையேயது - குரு லிங்க சங்கமத்திலே பத்தியுண்டாகவே பேரின்பம் விளங்கி நிற்கும்.

நி - வ - உ. எல்லா வின்பங்களினு மினிமை யுடைத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படும் பேரின்பமாவ தொருவற் கன்பென்ப திப்பொழுதுண்டாயி னிப்பொழுதேயுளதாம் அது மிக்கவன்பினது நிலையே தனக்குநிலையாக வுடையதாகலான்.

இன்பென்றபொதுமையா லயிர்தநுகர்ச்சி முதலாயின வெல்லா மடங்கும் ஏகாரந் தேற்றம்.

இதனு லன்புடையார்க்கப்பேரின்ப மெளிதினியெய்து மென்பது கூறப்பட்டது. (௯௦)

இன்புறுநிலை முற்றிற்று.

௯ - வது. ஐந்தெழுத்தருணிலை.

அஃதாவது, ஐவகைப்பட்ட திருவெழுத்தாகிய அருளினது முறைமை. இதனையு மோர்திருவருளாகக் கூறியருளினுர் வீட்டுநெறி காட்டுதலால்; அவ்வாறே சமாதியினை யடைதல்கூடாதார்க் கிதனை விதிப்படியோதவே யந்நிலை கூடுமாதலின் மேலை யதிகாரத்தினேடியைபுடைத்தெனக் கொள்க.

உரையிறந்த வின்பங் கூடாதாயின் மேலோருபாய மருளிச் செய்கிறுர்.

அருணூலு மாரணமு மல்லாது மைந்தின்
பொருணூ றெரியப் புகும்.

எ - து. அருணூலு மாரணமு மல்லாறும் - கிருபையுடனே கத்தா வருளிச்செய்த விருபத்தெட்டாகமும் நாலுவேதமும் இதுகளல்லாமற் சொல்லப்பட்ட பலசாத்திரங்களு மென்னத்தைச்சொல்லு மென்னில்,—ஐந்தின் பொருணூ றெரியப்புகும் - பஞ்சாக்ஷரத்தி னுண்மையைச் சொல்லவந்தநூல்.

நி - வ - உ. சைவாகமங்களினது கருத்தினையும், வேதங்களினது கருத்தினையும், இவை யிரண்டுமல்லாத பலகலைகளினது கருத்தினையும் கற்றுவல்லோ ராராயப்புகுவாராயின்

அவையெல்லாந் திருவெழுத் தைந்தின் பொருளாகிய பதி பசு பாசங்களைச் சொல்லுநூல்களாம்.

இதனு லெல்லா நூற்பொருள்களும் இவ்வைந்தெழுத்தி னுள்ளே யடங்குமென்பது கூறப்பட்டது. (க)

இந்தப் பஞ்சாக்ஷர மென்னத்தைச் சொல்லுமென்னில்?

இறைசத்தி பாச மெழின்மாயை யாவி
யுறநிற்கு மோங்காரத் துள்.

எ - து. இறை - கத்தாவும்,—சத்தி - திருவருளும்,—பாசம் - ஆணவமலமும்,—எழின்மாயை - விளக்கமான திரோதானமும்,—ஆவி - ஆன்மாவும்,—உறநிற்கு மோங்காரத்துள் - பிரணவத்திலே நிற்கும்.

நி - வ - உ. சிவனும், சத்தியும், ஆணவமும், அழகுடைத் தாய மாயையும், ஆன்மாவும், ஆகிய ஐந்தும் ஐந்தெழுத்தோ ரெழுத்தாகிய பிரணவத்தினுள்ளே யமைந்துநிற்கும்.

இதனுல் பிரணவமென்று பேர்பெற்றுநிற்கு நுண்ணிய வைந்தெழுத்தின தியல்பு கூறப்பட்டது.

இந்தப் பஞ்சாக்ஷரம் நிற்குந்தான மெங்ஙனே யென்னில்?

ஊன நடன மொருபா லொருபாலா
ஞானநடந் தானடுவே நாடு.

எ - து. ஊன நடன மொருபால் - மலமுந் திரோதமு மொருபக்கலாகவும்,—ஒருபாலாஞானநடம் - அருளுஞ் சிவமு மொருபக்கலாகவும்,—தானடுவே - ஆன்மா விந்தவிரண்டுக்கு நடுவேநிற்பன்,—நாடு - அறிவாயாக.

நி - வ - உ. பிறப்பினைவிளைக்கு நகார மகாரங்களாகிய கூத்தொரு மருங்காகவும், வீட்டினை யுதவுஞ் சிகார வகாரங்க

ளாகிய கூத்தொருமருங்காகவும், யகாரமாகிய ஆன்மா இவ்விரு வகைக்கு நடுப்பட்ட தொன்ருகவும் விசாரித்தறிவாயாக.

கூத்தென்றது உயிர்களைப் பெத்தமுத்திகளி லுய்த்து நடத்தலை.

இதனை லைந்தெழுத்தின் பொருளியல்பு கூறப்பட்டது.(கு)

இந்தப் பஞ்சாக்ஷர மிருக்கையினுலே யான்மா நேயத்தைப் பெருமலிருப்பா னேனென்னில்?

விரியமன மேவியவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரப் பெறும்.

எ - து. விரியமனமேவி - மனமானது பிரபஞ்சத்திலே விரிந்துபொருந்தி,—யவ்வைமீளவிடா - யவ்வாகிய வான்மாவை யருளினுலே திரும்பாதபடி பண்ணுவிக்கும்,—சித்தம் பெரியவினைதீரப்பெறும் - ஆன்மாவுக்கு மகத்தாகிய புண்ணிய பாவமிரண்டுந் துலையொத்தவிடத்திற் பேரின்பமாகிய மோக்ஷமுண்டாம்.

வி - வ - உ. மகார நகாரமாகிய மலமுந் திரோதமு மிகவு மிறுகப்புணர்ந்து யகாரமாகிய வுயிர்களைத் திரும்பவிடா; அவ்வுயிர்கள் தம் பெரிய பிணியாகிய மலவிருள் தீருங்கால் சிகாரமாகிய சிவத்தினை யடையும்.

மலந்தீரவே திரோதந் தானே நீங்குமென்பதாம். வினை என்பது ஈண்டுப் பிணியென்னும் பொருள்தந்து நின்றது.

இதனுற் கட்டுவீடென்னு மிரண்டும் ஐந்தெழுத்தினுனே யமையுமென்பது கூறப்பட்டது. (சா

இந்தப் பஞ்சாக்ஷர மிருக்கையிலே யாணவமல நீங்காபவிருப்பானே னென்னில்?

மாலார் திரோத மலமுதலாய் மாறுமோ
மேலாசு மீளா விடின்.

எ - து. மாலார்திரோத மலமுதலாய்மாறுமோ - மயக்கமாகிய நகார முன்னாகச்செபித்தான் மலநீங்காது. ஆனால் நீங்குகிறமுறைமை யெப்படியென்னில்?—மேலாக மீளாவிடின்- ஆணவமலத்தைக் கீழ்ப்படுத்தி நகாரமேற்படச் சிகாரமுன்னாக மாறிச்செபிக்கின் மோக்ஷமாம்.

நி - வ - உ. மயக்கத்தினைப் பொருந்திய திரோதானமும மலமுமாகிய நகார மகாரம் இரண்டும் ஆதிக்கண்ணதாக வுச்சரிக்கில், அவைகள் நீங்குமோ, இவற்றைக் கீழாக்கிச் சிவமாகிய சிகார மேலாம் வண்ணமாற்றி யுச்சரியாதொழியின்.

இதனால் நகார மகாரங்களை முதலாக வுச்சரித்து வழங்குவது வீட்டினையடைவோர்க் காகாதென்பது கூறப்பட்டது.

பஞ்சாக்ஷரத்தைச் செபித்த பேர்க்கு மலநீங்குமோவென்னில்?

ஆராதி யாதார மந்தோ வதுமீண்டு
பாராது மேலோதும் பற்று.

எ - து. ஆராதி - ஆராதனை பண்ணுவாய்,—ஆதாரம் - நமக்காதாரஞ் சிவனென் றறியாமலிருக்கிறதற்கு,—அந்தோ - ஐயோ,—அதுமீண்டுபாராது மேலோதும்பற்று - இப்படிச் சிகாரமுன்னாகச் செபித்தான் மலமுந் திரோதமு மிவனை வந்து பொருந்தாது.

நி - வ - உ. தமக்காதார மாறாகவெண்ணியவ்வா றுச்சரித்தலால் வரும்பழுதினைத் திரும்பிவிசாரியாம லந்தோ நகார மகாரங்களை மேலாகவுச்சரிக்கும் விருப்பம்.

இதனை லவ்வாறோதுவார் துணையின்றித் துன்புறுதற் கிரங்கிக்கூறப்பட்டது. (கூ)

இந்தப் பஞ்சாக்ஷரத்தைச் செபிக்கிறதேதென்னில்?

சிவமுதலே யாமாறு சேருமேற் றீரும்
பவமிதுநீ யோதும் படி.

எ-து. சிவமுதலேயாமாறு சேருமேல் - இப்படிச் சிகார முன்னாகச் செபித்தாயானால்,—தீரும்பவம் - சநநமுநீங்கும்,— இதுநீயோதும்படி - இதுநீ சபிக்கப்பட்ட முறைமை. (எ)

நி-வ-உ. சிகார வகாரமென்னு மிரண்டு மாதிக்கண்ணே யாம்வண்ண முச்சரித்தல்கூடுமோயின், அந்நிலையே யுனது பிறவித்துன்பநீங்கும், மாணவகனே! வீட்டினைக்காமுற்றநீ யுச்சரிக்கு முறைமையிது.

இதனால் முத்தரோதுமாறு கூறப்பட்டது.

இப்படி சபிக்கப்பட்ட வான்மாக்களுக்குப் பிரயோசன மேதென்னில்?

வாசி யருளியதை வாழ்விக்கு மற்றதுவே
யாசி லுருவமுமா மங்கு.

எ-து. வாசியருளியதை வாழ்விக்கும் - வகாரமாகிய திருவருள் யகாரமாகிய வான்மாவை சிகாரமாகிய சிவத்திலே கொடுத்துப் பேரின்பமாகிய சுகத்தை யுண்டாக்கும்,—மற்றதுவே யாசிலுருவமுமாமங்கு - அந்தத் திருவருள்தானே குற்றமில்லாத திருமேனியாயிருக்கும் அந்தவான்மாவுக்கு.

நி-வ-உ. அவ்வா றுச்சரிக்குங்கால், வகாரமாகிய வருள் சிகாரமாகிய சிவத்தினைக் காட்டி யகாரமாகியவுயிரினை வீட்டின்பத்திலே யிருத்தும். அன்றியும் அவ்வருளே யந்தச்சிவத்திற்குக் குற்றந்தீர்ந்த திருமேனியாயிருப்பது.

இதனாற் திருவெழுத்தைந்தில் வகாரமாகிய வருளினது தன்மை வகுத்துக் கூறப்பட்டது. (அ)

அந்தவான்மா மோக்ஷத்திலேயிருக்கிற தெப்படி யென்னில்?

ஆசினவா நாப்ப ணடையா தருளினால்
வாசியிடை நிற்கை வழக்கு.

எ - து. ஆசினவா ணாப்ப ணடையாது - குற்றத்தைப் பொருந்திய நகாரத்திலு மகாரத்திலும் பொருந்தாமல்,—அருளினால் - ஆசாரியனுடைய கிருபையினால்,—வாசியிடை நிற்கைவழக்கு - அருளுக்குஞ் சிவத்துக்கு நடுவே நிற்கிறதே முறைமை.

நி - வ - உ. குற்றந்தீர்ந்த திரோதானமும் அருளுமாகிய நகார வகாரங்கட்கு நடுப்பட்டு நில்லாது வகாரமாகிய வருளினாலே யகாரமாகிய வுயிர் அவ்வகாரத்திற்குஞ் சிவமாகிய சிகாரத்திற்கு நடுப்பட்டுநிற்பது முறைமை.

அவ்வா றதற்செழுத்துக்களைமாறி யுச்சரிப்பது குருமுகத்தாற் றெளிந்து கொள்க. ஆன்மாவைமறைக்கும் பாசங்களைச் செலுத்துவதன்றி திரோதானசத்தி தானாகமறையா தென்பதற்கு ஆசினவென் றருளிச்செய்தார்.

இதனாற் றிருவெழுத்தினைக் கூறிய முறைமையினோடுவா ரடைந்துநிற்கு நிலை கூறப்பட்டது. (கூ)

ஆசினவா என்பதற் கிருவகை யுரையாசிரியர் கூறிய பேதங்களை யூகித்தறிக.

மோக்ஷத்திலே யிருக்கிறதற்குப் பிரத்தியக்ஷமுண்டோ வென்னில்?

எல்லா வகையு மியம்பு மிவனகன்று
நில்லா வகையை நினைந்து.

எ - து. எல்லாவகையு மியம்பும்- வேதாகமங்களெல்லாஞ் சொல்லுகிற தேதென்னில்,—இவனகன்று நில்லாவகையை நினைந்து - ஆன்மா சிவசத்தியினை விட்டுநீங்காத முறைமையைச் சொல்லும்.

நி - வ - உ. எவ்வகைப்பட்ட வுபாயங்களினையு நூல்களுரைக்கும், இவ்வாறுன்மாவானவன் சிவசத்தியினை நீங்கிநில்லாதுடனாய்நிற்குந் திறத்தினைக் கருதி.

இதனை லறியுநெறிமுதல் இவ்வதிகாரமீறுன நான்கதிகாரத்தினது கருத்துந் தொகுத்துக் கூறப்பட்டது. (க0)

ஐந்தெழுத்தருணிலை முற்றிற்று.

க0-வது. அணைந்தோர்தன்மை.

அஃதாவது, இவ்வகைப்பட்ட சமாதியினை யடைந்தோரது தன்மை. மேலையதிகாரங்களாற் சமாதிகூடுமுறைமைகூறியது கூடினோரது தன்மை யிதனாற் கூறுதலின், அவற்றோடிதற் கியையுடைத்தெனக் கொள்க.

நேயத்தை விட்டுநீங்காத நாதாக்களினை வேதென்னில்?

ஓங்குணர்வி னுள்ளொடுங்கி யுள்ளத்து ளின்பொ
தூங்குவர்மற் றேதுண்டு சொல். [டுங்கத்

எ - து. ஓங்குணர்வி னுள்ளொடுங்கி யுள்ளத்து ளின்பொடுங்க - மகத்தாகிய சிவத்திலே யான்மாவொடுங்க ஆன்மாவிலே சிவமொடுங்க,—தூங்குவர் - பேரின்பந் தானாகவழுங்குவர்,— மற்றேதுண்டுசொல்-நேயமேயல்லது மற்றொருநினைவுமில்லை.

நி - வ - உ. நிறைந்த ஞானத்தினுள்ளே தாம் அடங்கித் தம்மறிவினுள்ளே பேரின்பமடங்கும்படி யாரந்த நித்திரையண்ணுநிற்பர், மற்றவார்த்தையாதுளதாம்.

அவ்வின்பம் இறைவற்கின்றி யுயிர்கள் தாமேநுகர்தலின் உள்ளத்தி லின்பொடுங்கவென்றும், ஞேயத்தழுந்தினு ஞானத்

தின்மிக்கா ரன்றென்பதற்கு ஒங்குணர்வினுள்ளடங்கியென்று மருளிச்செய்தார்.

இதனு லவர்ஞேயத் தழுந்திநிற்கு மியல்பு கூறப்பட்டது

இப்படி நின்றவர்கள் மேலான பதங்களையும் விரும்புவார் களோ வென்னில்?

ஐந்தொழிலுங் காரணங்க ளாந்தொழிலும் போக
வெந்தொழிலு மேவார் மிக. [நுகர்

எ-து- ஐந்தொழிலும் - பஞ்சகிருத்தியமும்,—காரணங் களாந் தொழிலும் - காரணேசுரர் தொழிலாகிய சாலோகாதி பதங்களையும்,—போகநுகர் வெந்தொழிலும் - போகத்தைக் கொடுக்கத்தக்க கொடிதாகிய சுவர்க்காதி பதங்களையும்,— மேவார்மிக - மிகவும் பொருந்தார்கள்.

நி-வ-உ. பரமசிவனுற் செய்யப்படும் படைப்பு நிலை யீறு மறைப்பு அருளென்னும் ஐந்தொழில்களையு மொருங்கே செய்தலும், அயன் மால் உருத்திரன் மகேசன் சதாசிவனெ ன்னு மிவரிலொருவற்கு மொரோவொரு தொழிலைச்செய்த லும், மாயாபோகத்தினையருந்தும் பிறப்பிற்கேதுவாகிய வெய் யதொழிலினைச் செய்தலுஞ் சிறிதும் பொருந்தாரவர்.

அசஞ்சலமா யகண்டமா யொழிவற நிறைந்த ஞானவடி வினராய்நின்றும் பரமானந்தத்தினை யனுபவித்திருக்கு மொன் றிற்குமே யுரியாரென்பது கருத்து. மிகவென்பது குறிப்பு மொழியாய்ச் சிறிதுமென்னும் பொருள்விளக்கநின்றது. "உயிர்நானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே" என் றருளிச் செய்தவாறு காண்க.

இதனுலவர் மற்ஞெரு தொழிற்கு முரியாரல்ல ரென்பது கூறப்பட்டது. (உ)

சர்வஞ்ஞத்து வாதிகுணங்கள் வந்து பொருந்திறலோ வென்னில் ?

எல்லா மறியு மறிவுறினு மீங்கிவரொன்
றல்லா தறியா ரற.

எ - து. எல்லா மறியு மறிவுறினும் - சருவஞ்ஞத்து வா திகுணங்கள்வந்து பொருந்திறலும்,— ஈங்கு - இவ்விடத்தி லே,—இவர் - இந்த நாதாக்கள்,—ஒன்றல்லா தறியாரற - நே யமொன்றுமே யல்லது மற்றொன்றையும் பொருந்தி யறியமா ட்டார்கள்.

நி - வ - உ. இயல்பினான் முழுவதூஉ முணருஞானமா னது வெளிப்பட்டுத் தம்மையிரண்டறக் கலந்து நிற்பினு மிவ் விடத் திந்தச் சீவன்முத்தரானவ ரானந்த ஞானமொன்றுமே யன்றிப் பிறிதொரு பொருளினையுஞ் சிறிது மறிதல்செய்யார்.

அற என்பது மிகவென்பதுபோலக் குறிப்புமொழியாய் நின்றது. சீவன்முத்தர் சிவ மொன்றுமே யன்றிப் பிறிதொ ன்று மறியாராகவே பரமுத்தரு மவ்வாறுதல் கூறவேண்டாவா றாயிற்று.

இதனாலவர் பிறிதொன்றுமறியா தெவ்விடத்துஞ் சிவமே கண்டிருத்தல் கூறப்பட்டது. "பரஞானத்தால்" என்பதனுள் 'சீவன்முத்தர் பரமே பார்த்திருப்பார்" என் றருளிச்செய்த, வாறு காண்க. (௯)

இப்படிக்கொத்த நாதாக்களை விடயங்கள்வந்து பொருந்தி றலோ வென்னில்?

புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் போதார்
தலனடக்கு மாமை தக.

எ - து. புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் - விடயங் கள் வந்து பொருந்திறற் றமக்குப் பிராணனாகிய நேயத்திலே

யடங்கி நிற்பார்கள்,—போதார் - ஒருவிடயத்திலுங் கர்மித்துப் புரியார்கள். அஃதெதென்போல வென்னில்?—தலநடக்கு மாமை தக - பூமியிலே நடக்கப்பட்ட வாமையானது ஆரவாரமில்லாத விடத்திலே நடக்கும், ஆரவாரமுள்ள விடத்திலேயடக்கு மது போல.

நி - வ - உ. ஓர்விடய மெதிரிடுங்கால் அதற்கஞ்சி யதன் மேற்செல்லுந் தம்முணர்வினை மாற்றித் தமதுமுதலாகிய ஞேயத்தினிடத்திலே புக்குப்பொருந்தி மறித்து நீங்குதல் செய்யார், அவர் பூமியின்கண்ணே நடந்துசெல்லுங்காலொரு வொதிர்ப்படி னவரையஞ்சித்தன் றலையினைச்சுரித் துள்ளே வாங்கி யசைவறக்கிடக்கு மாமையினை யொப்ப.

ஆமை பின்ன ரெதிர்ந்தோரகலுங்காற் றன்றலையினை வெளிப்படுத்திச் செல்லுமதுபோ லிவர் விளைவிற்றிரிபு படா மையிற் போதாரென் றருளிச்செய்தார்.

இதனு லவர் புலனுணர்வுக்கஞ்சி யகலுமாறு கூறப்பட்டது.

அப்படிச்சிலர் நேயத்தைவிட்டு நீங்கியிருப்பர்களோ வெ ன்னில்?

அவனையகன் றெங்கின்று மாங்கவனு யெங்கு
மிவனையொழிந் துண்டாத லில்.

எ - து. அவனையகன் றெங்கின்று மாங்கவனாய் - அந்தச் சிவனை விட்டுநீங்கி யான்மாவுக் கிருக்க விடமில்லை. அந்தச்சி வன்றானாய்,—எங்கும் - சட சித்துக்களெல்லாம்,—இவனை யொழிந் துண்டாதவில்-இந்தச்சிவனையல்லா தான்மா நில்லாது.

நி - வ - உ. இறைவனைநீங்கி யெவ்வுலகமு நிற்பதில்லை, அதுபோல விறைவனுதலடைந்த விம்முத்தான்மாவையன்றி யெவ்விடமுமுளதாய் நிற்றலில்லை.

இவனு மிறைவனைப்போல வியாபகனுய் நிற்குமென்ப தாம். "காயங்கழிந்தக்கா லெங்குமாய்க் கருத்தாப்போல்நிற் பன்" என்றருளிச் செய்தவாறு காண்க.

இதனு லவர்சிற்றறிவுநீங்கிப் பேரறிவுடைய ரென்பது கூறப்பட்டது. (ரு)

ஆனால் அந்தப் பொருளை யுள்ளே கண்டிருப்பார்களோ புறம்பே கண்டிருப்பார்களோ வென்னில்?

உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக்
கெள்ளுந் திறமேது மில்.

எ - து. உள்ளும் புறம்பும் - அந்தரங்கத்திலே யறிவாய் விளங்கி யிருக்கப்பட்ட திருவருளையும், புறம்பேகுருவாகித் திருமேனி கொண்டுவந்த வாசாரியனையும்,—ஒருதன்மைக் காட்.சியருக்கு - ஒருபொருளென்று தரிசித்தவர்களுக்கு,—எள் ளுந்திறமேதுமில் - உள்ளென்றும் புறம்பென்று நீக்கவிட மில்லை.

நி - வ - உ. அகமும்புறமு மொருதன்மைத்தாய் நிற்கு ஞானத்தினை யடைந்தோருக் கொன்றனை யிகழ்ந்திடும்வண்ண மெவ்வாற்றானு மில்லை.

இதனு லவர்க் கெல்லாப்பொருள்களு ஞானமாயே தோன் றுதல் கூறப்பட்டது.

வேறு. ஆனு லிந்திரியங்களினு லறியு மறிவாலுஞ் சிவ னைத் தரிசிக்கலாமோ வென்னில்? தனக்குப் பிராணனுய்நின் றுபகரிக்கிற தன்மையையு மவ னவ னதுவாய்நின் றுபகரித் தும் பின் பாசாரிய மூர்த்தியாய்நின்று மிரக்ஷிக்கிற பூரண மான பொருளை, விசுவமானது மறையும்படி யொருநீர்மையா கக் கண்டவர்களுக்குச் சிவனது திருவடியை நீங்குகைக்கு வழியில்லை.

இது ஞானவான்கள் பிரபஞ்சம் தோன்றும னிற்குமு றைமை. (சு)

ஆனு லிப்படி நீக்கமறநிற்கிற நாதாக்களுந் தொழிற்படு வார்களோ வென்னில்?

உறுந்தொழிற்குத் தக்க பயனுலகந் தத்தம்
வறுந்தொழிற்கு வாய்மை பயன்.

எ-து. உறுந்தொழிற்குத்தக்க பயனுலகந்தத்தம் - உல கத்திலே யிருக்கப்பட்ட வான்மாக்கள் செய்தவேலைக்குத்தக்க கூலிகொடுப்பார்கள். அதுபோல, — வறுந்தொழிற்கு வாய் மைபயன் - தொழிலற்ற நாதாக்களுக்குச் சத்தியமாகிய நேய மொன்றுமே பிரயோசனம்.

நி-வ-உ. தன்னையாற்றிய தலைவனைப் பின்றொடர்ந்து சூழும் யானெனதென்னுஞ் செருக்காற் செய்யப்பட்ட வினைக் கேற்ற பயனுவ துலகவாழ்க்கைகள், செருக்கினைநீங்கித் தம் மை யிகழ்ந்தோர்செய்யுந் தானந்தவமுதலிய தொழிற்குவரும் பயனுவ தழிவில்லாத வீட்டின்பமே.

தக்கபய னென்றதனுல் பயன்பலவாயிற்று. வறுந்தொழி லென் றருளிச்செய்தார், தொடர்ந்துபயன் வழங்காமையின். இதனு லவரோர்தொழிலினைச் செய்யினும் பிறிதொருகாமி யத்தினைக் கருதிச்செய்யாரென்பது கூறப்பட்டது.

வேறு. ஆனுல் தொழிலாலுஞ் சிவனைக் கூடலாமோவெ ன்னில்? பிரபஞ்சத்திற் தத்தந்தொழிலுக்குத்தக்க பிரயோச னங்க ளிவர்களுக்குண்டா மாறுபோல வொன்றுஞ் செய்யாத செயலுக் கந்தவுண்மை பிரயோசனம்.

இந்த வுண்மையிலே நின்றவர்களுக் கொருசெயலுங் கூடாதென்ப தறிவித்தது. (எ)

பிராரத்துவம் புசிக்கச்செய்தே யாகாமிய மேறுதோ வென்னில்?

என்ற வினையுடலோ டேகுமிடை யேறும்வினை
தோன்றி லருளே சுடும்.

எ - து. என்றவினையுடலோடேகும் - பிராரத்தம் தேகத்துடனேபோம், சஞ்சிதம் தீட்சையிலேபோம்,—இடையேறும் வினைதோன்றி லருளேசுடும் - பிராரத்தம் புசிக்கச்செய்தே கட்டுப்படுகிற வாகாமியஞ் சிவஞானம் விளங்கவே நீங்கும்-

நி - வ - உ. பக்குவப்பட்டமைந்த வினையான துடம்பிற்கமைத்த காலவரையறையிலே தொலையும், இடைப்பட்டகாலத்தில்வந்து பொருந்தும்வினைக ளுளவாயி னருளென்னு நெருப்பினாலே வெந்துபோம்,

சஞ்சிதம் நீங்காமல் ஞானம் வெளிப்படாது, வெளிப்படாதாகவே யாகாமியந் தீர்வதில்லை, அதனை யருளேசுடுமென்பதனாற் சஞ்சிதமு நீங்கிற்றென்பது தானேபோதருமெனக் கொள்க. தோன்றி லென்பதனா லதுதோன்றாதவண்ண மிடையறாதருளோடு நிற்பனென்பது கருத்து.

இதனா லவர்க்கு வினைத்தொடர்பின்றுமாறு கூறப்பட்டது.

வேறு. சஞ்சிதகன்மம் தீக்ஷையிலேபோம், பிராரத்தம் தேகத்துடனேபோம், ஆகாமியம் சிவஞானத்தினாலே சுடப்படும்.

இது ஞானவான்களுக் கொருகன்மமுமில்லை யென்னுமிடமறிவித்தது. (அ)

பரமுத்தி சரீரநீங்கியோ வென்னில்?

மும்மை தருவினைகண் மூளாவா மூதறிவார்க்
கம்மையு டம்மையே யாம்.

எ-து. மும்மை தருவினைகள் மூளாவாம் - சஞ்சித பிராரத்த மாகாமிய மிந்தமூன்றுவினையும் பொருந்தாவாம். என் பொருந்தா வென்னில்?—மூதறிவார்க் கம்மையுமிம்மையே யாம் - மேலாகிய சிவஞானத்தைப்பெற்ற நாதாக்க ளிச்சரீராந்தத்திலே பெறப்பட்ட பரமுத்தியுஞ்சரீர மிருக்கையிலேயாம்.

நி-வ-உ. இம்மை யம்மை மறுமையென்னு மூவகைப் பயனையுந்தரும் வினைகள்யாவுந்தொடரா, தம்மேலாய வறிவினையுடையார்க்கும் பிறந்தெய்து மின்பமு மதனோடு கூடிநிற்கவே யுளதாம்ாகலான்.

இம்மை யிப்பிறப்பு, அம்மை மேனுலகினையடைதல், மறுமை மறித்து வரும்பிறப்பு. உடம்பிறந்தகாலத்து நிலைவேறுபடுதலின்மைநோக்கி யம்மையு மிம்மையேயாமென் றருளிச் செய்தார்.

இதனு லவர்க்குச்சிறிதும் வினைத்தொடர் பின்றென்பது வலியுறுத்தப்பட்டது.

வேறு. அந்தப் பிராரத்தம் புசிக்க வேண்டுமோயின், வாக்குமனங்காயங்களி லுண்டானகன்ம மவர் சிவசம்பாவனையாலே யவர்களை வாதியாது, பின்புண்டாஞ் சாயுச்சியமு மவர்களுக் கிப்பொழுதேயாம்.

இது சீவன் முத்தரான நிலையிலே தன்னிலே பரமுத்தியா மென்றறிவித்தது. (கூ)

இவர்களுக் கான்மாக்களை யிரட்சிக்கவேணுமென்கிற கிருபையில்லையோ வென்னில்?

கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக.

எ-து. கள்ளத்தலைவர் துயர்கருதி - கவட்டிந்திரியங்களுக்கு முதன்மையா யிருக்கிற வான்மாக்கள்படுகிற துன்பத்

தைத் திருவுள்ளத்திலே நினைத்து,—தங்கருணை வெள்ளத்தலை வர்மிக - தமக்குக்கிருபையாகிய ஞானசமுத்திரத்திலே மிகுதி யுமமுழுந்திநிற்பர்கள்.

நி - வ - உ. யானெனதென்னும் வஞ்சத்தலைமையினையு டைய வான்மாக்கள் படுந்துன்பத்தினை யெண்ணித் தம்மிடத் தெழுந்த கருணையாகிய கடலினுள்ளே மிகவு மலைதலைச் செய்வர்.

அலைத விரக்கத்தாற் றளர்தல்.

இதனு லவர் வீட்டினைவிரும்பாத வுயிர்கள்மாட்டிறை வன்போ லருளுடையராதல் கூறப்பட்டது.

வேறு. ஆனல் ஞானவான்களுக்கு விடயங்களுடன் கூடி நிற்கலாமோ வென்னில்? இந்திரியங்ளுடன் கூடினுலுண்டான கிலேசத்தையுணர்ந்து சிவனுடைய கிருபாசமுத்திரத்திலே விழுந்து தஞ்செயலற் றதுவதுவாய் விடுவார்கள்.

"மறையோன், கழுமலமுதுபதிக் கவுணியன் கட்டுரை, கழுமலமுதுபதிக் கவுணியனறியு, மனையதன்மையை யாதலி னின்னை, நினையவல்லவ ரில்லைநீணிலத்தே" என்றவாறு காண்க. (௧0)

அணைந்தோர்தன்மை முற்றிற்று.

திருவருட்பயன் மூலமுமுரையும் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர்

அருளிச்செய்த

போற்றிப்பஃறொடைமூலம்.

இதற்துரையுடன்

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

காணியம்பாக்கம்

முருகேசமுதலியாரால்

சென்னை;

இந்துதியலாஜிகல்யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

௧௮௯௨.

உ

திருச்சிற்றம்பலம்.

போற்றிப்பஃறொடை

மூலமும் உரையும்.

பூமன்னு நான்முகத்தோன் புத்தேளி ராங்கவர்கோன்
மாமன்னு சோதி மணிமார்ப - னாமன்னும்
வேதம்வே தாந்தம் விளக்குஞ்செய் வித்துவட
னாதநா தாந்த நடுவேதம் - போதந்தா
லாமளவுந் தேட வளவிறந்த வப்பாலைச்
சேம வொளியெவருந் தேறும்வகை - மாமணிசூழ்
மன்று ளனிறைந்து பிறவி வழக்கறுக்க
நின்ற நிருத்த நிலைபோற்றி.

எ - து. பொற்றாமரைப்பூவி னிலைமைபெற்று நான்முகத் தோடெழுந் தருளியிருக்கிற பிரமாவுந் தேவர்களு மவர்களுக்கு மன்னனாகிய தேவேந்திரனுந் திருமகள்பொருந்திய மார்பின் மிருந்த பிரகாசமுடைய கௌத்துவமணி தரித்திருக்கிற விஷ்ணுவுஞ் சகலபொருண்மையு நாவிலிருந்து சொல்லுகிற வேதங் களும் வேதமுடிவாகிய வுபநிடதங்களுஞ் சகலவறிவும விளங் கச்செய்கிற வித்தை யதற் குள்ளொளியாகிய நாதமுங் குடி லையுந் தத்துவாதீதத்திற் றோன்றிய போதச்செயல்களா லாமள வுந்தேடியு மளவுபடாம லப்பாற்பட்டிருக்கிற பேரின்பவொ ளியாகிய பதி யான்மாக்களை யிரட்சிக்க வேண்டுமென்கிற திரு வைபரித்து எவர்களும் பத்தியுடனே தரிசித்து மலமயக்கங் கெத் தெளிந்து தேறும்படிக்கு மிருந்த விரத்தினமணிகள் சூழ்ந்

துவிளங்காநின்ற வழகிய திருச்சிற்றம்பலத்துள் ஞானப்பி
காச நிறைந்து தோன்ற நின்று ஆன்மாக்களுடைய பிறவி
தொடர்பறுக்கச்செய்யு மாநந்தநிருத்தநிலை யெம்மை யி
ரக்ஷிக்க.

குன்றாத, பல்லுயிர்வெவ்வேறு படைத்துமவைகாத்து
மெல்லையிளைப்பொழிய விட்டவைத்துந்-தொல்லையுறு
மந்தமடிநடுவென் றெண்ணவளவிறந்து
வந்தபெரியவழி போற்றி.

எ - து. அநாதியா யெண்ணிறந்த வான்மாக்கள் மோக்ஷ மடைந்திருக்கவுங் குறைவில்லாம னித்தியமா யளவிறந்திரு கிற பெத்தான்மாக்களைக் கன்மத்துக்கீடான தேகங்களிற் சரா யுஜம் அண்டஜம் சுவேதஜம் உற்பீஜம் ஆகிய நால்வகையோ னிகளினு மாறிமாறி வேறுவேறாகப் படைத்து மவ்வான்மா களுக்குள்ள வரியவினைப்போகங்களை யேறாமற் குறையாம கூட்டிப் புசிப்பித்தும் சர்வசங்காரகாலத்தி லான்மாக்கள் ச லாவத்தைப்பட்டுப் பிறந் திறந் தலைந்து திரிந்த விளைப்பு நீ கும்படிக்குக் காரணகேவலாவத்தையி லொடுக்குவித்தும் அநா தியேதொடுத் தாதியாய்ச் சிருஷ்டித்துந் திதித்துஞ் சங்கரித்து மளவிறந் தாதிநடுவந்தமற்று வருகிற பெரிய கிருத்தியவ யெம்மையிரக்ஷிக்க.

முந்துற்ற, நெல்லுக்குமிதவிடு நீடுசெம்பிற்காளிதமுந்
தொல்லைக்கடறோன்றத் தோன்றுவரு - மெல்லா
மொருபுடையொப்பாயத்தா னுள்ளவாறுண்டா
யருவமாயெவ்வுயிரு மார்த்தே - யுருவுடைய
மாமணியையுள்ளடக்கு மாநாகம்வன்னிதனைத்
தானடக்குங்காட்டத் தகுதியும்போன் - ஞானத்தின்
கண்ணைமறைத்த கடியதொழிலாணவத்தா

லெண்ணுஞ்செயன்மாண்ட வெவ்வுயிர்க்கு-முண்ணடிக்
கட்புலனாற்காணார்தங் கைக்கொடுத்தகோலேபோற்
பொற்புடையமாயைப் புணர்ப்பின்கண் - முற்பாற்
றனுகரணமும்புவன முந்தந்தவற்றான்
மனமுதலால்வந்த விகாரத்தால் - வினையிரண்டுங்
காட்டியதனாற் பிறப்பாக்கிக்கைக்கொண்டு
மீட்டறிவுகாட்டும் வினைபோற்றி.

எ - து. ஆன்மாக்க ணித்தியமாயிருக்கச் சிருஷ்டிப் பட்டுந் திதிப்பட்டுஞ் சங்காரப்பட்டும் வருவானேனென்னில் அநாதியிலே மலத்திலே பந்திக்கப்பட் டிருக்கையினாலே மல நீங்கும்படிக்குக் கர்த்தா கிருபையினாலே செய்வித்ததா யிருக்கும். ஆனால் மலமான்மாக்களைப் பந்தித்த தெப்படியென்னில் முன்னே யுண்டான நெல்லுக் குமிதவிடுமுளை முற்பிற்பாடில்லாம லநாதியிலே கூடத்தோன்றின தாயிருக்கும். இதிலா ணவமல மான்மாவி னறிவைமறைத்த தெப்படியென்னின் செம்பினுடைய நிறத்தைக் காளிதங்கூடவுதித்து மறைத்தது போன்றிருக்கும். கர்த்தாவினுடைய வியாபகத்திலே யான்மாக்க ணிறைந்திருக்கவு மாணவமல முயிரைமறைந்த தெப்படியென்னில் பழமையாகியகடல் வியாபகத்திலே நிறைந்திருக்கிற தண்ணீரை யுப்புக்கலந்து பிடித்திருப்பதுபோன்றிருக்கும். இப்படியெல்லாம் வெவ்வேறு யொருபுடையொப்பா கக்கர்த்தா வுள்ளவன்றேயுண்டா யருவமாய் மூவகை யான்மாக்களையு மாணவமலம்பிடித் துருவையுடைய மகத்தான மாணிக்கமணியை நஞ்சுவாய்க்கு ளடக்கின மகத்தாகிய சர்ப்பம்போலவும் பச்சையாய் முளைத்து விறகாகுமட்டு மக்கினியைத் தெரியாமன் மறைத்து வைத்திருந்த காட்டம்போலவு மான்மாவினுடைய ஞானக்கண்ணை மறைத்த கடுந்தொழிலையுடைய

வாணவமலத்தினாலே யறிவுஞ்செயலு மிறந்த சகலவுயிர்களுக்
குங் கத்தா கிருபையினாலே நன்றா யவர்களிச்சையை நாடிப்
பார்த்துக் கட்புலனினாற் காணாத பிறவியந்தகர்க் குரிமையுள்
ளவர்களிச்சித்தபடிக்குக் கோலைக்கொடுத்திச்சித்த விடங்க
ளிலே கொண்டுபோய் விடுகிறதுபோலப் பொலிவினையுடைய
மாயையின் காரியமான தனுகரண புவன போகங்களையு முன்
னே யுண்டாக்கிக்கொடுத்து இச்சித்த புவனங்களிலே யிச்சித்த
வினைப்போகங்களையுங் கூட்டிமுடித்துப் புசிப்பிக்கையினு மந்த
வாணவமல மயக்கத்தாற் கத்தாவுபகாரத்தை மறந்து நாமென்
கிற வந்தக்கரண விகாரஹிதாஹிதமுண்டாகையாற் புண்ணிய
பாவ மிரண்டுமுண்டாம்படி காட்டி யந்தப் புண்ணிய பாவத்
தினாற் பிறக்கும் பிறவியுண்டாக்கி யதனாற்செய்யு மிருவினை
களையு மேற்றுக்கொண்டு மீண்டு மந்தவினைப்போகங்களைப்
புசிப்பதற்குக் கலாதிஞானங்களையுங் காட்டுங் கிருபைத்தொழி
லெம்மையிரக்ஷிக்க.

நாட்டுகின்ற, வெப்பிறப்புமுற்செயிருவினை யானிச்சயித்
பொற்புடைய தந்தைதாய் போகத்துட்-கர்ப்பமாய்[த்துட்
புல்லிற்பனிபோற் புகுந்திவலைக்குட்படுங்கா
லெல்லைப்படாவுதரத் தீண்டியதீப் - பல்வகையா
லங்கேகிடந்த வநாதியுயிர்தம்பசியா
லெங்கேனுமாக வெடுக்குமென-வெங்கும்பிக்
காயக்கருக்குழியிற் காத்திருந்துங்காமியத்துக்
கேயக்கைகான்முதலா யெவ்வுறுப்பு-மாசறவே
செய்துதிருத்திப்பின் பியோகிருத்திமுன்புக்க
வையவழியேகொண் டணைகின்ற-பொய்யாத
வல்லபமே போற்றி.

எ - து. கத்தா வான்மாக்களுக்கு வினைப் போகங்களைப்
புசிப்பிக்கிறதற்குத் தேகங்களைக் கூட்டுகிற முறைமை சொல்

னுமிடத்து முன் பாகமங்களிலே சொல்லப்பட்ட வெண்பத்து நான்கு நூறாயிர மியோனிபேதப் பிறப்பின்வகை யெல்லா. முன்செய்த விருவினைக்கீடாக வுண்டாம்படி திருவுள்ளத்திலே நிச்சயித்துப் பலபிரகாரம் வெவ்வேறு தேகபேதங்களை யுண்டாக்குவதுமல்லாமல் மானிடதேக முண்டாக்குவ தெப்படியென்னின் அழகுபொருந்திய தந்தையுந் தாயுங் காமவிகாரந் தீரும்படிக்குச் சையோகபோகஞ் செய்யுங்காலத்து அவர்களுக்குப் பிள்ளைபே றுண்டில்லையென்பது மறிந்து தாயினுடைய கருப்பத்திற் றந்தையானவன் புல்லினுனியிற்றங்கிய பனித்திவலைபோன்ற விந்துவை விடும்போ ததற்குள் ளுயிரை யடக்கி யுட்கருப்பாசயத்திற் சுரோணிதத்துடனே கலப்பித் திருத்தி யந்த விந்து தாய்வயிற்றி லளவற்றிருக்கிற வுதராக்கினியினா லெரிசுவராமலும் பலவகையாகிய வந்தவயிற்றுக்குட் கிடந்த வநாதி யுயிர்களாகிய புழுக்கள் தங்கள் பசியினாலே வந்தவிந்துவை விரைவிலே யெடுத்துப் புசியாமலும் வெய்ய கும்பிநரகம்போன்ற காயக்கருக்குழியிற் காத்திருந்து வினைக்கீடான கைகால் முதலாகிய சகலவுறுப்புங் குற்றமறச்செய்து அழகுபொருந்தத் திருத்திப் பின்பந்தத் தேகத்தையெடுத்து சேரோ யோகத்திலிருத்தித் திரிகால வர்த்தமானங்களையு மறியும்படிக் குணர்வையுங் கொடுத்துப் பத்துமாதவரைக்கும் புசிப்புங்கொடுத்துப் பின்பு பூமியிலே பிறக்கும்போ திரண்டுகையுஞ் சிரசிலே குவித்த பாவனையாய்த் தலைகீழாய் வரும்படிசெய்து முன்புகுந்த சிறுவழியைப் பெருவழியாக்கி யுயிர் துன்புற்றிறவாம லுயிருக்குயிரா யணைத்திருந்து வெளியிலே யிழுத்துக் கொண்டு வருகிற மெய்ம்மையாகிய வல்லப மெய்ம்மையிரக்ஷிக்க.

அம்மாயக்கா ருன்மறைப்ப
நல்லவறிவொழிந்து நன்குதீ - தெல்லையுரு
வக்காலந்தன்னிற் பசியையறிவித்தழுவித்

துக்காவிசோர்ந்தா யுண்ணடுங்கி - பின்கோங்குஞ்
சிந்தையுருகமுலையுருகுந் தீஞ்சுவைப்பால்
வந்துமடுப்பக்கண்டு வாழ்ந்திருப்பப் - பந்தித்த
பாசப்பெருங்கயிற்றாற் பல்லுயிரும்பாலிக்க
நேசத்தைவைத்த நெறிபோற்றி.

எ-து. தாய்வயிற்றைவிட்டு பூமியிலே பிள்ளை பிறந்த வுடனே சரீரத்துக்குக் காரணமான மாயைச் சண்டமாருதம் போலலைத்துமயக்க முன்கருப்பத்திலிருக்கும்போ திருந்த பிற வித்துன்பத்தை நீக்கிக்கொள்ளவேண்டுமென் றவ்விடத்திலே நினைத்திருந்த நல்லநினைவையுமறந் துயிர் தேகமயமாய் நல் வினை தீவினைத்துன்பத் தொடர்ச்சியாற் பருத்தறிவில்லாமல் அக்காலத்தி லுயிர் புசிப்பிச்சை யுற்றிருப்பதை யறிந்து பசி தெரியும்படி யறிவித்துக் கதறியழும்படி செய்வித்துப் பின் னையழுவதுகண்டவுடனே பெறும்போதுற்ற வருத்தத்தையுந் தாயானவள் மறந்து உட்கி யாவிசோரும்படியுள்ளே நடுங்கி மிருக்கோங்கிய வன்பினாலே யவள் சிந்தை யிரங்கி யுருகப் பச்சடம்பி லிருந்த இரத்தஞ் சிவப்புமாறி வெண்ணிறமுறு மாய்க் கொங்கையில்வந்து சுரக்கிற வந்த தீஞ்சுவைப் பாலைப் பிள்ளை வாய்வைத்துக்குடித்து முகஞ் செழித்திருப்பதுகண்டு தாய் மகிழ்ந் திருக்கும்படி செய்வித்திப்படிப் பிள்ளையாசை யென்கிற பெருங்கயிற்றினாற் கட்டிச் சகலவுயிர்களுக்குங் குழ ந்தைகளை வளர்க்கும்படிக்கு ஆன்மாக்கடோறு நேசத்தைவை த்தருளிய நெறி யெம்மையிரட்சிக்க.

ஆசற்ற, பாலைப்பசும்பதத்தும் பாலறுமைப்பதத்து
நாளுக்குநாட்சகல ஞானத்து - மூள்வித்துக்
கொண்டாளவாளக் கருவிகொடுத்தாக்கின்று
பண்டாரியான படிபோற்றி.

எ - து. தாயன்பா யிருந்திரக்ஷித்த கத்தா விப்படிசநித் துவரு முயிர்களுக்குக் கருப்பத்தி லிருக்கிற பசும்பருவத்தும் பாலனாயிருக்கிற அந்தப்பருவத்தும் நாளுக்குநாள் பரிணமித்து வளரும் பாலகுமார விருத்தப்பருவத்துஞ் சகலாவத்தைப் படுத் திப் பருவத்துக்கேதுவான கலாதிஞானத்தைக் கொடுத்துச் செயலற்றவுயிர்கள் வாங்கிக்கொள்ள வாள்வதற்கேற்ற முப்பத் தாறுவகைக் கருவிகளையுங்கொடுத் துயிர்க்குயிரா யிமைப்பொ ழுது நீங்காமனின்று பண்டாரியா யுயிர்க் கேவல்செய்யுங் கிருபை யெம்மை யிரக்ஷிக்க.

தண்டாத, புன்புலால்போர்த்த புழுக்குரம்பைமாமனையி
லன்புசேர்கின்றனகட் டைந்தாக்கி - முன்புள்ள
வுண்மைநிலைமை யொருகாலகலாது
திண்மைமலத்தாற் சிறையாக்கிக் - கண்மறைத்து
மூலவருங்கட்டிலுயிர் மூடமாயுட்கிடப்பக்
காலநியதி யதுகாட்டி - மேலோங்கு
முந்திவியன்கட்டி லுயிர் சேர்த்துக்கலைவித்தை
யந்தவராக மவைமுன்பு - நந்த
தொழில்நிவிச்சை துணையாகமானி
னெழிலுடையமுக்குணமு மெய்தி - மருளோடு
மன்னுமிதயத்திற் சித்தத்தாற்கண்டபொரு
ளின்னபொருளென் றியம்பவொண்ணு - வந்நிலைபோய்க்
கண்டவியன்கட்டிற் கருவிகளீரைந்தொழியக்
கொண்டுநியமித்தற்றை நாட்கொடுப்ப-பண்டை
யிருவினையான்முன்புள்ள வின்பதுன்பங்கண்
மருவும்வகையங்கே மருவி-யுருவுடனின்
றோங்குறுதலாய வோலக்கமண்டபத்திற்

போங்கருவியெல்லாம் புகுந்தீண்டி-நீங்காத
முன்னைமலத் தினிருண் மூடாவகை யகத்துட்
டென்னுமிருணீக்குஞ் சுடரேபோ-லங்கிலேய
ஆக்கஞ்சுடருருவிற் பெய்துதொழிற்குரிய
ராக்கிப்பணித்த வறம்போற்றி.

எ - று. கத்தா பண்டாரிபோலநின்று தத்துவங்களை கூட்டி யிரக்ஷிக்கும்படி யெப்படியென்னில் நீங்காமற் புண்டலால்நாறுந் தோல்போர்த்த புழுக்கூடான சரீரமாகிய பெரியமனைக்குள் இருளையினலே துரியாதீதந் துரியஞ் சுழுத்தி சொப்பனம் சாக்கிரமென்னும் பெயரையுடைய வைந்து கட்டாக்கி யான்மாவுங் காரியத்திலே பொருந்தின வுண்மையிலையான வாணவமல மறைப்புச் சற்றுநீங்காமற் றிண்மையா யுயிரைச்சிறைப்படுத்தி நிற்கு மூலாதாரமாகியவீட்டி. லுதிப்பட்டெயிர் மூடமாயுட்கிடப்ப வவ்விடத்தி லிலோப்பாதமட்டுங் காலத்தை நியதியினா னிறுத்தி யப்பான்மேலே போயாங்கியிருக்குந் துரியமான நாபித்தானவீட்டி. லுயிரைப் பிராணவாயுவுடனே கூடச்சேர்த்து அவ்விடத்திலே கலைவித்தை யிராகத்தினான் மூன்னே யான்மாவினுடைய தொழிலறிவிச்சை மூன்றையு மெழுப்பியதற்குத் துணையாகப் பிரவிருத்திமாயையி லுண்டான வழகு பொருந்திய சாத்துவீகராசததாமத மென்னு முக்குணங்களையுஞ்சேர்த்தப்பான் மேலே சுழுத்தி வீடாகிய ஹிருதயத்தானத்திற் சித்தக்கருவியுடனே கூட்டி. யவ்விடத்திற் சித்தத்தாற் கண்டபொரு ளின்னபொருளென்றறியாமன் மயங்கிநின்ற வுயிரைச் சொப்பன வீடாகிய கண்டத்தானத்திற் சேர்த்து அவ்விடத்திலே சத்தாதியைந்தும் வசனாதியைந்தும் அந்தக்கரணங்கள் நான்கும் வாயுக்கள் பத்தும் புருடனுமான விருபத்தைந்து கருவியுங்கூட்டி முன்னே செய்த விருவினைக்கீடாக முன்சாக்கிரத்திலே யின்ப துன்பத்தைப் புசிப்பித்த

முறைமைபோலச் சொப்பனத்திலு மிருவினைப்போக முண்டா
னது மறிந்து சுத்தசுத்துவங்களினூற் பிரேரித்துப் புசிப்பித்
துப் பின்பதற்கு மேலாய ஆலதேகத்தின்கண் வளர்ந்துநிற்கிற
சாக்கிரவீடாகிய நுதற்றானமாகிய வோலக்கமண்டபத்தின்
முன்கேவலாவத்தைக்குக் கூடாமனின்ற பூதங்களைந்தும் புருட
தத்துவநீங்கலாகநின்ற வித்தியாதத்துவமாறுஞ் சிவதத்துவ
மைந்து மாகப்பதினூறு முன்சாக்கிரத்தி லிருந்த ஞானேந்திரிய
மைந்துங் கன்மேந்திரிய மைந்துஞ் சொப்பனத்திலிருந்து
வந்த விருபத்தைந்து கருவியு மற்றப் புறக்கருவிக ளூற்பத்
தைந்து மாகத் தொண்ணூற்றாறு கருவிகளையும் பொருத்திச் சீவி
க்கும்படி செய்வித்து முன்னேவிட்டுநீங்காம லந்தவத்தைத
யிறு மறைந்துநின்ற வாணவமல மிருள்கூடாதபடி மனையிலே
நெருங்கியிராநின்ற விருளை நீக்கும் விளக்கைப்போலச் சூக்கு
மாதி வாக்குடனே கூடிப் பிரகாசித்து நிற்குஞ் சகலாவத்தையி
லுயிரை நிறுத்திக் கன்மத்துக்கேதுவான சத்தாதி விடயங்க
ளைக்காட்டி யான்மாக்கள் யானெனதென்று கர்ச்சித்துநின்
றவைகள் வெவ்வேறு தொழிற்குரியாரம்படி செய்விக்குஞ்
சிவதர்ம மெய்ம்மையிரட்சிக்க.

வேட்டைசபிரு, முண்டிப்பொருட்டாலொருகாலவியாது
மண்டியெரியும் பெருந்தீமாற்றுதற்குக் - கண்டிறல்சேர்
வல்லார்கள் வல்ல வகையாற்றொழில்புரிக
வெல்லாமுடனே பொருங்கிசைந்து - செல்காலை
முட்டாமற்செய்வினைக்கு முற்செய்வினைக்குஞ்செலவு
பட்டோலைதிட்டம் படிபோற்றி.

எ - து. சுத்தா சகலாவத்தையிற் கருவிகூட்டி முடிக்கு
முபகாரத்தைச்சமரச்சு ஆன்மாக்கள் பிரபஞ்ச வாசையிருந்து
புசிப்புவிழித்திய வொரு கணநேரமாகிலும் கெடாமல் வயிற்
றிலே மண்டியெரிந்து கொண்டிருக்கிற வடவாமுகாக்கினி

போன்ற பசியைத் தணிக்கும்பொருட்டுத் தின்னியவாங்கா ரப் பலன்களால் வரவர வல்லமைக்கேற்ற தொழில்கள் செய் யுமிடத் தவர்களுக்குத்தோன்றும முடனிகழ்ச்சியான வொரு மைப்பாடாய்க் கூடிநின் றவரவர் வினையின்படி செய்வித்துக் கொடுத் தான்மாக்கள் யானெனதென் றிடையறாதுசெய்யும் வினை மிகுதியான வாகாமியத்துக்கு முன்செய்தவாறத்துவா விலுங் கட்டுப்பட்டிருக்கிற சஞ்சிதத்துக்கு மதிலேயாகப்பட் டெப் புசிப்புக்குவந்த பிராரத்துவைச் செலவுக்கு மவரவர் கணக் கப்பிள்ளையாயிருந்து பட்டோலை யெழுதி யொப்பிக்குங் கருணையிரட்சிக்க.

நட்டோங்கு, மிக்கிலைமைமாறுடைருக் கேயன்றியென்
மன்னுயிர்க்குமிந்தவழக்கேயாய்-முன்னுடைய [வினை
நாளுள்வரையி லுடல்பிரித்துநல்வினைக்கண்
வாளுளின்மாலா யயனுகி-நீளுகர்
வாளுடர்கோமுதலாய் வந்தபெரும்பதத்து
நாளுவிதத்தா னலம்பெறுநாட்-டான்மாள
வெற்றிக்கடுந்தூதர் வேகத்துடன்வந்து
பற்றிக்கம்வெங்குருவின் பாற்காட்ட-விற்றைநாங்கு
மில்லையோபாவி பிறவாமையென்றெடுத்து
நல்லதொரின்சொ னடுவாகச் - சொல்லியிவர்
செய்திக்குத்தக்க செயலுறுத்துவீரென்று
வெய்துற்றுனாக்க விடைகொண்டு-மையறுநு
செக்கினிடைத்திரித்துந் தீவாயிலிட்டெரித்துந்
தக்கநெருப்புத்தூண்டழுவித்து-மிக்கோங்கு
காராசங்காய்ச்சிச் செவிமடுத்துநாவரிந்து
மீராவுன்னூனைத்தின் னென்றடித்தும்-போரம
லங்காழ்நரகத் தழுத்தவித்தும்பின்னுந்தம்

வெங்கோபமாறுத வேட்கையரா - யிங்கொருநா
ளெண்ணிமுதற்காணுத வின்னற்கடுநரகம்
பன்னெடுநாட்செல்லும் பணிகொண்டு-முன்னாடிக்
கண்டுகடன்கழித்தல் காரியமாமென்றெண்ணிக்
கொண்டுவருநோயின் குறிப்பறிவார்-மண்டெரியிற்
காய்ச்சிச்சுடவுறக்கக் கண்ணுரிக்கநன்னிதிய
மீய்ந்துந்தாய்தந்தைநம நின்புறுநல்-வாய்த்தநெறி
யோடியபேதரின்கீ ழுயிர்போனதன்றலே
நீடுபெரும்பாவமின்றே நீங்குமென-நாடித்தன்
மைந்தனையுமூர்ந்தோன் வழக்கேவழக்காக
நந்தனையசிந்தைநமன் றூதர் - வெஞ்சினத்தா
லல்லலுறுத்து மருநாகங்கண்டிற்க
வல்லகருணைமறம் போற்றி.

எ - து. கர்த்தா வான்மாக்கள்செய்த விருவினைக்குங் கணக்கெழுதினபடிக்குப் புண்ணிய பாவத்துக்குள்ள பலன்களையுங் கூட்டுகிற தெப்படியென்னில் பொருந்தி யிருந்த விருவினை முறைமை பூமியிலுள்ள மானுடருக்கே யல்லாமலு மெண்ணில்லாத நரகங்களிலே பொருந்தியிருக்கிற பல வுயிர்களுக்கு மிந்த முறைமையாக வினைகளை நிச்சயித்தறிந்து முன்னமைத்த வாயுசுமுடிவி லுடல்களைப் பிரித்து நல்வினை யாகப்பட்ட வுயிர்களையெல்லாம் பூதசரீரமான திவ்விய சரீரத்துடனே கால நீட்டிப்பாய் வாழ்ந்திருக்கும்படிக்கு விஷ்ணுவுலகத்தில் விஷ்ணுரூபமாயும் பிரமலோகத்திற் பிரமரூபமாயுந் தேவலோகத்திற் றேவேந்திரரூபமாயுந் தேவர்களாயும்வந்த பெரிய பதப்பிராப்திகளிலே நானாவிதமான போகங்கள் புசித்திருக்கும்படி செய்வித்தும் பூமியிலே இராச ஐஸ்வரியத்துடனே வாழும்படி செய்வித்துமிருக்கு நாராயண புண்ணிய காமபலன் புசி

த்து முடிந்து பாவகன்மபலன் புசிக்குநா ளடுத்தவுடனே யங் கங்கு வாழ்ந்திருந்தவுயிர்க ளந்தந்த தேகத்தை விட்டு மாளும் படிக்குக் கர்த்தாவினுடைய வாக்கினையினாலே வெற்றிபொருந் திய யமதூதர்கள் வேகத்துடனேவந்து பாசத்தினாற் கட்டிப் பிடித்துக் கொண்டுபோய்த் தங்களெசமானாகிய தருமராஜா வின் முன்புவிடத் தருமராஜாவந்து ஆன்மாக்களைப் பார்த்திர ங்கிப் பாவிகாளுங்களுக் கிற்றைவரைக் குள்ளாகப் பிறவாநெ றிபெற வேண்டுமென்று கர்த்தாவைவிரும்பு மறிவு பிறக்கவில் லையோவென்று நல்ல வின்சொல்லாக நடுவுநிலைமையாகப் பே சிப் பின்பவர்கள்செய்த பாவத்துக்கேற்ற செயல்களைச் செய்யு மென்று கோபத்துடனே கிங்கரர்களைப் பார்த்துச் சொல்ல விடைபெற்றுப் பூதசரீரமான யாதனாசரீரத்திலே யுயிர்களிருத் தித் துன்பமுறும்படிக்குச் செக்கிலேயிட் டாட்டியுந் தீயி லிட் டெரித்தும் பெரிய நெருப்புத்தூணைத் தழுவிக் கிடக்கும் படிசெய்து மிகுந்து நீண்டிருக்கிற நாராசங்களைக் காய்ச்சிச் செவியிலே செலுத்தியும் நாக்கைக் கருவிகொண் டறுத்தும் அவரவரூனை யவரவர் தின்னும்படிக் கரிந்துகொடுத் தடித்தும் போதாதபடி யாழ்ந்த நரகங்களிலே யழுத்துவித்தும் பின்னுந் தங்களுடைய கடுங்கோபமாறாத விச்சையுடையரா யவற்றிலே யொருநாள்போல துன்பத்தைக் கொடாநின்ற கொடிய நரகங் களிலே பலநெடுநாட் செல்லுமட்டு மியமகிங்கரர்கள் பணிசெ ய்யக் காருண்ணிய வடிவாகிய கர்த்தா சிற்றுயிர்களை யயமகிங்க ரர்களிடத்திலே காட்டிக்கொடுத்து அவர்கள் அக்கப்படுகிற தைப் பார்த்திருப்பானேனென்னில் உலகத்திலே தந்தைதா யானபேர்கள் பிள்ளையினுடைய நோய் மிகுதியை யுள்ளே நாடியறிந்து நோய்தீரும்படிக் கதற்கேற்ற முறைமை செய் வது கடனென்று நினைந்து பிள்ளையை நோயறிந்து மருந்து கொடுத்துத் தீர்க்கும் வைத்தியத்தொழில் செய்கிறவனிடத் திலே யொப்புவித்து அவனிருப்பு நாராசங்காய்ச்சிச் சுடவுஞ்

சத்திரமிட் டறுக்கவுங் கண்படலத்தை யுரிக்கவு மிப்படிப்பல கிரியையுஞ்செய்யப் பிள்ளை வருத்தப்பட்டாலுநோய்தீர்ப்பதை யறிந் தந்தவைத்தியனுக்கு நல்ல திரவியமுதலானவெகுமானம் பண்ணிச் சந்தோஷத்துடனே யவர்கள் கண்டுநிற்பதுபோலவு மனுச்சக்கிரவர்த்தியான சோழராஜா தானரிய தவம்பண்ணிப் பெற்ற வருமையான வொருமகன் திருவாரூர்த் தெருவழியே தேரேறிப் போம்பொழுது மாயமாகத் தேர்க்காலில் வீழ்ந்திறந்த பசுவின் கன்றினிமித்திய மந்தப் பாவந் தீரும்படிக் கெத்தனைபேர்கள் மாறுபாடாய்த் தடுக்கவுங்கேளாமற் பிள்ளையைக் கன்று தங்கினபடிக்குத் தேர்க்காலிலேபோட்டு நசிக்கிப்போடவேண்டுமென்று துணிந்து தேரிலே தாய்ப்பசுவைவைத் தூர்ந்துகொன்றது மகனை யமன்பிடித்து வருத்தாதபடிக்குச்செய்த கிருபையே யானையா லந்தவழக்குப்போலவும் விடம்போன்ற சிந்தையையுடைய நமன்றூதர் மிகுந்த கோபத்துடனே பாவஞ்செய்த வுயிர்களைக் கொடிய நரகவாதனைப் படுத்துவதைச் சகல வுயிர்களுக்குந் தந்தையுந் தாயுமாயிருக்கிற சிவமுஞ் சத்தியு மலநோய் தீர்ந்தாற் போதுமென்று சந்தோஷத்துடனே கண்டு நிற்கிற வல்லபமான கருணை மற்றெம்மை யிரட்சிக்க.

பல்லுயிர்க்கு, மின்னவகையாலிருவினைக்கணின்றருத்தி
முன்னை முதலென்ன முதலில்லை-நல்வினைக்க
ணெல்லாவுலகு மெடுப்புண்டெடுப்புண்டு
செல்காலம்பின்னாகஞ் சேராமே-நல்லநெறி
யெய்துவதோர்காலந்தன் னன்பரைக்கண்டின்புறுத
லுய்யுநெறிசிறிதே யுண்டாக்கி-யையமே
மட்டாய்மலராய் வருநாளின் முன்னைநாள்
மொட்டாயுருவா முறைபோலக்-கிட்டியதோர்
நல்லபிறப்பிற் பிறப்பித்துநாடும்வினை

யெல்லையிரண்டு மிடையொப்பிற்-பல்பிறவி
யத்தமதிலன்றோ வளவென்றுபார்த்திருந்து
சத்திபதிக்குந் தரம்போற்றி.

எ - து. கர்த்தா விங்ஙனஞ் சொன்ன வொன்பது வகையினாலு மிரட்சிக்கப்பட்ட வான்மாக்களுக்குப் பெத்தகால முடிவாகமட்டு மிருவினைப் பலன்களை யவனவனது முன்னிலையாகவின் றருத்தித் தனக்குமேலொரு கர்த்தாவில்லாத சகலபுவன கர்த்தாவாகிய சிவனந்த விருவினைகளுக் கிருப்பிடமான மாயா வுலகங்களை யெடுப்புண் டெடுப்புண்டு மாறிமாறி வரும்படிக் காரியா யகாதி கொடுத்துச் சிருஷ்டித்துந் திதித்துஞ் சங்கரித்துந் திரோபவித்து மநுக்கிரகித்துந் தமது சத்தியினாலே பஞ்சகிருத்தியங்களைச் செய்வித்து மலபரிபாகப்பட்டதை யறிந்து பின்னரகத்திற் செல்லும் பெத்தத்தை நீக்கி யான்மாக்களுக்கு முத்திக் காலத்தை நேர்ப்படுத்தவேண்டித் தனக்கன்பரான மெய்யடியார்களைக் கண்டவுடனே தன்னைக் கண்டது போல வந்த வான்மாக்க ளின்புற் றவரோவின பணிவிடை கேட்டுய்யும்படிக்குச் சிறிது நல்லவழியை யுண்டாக்கிக் காட்டி யதினல்வழியே சிவபுண்ணியமான புத்தி பூர்வத்தினு மபுத்திபூர்வத்தினு முபாயச் சரியையாதியிலு முண்மைச் சரியையாதியிலுமாகக் கிரமத்திலே செய்யப்படுத்தி யந்தமட்டாய் மலராவிருக்கிற வரும்பு பருவநீங்கிய வரும்பருவத்துக் கடுத்த முதனாள் மொட்டாயிருக்கிற மலர்போல் மலம் பரிபாகம் பிறந்ததன்மை சமீபத்திற் கண்டு ஒப்பற்ற நல்ல சிவசமயத்திற் பத்திமிகுந்த விடத்திலே பிறப்பித்து நாட்பட்ட விருவினையு மேககாலத்திலே யிரண்டுந் துலாக்கோல் போலச் சமனானபருவத்திலே பலபிறவியு மந்தமாம்படிக்குத் தமது திவ்வியதரம் பொருந்தின வருட்சத்தியை யவ்வுயிர்களின் மலநீங்கும்படிக்குப் பதிக்குந்தர மெம்மை யிரட்சிக்க.

முத்திதரு, நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமல மொன்றி
மந்திலேயேயுண்ணின் றறுத்தருளிப்-பின்னன்பு [னையு
மேவாவிளங்கும் பிரளேயாகலருக்குத்
தேவாய்மலகன்மந் தீர்த்தருளிப் - பூவலயந்
தன்னின்றுநீங்காச் சகலர்க்கவர்போல
முன்னின்றுமும்மலந்தீர்த்தாட்கொள்கை- யன்னவனுக்
காதிகுணமாதலினு லாடுந்திருத்தொழிலுஞ்
சோதிமணிமிடற்றுச் சுந்தரமும்-பாதியாம்
பச்சைபிடமும் பவளத்திருச்சடைமேல்
வைச்சநதியு மதிக்கொழுந்து - மச்சமற
வாடுமரவு மழகார்திருநுதன்மே
னீடுருவவன்னி நெடுங்கண்ணுங்-கேடிலயங்
கூட்டுந்தமருகமுங் கோலவெரியகலும்
பூட்டரவக்கச்சும் புலியதளும் - வீட்டின்ப
வெள்ளத்தழுத்தி விடுந்தாளினுமடியா
ருள்ளத்திலும்பிரியா வொண்சிலம்புங் - கள்ளவினை
வென்றுபிறப்பறுக்க சாத்தியவீரக்கழலு
மொன்றுமுருத்தோன்றும லுள்ளடக்கி - யென்று
மிறவாதவின்பத் தெமையிருத்தவேண்டிப்
பிறவாமுதல்வன் பிறந்து - நறவாருந்
தாருலாவும்புயத்துச் சம்பந்தநாதனென்று
பேரிலாநாதனொரு பேர்புனைந்து - பாரோர்த
முண்டியுறக்கம் பயமின்பமொத்தொழுகிக்
கொண்டுமகிழ்ந்த குணம்போற்றி.

எ - து. இருவினையொப்பு மலபரிபாகஞ் சத்திநிபாதம்
பெற்ற பக்குவான்மாக்களுக்குக் கர்த்தா வாசாரியமூர்த்தமா யநு

க்கிரகம் பண்ணுகிற முறைமை யெப்படியென்னில் முத்தியைக்கொடுக்கு நல்வழியையுடைய விஞ்ஞானகலர்க் கவர்கள் பற்றியிருக்கிற வாணவமல மொன்றினையு மவர்களறிவுக்குட் பேரறிவாய்ப் பிரகாசித்துத் தோன்றி நீக்கி யருள்வடிவாக்கி ஞேயத்தி லழுந்தும்படி கடாட்சிப்பர். பின்பு பொருந்திவிளங்காநின்ற பிரளயாகலருக்குத் திருவுரு காணும்படிக்கு மானுமழுவுஞ் சதுர்ப்புஜமுங் காளகண்டமுந் திரிநேத்திரமுமுடைய திருமேனிகொண்டிருந்து அவர்களைப் பற்றியிருக்கிற வாணவமலங் கன்மமல மிரண்டையு நீக்கி யருள்வடிவாக்கி ஞேயத்தி லழுந்தும்படி கடாட்சிப்பர். அசுத்த மாயையிற்றோன்றிய பூலோகத்தை விட்டு நீங்காமலிருக்கிற சகலருக் கவர்களைப்போல மானிடச் சட்டை சாத்தி மானைக்காட்டி மானைப் பிடிப்பார்போல முன்னின்று தரிசனைகொடுத் தவர்கள் பற்றியிருக்கிற வாணவங் கன்ம மாயையென்னு மூன்று மலங்களையுந் தீக்ஷாக்கிரமங்களினாலே நீக்கருள்வடிவாக்கி யடிமையாக்கிக் கொள்ளுத லந்தக் கத்தாவுக் காதிகாலத்திலே யுண்டான குணமாதலாற் றிருச்சிற்றம்பலத்தின் கண்ணே நின்றாடுகிற திருநடனத்தொழிலும் பிரகாசம் பொருந்திய நீலமணிபோன் றிலங்குகிற காளகண்டமுந் திருமேனியிற் பாதியாய்ப் பச்சை வடிவுகொண் டிலங்குஞ் சிவகாமசுந்தரிய விடப்பாகமும் பவளக்கொடி படர்ந்து கிடப்பதுபோன்ற திருச் சடாபாரத்தின் மேற் றரித்திருக்கிற கங்கையும் பாலசந்திரப் பிறையும் வெருவும்படிக்குப் படம்விரித்தாடுகிற சர்ப்பமும் அருகு விளங்கத் திருநுத னடுவின்மேனோக்கி. நீண்டிடக் கிலங்கு மக்கினி நேத்திரமும் வலக்கையிற் பிடித்திருக்கிற வேழல்லாது லயத்துடனே முழங்குந் தமருகமு மழுவுபொருந்திய விடதுகையிற் பிடித்திருக்கிற வக்கினி குண்டலமு மரையிலே கட்டியிருக்கிற வைந்தலை யரவக்கச்சும் புள்ளிபொருந்திய புலித்தோலுடையும் பக்குவான்மாக்களை மோக்ஷமாகிய பேரின்ப

வெள்ளத் தழுத்துதற் கூன்றின பாதத்தினு மடியா ருள்ளத் திற்கலந் தின்பபூரணமாயிருக்கிற ஞான குஞ்சிதபாதத்தினும் பிரியாமற் றரித்திருக்கிற திருவருட்பிரகாசம்பொருந்திய சிலம்பு முயிர்களைச் சோரத்தனமாய்க் களவுகொண்டு தன்வசப்படுத்துகிற முன்னை வினையைவென்று பிறவித்துன்பங்களை யறுப்பதற்கு மலவைரிகாமென்று முழந்தாளிற் றரித்துக்கொண்டிருக்கிற வீரகண்டாமணியையு மிவைகளொன்று முருத்தோன்றுதபடி யுள்ளேயடக்கி யொளித்துக்கொண் டென்றுமுடிவில்லாதபேரின்ப மோக்ஷத்தி லெம்போல்வாரையு முறுத்தவேண்டிப் பிறவாமுதல்வன்பிறந்து வந்தானென் றதிசயமாய்ச் சொல்லும்படிக்குத் திருமேனிகொண்டு தேன்பொருந்திய செங்கழுநீர்மாலையுலாவும் புயத்தையுடைய மறைஞான சம்பந்தநாதனென்றொரு பெயருஞ் சுபாவத்திலில்லாதநாத னொரு திருப்பெயருஞ் சாத்திக்கொண்டு பூமியிலுள்ளவர்களைப்போல வுண்பதும் உறங்குவதும் அஞ்சுவதும் விடயபோக மின்பமுறுவது மொத்தொழுகிக்கொண் டெழுந்தருளி மகிழ்ந்திருந்த குண மெம்மையிரட்சிக்க.

மிண்டாய, வாறுசமயப்பொருளு மறிவித்தவற்றிற்
பேறின்மையெங்களுக்கே பேறுக்கித் - தேறுத
சித்தந்தெளியத் திருமேனிகொண்டுவரு
மத்தகைமைதானே யமையாமல் - வித்தகமாஞ்
சைவநெறியிற் சமயமுதலாக
வெய்துமபிடேக மெய்துவித்துச் - செய்யதிருக்
கண்ணருளாலேனைக் கடியபிறப்பாற்பட்ட
புண்ணுமிருவினையும் போயகல - வண்ணமலர்க்
கைத்தலத்தைவைத்தருளிக் கல்லாயநெஞ்சுருக்கி[கும்]
மெய்த்தகைமையெல்லாம் விரித்தோதி - யொத்தொழு

சேணாரிருள்வடிவுஞ் செங்கதிரோன்பானிற்பக்
காணாதொழியுங் கணக்கேபோ - லாணவத்தி
னூறிருளையாம லென்பாலணுகாம
னீஇநிறுத்த நிலைபோற்றி.

எ - று. இப்படி மானுடனைப்போலத் திருமேனிகொண் டாசாரியமூர்த்தமாய்ப் பெண்ணாகடத்திலே யெழுந்தருளியி ருந் தங்களுக் ககங்காரம்பொருந்திய புறச்சமயப் பொருள்க ளெல்லா மறிவித்ததிலே யொருபிரயோசனமு மில்லையென்ற றிவிற திடமே பெருகும்படி செய்வித்துத் தேறுமவிருக்க சித் தந்தெளியும்படிக்குத் திருமேனி தரிசனைகொடுத்தருளிய வந் தத் தகைமையும் போகாமன் மேம்பாடாகிய மெய்கண்ட சந் தானச் சுத்தசைவநெறியில் விட்ட குறையறிந்து சமய விசேட நிருவாணம் பொருந்தப்பட்ட வபிடேகமென்று நான்குவகைத் தீட்சையும்பண்ணிச் சிவந்த தாமரைமலர்போன்ற திருக்கண் ணருளினாற் பார்த்துத் துன்பப்பிறப்பினாற்பட்ட புண்ணுடம் புத் துன்பமு மிருவினைத்துன்பமு முயிரைவிட்டு நீங்கும்படிக் கழகுபொருந்திய தாமரைமலர்போன்ற திருக்கைத் தலத்தைச் சிரசிலேவைத்தருளிக் கற்போன் றிருந்த நெஞ்சை யக்கினி யைச் சேர்ந்த மெழுகுபோல வுருக்கித் திரிபதார்த்த மெய்த் தகைமைப் பொருள்களெல்லாம் விரித்தோதி யுபதேசித் தொற் றுமையாக வாகாயத்தை மறைந்த பூதவிருள்வடிவானது அந்த ஆகாயத்திற் சிவந்த சூரிய னுதயமானவுடனே பூதவிருட் பிரகாசமாய் மறைந்து நீங்க வாகாயத்து சூரியவொளி வடிவாகி நின்ற முறைமைபோல வுபதேசித்த ஞானப்பிரகாசத்தைப் பற்றி மும்மலமுநீங்கி யான்மபோத மருளிலடங்கச்செய்து மலமான்மபோதத்தையும் பற்றாமற் றன்னுடைய வநாதி நித் தியமுங் கெடாம னீதியாகநிறுத்தின நிலைமை யெம்மை யிரட்சிக்க.

மேதக்கோர், செய்யுஞ்சரிதை நிகழ்கிரியாயோகத்தா
லெய்துஞ்சீர்முத்திபத மெய்துவித்து - மெய்யன்பாற்
காணத்தகுவார்கள் கண்டாற்றமைப்பின்பு
காணத்தருஞான நன்னெறியை - வீணே
யெனக்குத்தா வேண்டி யெல்லாப்பொருட்கு
மனக்குமலரயன் மால்வானோர் - நினைப்பினுக்குந்
தூரம்போலேயணிய சுந்தரத்தாளென்றலைமே
லாரும்படிதந் தருள்செய்து - பேராளன்
றந்தபொருளேதென்னிற் றன்வேறு நான்வேறாய்
வந்துபுணராவழக்காக்கி - முந்தியென்ற
னுள்ளமென்றுமீங்கா தொளித்திருந்துதோன்றிநிற்குங்
கள்ளமின்றுகாட்டுங் கழல்போற்றி.

எ - று. உலகப்பற்றற மேம்பாட்டுடனே தாதமார்க்கஞ் சற்புத்திரமார்க்கஞ் சகமார்க்கஞ் சன்மார்க்கமென்னு நான்கு வழியினுநின் றுண்மைச் சரிதை கிரியாயோகங்களை விதிப் பாமலனுட்டித்துச்செய்த வடியார்களுக்குச் சிறப்புமிகுந்த பதமுத்தியான சாலோக சாமீப சாரூப மெய்தும்படி செய் வித்து அதனுல் ஞானதாகமுற்ற வடியார்களனுக்கிரகத்தைப் பெற்று மெய்யன்பினாலே சிவரூபத்தி லான்மதரிசனைபண்ணிச் சிவதரிசனத்தி லான்மாவின்றன் னியல்பை யறிந்து பின்பு பெத்தமுத்தி யிரண்டினு முபகரித்து இரட்சிக்கிற கர்த்தாவி னுடைய கருணையை மறந்து நாமொரு முதலென்றிருந் தோமே யென்று லச்சைப்பட்டு நாணிப் பதைப்பறவருளினை முத்தி யிரண்டற் றநுபவிக்குஞ் சிவாநுபவத்தைத் தமொழியா தெவுஞ் சிவசிவாவென்று நினையாத வெனக்கும் வீணே யிரங்கி யநுக்கிரகம் பண்ணவேண்டி வேதாகம புராணசாத்திரங்களிற் சொல்லப்பட்ட வெல்லாப்பொருளுக்கு மனத்துக்குந் தாமரை

மலரி னெழுந்தருளி யிருக்கும் பிரம விஷ்ணு முதலாகிய தேவர்கணிளைப்புக்குந் தெரியப்படாத தாரம்போலே நின்றும் ஜடசித்துக்களிடத்திலு மணித்தாய் நிறைந்திருக்கிற வழகு பொருந்திய சீர்பாத கமலத்தை யடியேன் சிரசின்மீதிருந்து பிரகாசிக்கும்படிக்கு வைத்தநுக்கிரகம் பண்ணிப் பெரிய மகா தேவனென்னும் பெயரையுடைய மறைஞான சம்பந்த ஞானா சாரிய னெனக் கநுக்கிரகம் பண்ணின பொருளேதென்னிற் றான்வேறு நான்வேறாய்வந்து பொருந்தின தில்லையென்னும் வழக்கை யறிவித் ததாகிய தொடுத்துன்னிடத்திலே யொளி த்திருந்து நீ நம்மைக்காணுதிருக்க நாமென்று முன்னைக் கண்டு கொண்டிருந்தோ மென்கிற கள்ளத்தை யிப்போதுயிர்க்குயி ராய்ப் பிரகாசித்துநின் றறிவித்த பாதமான தெம்மையிரக்ஷிக்க.

வள்ளைமையாற், றன்னைத்தெரிவித்துத்தன்றாளிணைபட்டிட
வென்னைத்தெரிவித்த வெல்லையின்கண்-மின்றோன்றும் [த்த
வண்ணமுருவ மருவுங்குணமயக்க
மெண்ணுங்கலைகால மெய்ப்பொருளு-முன்னமெனக்
கில்லாமைகாட்டிப்பின் பெய்தியவாகாட்டியினிச்
செல்லாமைகாட்டுஞ் செயல்போற்றி,

எ - து. வளப்பமிகுந்த கிருபையினுற் கர்த்தா தன்னைத் தெரிவித்துத் தன்பாததாமரையான திருவருளுக்குள்ளே பிரி யாமலென் றங்கிடந்த வென்னையுந் தெரிவித்த வெல்லைக்கண் மின்போன்று தோன்றியழிகிற வண்ணத்தையுடைய தேகமுந் தேகத்தைப்பொருந்திய குணமயக்கங்களு மறிவைவிளக்கப் பட்ட கலையாதி முதலாகிய தத்துவங்களு முன்னில்லாத கேவ லாவத்தைதனை முன்னேயறிவித்துப் பின்பு தேகமுதலிய கரு விகாரணாதிகளுங் கூடின சகலாவத்தையு மறிவித்து இனியரு ளைவிட்டுத் தேகமுதலான கருவிகாரணாதிகளிற் செல்லாத சுத் தாவத்தையு மறிவித்தசெய லெம்மையிரக்ஷிக்க.

எல்லாம்போய்த், தம்மைத்தெளிந்தா ராய்த்தாமேபொ
யெம்மைப்புறங்கூறி யின்புற்றுச்-செம்மை [ருளாகி
யவிகாரம்பேசு மகம்பிரமக்காரர்
வெள்ளியாமிருளில் விடாதே - யொளியாய்நீ
நின்றநிலையே நிகழ்த்தியொருபொருள்வே
றின்றியமையாமை யெடுத்தோதி - யொன்றாகச்
சாதித்துத்தம்மைச் சிவமாக்கியிப்பிறவிப்
பேதந்தனிலின்பப் பேதமுறாப் - பாதகரோ
டேகமாய்ப்போகாம லெவ்விடத்துங்காட்சிதந்து
போகமாம்பொற்றாளி னுட்புணர்த்தி - யாதியுட
னிற்கவழியா நிலையிதுவேயென்றருளி
யொக்கவியாபகந்த னுட்காட்டி - மிக்கோங்கு
மானந்தமாக்கடலி லாராவமுதளித்துத்
தான்வந்துசெய்யுந் தகுதியினை - யூனுயிர்தான்
முன்கண்டகாலத்து நீங்காதமுன்னோனை
யென்கொண்டு போற்றிசைப்பேனியான்.

எ - று. எல்லாத் தத்துவங்களையும் பொய்யென்றுகண்டு நீங்கித் தம்மைத்தெளிந்தோமென்று நமக்குமேலே வேறொருபொருளில்லையென்றுஞ் சைவசித்தாந்திகளுடனே கூடலாகா தவர்நமக்குப் புறம்பென்றும்பேசித் தன்னின்பத்தைத் தானே புசித்திருப்போமென்று மகிழ்ச்சியுற்றுச் செவ்விதான நிருவிகாரி நாமேயென்றுபேசி யகமே பிரமமென்னும் வாதிகள் தன்னையுமறியாமற் றலைவனையு மறியாமன் மயங்கிநிற்கிற வெளிபோன்ற விருளி லென்னைவிடாமல் ஞானசொரூப வொளிவடிவா யிப்போது நீநிற்கிற நிலையென்று நிகழ்த்தி யிதற்குமேலே வேறொருபொருளின்றி யமையாமையு மெடுத்தோதி யான்மாவைச் சிவத்துடனே யொன்றாகும்படி சாதித்

து தம்மைச் சிவமாக்கி யிந்தப் பிறவிப்பேதமாகிய சரீரத்திலே தானே ஜீவன்முத்தித் தன்மையும் பரமுத்தித்தன்மையுஞ் சரி யாகக்கண்டு வெற்றின்பமான சிவபோகம் புசியாமல் சமவா தம்பேசி யான்மசத்தியுடனேகூடி யின்பம் புசிப்போமென்கிற பாதகரோடுங்கூடி யேகமாய்ப் போகாமலெனைக் கைவிடாத் தாங் குருலிங்கசங்கமாய்க் காட்சிகொடுத்து மேலானபோக முண்டாகிற திருவருட்பாதத்திற் பிரியாம லென்னையடங்கிக் கிடக்கும்படி பொருத்துவித்து ஞேயத்திலழுத்தியிருந்து மறியா தசாயுச்சியமிலே யிந்தவருணிலையென்று விகற்பந்தோன்றாம லநுக்கிரகித்துத் தமது பரிபூரண வியாபகத்துள்ளே யானு மொக்கவியாபித்து இருக்குந் தன்மையுங்காட்டி மிகுத்தோங்கி யளவுபடாம னிறைந்துநின்ற தமது போகத்தைத் திருவருட்க டலில் விளைந்த வாராதநேயமுதத்தைப் புசித்துக் களித்திருக் கும்படி நாயேனென்னைத் தேடிவந்துகொடுக்க பெருங்கருணைத் தகுதியினு ளுயிர்தானே முதன்மையென்று நின்றபெத்தகா லத்து மதற்குமுதன்மையுங் கொடுத்து நீங்காமனின்ற முன் னேனை யெத்திறங்கொண்டு புகழ்ந்து போற்றுவேனியான்.

போற்றிதிருத்தில்லை போற்றிசிவபோகம் [பெய்ங்கன்
போற்றியவன்மெய்ஞ்ஞானப் புண்ணியநூல் - போற்றி
வெம்பந்தவாழ்க்கைவிட வேறாய்வந் தண்ணனின்ற
சம்பந்தமாமுனி பொற்றாள்.

போற்றிப்பஃறொடை மூலமும் உரையும் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கொற்றவன்குடி

உமாபதிசிவாசாரியர்

அருளிச்செய்த

வினாவெண்பாமூலம், கொடிக்கவிமூலம்,

உண்மைநெறிவிளக்க மூலம்.

இநற்றுரையுடன்

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

காணியம்பாக்கம்

முருகேசமுதலியாரால்

சென்னை:

இந்துதியலாஜிகல்யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

கஅகூஉ.

திருச்சிற்றம்பலம்.

விருத்தவெண்பா

மூலமும் உரையும்.

நீடுமொளியு நிறையிருளு மோரிடத்துக்
கூடலரிது கொடுவினையேன் - பாடிதன்மு
னென்றவார் சோலை யுயர்மருதச் சம்பந்தா
நின்றவா றெவ்வாறு நீ.

இ-ள். நீடுமொளியு நிறையிருளு மோரிடத்துக்கூடலரிது - விரிந்தபிரகாசமு நிறைந்தவிருளு மோரிடத்திலே கூடமாட்டாது—, கொடுவினையேன் பாடித்தன்முன் - கொடுவினையேன்பக்கற் றெரிசிப்பதற்கு முன்பு,— வார்சோலையுயர்மருதச் சம்பந்தா வொன்றிநின்றவா றெவ்வாறுநீ-அழகியசோலை யுயர்ந்த மருதநகர்வாழ் சம்பந்தமாமுனியே யடியேனிடத்துத் தேவரீர்பொருந்திநின்ற தெப்படி - (கருத்து) அந்தகன்கண்ணுக்கு ஆதித்தப்பிரகாசம் வியாத்தமா யிருக்கையிலேயுந் தெரியாதிருந்த தன்மைபோ லென்பதாம், உ-ம். சிவஞானபோதத்தில். "அருக்கனேர்நிற்பினு மல்லிருளேகாணார்க் கிருட்கண்ணே பாசத்தார்க் கீசன்" கண்டுகொள்க. (நுட்பம்) மலமான்மாவைச் சகசமாய் மறைத்திருக்கையிலே சிவ மான்மாவைப் பொருந்திநின்ற தெப்படியென்னும் வினவுக்கு. உ-ம். சிவஞானபோதத்தில். "மெய்ஞ்ஞானந்தன்னில் விளையாத சத்தாதல்" என்றபாடத்திலும், சிவதருமோத்தரத்தில். "பரமசிவன் பராசத்தியல்லாவிர் [illegible]ருக்க, விரவுவதெனிரு

வெனிற்கேள் வெய்யவுழற் பசுமாந்தின், விரவியதே பசுமா மும் வெந்தவல வெந்துவிழும், பருவமுறக் காணுமுறப் படியு முறப் பழுத்தறவே.'' என்பது கண்டுகொள்க. (க)

இருளிலொளிபுரையு மெய்த்துங்கலாதி
மருளினிலையருளு மானுங் - கருவியிலை
நீங்கினிருளா நிறைமருதச்சம்பந்தா
வீங்குணருளா லென்பெற.

இ - ள். இருளிலொளி புரையும் - ஆணவமேலீட்டான காலத்து ஞானமொழிந்திருக்கும்,—மெய்த்துங்கலாதி மருளினிலையருளும் - கலாதிகளைப் பொருந்தின விடத்திலு மாணவத்தையே தந்தது, — மானுங்கருவி யிலைநீங்கினிருளாம் - வந்துடனே கூடிநின்ற கருவி நீங்கின பொழுது இருளாயிருந்தது, —நிறைமருதச்சம்பந்தா வீங்குணருளாலென்பெற - நிறைந்த மருதநகர்வாழ் சம்பந்தமாமுனியே யிவ்விடத்துணருளால் பிரயோசன மென்ன - (எ-று.) கேவலசகலத்திலுமல்ல சுத்தத்திற் பிரயோசனமென்பதாம். உ-ம். சிவப்பிரகாசத்தில், '' காட்டுங் கரணமொன்றும்'' என்றபாட்டிற் கண்டுகொள்க. (உ)

புல்லறிவுநல்லுணர்வு தாகாபொதுதான
மல்லதிலதன்னதெனி லந்நியமாம் - தொல்லையிரு
ளுதனமலையாவா றுயர்மருதச்சம்பந்தா
ஞானமலை யாவாய்நவில்.

இ - ள். புல்லறிவு நல்லுணர்வு தாகா பொதுஞானமல்லது - சிற்றறிவுபேரறிவாகாது ஞானமல்லது பொதுஞான மூன்றுவிதமாயிருக்கும்,—இலதன்னதெனிலந்நியமாம் - மூன்றில்லாது சிவஞான மலபரிபாகத்திலே யுண்டாமென்னில் சற்றசரியமாத மாகாம லந்நியமாம்,—தொல்லையிருளுதனமலையாவா றுயர்மருச்சம்பந்தா ஞானமலையாவாய் நவில் - பழமையாகவருகிற

ஆணவமலத்தின் குற்றத்தினாலே மயங்காத முறைமையையு யர்ந்த மருதநகர்வாழ் சம்பந்தமாமுனியே மலைபோல ஞானத்தை யுடையவரோ திருவுளம் பற்றவேணும். (க-து.) ஆன்மஞானம சிவஞானமாகாது. தத்துவங்களுடைய சுபாவத்தை இதுபொய் யென் றறிவிக்கிறது சிவஞானம் இப்படியறிகிற வேற்றுமை யும் விட்டு வாய்ந்த ஞானமாயிருப்பது சுத்தம். உ-ம். சிவப்பிர காசத்தில் "தத்துவமானவற்றின் றன்மைகள்" என்றபாட் டிலும். சிவஞானசித்தியில். "சிவன்சீவனென்றிரண்டுஞ் சித் தொன்றா மென்னிற் சிவனருட் சித்திவனருளைச் சேருஞ் (௯) சித்து. கண்டுகொள்க.

கனவுகனவென் றுகாண்பரிதாங் காணில்
நனவிலவைசிறிது நண்ணா - முனைவனரு
டானவற்றிலொன்றா தடமருதச்சம்பந்தா
யானவத்தைக காணுமாறென்.

இ-ள். கனவுகனவென்று காண்பரிதாம்-கனவிலேநின்று கனவைத் தரிசிக்கப்படாது, — காணில்நனவிலவை சிறிது நண்ணா - நனவிலே காணும் கண்டதென்னில் நனவிலந்தக் கருவிகளில்லாதபடியினாலே காணவில்லை, — முனைவனருடான வற்றிலொன்றா - அருளிலே நின்று கண்டதென்னிலருளவத் தைகளிற் பொருந்தாது,—தடமருதச்சம்பந்தா யானவத்தைக காணுமாறென் - தடாகம் பொருந்திய மருதநகர்வாழ் சம்பந்த மாமுனியே நானவத்தைகளைத் தரிசிக்கும்படி யெப்படி. (க-து.) சுத்த தத்துவங்களைக் கொண்டறியவேணுமென்பாம். உ-ம். சிவப்பிரகாசத்தில் "இத்தகைமையிறையருளா லுயிரறியும்" (௫) என்றபாட்டிற் கண்டுகொள்க.

அறிவறிந்ததெல்லா மசத்தாகுமாயின்
குறியிறந்தின் னுணர்விற் கூடா - பொறிபுலன்க

டாமாவறியா தடமருதச்சம்பந்தா
யாமாரறிவா ரினி.

இ-ள். அறிவறிந்தவெல்லா மசத்தாகுமாயின் - என்னு டையவறிவினாலே யறியப்பட்டவெல்லா மசத்தாயழிந்து போ மேயாயின்,—குறியிறந்த நின்னுணர்விற்கூடா - வாக்குமனத் துக்கெட்டாமல் குறியிறந்து நிற்கிற தேவரீருடைய ஞானத் திலே பொருந்தப்போகிறதே யில்லை,—பொறிபுலன்கடாமாவ றியா - பொறிபுலனாகிய தத்துவங்கள் தாமாயறியமாட்டா,— தடமருதச்சம்பந்தாயாமாரறிவாரினி - தடாகம்பொருந்திய மரு தநகர்வாழ் சம்பந்தமாமுனியே யானுனை யறியப்போகிறதுதா னினி. (க-து.) கண்ணானது யிருளோடுகூடி யிருளாயு மொளி யோடுகூடி யொளியாய்நின்றதுபோலப் பாசத்தோடுகூடிப் பாசமாய்நின்றவான்மா அருளோடேகூடிப் பாசநீங்கியருளாய் நிற்குமென்பதாம். உ-ம். சிவப்பிரகாசத்தில். "சத்தியுமென் றசத்துத்தானறியாது" என்றபாடத்திற் கண்டுகொள்க. (௯)

சிற்றறிவுமுற்சிதையிற் சேர்வாரின் றுஞ்சிறிது
மற்றதனினிற்கிலருண் மன்னுவாம் - துற்றமுகின்
மின்கொண்டசோலை வியன்மருதச்சம்பந்தா
வென்கொண்டுகாண்பே னியான்.

இ-ள். சிற்றறிவுமுற்சிதையிற்சேர்வாரின்றும் - சிற்றறிவு முன்னேகெடுமாயின் பின்னருளைப் பொருந்தப்போகிற பேரி ல்லை,—சிறிது மற்றதனினிற்கிலருண் மன்னுவாம் - சிற்றறிவு கொஞ்சமாக நின்றாலு மருள்பொருந்தாது,—துற்றமுகின்மின் கொண்ட சோலைவியன்மருதச் சம்பந்தாவென்கொண்டு காண் பேனியான் - மேகங்கள் நெருங்கிய வாகாயத்தை யளாவிய சோலைசூழ்ந்த வியன்மருதநகர்வாழ் சம்பந்தமாமுனியே என்ன த்தைக்கொண்டு காண்பேனியான். (க-து.) சிற்றறிவுகெட்டது

மல்ல முன்போல விருந்ததுமல்ல பாசபந்தநீங்கித் திருவடியி லேகலந்து கிடக்குமென்பதாம். உ-ம். சிவஞானசித்தியில். "செம்பிரதக் குளிகையினாற் களிம்பற்றுப்பொன்னாய்" என்ற பாடத்திற் கண்டுகொள்க. (சா)

உன்னரியநின்னுணர்வ தோங்கியக்காலொண்கருவி
தன்னளவுநண்ணரிது தானாகு - மென்னறிவு
தானறியவாரா தடமருதச்சம்பந்தா
யாமறிவதெவ்வா றினி.

இ-ள். உன்னரியநின்னுணர்வ தோங்கியக்கால் - நினைத்தற்கரிதாகிய தேவரீரருள் தோன்றின காலத்து, — ஒண்கருவி தன்னளவு நண்ணரிதுதானாகும் - அழகுபொருந்திய முப்பத்தாறு தத்துவங்களாற் பொருந்தப்படாது,—என்னறிவு தானறியவாராது - என்னுடைய பசுஞானத்தாலு மறியப்படாது,— தடமருதச்சம்பந்தா யாமறிவதெவ்வாறினி - தடாகம்பொருந்திய மருதநகர்வாழ் சம்பந்தமாமுனியே அடியோங்களறிகிற தெப்படித்தானினி. (க-து.) பசுகரணங்களுஞ் சிவகரணமாயான்மாவு மருளாய்ப் பொருந்திநின் றறியுமென்பதாம். உ-ம். சிவப்பிரகாசத்தில், "மாயை மாயாமை மாயா" என்றபாடத்திற் கண்டுகொள்க. (எ)

அருவேவுருவன் றருவேலருவன்
றிருவேறுமொன்றிற் கிசையா - வுருவோரிற்
காணிலுயர்கடந்தைச் சம்பந்தா கண்டவுடற்
பூணுமிறைக்கென்னும் புகல்.

இ-ள். அருவேவுருவன் றருவேலருவன் றிருவேறுமொன்றிற்கிசையா - கர்த்தா திருமேனியருவமானா லுருவமாகமாட்டாது உருவமானா லருவமாகமாட்டாது அருவு முருவுமொரு பொருளுக் கிரண்டு தன்மையிசையாது,—உருவோரிற் காணி

லுயர்கடந்தைச் சம்பந்தா கண்டவுடற் பூணுமிறைக்கென்னும் புகல் - திருமேனியை விசாரித்துக்காணின் உயர்கடந்தை நகர் வாழ் சம்பந்தமாமுனியே கொண்ட திருமேனியைப் பூணப்பட்ட கர்த்தாவுக்குத் திருமேனியென்னத்திலே யுண்டானது திருவுளம்பற்றவேண்டும். (க-து.) ஞானத்திலே திருமேனி கொள்ளுவனென்பதாம். உ-ம். சிவஞானசித்தியில். "மாயை தான் மலத்தைப்பற்றி" என்றபாட்டிற் கண்டுகொள்க. (௬)

இருமலத்தார்க்கில்லை யுடல்வினையென் செய்யு
மொருமலத்தார்க்காரா யுரைப்பேன் - திரிமலத்தா
ரொன்றாகவுள்ளா ருயர்மருதச்சம்பந்தா
வன்றாகிலாமா றருள்.

இ-ள். இருமலத்தார்க் கில்லை யுடல்வினையென் செய்யும் - இரண்டு மலமுடைய பிரளயாகலருக்கு மாயையில்லாத படியினால் உடம்பில்லை வினையொழிக்கும்படியெப்படி, — ஒருமலத்தார்க்காராயுரைப்பேன் - ஒருமலமுடைய விஞ்ஞானகலருக் குறை யாராகச்சொல்லுவோம், — திரிமலத்தா ரொன்றாகவுள்ளார் - மூன்றுமலமுடைய சகலருக்கல்லோ வொன்றாகவுள்ளது, — உயர்மருதச் சம்பந்தாவன்றாகிலாமாறருள் - உயர்ந்த மருதநகர்வாழ் சம்பந்தமாமுனியே யப்படியல்லவாகில் லாமாறருள். (க-து.) விஞ்ஞானகலர் பிரளயாகலர்க்குச் சுத்தமாயையிலே தேகமென்பதாம். உ-ம். சிவஞானசித்தியாரில். "வித்தைகளவித்தையீசர் சதாசிவரென்றிவர்க்கு" என்றபாட்டிற் கண்டுகொள்க. (௭)

ஒன்றிரண்டாய்நின் றொன்றி லோர்மையதாமொன்றா
கின்றிரண்டாமென்னி லுயிர் கோருக் - குன்றிருந்தா
ராங்கியவாழ்கண்கடந்தைச் சம்பந்தாயாருமி
யோங்கியவா றெவ்வாறுரை.

இ-ள். ஒன்றிரண்டாய் நின்றொன்றி லோர்மையதாம் -
ஒருபொருள் விவகாரத்திலே யிரண்டாய் நின்றொன்று மென்
னில் ஒன்று பொருந்தமாட்டாது,—ஒன்றாக நின்றிரண்டாமெ
ன்னிலுயிர் நோகும் - இரண்டாய் நின்றொன்றுமென்னிலொ
ன்றிலே யொன்றழிந்துபோம்,—நன்றிருந்தார் தாங்கியவாழ்
தன்கடந்தைச் சம்பந்தாயானுகி யோங்கியவா றெவ்வாறுனை-
ஞானத்தைப் பொருந்தின பெரியோரால் தாங்கி வாழப்பட்ட
குளிர்ந்த கடந்தைநகர்வாழ் சம்பந்தமாமுனியே யான் சிவமாகி
யோங்கின முறைமையைத் திருவுளம் பற்றவேணும். க-து.
ஆணவத்தைப் பொருந்தின வான்மாவைப்போல வென்பதாம்.
உ-ம். சிவப்பிரகாசத்தில். "ஒன்றிரண்டாகி யொன்றினொரு
மையாம்" என்ற பாடத்திற் கண்டுகொள்க. (கo)

காண்பானுங்காட்டுவதுங் காண்பதுவுநீத்துண்மை
காண்பார்கணன்முத்தி காணுர்கள் - காண்பானுங்
காட்டுவதுங்காண்பதுவுந் தண்கடந்தைச்சம்பந்தன்
வாட்டுநெறி வாராதவர்.

இ-ள். காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவு நீத்துண்
மை காண்பார்கள் - காண்கிறவான்மாவுங் காட்டுகிற சிவனுங்
காணப்படுகிற பொருளையும்விட்டுண்மையைத் தரிசிப்பார்களெ
ன்னில்,—நன்முத்திகாணுர்கள் - நல்லமுத்தியைக் காணுர்கள்
—காண்பானுங்காட்டுவதுங் காண்பதுவுந் தண்கடந்தைச் சம்
பந்தன் வ ட்டுநெறிவாராதவர் - ஆனால் காணுகிறவனுங் காட்
டுகிறவனுங் காணப்படுகிற பொருளுமாகவோ காண்பார்களெ
ன்னில் அப்படிக் காணுகிறவர்களுங் குளிர்ச்சிபொருந்தின கட
ந்தைநகர்வாழ் சம்பந்தமாமுனி வாட்டும்வழி வாராதவர். க-து.
ஞாதுருஞான ஞேயமென்கிற சங்கற்பனைகளைவிட்டு ஒன்றாகச்
சிவனியல்பினுணருகிற ஞானமே பெறவேணு மென்பதாம்.
உ-ம். சிவஞானசித்தியில். "சன்மார்க்கஞ் சகலகலைபுராண
வேதஞ்சாத்திரம்" என்ற பாடத்திற் கண்டுகொள்க. (கக)

ஒன்றினுகர்வதிவ னூணுமுறுதொழிலு
மென்றுமிடையி லிடமில்லை - யொன்றித்
தெரியாவருண்மருதச் சம்பந்தா சேர்ந்து
பிரியாவா றெவ்வாறு பேசு.

இ - ள். சர்வவியாபியாயிருக்கையிலேயுந் தோன்றாத கிரு பைபொருந்திய மருதநகர்வாழ் சம்பந்தமாமுனியே தேவரீர் திருவடியைச் சேர்ந்து பிரியாமற் போகங்களைப் புசிக்குமுறை மை திருவுளம் பற்றவேணும். க-து. அவன் சர்வவியாபியா கையினுலும் இவன் சுதந்தர ஹீனனுகையாலும் அவனே போக ங்களைப் புசிப்பிக்கிறவ னென்பதாம். உ-ம். திருவருட்பய னில். "அவனையகன்றெங்கின்று மாங்கவனுமெங்கு, மிவனை யொழிந் துண்டாதலில்". - சிவஞானபோதத்தில். "ஈண்டிவ் வான்மாக்க ளவனையன்றியமைந் தொன்றையும் விஷயியாவா கலானவனுமவற்றது விஷயத்தை யுணருமென்றும், உண்மை நெறி விளக்கத்தில். "பாதகங்கள் செய்திடினுங் கொலைகள வுகள்ளு" என்றபாடத்தினுங் கண்டுகொள்க. (கஉ)

அருளாலுணர்வார்க் ககலாதசெம்மைப்
பொருளாகிநிற்கும் பொருந்தித் - தெருளா
வினாவெண்பாவுண்மை வினவாரே லூமன்
கனாவின்பாலெய்துவிக்குங் காண்.

இ - ள். அருளாலுணர்வார்க் ககலாதசெம்மைப் பொருளா கிநிற்கும்பொருந்தி - ஆசாரிய னநுக்கிரகம்பெற்ற ஞானவான் களுக்கு விட்டுநீங்கி மலைவுவாராமல் செம்மைப்பொருளாகவே பொருந்திநிற்கும்,—தெருளாவினாவெண்பா வுண்மை வினவா ரேலூமன் கனாவின்பா லெய்துவிக்குங்காண் - அறியத்தக்கதா வினாவெண்பாவி னுண்மையை வினவி யறியாதபேர் ஊமன் கனாவிலே பால்குடித்ததுக் கொக்கும். க - து. ஞானமிகுதி

டையோர்க்குச் சத்தியமாகவே தோன்றும். அல்லாதபேர்
எத்தனை சாத்திரம் படித்தாலும் வினாவெண்பாப் பாராராயின்
ஊமன் கனவினாலே பால்குடித்ததுபோல் ஒன்றுந் தெரியாதெ
ன்பதாம்.

வினாவெண்பா மூலமும் உரையும் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

இவ்வுரை சகாத்தம் ௧௬௦௦-க்கு மேற் செல்லாநின்ற பிங்
கள௵ வைகாசி௴ மெய்கண்ட சந்ததியில் திருவாவடுதுறை
நமச்சிவாயமூர்த்தி மரபில் வேலப்பபண்டார மனுக்கிரகம்பெ
ற்ற நமச்சிவாயத் தம்பிரான் செய்ததெனவறிக.

௨

திருச்சிற்றம்பலம்.

கொடிக்கவி

மூலமும் உரையும்.

ஒளிக்குமிருளுக்கு மொன்றேயிட மொன்றுமேவி
டிலொன், றொளிக்குமெனினு மிருளடராதுள் ளுயிர்க்
குயிராய்த், தெளிக்குமறிவுதிகழ்த் துளதேனுந் திரிமலத்
தே, குளிக்குமுயிரருள் கூடும்படிக்கொடிகட்டினனே.

இ-ள். ஒளிக்குமிருளுக்கு மொன்றேயிடம் - ஆணவத்
துக்கு ஞானத்துக்கு மிடமொன்றே,—ஒன்று மேவிடிலொன்
றொளிக்கும் - ஞானமேலிட்டகாலத் தாணவமொளித்துநிற்

கும். ஆணவமேலிட்டகாலத்து ஞானமொளித்துநிற்கும், — எனினுமிருளடாது - ஒன்றுமேலிட்டகாலத்திலே யொன்றொ ளித்து நின்றாலு ஞானத்தையாணவமலம் பொருந்தாது, — உள் ளுயிர்க்குயிராய்த்தெளிக்கு மறிவுதிகழ்ந்துளதேனுந் திரிமலத் தேகுளிக்கும் - பூர்வவாசனைவிசேஷத்தாற் சிவஞானஞ் சற்று விளங்குமாகிலு மும்மலங்களிலே யழுந்திக்கிடக்குமல்லாமலது கொண்டே நீங்கமாட்டாது, — உயிருள்கூடும்படிக் கொடிக ட்டினனே - இப்படி மும்மலங்களிலே யழுந்திக்கிடக்கிறவா ன்மாவருள்கூடும்படிக்குத் தீக்ஷாக்கிரமத்தினாலே மலங்களைப் போக்கத் துசங்கட்டினேன். (கருத்து.) ஆணவத்துக்கு ஞான த்துக்கு மிடமொன்றாயிருக்கத் தனதுகாரணங் கெடாமலிருக் கிற மலத்தைத் தீக்ஷாக்கிரமத்தினாலேபோக்கி மோக்ஷத்தை யடைவிப்போமென்பதாம். (அட்டம்) ஆணவத்துக்கு ஞானத் துக்கு மிடமொன்றென்பதற்கு. உ-ம். சிவஞானபோதத்தில் "மெய்ஞ்ஞானத்தன்னில்" என்றபாடத்தில். தன்கடனீருட் புப்போற்றானேயுளமுளவாய்த்தான்." எ-து. கண்டுகொள்க ஒன்றுமேலிட்டகாலத்திலே யொன்றொளித்துநிற்கு மென்ப தற்கு. உ-ம் சிவப்பிரகாசத்தில். "மாயையமாமாயையமாயா." என்ற விருத்தத்திற் கண்டுகொள்க. இதல்லாமலாணவமேலிட் டபெத்தகாலத்திலே ஞானமொளித்து நிற்குமென்று முத் காலத்திலே சிவப்பிரகாசித்து ஆணவங் கௌரவங் கெட்டெ ளித்து நிற்குமென்றுங் கூறியதற்கு. உ-ம். போற்றிப்பஃறொ டையில். "என்ற, வுள்ளமென்று நீங்காதொளித்திருந் தோன்றுகின்ற, கள்ளமின்று காட்டுங்கழல்போற்றி." சிவஞா னபோதத்தில். "நேசத்தர்தன்பாலிகழ்ந்திகெப்போற் ப த்தார்க்கின்றும்பதி." எ-ம். வருமேதுக்களைக்கண்டுகொள் ஞானத்தை யாணவம்பொருந்தாதென்பதற்கு. உ-ம். சிவஞா போதத்தில். "அந்நியமிலாமையாற் கொண்டுணர்வின்றாம் என்றபாட்டிற் சூரியனையந்தகாரம்பொருந்தாமைநிற்கும், எ-

கண்டுகொள்க. முன்விட்டகுறையினாலே யுயிர்க்குயிராயிருக்கிற ஞானஞ் சற்று விளங்குமானாலு மலத்திலேயழுந்திக்கிடக்குமல்லாமல் நன்றாகச் சுத்தியாகாது. இப்படியிருக்கிற வான்மாவருளைக்கூடும்படித் துசங்கட்டினே னென்றதற்கு ஆசாரியர் தீக்ஷாகிரமத்தினாலே மலத்தைப்போக்கி அருளைக் கொடுப்பர். அந்தச்சிவஞான மாசாரியனையல்லாமல்வாராது. உ-ம். சிவப்பிரகாசத்தில். "விரும்பிய மந்திராதிகாரம்." என்றவிருத்தத்திலும். சித்தியாரில். "பலவிதமாசான்பாசமோசனந்தான் பண்ணும்படி." எ-ம். "ஆசானருளாலடிசேர்ஞானம் வந்திடுமற்றொன்றாலும் வாராதாகும்." எ-ம். கண்டுகொள்க.

பொருளாம்பொருளேது போதேது கண்ணே
திருளாம்வெளியேதிராவே - தருளாளா
நீபுரவாவையமெலாநீயறியக்கட்டினேன்
கோபுரவாசற்கொடி.

இ-ள், பொருளாம்பொருளேது - பொருளிலேயழியாத பொருளேது,—போதேது - கிரணமாகிய சத்தியேது,—கண்ணேது - கண்போலவான்மாவேது,— இருளாம்வெளியேதிரவேது-அஞ்ஞானமாகிய சகலகேவலந்தானேது,—அருளாளா - அருளையுடையவனே,—நீ புரவாவையமெலா நீயறியக்கட்டினேன் - வையமாகிய மலமாயாதிகன்மங்களிலே பொருந்தாமல் ஆன்மாக்க ளிடமாகப்பொருந்தியிருக்கிற தேவரீரறியக் கட்டினேன். கோபுரவாசற்கொடி - கோபுரவாசலிலேகொடி. (க - து.) சுத்தாவேது, சத்தியேது, ஆன்மாவேது, கேவலசகலமேது இதுசொல்வாருமுளரோவென்று கொடிகட்டினேனென்பதாம். (ரு - ம்.) அழியாதபொருளேதென்னிலென்றது அகண்டபரிபூரணமா யுயிர்க்குயிராயாநந்தரூபமா யிருக்கிறது தற்சிவம். அதற்கு. உ-ம். சிவப்பிரகாசத்தில். "பலகலையாகம

வேதம் யாவையினும்.'' என்ற விருத்தத்திற் கண்டுகொள்க
கிரணவொப்பாகிய சத்திதானேதென்னில் சத்தியென்று தன்
யேயொருமுதலல்ல சூரியனுங்கிரணமும்போல மாமுங்காழ்
பும்போலத் தடையற்ற ஞானமாயிருக்கும். உ-ம். சிவப்பிரக
சத்தில். "சுத்தமாஞ்சத்தி ஞானச்சுடராகும்.'' என்றபாட
தில் "இரவிகாட்டும் வளரொளிபோன்மகிழ்ந்தே.'' எ-ம். சி
தியாரில். "சத்திதன்வடிவேதென்னிற் றடையிலா ஞானம
கும்.'' எ-ம். "ஒருவனேயிராவணுதி'' என்றபாடத்தில்
"வரும்வடிவெல்லாஞ்சத்தி சத்திதான் மாமுங்காழ்ப்பு, மி
மையும்போல மன்னிச்சிவத்திறேடிசைந்து நிற்கும்.'' எ-
கண்டுகொள்க. கண்ணெப்பாகிய வான்மாவேதென்னில் அ
வதுவாய் அடுத்ததின்றன்மையாய் வசிப்பைப்பற்றின வியா
கமாய்க் கண்படிகமாகாயம்போல ஒப்பையுடையதாய் அக்கி
யைப்போல வொன்றைப்பற்றி நிற்கிறதல்லாமற் றனித்துநி
கிற முதலல்லவாய் அருவமுருவமும் ரூபாரூபமல்லவாய்
பூவிற் கந்தம்போன்றதாயிருக்கிறதான்மா. இதற்கு. உ-
சிவஞானபோதத்தில். "மாயாதனுவிளக்காய் மற்றுள்ளம்.
என்றபாடத்திலும். சிவப்பிரகாசத்தில். "ஓரிடத்திருத்தல்.
என்றபாடத்திலும். சித்தியாரில். "அசித்தருவியாபகம்போ
வியாபகமருவமன்ருய், வசித்திடவரும்வியாபியெனும் வழக்
டையனுகி.'' எ-ம். திருவருட்பயனில். "இருளிருளாகி யெ
விடத்திலெல்லாம், பொருள்களிலதோபுவி.'' எ-று. சித்தி
ரில். "அங்கியானதுதானுமொன்றை யணைந்துநின்று திகழ்
டும், பங்கியாதுயிர்தானு மிப்படிபற்றியல்லது நின்றிடா''எ-
சிவஞானபோதத்தில். "தோன்றல்மலர்மணம்போற்றெருக்கு
எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. அஞ்ஞானமாகிய கே
லசகலந்தானேதென்னில் அதிற்கேவலமாவது தத்துவங்க
டே பொருந்தாமற் போகத்திற் கொள்கையில்லாதவனாய்
யில்லாதவனாய் அந்தகாரத்திலே அலரவிழித்த விழிபோ

தாய் மலமொன்றுமே யாயதுவா யந்தமலமாய் விட்டுநீங்கு
முறைமை யில்லாததாயிருப்பதுகேவலம். இதற்கு. உ-ம். சிவ
ப்பிரகாசத்தில். ஒங்கிவரும்பலவுயிர்கள்." என்றபாடத்திலும்.
சித்தியாரில். "அறிவிலன் மூர்த்தனித்தன ராகாதிகுணங்க
ளோடும்." என்ற பாடத்திலும் வருமேதுக்களைக் கண்டுகொ
ள்க. சகலமாவதேதென்னில் சகலத்துக்கு வெளியென்றுந் தீப
மென்றும்பெயர். வெளி தீபமென்றிருக்கிற சகலத்தை யஞ்
ஞானமென்று சொல்லுவானே னென்னில் சகலத்திலே அஞ்
ஞானமாகிய மாயாபோகத்தைப் புசிப்பிக்கு மல்லாமல் ஞான
த்தையுணர்த்தாது. ஞானஞ்சுத்தத்திலே யல்லாமலுண்டாகாது.
ஆகையால் சகலமும் போகத்தைப் புசிப்பிக்கிற நிமித்தமாகக்
கேவலத்துக்கு இது தீபமென்றும் வெளியென்றுஞ் சொன்ன
தல்லாமல் இதுவு மஞ்ஞானமே தப்பாது. இதற்கு. உ-ம். சிவ
ப்பிரகாசத்தில் "புகலுமலமொழித்தற்கு." என்றபாடத்திலும்.
இருபாவிருபஃதில் "இருள்வெளியாக்கு மருளினையறுத்து."
எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. அருளாளாவென்றது
அறிவுடையவனேயெல்றது. நீ புரவாவையமெலா நீயறியக்
கட்டினேனென்ற தேதென்னில் சர்வத்திர பரிபூரணனாயிருக்
கிறவர் பிரபஞ்சமாகிய மலமாயாதி கன்மங்களைப்பொருந்தாம
லான்மாக்களிடமாக விருப்பானென்று சொல்லுவானே னென்
னில் சிவனை மலமாயாதி கன்மங்கள் பொருந்தாது. ஆனால்
சர்வவியாபக மெப்படியென்னில், சூரியனுடையசந்நிதியி லந்
தகாரம் பொருந்தாமல் நிற்கிறதுபோல மலமுஞ் சிவன் சந்நிதி
யிலே நிற்கிறது. அப்படி சிவ னான்மாக்கள்தோறு நிறைந்திரு
க்கச் சிவனைபொருந்தாம லான்மாக்களை மலம்பொருந்தினதெ
ப்படியென்னிற் சமுத்திரமும் ஜலமு முப்பும்போல. இதற்கு.
உ-ம். நெஞ்சுவிடுதூதில். "படநாகம்பூண்ட பரமன்பசுவினி
டமாய் நிறைந்தவிறைவன்." எ-ம். சித்தியாரில். "அனைத்துஞ்
சத்தென்னி லொன்றையறிந்திடா தசத்தாலென்னில், மூளை

த்திடாதசத்துசத்தின் முன்னிருளிரவிமுன்போல், நினைப்பதி
ங்கசத்தேயென்னிற் சத்தின்முன்னிலாமையாலுந், தனைக்
கொடொன்றுணர்தலாலுந் தானசத்துணராதன்றே. எ-ம். "சத்
துமெய்ஞ்ஞானமேனிச் சோதிபாலசத்தஞ்ஞான, மொத்துறு
ற்றமெல்லா முற்றிடுமுயிரின்கண்ணே. சத்துளபோதேவெரு
ஞ்சதசத்து மசத்துமெல்லாம், வைத்திடுமாறியாக வாரிநீரில
வணம்போலும்." எ-று. வருமேதுக்களைக்கண்டுகொள்க. தேவரீ
ரறியக்கோபுரவாசலிலே கொடிகட்டினேனென்பதற்கு அந்தக்
கத்தாலே கன்னபரம்பரையாக அநுக்கிரகம்பண்ணி அறிகிற
தல்லாமல் மற்றப்பேராலே அறியப்படாதென்பதுகருத்து. (உ)

வாக்காலுமிக்கமனத்தாலுமெக்காலுந்
தாக்காவுணர்வரியதன்மையனை - நோக்கிப்
பிரித்தறிவுதம்மிற்பிரியாமைதானே
குறிக்குமருணல்கக்கொடி.

இ-ள். வாக்காலுமிக்க மனத்தாலுமெக்காலுந் தாக்கா
வுணர்வரிய தன்மையனை - வாக்குமனதுக்களாலு மொருகாலத்தி
லுந் தாக்காமலறிவதற் கரிதாகிய தன்மையுடையவனை,—நோ
க்கி - விசாரித்துப்பார்த்து,—பிரித்து - பகுத்துப்பிடித்து,—அறி
வுதம்மிற் பிரியாமைதானே குறிக்குமருணல்கக்கொடி - அறி
க்கறிவாயிருக்கிற சிவத்தைப் பிரியாமற் குறித்து மருள்பொரு
க்கத் தக்கதாகக் கொடிகட்டினேன். (அ-ம்.) மனவாக்குக் க
யங்களினாலே யொருகாலுந் தாக்காதவனென்றும் ஆன்மபோ
தத்தா லறியப்படாதவனென்றுஞ் சொன்னதற்கு. உ-ம். சி
த்தியாரில். "மறையினாலயனான்மாலான் மனத்தினால்வாக்கா
மற்றுங் குறையிலாவளவினாலுங் கூறொணாவாகிநின்ற நிறை
வனை". எ-ம். சிவப்பிரகாசத்தில் "பாசஞானத்தாலும் ப
சுஞானத்தாலு மீசனையறியவொண்ணாது". எ-ம். வருமேது

களைக் கண்டுகொள்க. விசாரித்துப் பகுக்குமிடத்தி லென்றது
இப்படி மனவாக்குக்காயங்களுக்கும் ஆன்மபோதத்துக்கு மெ
ட்டாத சிவனை ஆசாரியர் தீக்ஷாக் கிரமங்களினால் மலமாயாதி
கன்மங்களைப் போக்கிப் பசுகரணங்களைச் சிவகரணமாக்கி மல
த்திலே பற்றாகவிருந்த வறிவைத்திருப்பி யருளிலே பற்றாக்கி
யென்றதற்கு. உ-ம். நெஞ்சுவிடுதூதில். "பார்த்தான்பழைய
வினை பஞ்சமலக்கொத்தையெல்லாம், நீத்தான்நினைவுவேறாக்
கினான்." எ-து. கண்டுகொள்க. அறிவுதம்மிற் பிரியாமைதானே
குறிக்குமென்றது இப்படி மலங்களைப்போக்கி அறிவை யருளி
லே இருப்பின வாசாரியருடைய வநுக்கிரகத்தினாலே ஞாதுரு
ஞான ஞேயங்களாகிய சங்கற்பனை ஞானங்களிலே போகாமல்
தன்னிடத்திலே உயிர்க்குயிரா யநாதியேதோன்றாமற் பொரு
ந்தியிருக்கிற திருவருளிலே அறிவுதாரகமாக நிறுத்தி யென்ற
தற்கு. உ-ம். சித்தியாரில். "ஞாதுருஞானஞேயஞ் சங்கற்பனை
ஞானமாகுந் திருஞானமிவையெல்லாங் கடந்த சிவஞானமாத
லினாற் சீவன்முத்தர் சிவமே கண்டிருப்பர்." என்பது கண்டு
கொள்க. அருணல்கக்கொடி என்றது இப்படி யாசாரிய ரநுக்
கிரகம்பெற்ற அநுட்டானத்தினாலே சிவனான்மாவைவந்து சு
வீகரித்துக் கொள்ளுவனென்றும் இந்த முறைமையிலே யல்
லாமல் மோக்ஷ மடையப்படாதென்றுங் கொடிகட்டினானமெ
ன்பது கருத்து. அருள் பொருந்துமென்றிருக்கச் சிவன் சுவீ
கரிப்பவனென்று சொல்லுவானேனென்னில் அருளென்றுஞ்
சிவமென்றும் வேற்றுமையில்லையென்றது. ஆன்மாவைச்சிவன்
சுவீகரித்த தெப்படியென்னில் இரசகுளிகை பொன்னைத் தன
க்குள்ளே யடக்கிக் கொண்டதுபோலவும், தானாக்கின தெப்ப
டியென்னில் அக்கினியிரும்பைத் தானாக்கினதுபோலவும். சிவ
னான்மாவை வலித்துவிடாத தெந்தன்மையென்னில் காந்தமிரு
ம்பை வலித்தால் ஒருகாலும் விடாது அத்தன்மைபோலவும்,
சிவ னான்மாக்கள் மலத்தைப்போக்கித் திருவடியிலே கூட்டி.

னதெப்படியென்னில் அக்கினி காட்டகத்தைக் கெடுத்ததுபோ
லவும் சூரிய னந்தக்காரத்தைப் போக்கினதுபோலவும் மலத்
தைப்போக்கி உப்பையணைந்த வப்பைப்போலவொன்றுபட்டுத்
திருவடியிலே கலந்திருப்பது. ஆன்மா சிவனைப்பொருந்திச்
சிவனாய் நீங்காம லிருக்கிறதெப்படி யென்னில் குளத்திலே
கட்டுப்பட்ட தண்ணீரணையை முறித்துக்கொண்டு சமுத்திர
த்திலே சேர்ந்தபோ தந்தச் சமுத்திரசலமேயா யந்தச் சமுத்தி
ரத்தைவிட்டு நீங்காத முறைமைபோல ஆன்மா சிவனைப்பொரு
ந்திச் சிவமேயாய்ச் சிவனைவிட்டு நீங்காமற் சிவனுடைய திரு
வடியிற் கலந்துகிடக்கிறது மிந்த முறைமைத்து. இதற்கு.
உ-ம். சித்தியாரில். "இரும்பைக்காந்தம் வலித்தாற்போல்"
என்ற பாடத்திலும். சிவஞானபோதத்தில் "மனனுமிருளைத்
துந்து." என்ற பாடத்திலும் "நசித்தொன்றினுள்ளம்" என்ற
பாடத்திலும். "சிறைசெய்யநின்ற" என்ற பாடத்திலும் வரு
மேதுக்களைக் கண்டுகொள்க. (ரு)

அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்துநாலெ
ழுத்தும், பிஞ்செழுத்துமேலைப் பெருவெழுத்து - நெஞ்
சழுத்திப், பேசுமெழுத்துடனே பேசாவெழுத்தினையுங்
கூசாமற்காட்டக்கொடி.

இ-ள். அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து ந
லெழுத்தும் - சிவாயநமவென்கிற வைந்தெழுத்தும். ஓம்-ஆம்
அவ்வும் - சிவாயநமவென்கிற வெட்டெழுத்தும். ஓம் நமசிவ
யவென்கிற ஆறெழுத்தும். ஓம் - சிவாயவென்கிற நாலெழு
தும் ஆகவிப்படி உச்சரிக்கிற விதிப்படியே யுச்சரித்து,—பி
செழுத்துமேலைப் பெருவெழுத்தும் நெஞ்சழுத்தி - விதிப்ப
யுச்சரிக்கிற முறைமையை விட்டுப் பஞ்சாக்ஷரத்தி னுடை
சொரூபத்தையறிந்து பிஞ்செழுத்தாகிய வகாரமாகிய பராசத்
யையும் மேலைப் பெருவெழுத்தாகிய சிகாரமாகிய சிவத்தைய

தன்னுடைய ஹிருதயத்திலே வைக்கில், — பேசுமெழுத்துட
னே பேசாவெழுத்தினையுங் கூசாமற்காட்டக்கொடி - பேசுமெ
ழுத்தாகிய வகாரமாகிய சத்தி பேசாவெழுத்தாகிய சிகாரமா
கிய சிவத்தை யிரண்டறக்கூசாம லழுத்திவிக்கக் கொடிகட்டி
னேன். (க-து.) பஞ்சாக்ஷரமுதலாகிய மந்திரங்களையுச்சரித்து
அதின்பிறகு அந்த மந்திரத்தினுள் அக்ஷரசொரூபத்தை யறி
ந்து சத்தி சிவான்மீகமாயிருக்கிற அக்ஷரத்தை ஹிருதயத்தி
லே வைத்தால் அந்தச் சத்திதானே சிவனை யிரண்டறக் கலப்
பிப்பதென்று பஞ்சாக்ஷரத்தினாலே மோக்ஷத்தை யடையும்ப
டிக்குக் கொடிகட்டினேன் என்பதாம். (ரு-ம்.) அஞ்செழுத்து
மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும் பிஞ்செழுத்து
மேலைப் பெருவெழுத்தும் நெஞ்சழுத்தி - பஞ்சாக்ஷரமுச்சரிக்
கிற முறைமையிலே தூலபஞ்சாக்ஷரம் சூக்குமபஞ்சாக்ஷரம்
அதிசூக்குமபஞ்சாக்ஷரமென்று உச்சரிக்கிற முறைமை மூன்
றுவிதமுண்டு அந்த முறைமை யுச்சரித்து அந்தப் பஞ்சாக்ஷர
த்தினுடைய சுபாவமறிந்து (அதுவேதென்னில் சிகாரஞ் சிவம்
வகாரஞ் சத்தி யகாரமான்மா நகாரந் திரோதை மகாரமலம் ஆக
விந்த முறைமையறிந்து) இதில் ஊனநடனமாகிய நகார மகா
ரத்திலே சென்று ஜநநமரணத்திலே போகாமல் ஞானநடன
மாகிய சிகார வகாரத்தைப் பொருந்திச் சிகாரமுதலாக வுச்சரி
த்து அப்படியுச்சரிக்கிற முறைமையும்விட்டு வகாரமாகி ஞான
ந்தானாக நிற்கவே சிகாரமாகிய ஞேயத்திலே யழுத்துவிக்கும்
அது வெப்படியென்னில் சத்தியாகிய வகாரமிடமாகச் சிவமா
கிய சிகாரத்தினிடையிலே அழுந்தவே அத்தன்மையுண்டாக்கும்
அதற்கு. உ-ம். நெஞ்சுவிடுதூதில். "அஞ்செழுத்தை, யுச்சரி
க்குங்கேண்மை யுணர்த்தியுணர்த்தியபின் - வைச்சிருக்குமந்த
வழியாக்கி." எ-ம். சிவப்பிரகாசத்தில். "திருவெழுத்தைந்தில்"
என்றபாடத்திலும். திருவருட்பயனில் "ஊனநடன மொரு
பா லொருபாலா, ஞானநடந்தானடுவேநாடு" எ-ம் "ஆசின

வர்காப்ப ணடையா தருளினல், வாசியிடை நிற்கைவழக்கு'' எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. ஆனல் பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்தாற் போதாதோ உச்சரிக்கவு மதின்மேலே சத்திசிவான்மீகமாகிய எழுத்தினிடத்திலே நிற்கவும் அதின்மேலே மோக்ஷமுண்டாமென்ற தேதென்னில் பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்ததினலே அஞ்ஞானநீங்கி ஞானம் பிரகாசிக்கும். அதற்கு. உ-ம். சிவஞானபோதச் சூ‍ரணையில். ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை விதிப்படி யுச்சரிக்கவென்றது இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்து மஞ்ஞானத்தை வெம்புகின்ற புழுப்போல நோக்கிற்றைநோக்கி நிற்குமாதலினதுநீக்குதற் கெனக்கொள்க. இந்தப் பஞ்சாக்ஷர உச்சரிப்பிலே விளங்கின ஞானத்தினலே நகார மகாரந் திரோத மலமென்றும் யகாரம் ஆன்மபோதமென்றும் மூன்றெழுத்து நீங்கி ஞானமேயா யந்தஞானத்தினலே சிகார வகாரத்தினிடையிலே நின்றழுந்துகிறதுவே சிறப்பென்றதற்கும். உ-ம். திருவருட்பயனில். ''அருளினல் வாசியிடை நிற்கைவழக்கு'' எ-து. கண்டுகொள்க. இப்படி ஞானத்திலே யழுந்துகிறேமென்கிறதையும் விடவே சிவன்தானே யிவனை கிரகித்துக்கொண்டுமிவன் செயலெல்லாந் தன்செயலாகவு மிவனுந்தானகவே நிற்பன். இதற்கு. உ-ம் திருவுந்தியாரில். ''நஞ்செயலற்றிந்த நாமற்றபின்னதன், றன்செயறானேயென்றுந்தீபற, தன்னையே தந்தானென் றுந்தீபற.'' இதிலிந்த மூன்றுவகையுங் கண்டுகொள்க. (௬)

கொடிக்கவி மூலமும் உரையும் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

பிரதிகள்தோறும் இந்நூலுரையாசிரியர்பெயர் காணப்படவில்லை.

உ

திருச்சிற்றம்பலம்.

உண்மைநெறிவிளக்கம்.

மூலமும் உரையும்.

மண்முதற் சிவமதீறாய் வடிவுகாண் பதுவேரூப
மண்முதற் சிவமதீறாய் மலஞ்சட மென்றல்காட்சி
மண்முதற் சிவமதீறாய் வகையதிற் றானிலாது
கண்ணுத லருளால்நீங்கல் சுத்தியாய்க் கருதலாமே.

இ-ள். மண்முதற்சிவமதீறாய் - பிருதிவிமுதல் நாதமீறான முப்பத்தாறு தத்துவங்களையும், — வடிவுகாண்பதுவேரூபம் - தனுவுங் கரணமும் புவனமும் போகமும் செயலும் பிரேரகமுமாய் நின்றபெருவடிவுங் குணமுந் தொழிலுந் தனக்கு வேறாய்க்காண்பதுவே தத்துவரூபமாம், — மண்முதற் சிவமதீறாய் மலஞ்சட மென்றல்காட்சி - பிருதிவிமுதல் நாதமீறான முப்பத்தாறு தத்துவங்களையுஞ் சுத்தமாயா அசுத்தமாயா மலத்தினது காரியமென்றுஞ் சடபதார்த்தமென்றுந் தன்னாலே யறியப்பட்டதென்றுந் தன்னறிவிலே விளங்கக் காண்பதுவேதத்துவ தரிசனம், — மண்முதற் சிவமதீறாய் வகையதிற்றானிலாது - பிருதிவிமுதல் நாதமீறான முப்பத்தாறு தத்துவங்களினது விகற்பமாகிய சுட்டறிவுகளிற் றானில்லாமல், — கண்ணுதலருளால் காண்டல் சுத்தியாய்க் கருதுமன்றே - தத்துவங்கள் தன்னைத்தாக்காமல் கானலைத் தண்ணீரென்று கண்டவன் கானலென்றறிந்தவிடத்துத் திரும்ப விரும்பாதது போலவுஞ் சொப்பனத்தில் யானையேறி மாலைசூடக்கண்டவன் விழித்தவிடத்ததுமெய்யாய்க் காணாமல் பொய்யாய்க் கண்டது

போலவுந்தன்னறிவிலே கண்டுநீங்கித் தானசைவின்றி யந்நி யனு யெங்குநிறைவாய் நித்தியமா யறிவாயுள்ள முறைமையை யறிந்துநிற்பது தத்துவ சுத்தியாமென்று வேதாகமங்கள் சொல்லும், (௪)

பாயிருணீங்கிஞானந் தனைக்காண்டலான்மரூப, நீயு நின்செயலொன்றின்றி நிற்றலேதரிசனந்தான், போயி வன்றன்மைகெட்டுப் பொருளிற்போயங்குத்தோன்று, தாயிடிலான்மசுத்தி யருணூலின்விதித்தவாறே.

இ-ள். பாயிருணீங்கிஞானந் தனைக்காண்டலான்மரூபம் - தேசிகமூர்த்தத்தினது அநுக்கிரகத்தினலே தன்னையுந் தன் னிடத்திலே பெந்தமாயிருக்கிற தத்துவ விவகாரங்களையுமெவ் விடத்திலுந் தோன்றாமல் சகசமாய் மறைத்துநின்ற வாணவமலத்தையு நீங்கித் தானறியுமுறைமையும் அவனது ஞான மறிவுக்கறிவாய் நின்றுபகரிக்கிற முறைமையுந் தன்னறிவிலே விளங்கக் காண்பதுவே ஆன்மரூபமாம், — நீயுநின்செயலொன் றின்றிநிற்றலே தரிசனந்தான் - ஆன்மசெய்தி யெவ்விடத்தி லுந் தோன்றாமல் தத்துவதாத்திகங்களை யென்னதென்றும் பசு ஞானத்தை யானென்றும்நின்ற வசத்தியபோதநீங்கிப் பழைய சிற்றறிவாகிய சுட்டுப்போதங் கழன்றுநிற்பது ஆன்மதரிசன மாம், — போயிவன்றன்மைகெட்டு - தனக்கெனச் செய்தியில் லாதவான்மா தனது சுட்டறி வெவ்விடத்திலுந் தோன்றாமற் கெட்டு,—பொருளிற்போய் - தன்னிடத்திலே விளங்கப்பட்ட வநுக்கிரகஞானத்திலே தற்பூரணமெல்லா மடங்கித் தனது செய்தியெல்லா மநுக்கிரகத்தினதுசெய்தியாய், — அங்குத் தோன்றுதாயிடில் - தன்னை யந்தஞானமடக்கின முறைமையுந் தானந்தஞானத்திலே யடங்கின முறைமையு மெவ்விடத்திலுந் தோன்றாமல் பெத்தத்திலே தேகமேதானாயுந் தானே தேக

மாகிய நின்றமுறைமைபோலச் சிவமேதானாய் நிற்கவந்ததா ஞல்,—ஆன்மசத்தியருணூலின் விதித்தவாறே - ஆன்மசத்தி யாமென்று வேதாகமங்களின் வழியிலே யடைந்த ஞாதாக் கள் சொல்லு முறைமையாம். (உ)

எவ்வடிவு களுந்தானு யெழிற்பரை வடிவதாகிக்
கவ்வியமலத் தான்மாவைக் கருதியே யொடுக்கியாக்கிப்
பவ்வம்விண் டகலப்பண்ணிப் பாரிப்பானொருவனென்று
செவ்வையே யுயிரிற்காண்டல் சிவரூப மாகுமன்றே.

இ-ள். எவ்வடிவுகளுந்தானாய் - ஜடசித்துக்களாகிய தாபர சங்கமங்களு மெல்லாந் தான்வேறற நின்று,—எழிற்பரைவடிவ தாகி - பெருமைபொருந்தி யிருக்கப்பட்ட காருண்ணியசத்தியே தனக்குத் திருமேனியாகி,—மலத்தான்மாவைக்கருதியே-ஆண வமலஞ்சகசமா யிருக்கப்பட்ட வான்மாக்கள் பாகபேதங்களைத் திருவுள்ளத்தடைத்து,—கவ்வியே - தனதிச்சா ஞானக் கிரியை யின் செய்தியாகிய மாயாதத்துவங்களினால்,—ஆக்கி யொடுக்கி- சிருஷ்டித்துந் திதித்துஞ் சங்கரித்தும், — பவ்வம்விண் டகலப் பண்ணி - மலபாகவொழிவிலே யிந்தத்தத்துவங்கள் வேறும் படிக்குச் சத்திநிபாதத்தை விளைவித்து,—பாரிப்பானொருவன்- சத்திநிபாதத்தின் வழியிலே புறம்பே கட்புலனுக்குத்தோன்ற மானிடச்சட்டைசாத்தி யெழுந்தருளிவந்து தான்வேறற நிற் கிறமுறைமையைத் தருகின்றவன் ஆன்மாக்களுக்கெல்லா மறி வக்கறிவா யிருக்கிற சிவனேயென்று, — செவ்வையேயுயிரிற் காண்டல் - பிரதிக்கினை யேது திட்டாந்தங்களினாலே மயக்க விகற்பமறத் தன்னறிவிலே விளங்கக்கண்டு நிற்பது,—சிவரூப மாகுமன்றே-சிவனதுரூபமாமென்று வேதாகமங்கள்சொல்லும்.

பரையுயிரில் யானெனதென் றறநின்றதடியாம்
பார்ப்பிடமெங்குஞ் சிவமாய்த் தோன்றலது முகமாம்,

உணாயிறந்த சுகமதுவே முடியாகுமென்றிவ் வுண்மை யினை மிகத்தெளிந்து பொருள்வேறொன்றின்றித், தனை முதலிற் போகாது நிலையினினில்லாது தற்பரையினின் றழுந்தா தற்புதமேயாகித், தெரிவரிய பரமானந்தத்திற் சேர்தல் சிவனுண்மைத் தரிசனமாய்ச் செப்புநாலே.

இ-ள். பரையுயிரில் யானெனதென்றறநின்ற தடியாம் - ஆன்மாவென்ப தெவ்விடத்திலுந் தோன்றாம லென்னதென் றும் யானென்றும் நின்றவசத்திய போதநீங்கத் தேசிகமூர்த் தத்தி னநுக்கிரகஞானம் பிரகாசித்துநின்ற வவதாஞ் சிவனது பாதமாம்,— பார்ப்பிடமெங்குஞ் சிவமாய்த் தோன்றலதுமுக மாம் - தன்னையுணர்த்தும் பகுதியாகத் தாக்குவதானவிஷய போகங்களை யவனவளதுவாய் நோக்கு மிடமெல்லாமவ னநுக் கிரகத்தையே கண்டநுபவிப்ப தவனது திருமுகமாம்,— உணா யிறந்த சுகமதுவேமுடியாகும் - அந்தவநுக்கிரகத்திலே தற் செயல்தோன்றாமல் பரவசப்படுவதே சிவனது திருமுடியா மென்றறிந்து,— இவ்வுண்மையினை மிகத்தெளிந்து - இந்த வுண்மையைச் சந்தேகவிகற்பமற வுள்ளபடி விசாரித்தறிந்து,— பொருள்வேறொன்றின்றி - இதுவல்லாமல் சத்தியமாயுள்ள பொருள் வேறேயொன்றில்லை யென்று தெளிந்து, — தனை முதலிற்போகாது-என்னதியானென்னும் விகற்பமாகிய பிருதி விமுதல் நாதமீறாகச்சொல்லப்பட்ட சகலாவத்தையிலும் பொ ருந்தாமல்,—நிலையினினில்லாது - இந்தக்கருவிகள் நீங்கினூற் றனக்குள்ள சகசநிலையாகிய கேவலாவத்தையிலும் பொருந்தா மல்,—தற்பரையினின்றழுந்தாது - இந்தக் கேவலசகல மிரண்டு நீங்கின விடத்து விளங்குவதான போதபூரணமாகிய அகம்பிரம ஞானத்திலும் பொருந்தாமல்,—அற்புதமேயாகி - தேசிகமூர்த் தத்தினநுக்கிரகஞானத்திலே தற்பூரணமெல்லாமடங்கித்தனது செய்தியெல்லா மவனதநுக்கிரக ஞானசத்தியினது செய்தி

யாய், — தெரிவரியபரமாநந்தத்திற்சேர்தல் - அறிதற்கரிதாகிய மேலான பூரணவின்பந்தோன்றும லேகதேசவியாபாரமாகிய தனுகரணாதியின்பமேதோன்ற அந்தவின்பங்களையே மெய்யெ ன்றநுபவித்து நின்றமுறைமைபோலத் தனுகரணாதியின்ப மெவ்விடத்திலுந் தோன்றாமல் பூரணவின்பத்தொடர்ச்சியாகிய தேசிகமூர்த்தத்தி னநுக்கிரக ஞானத்தை யெவ்விடத்திலுங் கண்டநுபவிப்பது, — சிவனுண்மைத் தரிசனமாய்ச் செப்புநூ லே - சிவனையுள்ளபடி சத்தியமாகப்பெற்ற தரிசனமென்று சொல்லுஞ் சிவாகமங்கள். (௮)

இனி யான்மசத்தியாகிய போதவொழிவும் அருள்கழற்றி யும் வருமாறு.

எப்பொருள்வந் துற்றிடினு மப்பொருளைப்பார்த் தங்
கெய்து முயிர்தனைக்கண்டிங் கவ்வுயிர்க்குமேலா, மொப்
பிலருள் கண்டுசிவத் துண்மைகண்டிங் குற்றதெல்லா
மதனாலே பற்றிநோக்கித், தப்பினைசெய்வது மதுவே
நினைப்புமதுதானே தருமுணர்வுபுசிப்புமதுதானேயாகு,
மெப்பொருளுமசைவில்லை யெனவந்தபொருளோடிசை
வதுவேசிவபோக மெனுமிறைவன்மொழியே.

இ-ள். எப்பொருள்வந் துற்றிடினும் - ஜடசித்துக்க ளிர ண்டினு நின்று விளங்குவதாகிய ஹிதா இதங்களுக் கேற்றசத் தாதி விஷயங்களிலே யெந்தவிஷயங்கள்வந்து தாக்கினாலும், — அப்பொருளைப் பார்த்து - அந்த விஷயங்களை யெதிரிட்டுப் பார்த்து இது மாயாகாரியமான தனுகரண புவனபோகங்களி னது விகற்பமென்று மிந்தவிஷயங்களினின்றும் விளங்குவதா கிய இதாஇதங்கள் கன்மத்தினது விகற்பமென்றுங்கண்டு தன க்கெனச் சற்றுஞ் செய்தியில்லாத ஜடரூபமாகையினாலே தா னாய்ச் செயற்படவறியாது, — அங்கெய்து முயிர்தனைக்கண்டு -

அந்த விஷயங்களை யதுவதுவாகப் புசிக்குமான்மாவை நித்தி
யனாய்ப் பூரணனாயறிவாயிருந்தாலும் தானாகவொன்றையு மறி
தற் கறிவில்லையென்னு முறைமையை யுள்ளபடி தரிசித்து,—
அவ்வுயிர்க்கு மேலா மொப்பிலருள் கண்டு - அந்த ஆன்மாவி
னது அறிவுக் கறிவாய்நின்று இந்த விஷயபோகங்களை யிடை
விடாமற் பாகமறிந்துணர்த்தி நிற்கிற திருவருளையு முள்ளபடி
தரிசித்து,—சிவனுண்மை கண்டு - அந்த வருளினது நிறைவெ
ல்லாந் தனது வடிவாகவுடைய பூரணவின்பமெனக் கண்டித்
துக் குருமூர்த்தமா யெழுந்தருளி மாணிடச்சட்டை தரித்துவந்
துபதேசித்த வநுக்கிரகத்தை யுள்ளபடி தரிசித்து,— இங்குற்ற
தெல்லா மதனாலேபற்றிநோக்கி - இவ்விடத்திலே வந்துபொ
ருந்தப்பட்ட சத்தாதி விஷயங்களையெல்லா மந்த வநுக்கிரகத்
தினாலே பொருந்திப் பார்த்து,— தப்பினைசெய்வது மதுவே
நினைப்புமதுதானே-இந்த விஷயபோகங்களின் வழிநாய்த் தீ
வினையைச் செய்விக்கிறது மநுக்கிரகமாகிய திருவருள்தானே
நல்வினையைச் செய்விக்கிறது மந்தத்திருவருள்தானே,— நரு
முணர்வு புசிப்புமதுதானேயாகி - இந்த நன்மைதீமைகளையறி
யும்படிக்குப் புசிப்பாகிவந்த விஷயபோகங்களு மவ்வநுக்கிரகமா
கிய வருள்தானேயென் றுள்ளபடி தரிசித்து,— எப்பொருளுமா
சைவில்லையென - இந்த முறைமையன்றியிலே சித்தாகிய வா
ன்மவர்க்கத்துக்கும் ஜடமாகிய பாசஜாலங்களுக்கு மொன்றை
யொன்றறியவு மொன்றையொன்று பொருந்தவு மொருசற்
றுஞ் செயலில்லையென்று முறைமையை யுள்ளபடி தரிசித்து
அந்தப் பொருளோ டிசைவதுவே,—சிவபோகமெனு மிறை
வன்மொழியே - அவனநுக்கிரக பூரணமெல்லாந் தற்பூரணமா
கவு மிப்படி யிரண்டற நிற்கிறதே சிவனுடனே யிரண்டறக்
கூடின முறைமையென்றுஞ் சிவாகமங்கள் சொல்லும். (௫)

பாதகங்கள் செய்திடினுங் கொலைகளவு கள்ளுட்
டயின்றிடினு நெறியல்லா நெறிபயிற்றி வரினுஞ், சாதி

நெறிதப்பிடினுந் தவறுகள்வந்திடினுந் தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நிற்கி, னாதனவ னுடலுயிரா யுண்டுறங்கிநடந்து நானாபோகங்களையுந் தானாகச் செய்து, பேதமற நின்றிவனைத் தானாக்கிவிடுவன் பெருசிவ போகமெனப் பேசுநெறி யிதுவே.

இ-ள். பாதகங்கள் செய்திடினுங் கொலைகளவு கள்ளுப் பயின்றிடினு நெறியல்லா நெறியயிற்றிவரினுஞ் சாதிநெறி தப்பிடினுந் தவறுகள் வந்திடினும் - இப்படிப்பட்ட செய்தியல்லாத் தொழில்களைச் செய்தாலும்,—தனக்கென வோர்செயலற்றுத் தானதுவாய்நிற்கில் - தற்செய லெவ்விடத்திலுந் தோன்றாம லநுக்கிரகமாகிய வருணிறைவிலே வேறறநிற்கில்,—நாதனவனுடலுயிராய் - அந்த வருளுக்கு முதன்மையாகிய நேயமவனதறிவு பூரணமெல்லாந் தனது வடிவாகக்கொண்டு தானந் தவறிவு பூரணத்துக்கொல்லா முயிராய்—உண்டுறங்கிநடந்து - இவனதறிவு தொழிலாகிய விந்திரிய போகங்களாய் வரும்புசிப்புந் தொழிலுந் தனது புசிப்புந் தொழிலுமாகவே புசித்துத் தொழிற்படும்,— நானாபோகங்களையுந் தானாகச்செய்து - நானாவிதமாகிய போகங்களை யெல்லாமிவனுக்குத் தனது பூரணவின்பமாகிய நேயவடிவாகவே காட்டி,— பேதமறநின்றிவனைத் தானாக்கிவிடுவன் - இவனதறிவு பூரணமெல்லாந் தனதின்பப் பூரணமாகவும் தனதின்பப் பூரணமெல்லா மிவனதறிவு பூரணமாகவும் வேறறத்தோன்றி நின்று தனதின்ப நிறைவெல்லா மிவனதநுபோக பூரணத்தை யமிழ்த்திநிற்பது,—பெருகுசிவ போகமெனப் பேசுநெறியிதுவே - ஜடசித்துருவமாகிய பிரபஞ்சமெவ்விடத்திலுந் தோன்றாமல் பெருகப்பட்ட சிவாநந்த மேலீடாகிய சிவபோகத்தினது முறைமை யித்தன்மைத் தென்று சொல்லும் வேதாகமங்கள்.

உண்மைநெறிவிளக்கம் மூலமும் உரையும்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

இந்நூலுரையாசிரியர்பெயர் காணப்படவில்லை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சங்கற்பநிராகரணமூலம்.

கொற்றவன்குடி

உமாபதிசிவாசாரியர்

திருவாய்மலர்ந்தருளியது.

இதற்றுறையுடன்

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

காணியம்பாக்கம்

முருகேசமுதலியாரால்

சென்னை:

இந்து தியலாஜிகல் யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

௧௮௯௨.

உ

திருச்சிற்றம்பலம்.

சங்கற்ப நிராகரண

மூலமும் - உரையும்.

விநாயகர்வணக்கம்.

திருந்திய வருந்தவம் பொருந்துபன் முனிவர்
கமையாக்காத லமையாது பழிச்சும்
நிகரில் செக்கர்ப் புகர்முகத் தெழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப்பெருங் கோட்டுத்
தழைசெவி மழைமதப் புழைநெடுந் தடக்கை
வாட்டரு மும்மை நாட்ட நால்வாய்ப்
பாசமங்குசந் தேசுறு மெயிறொண்
கனியிவை தாங்கும் புனித நாற்கரத்
தங்க தங்கடகம் பொங்கிழை யார
நிறைமணிச் சுடிகைக் கறையணற் கட்செவி
கொண்டதிண் பெரும் பண்டிக் குறுந்தாட்
களிறுத னிருகழல் கருதா
வெளிறுறு துயரம் வீட்டினம் பெரிதே.

இ - ள் திருந்திய வருந்தவம் பொருந்து பன்முனிவர்-சாத்திரங்களில் உத்தமப் பிரகாரமாக விதிக்கப்பட்ட வரியதவசுகளோடுங் கூடியிருந்துள்ள மஹா இருடிகள் பலருங்கூடி,— கமையாக்காத லமையாது பழிச்சும் - ஒருக்காலு நிறம்பாதவாஞ்சை யோடுங்கூடி யநவரதமுந் தோத்திரம்பண்ணும்,— நிகரில்

செக்கர்ப் புகர்முகத் தெழுந்த புனிற்று வெண்பிறைத் தனிப் பெருங் கோட்டு-ஒப்பில்லாமலிருக்கிற செக்கர் வானம்போன்ற சிவந்தபுகரோடுங் கூடியிருக்கிற முகத்திலே தோன்றப்பட்ட வீன்றணித்தாயுள்ள வெள்ளிய பிறைபோலு மொப்பில்லாத பெரிய கொம்பினையு முடையதாய், — தழைசெவி மழை மதப் புனைநெடுந் தடக்கை - தழைந்த செவியினையுங் கார்போ லும் பொழியா நின்ற மதத்தினையு மிரண்டு துவாரத் தோடுங் கூடி நெடியதாய்ப் பருத்திருக்கிற துதிக்கை யினையுமுடைய தாய்,—வாட்டரு மும்மைநாட்ட நால்வாய் - ஒளியினையுடைய மூன்று கண்ணினையும் நான்றவாயினையு முடையதாய், — பாச மங்குசந் தேசுறுமெயி றொண்கனி யிவைதாங்கும் புனித நாற் கரத்து - பாசத்தினையுந் துறட்டினையும் பிரகாசத் தினையுடைய கொம்பினையு மழகிய மாங்கனியினையு மிவை யிற்றைத் தரித் துக் கொண்டிருக்கிற சுத்தமாயுள்ள நாலுகையினையு முடைய தாய், — அங்கதங் கடகம் பொங்கிழையார நிறைமணிச் சுடி கை கறையணற் கட்செவி கொண்ட திண்பெரும் பண்டிக் குறுந்தாள் - தோள்வளையினையு மிரத்தினகடகத்தினையு மிக் நவரத்தினங்களை யழுத்தி யிழைக்கப்பட் டிருக்கிறவா பரண திணையுங் குறைவற வணிந்து இரத்தினத்தை யுடைய தலை னையுங் கறுத்திருக்கிற கண்டத்தினையு முடையதாய் கண்ணே செவியாகக்கேட்கிற பாம்புகொண்டு கட்டப்பட்டுச் சிக்கென் பெரிதா யிருக்கிற வயிற்றினையுங் குறுகி யிருக்கிற காலினை முடையதாயிருக்கிற, — களிறுதரு ஒருகழல் கருதா - இப்படி கொத்தவானையின திரண்டுபாதங்களையு மென்மனதார ரினைந் — வெளிறுறு துயரம் வீட்டினம் பெரிதே - குற்றத்தோடு கூடியிருக்கிற துக்கங்களை மிகவும் விடுவியாநின்றேம். (

காப்புமுற்றிற்று.

பாயிரம்.

பெருங்கட லுதவுங் கருங்கடு வாங்கிக்
கந்தரத் தமைத்த வந்தமில் கடவுள்
பாலரை யுணர்த்து மேலவர் போலக்
கேட்போ ரளவைக் கோட்படு பொருளா
லருளிய கலைக ளலகில வாலவை
பலபல சமயப் பான்மைத் தன்றே
யஃதா லந்நூற் றன்மை யுன்னிய
மாந்த ரிதுவே பொருளென் றதனிலை
யறைதலின் வேற்றோர் பனுவ லேற்றோர்க்
கிசையா மாறுபாடு கூறுவ ரதனாற்
புறச்சமயங்கள் சிறப்பில வாகி
யருளின் மாந்தரை வெருளுற மயக்கி
யலகைத் தேரி னிலையிற் றீரு
மீங்கிவை நிற்க நீங்காச் சமய
மூவிரு தகுதி மேவிய தாமு
மொன்றோ டொன்று சென்று நிலையி
லாறு மாறா வீறுடைத் திவற்று
ளெவ்வ மில்லாச் சைவநற் சமயத்
தலகி லாகம நிலவுத லுளவவை
கனக மிரணியங் காஞ்சன மீழந்
தனநிதி யாடகந் தமனிய மென்றிப்
பலபெயர் பயப்பதோர் பொருளே போலப்
பதிபசு பாச விதிமுறை விளக்குந்
வாய்ந்த நூல்க ளாய்ந்தன ராகி
யாசா னாகி வீசிய சமத்துட
னேழஞ் சிருநா றெடுத்த வாயிரம்
வாழுநற் சகன மருவா நிற்பப்

பொற்பொது மலிந்த வற்புத ஞானி
யாரும் விழவிற் பொற்றே ராலையத்
தேரு வெண்மர் நிறையி லிருப்ப
மயங்குவாத மாயாவதி
முயங்கிட வொருதலை முதுவெதிர் மணிசேர்
பெண்ணைசூழ்ந்த வெண்ணெயம்பதி திகழ்
மெய்கண்டவனருள் கைகண்டவர்களி
லொருவ ரொருதலை மருவியிருப்ப
வஞ்சப்பிறவிக் கஞ்சிவந்தொருவ
னேதிறை யருளென வீதெனுமாயா
வாதியை யயலினர்மருதலைத் தருடா
மற்றவரயலின ரவருரை மறுத்துச்
சொற்றரவயலின ரவருந்தொலைவுற்
றின்னேயெவரு முன்னேகழியுழி
யாங்கய லிருந்த வருளின ரழகிது
நீங்கள் சங்கற்ப நிராகரித் தமையென
மற்றவ ருரைத்த சொற்றரு பொருள்கொடு
வாதசெற்ப விதண்டையு மேது
மோதுநால்வகை யுவமையுந்திகடா
வருள்சேர்மாந்தர் வெருள்சேராமற்
றர்க்கமும் விடையமுங் கற்க
நற்கவிமாந்தர் நகநவிற்றுவனே.

இ - ள். பெருங்கடலுதவுங் கருங்கடு வாங்கிக் கந்த
மைத்த வந்தமில் கடவுள் - பெரிதாயுள்ள திருப்பாற் கடலிலே
நின்று முண்டாகப்பட்ட கறுத்த நஞ்சினைத் தனது ஸ்ரீய,
தத்தினாலே வாங்கி யமுதுசெய்து கண்டத்திலே தரித்து
கொண்டிருக்கையிலேயுந் தனக்கு முடிவில்லாத கடவுள். (எ
ணவே கத்தாவைநீக்கி முற்காலத்திலே தேவர்கள் அமுதங்
டைய வதிலே நஞ்சுபிறந்தது அதினாலே யவர்கள் பீடை

படுகையினாலே துஷ்ட நிக்கிரகமும், அவர்கள் கத்தாவை நோக்கி யபயமிட வஞ்சாதீரென் றந்த நஞ்சை யமுதுசெய் தவர்களை யிரக்ஷிக்கையினாலே சிஷ்டபரிபாலனமுமாகி நின்ற தெனக் கொள்க.) இப்படித் துஷ்ட நிக்கிரகமுஞ் சிஷ்டபரி பாலனமு முடைய கடவுளானவர்,—பாலரையுணர்த்து மேல வர்போல - தங்கள் பிள்ளைகளுக் கந்தப் பக்குவங்கடோறும றிவையுந் தொழிலையுங் கொடுத்து வந்த மாதா பிதாக்களைப் போல,— கேட்போ ரளவைக்கோட் படுபொருளா லருளியக லைக ளலகில - கேட்கிற சீடர்களுடைய வெல்லைக்கோட்பாடு களுக்கீடா யுள்ளவத்தங்களைக்கொண் டருளிச்செய்யப்பட்டி ருக்கிற சாத்திரங்க ளெண்ணிறந்த தாயிருக்கும்.— ஆ லவை பலபல சமயப்பான்மைத் தன்றே - அப்படியிருக்கையால் அந் தச் சாத்திரங்கள் வெகுவிதமாயுள்ள சமயப்பகுதிகளோடுங் கூடியிருக்கும்.— அஃதா லந்நூற்றன்மை யுன்னியமாந்த ரிது வே பொருளென் றதனிலையறைதலின் -ஆகையால் அந்தச்சாத் திரங்களினதுண்மை யாராய்ந்தறிந்தவர்கள் நமக்கிதுவே சாத் திரமு மிதுவேயத்தமுமென் றந்தச்சமயத்தையே பலமாகச் சொல்லி நிற்கையினாலே,— வேற்றோர்பனுவ லேற்றோர்க் கி சையா மாறுபாடுகூறுவர் - மற்றொருசாத்திரத்தை யாராய்ந்த றிந்தவர்களுக்கு அவன் சொல்லுகிற சாத்திரமு மத்தமும் பொ ருந் தாதாகையால் அவன் சொன்ன திவனுக்குப் பொருந்தாம லிவன்சொன்ன தவனுக்குப் பொருந்தாம லொன்றுக் கொன்று மாறுபடச் சொல்லா நிற்பர்கள்,— அதனாற் புறச்சமயங்கள் சி றப்பிலவாகி யருளின்மாந்தரை வெருளுறமயக்கி யலகைத்தேரி னிலையிற்றீரும்-அப்படியிருக்கையினாலே உலகாயிதன் புத்தன் ச மணன் மீமாங்கிசன் மாயாவாதி பாஞ்சராத்திரியென்று சொல் லப்பட்ட புறச்சமயங்களினுள்ள வத்தங்களினுண்மைப் பகுதி யில்லாததாய் சிவனுடைய வநுக்கிரகத்திற் கேதுவல்லாதவ பக்குவான்மாக்களை யீதோரத்த மிருந்தபடியென் றச்சப்படத்

தக்கதாக மருட்டிப் பேய்த்தேரைத் தண்ணீரென்று கருதி இ
தைக் குடித்துத் தாகந்தீரலா மென்று வந்தவனுக் கந்தத் தண்
ணீர்பொய்யாய்ப் பேய்த்தேர்மெய்யான தன்மைபோல விந்தச்
சாத்திரங்களு மத்தங்களுஞ் சத்தியம் போலத்தோன்றி யசத்தி
யமாய் முடியும்,— ஈங்கிவை நிற்க நீங்காச்சமய மூவிரு தகுதி
மேவியதாமும்-ஆகையால் இவ்விடத்திற் சொல்லப்பட்ட சம
யங்களு மத்தங்களு நமக்கு வேண்டுவதில்லை. தன்னி லொன்
றோடொன்று கூடிக்கொண்டிருக்கிற சைவம் பாசுபதம் மாவிர
தம் காளாமுகம் வாமம் வைரவம் என்கிற வுட்சமயங்க ளாறும்,
—ஒன்றோடொன்று சென்றுறுநிலையி லாறுமாறுவீறுடைத்து
இவை யொருசமயத்தோ டொருசமயந் தாக்கிப் பார்க்குமள
வில் அந்தவாறு சமயங்களுந் தனித்தனியே மகத்துக்க ளாயி
ருக்கும்,— இவற்று ளெவ்வமில்லாச் சைவநற்சமயந் தலகிலா
கம நிலவுதலுள - இந்தச்சமையங்களில் வைத்துக்கொண்டு ஒரு
சற்றுங் குற்றஞ்சொல்ல வொண்ணுமலிருக்கிற சைவமாகிய
நல்லசமய மொன்றையு நோக்கித் தம்பிரானு ரருளிச் செய்யப்
பட்டிருக்கிற வாகமங்க ளெண்ணிறந்து பொருந்தாநிற்கும்
அந்த ஒரு சமயத்தை நோக்கிப் பலசாத்திர மருளிச் செய்வா
னே னென்னில்,— அதை கனக மிரணியங் காஞ்சன மீழந்
தன நிதியாடகந் தமனியமென்றிப் பலபெயர் பயப்பதோர்
பொருளேபோலப் பதிபசு பாசவிதிமுறை கிளக்கும்-அப்படிப்
பலவாக வருளிச்செய்தது மொருபொருளைப் பற்றியிருக்கும்
அஃதெங்ஙனே யென்னில், கனகமென்றும் இரணியமென்றும்
காஞ்சனமென்றும் ஈழமென்றும் தநமென்றும் நிதியென்றும்
ஆடகமென்றும் தமனியமென்றும் இங்ஙனம் பல பெயராகச்
சொல்லப்பட்டவை யெல்லாம் பொன்னாகிய வோர்பொருளை
யே பற்றிநின்றார் போல வந்தச் சாத்திரங்களும் பதியினிலக்
கணத்தையும் பசுவினிலக் கணத்தையும் பாசத்தி னிலகணத்
தையுமேசொல்லாநிற்கும்,—வாய்ந்த நூல்களாய்ந்தனராகியாச

ளுகி வீசியசமத்துடன் - இங்ஙனம் பொருந்தப் பட்டிருக்கிற
வாகமங்களைக் கற்றுணர்ந்தாராய்ந்த போதவான்களாய் சமய
விசேஷ நிருவாண வபிஷேகமென்கிற நாலுதீக்ஷைகளையுமு
டையவர்களா யெங்கும் பிரகாசிக்கப் பட்டிருக்கிறபக்ஷப்பிரதி
பக்ஷமில்லாத சமபோதவான் களாயுள்ள விந்தப்பெரியோர்கள்,
—எழுஞ் சிருநூ றெடுத்தவாயிரம் வாழுநற்சகனை மருவாநிற்ப -
சகாத்தம் ஆயிரத் திருநூற்று முப்பைத்தந்து செல்லாநின்றகா
லத்திலே,— பொற் பொதுமலிந்த வற்புத ஞானி யாரும்விழ
வில் - பொன்னினாற் செய்யப்பட்ட திருவம்பலத்தின் கண்ணே
நிறைந்தெழுந் தருளியிருக்கிற வாச்சரியவானாயுள்ள திருவம்
பலமுடைய தம்பிரானா ருடைய வானிமாதத்தி லாரூந்திருவி
ழாவிலே,— பொற்றே ராலயத்தேரு வெண்மர் நிரையிலிருப்
ப - பொலிவினை யுடைத்தாகிய தேர்மண்ட பத்திலேயேறிமுன்
சொல்லப்பட்ட வாசாரியமா ரெட்டுத்திருப்பெய ரொழுங்கி
லே யெழுந்தருளியிருக்கிற வவதாரத்திலே,—மயங்குவாத மா
யாவாதி முயங்கிட வொருதலை - சற்காரிய வாதமின்றி யொ
ருகாற்சொன்ன தொருகாற் சொல்லாமல் முன்னொடு பின்மலை
ந்து வருகிற வர்க்கத்தோடுங் கூடியிருக்கிற மாயாவாதி யென்
கிறசமயி யொருபுறத்திலே கூடியிருக்க,— முது வெதிர் மணி
சேர் பெண்ணைசூழ்ந்த வெண்ணெயம்பதி திகழ் மெய்கண்டவ
னருள்கைகண்டவர்களி லொருவ ரொருதலை மருவியிருப்ப -
முதிர்ந்தமூங்கில் களினுண்டாகிய முத்துக்களோடுங்கூடியிருக்
கிற பெண்ணையாறு சூழப்பட்ட திருவெண்ணெய் நல்லூரென்
கிற திருப்படை வீட்டிலே திருவவதாரஞ் செய்யப்பட்ட
மெய்கண்ட தேவநாயனாருடைய வநுக்கிரகத்தைப் பெற்றவ
டியார்களிலே யொருத்த ரந்தக்கூட்டத்தி னொருபுறத்திலே
பொருந்தி யெழுந்தருளியிருக்கிற வவதாரத்திலே,— வஞ்சப்பி
றவிக் கஞ்சிவந்தொருவ னேதிறையருளென - பொல்லாங்கை
விளைப்பதாயிருக்கிற பிறவிப்பிணிக்குப் பயப்பட்டா னொருபக்

குவன்வந் திவர்களைத் தண்டம்பண்ணித் தம்பிரானார் திருவரு
ளெப்படியிருப்பதென் றவன்வினவ,— ஈதெனா மாயாவாதியை
யயலினர் மறுதலைத் தருடா - தன்னுடைய வத்தத்தைப்பார்த்
திதுவே பொருளென்று நாட்டின மாயாவாதியை யருகேயெ
ழுந் தருளியிருந்தவ ரவன்சொன்ன வத்தத்தைக் கண்டிருந்
திதுவத்தமல்ல வென்றுதள்ளித் தம்முடைய வத்தத்தை யிது
வே பொருளென்றுநாட்ட,—மற்றவரயலின ரவருரைமறுத்துச்
சொற்றா - அவருடைய பக்கத்திலிருந்தவர் அவர் சொன்ன
வத்தத்தைக் கண்டித்துத் தம்முடைய வத்தத்தையிதுவே பொ
ருளென்று நாட்ட,— அயலின ரவருந்தொலைவுற்று - அவரு
டையவருகே யிருந்தவராலே யவருங் கண்டிக்கப்பட்டு,—இன்
னே யெவரு முன்னேகழியுழி - இப்படி யொருவரை யொரு
வர்மறுத் தெட்டுப்பேரு முன்னே தள்ளுண்ட வவதரத்து,—
ஆங்கயலிருந்த வருளின ரழகிது நீங்கள் சங்கற்ப நிராகரித்த
மையென மற்றவருரைத்த சொற்றரு பொருள்கொடு - அவ்வி
டத்தவர்க ளருகேயெழுந் தருளியிருந்த வாசாரியவான்களைப்
பார்த்து நீங்களுங்களத்தங்களைச் சங்கற்பித்தது மத்தைநிராக
ரித்தது மிகவு நன்றாயிருந்த தென்றருளிச்செய் தவர்கள்சொன்
ன சொற்களிலுண்டாகிய பொருள்களை யெடுத்துக்கொண்டு
யான்,— வாத செற்பவிதண்டையு மேதுவு மோதுநால்வகை
யுவமைந்திகடா - வாதமென்ற சொல்லுதான் விகாரமென்றும்
விசியுழியென்றுமிரண்டாம். இதில் விகாரமென்றது குருவுஞ்
சீஷனுமாகுதல், தன்னோடொத்த பக்ஷபாதனாகுதல், மாறுபா
டின்றிப் பிரமாணங்களிலுண்டாகிய வத்தங்களைத் தர்க்கித்ததி
லுண்டாகிய குற்றங்களைநீக்கிச் சத்தியமானவத்தத்தை நியமிக்
கப்படுவதெனக் கொள்க விசியுழியென்ற சொல்லுதான் செ
ற்பையென்றும் விதண்டையென்று மிரண்டாம், இதிற்
செற்பையென்றது பிறருடைய வத்தங்களை நிராகரித்துத்தன்
னுடையபொருளை மலைவறநாட்டுகை யெனக்கொள்க. விதண்

டை யென்றது பிறருடைய வத்தங்களை நிராகரித்துத் தன்
னுடைய வத்தந் தோன்றாமனின்று சாதிக்கப்படுவ தெனக்
கொள்க. எதுவென்றது அளவைப் பிரமாணங்களிலே விதிக்கப்
பட்டிருக்கிற பலவேதுக்களும். ஓதுநால்வகை யுவமையுமென்
றது வினை பயன் மெய் உருவென்று சொல்லப்பட்ட நாலுவ
கை யுவமையு மிந்தநூலிலே விளங்கத் தக்கதாக,— அருள்சேர்
மாந்தர் வெருள்சேராமல் - திருவருளுக் கேதுவாயுள்ள பக்கு
வான் மாக்களுக்கு அத்தமலை வென்கிற வச்சம்வந்து பொருந்
தாமல் அவர்கள்,— தர்க்கமும் விடயமுங் கற்க நற்கவிமாந்தர்
நக நவிற்றுவனே - இந்நூலி லுண்டாகிய தர்க்கங்களையும் விட
யங்களையுங் கற்கத்தக்க தாகவும் நல்ல கவிதையோடுங் கூடியி
ருக்கிற வித்துவான்கள் இவனு மொருநூல் செய்வதே யென்று
சிரிக்கத்தக்கதாகவும் இந்நூலைச் சொல்லாநின்றேன். (உ)

பாயிரமுற்றிற்று.

மாயாவாதிசங்கற்பம்.

நவிற்றியநிரையி னவித்தையினோனுரை
நித்தனறிவன் சுத்தனகண்டித
னிருவிகற்பனிர்த்தத்துவனிரஞ்சனன்
சொல்வகையெவையுந் தொடராத்தூய்மணி
வரம்பில்வேதச் சிரந்தருபரம்பொருள்
சத்தாயெவையுந் தானாயவித்தை
தொத்தாதுயர்ந்த தொல்சுடர்மூவா
வின்னதன்மைய னேகனனேகன்
கன்னற்பெருஞ்சுவை தன்னிற்பிறவாப்
பெற்றியினிருந்து பொற்பணியியல்பினின்
வான்வளியனனீர் மண்மருந்தன்ன

மானதரது வாறைங்கோசத்
தொகுதியாக்கைப் பகுதியதொருபுடை
சுத்திவெள்ளி யொத்தனமித்தையிற்
முனெனலாகுந் தன்மைத்துனதையிற்
சின்னூற்றகையின் வேற்றுமைமரீஇய
தென்னப்பன்மைய தெனிவிலைபழம்பூத்
தோனார்வயிரந் தருக்கருந்தொன்மையிட்
வானரந்திரை நுரைதருவாய்மையிற்
கூடுமசித்தைச் சித்துதவாதெனி
னெற்பதர்பலாலத் திற்பரந்தருமிது
தன்னியல்பென்றும் விளையாட்டென்று
முன்னுளமறைகண் மொழிதலினொருநாற்
பன்மணிநிலையும் பசுப்பாலெனவும்
பகலவனீரி லலர்கதிரெனவுங்
கூவலாழிகுளஞ் சிறுகுழிகால்
வாவியாவையும் வருபுனலெனவு
மவ்வவற்றடங்கி யாடியுணிழலெனத்
தோன்றியாக்கைநற் காந்தத்திரும்புங்
கனவிற்றீங்குங் கங்குலிற்கயிறும்
புனலிற்றேன்றும் பேய்த்தேர்ச்செய்தியு
மன்னதுன்பினன் னிறப்பளிங்கெனப்
பதினொற்காணத் தொருமூன்றவத்தை
நாளுநாளு நயந்துறமிருபயன்
றன்னிற்சாராத் தொன்மைத்தன்மை
தர்ப்பணநிழற்கட் குற்றிபாய்நற்றே
விவ்வியற்பந்தப் பௌவமதகல
விண்முதறந்த கொண்மூப்படலத்
திருளறவுதித்த காறகவிவேகந்
தன்னிற்றேன்றிச் சாதகமனைத்தையு
மன்னகப்பிரிப்பு மடியிழைவாங்கலும்

போலஞாலம் பொய்யறக்கழீஇத்
தானேதானாய்த் தன்னிற்றன்னைத்
தானேகண்டு தன்னலமுற்று
வசையிறத்துவ மசிபதத்தெளிவா
லகமேபிரமமாயின னெனவறிந்
தசலனாகிநற்சல சலமதியெனக்
கண்டிடுமுடலம் விண்டகல்கடத்து
மங்குலதுடைதர வெங்குமாந்தகைத்தே
யிவ்வகையுணர்ந்து செய்தொழிலருத
மடவோர்தாமுங் கடனுவியற்றுங்
கன்மகாண்டத் தொன்மைப்புரிவாற்
றேற்றியவித்தை மேற்கடையரணியி
லெழுந்தெரியவற்றை விழுங்கியதென்னத்
தன்னொழிந்துள்ள தானயழியு
மங்கிலையன்றி யழிவறுமுத்தி
யேயாதென்றுதன் னியல்பை
மாயாவாதிவகுத் துரைத்தனனே.

இ - ள். நவிற்றியகிரையி னவித்தையினேனுரை - முன் சொல்லப்பட்ட வொழுங்கில் மாயாவுபாதிகளினாலே வாதிக் கப்பட்டுப் பரப்பிரம மிப்படிமயங்கி நிற்குமென்று சொல்லு கிற மாயாவாதியினுடைய மதமிருக்கும்படி:— நித்தனறிவன் சுத்தன கண்டிதன் - ஒருக்காலு மழிவில்லாதவனுமாய் சர்வக் ஞனுமாய் நிர்மலனுமாய் கண்டிக்கப்படாதவனுமாய்,—நிரு விகற்பனிர்தத்துவ நிரஞ்சனன் - விகற்பமில்லாதவனுமாய் தத் துவாதீதனுமாய் மறைப்பில்லாதவனுமாய்,—சொல்வகையெ வையுந் தொடாராத் தூய்மணி - சொல்லும் பொருளுமா யிருக் கிற சாத்திரங்க ளொன்றாலுஞ்சென்று கிட்ட வொண்ணமலி ருக்கிற சுத்த ரத்தினமாய், —வரம்பில் வேதச் சிரந்தரு பரம் பொருள் - எந்தச்சாத்திரங்களினாலு மளவிடப்படாமலிருந்துள்